
அமுதினும் இனியவளே
சத்யா ராஜ்குமா
அமுதினும் இனியவளே
சத்யா ராஜ்குமார்

# அமுதினும் இனியவளே

## 1

''அண்ணா...''

''............''

''அண்ணா உங்கள தான்.''

''சொல்லு...''

''இப்பக் கொஞ்ச நாளா நீங்க எங்கூட நல்லாவே பேசறதில்ல தெரியுமா?''

''துணிக்கடைல இருந்து காலைல இருபதாயிரம் ரூபாய்க்கு பில் வந்திருக்கு, போன வாரம்தான டிரஸ் பர்ச்சேஸ் பண்ணனும்னு பதினஞ்சாயிரம் வாங்கிட்டுப் போன?''

''அது சரிதாண்ணா, லேட்டஸ்ட் கலக்ஷன்ஸ் வந்திருக்குன்னு கூப்புட்டாங்க. எல்லாமே ரொம்ப நல்லாந்தது அதான்...''

''அப்புறம் போன் பில் இதயும் மிஞ்சிடும் போலிருக்கு?''

''இல்லையேண்ணா, எப்பவும் வர்றத விடவும் கூட ஒரு ஆயிரம் ரூபாய் மட்டும் அதிகமா வந்திருக்கும் அவ்வளவு தான்...''

''ஏன்?''

''ஏன்னா, ஃப்ரண்ட்ஸ் கூடப் பேசினேன்.''

''ப்ரண்ட்ஸ்னா...''

''அச்சச்சோ வினிதா, காவ்யா கூடத்தான் அண்ணா...''

இன்னும் என்னவெல்லாம் கேட்கப் போகிறாரோ என்பதைப் போல ரேவதி தனது அண்ணனைப் பார்க்க, தானும் தனது தங்கையைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

''சன்டே அதுவுமா காலைலயே எங்க கிளம்பிட்ட?''

''..........''

''நானே உங்கிட்டப் பேசலாம்னு தான் இருந்தேன்...''

''..........''

''திவ்யா கல்யாணத்துக்குண்ணா...''

''அது யாரு?''

''காவ்யாவோட அக்கா...''

''நீ மட்டும் தான் போறியா?''

''இல்லண்ணா, கம்பெனில இருக்கறவங்க எல்லாரும் தான்...''



''நான் வேணும்னா ட்ராப் பண்ணட்டுமா?''

''உங்களுக்கு எதுக்கு சிரமம்... சரிண்ணா ஒரு அஞ்சே நிமிஷத்துல வந்துட்றேன் சரியா?''

''சரிதான்..''

''அப்புறம்...''

''என்னமா?''

''நீங்க வேணும்னா என்ன மண்டபத்துலயே கொண்டு வந்து விட்டுட்றீங்களா? சிரமம்னா வேண்டாம்.''

''எல்லாரும் சேர்ந்து போற ப்ளான்?''

''இன்னும் யாரும் கூப்புடவேக் காணோம்ண்ணா, இன்னும் வெயிட் பண்ணினா அப்புறம் முகூர்த்தம் முடிஞ்ச பின்னாடி தான் போய்ச் சேருவேன் போலிருக்கு...''

எதுவும் பேசாமல் தன்னைப் பார்த்த அண்ணனைத் தானும் பார்த்தாள் ரேவதி, தயக்கத்துடன்தான்.

''பத்து நிமிஷத்துல கிளம்பிடுவேன், அதுக்குள்ள நீ ரெடியாயிடு'' என்ற அண்ணனிடம் சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

கடவுளே இப்படி சொதப்பி விட்டோமே என்ற எண்ணமே மனதிற்குள் ஓடிக் கொண்டிருக்க, வேகமாகச் சென்று கடைசி ஒப்பனைகளை முடித்துக் கொண்டு வந்தாள்.

சொன்ன நேரத்திற்குள் ஸ்ரீஹரி கிளம்பி வந்து விட்டிருக்க, சரியாக அதே நேரம் ஹாலுக்கு வந்தான் கமலேஷ்.

அதாவது ஸ்ரீஹரியின் தம்பி.

''எங்கப்பா கிளம்பிட்ட...?''

அண்ணன் கேட்க, நின்ற கமலேஷ், எதுவும் பேசாமல் பார்த்தான்.

''என்னடா, ஹரி கேக்கறானே சொல்லு?''

சிறிய மகனைக் கோபத்துடன் அதட்டிக் கொண்டே காபி கப்களை ட்ரேயில் வைத்து எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்த கல்யாணி, ''என்னப்பா நீயும் கிளம்பிட்ட போலிருக்கு?'' என்று பெரிய மகனிடம் கேட்டார்.

''ஆமாம்மா ஆபீஸ்ல கொஞ்சம் வேலையிருக்கு. ரேவதிய விட்டுட்டு அப்படியே போய்ட்டு வந்துடறேன்.''

மகன்கள் இருவரும் காபியை எடுத்துக் கொள்ள, மகள் மறுத்துவிட்டிருந்த காபியைத் தான் எடுத்துக் கொண்டார் கல்யாணி.

அண்ணன் தன்னைப் பார்ப்பது தெரிய, தானும் குற்ற மனப்பான்மையுடன் நிமிர்ந்து தனது அண்ணனைப் பார்த்தான் கமலேஷ்.

''..................''

''டூர்... என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் ஆல் இன்டியா டூர் போகலாம்னு டிஸைட் பண்ணியிருக்காங்க நானும் போய்ட்டு வரட்டுமா?''

''கூட வந்து பிஸினஸ் கத்துக்கறேன்னு சொன்ன...''

''ஷ்யூர்ண்ணா, ஆனா டூர் போய்ட்டு வந்ததுக்கப்புறம்...''

''சரிதான்டா போய்ட்டு வா, நியாயமான ஆசைகளுக்கு உங்கண்ணன் என்னைக்குத் தடை சொல்லியிருக்கான்'' என்றார் அவர்களுடைய தாய் கல்யாணி.

கடந்த இரண்டு வருடங்களாக ஏதேதோ காரணங்களைச் சொல்லி, தான் அண்ணனின் வேலைப்



பளுவைச் சற்றும் குறைக்காதது மட்டுமல்லாமல் சுமையாகவும் இருப்பது மனதில் உறைக்க, அந்த வினாடியில் மிகவும் ஒரு மாதிரியாக உணர்ந்தான் கமலேஷ்.

''எப்பக் கிளம்பணும் கமல்?''

''நாளைக்குண்ணா?''

''பணம் எவ்வளவு வேணும்?''

''ஒரு லட்சம் தேவப்படுது. பத்தலேன்னா கேக்கறேன்.''

''ஆமாம், எப்பிடிக் கேக்கறதுன்னு தயங்காத. பிஸினஸ்க்குள்ள வந்துட்டா அப்புறம் ரிலேக்ஸ் பண்ணிக்கறது கஷ்டம், அதனால போய் டூர நல்லா என்ஜாய் பண்ணிட்டு வந்துடு...''

''தேங்க்ஸ்ண்ணா...'' என்று கமலேஷ் சொல்ல,

''ஆனாலும் ஒரு லட்சமா?'' என்று அவனை இடைமறித்தாள் ரேவதி.

''என்ன நீ, உனக்கு மட்டும் செலவு பண்ணாமலா இருக்கோம். பசங்களோட கம்பேரிஷன் பண்ணிப் பேசாத'' என்று மகளை அதட்டினார் கல்யாணி.

''அப்பிடிப்பாத்தா பெரியண்ணா என்ன செலவு தனக்குன்னு செய்யறாராம்? கஷ்டப்பட்டு உழைச்சுட்டே தான இருக்கார்...''

''ம், இப்பவாவது புரிஞ்சா சரி...'' என்ற தம்பியிடம் ''போதும்பா எதுக்குத் தேவையில்லாம பேசிக்கிட்டு, போய் வேலையப் பாருங்க'' என்று ஸ்ரீஹரி சொல்ல,

''அதான'' என்றார் கல்யாணி.

''எல்லாம் நீங்க குடுக்கற இடம், என்ன இருந்தாலும் ஒரு ஆண் பிள்ளைக்கு இத்தனை செல்லம் குடுக்க வேணாம்...''

''போதும் ரேவதி...'' என்று கமலேஷ் தங்கையை அதட்ட, ''பின்ன என்னடா படிப்பு முடிஞ்சு கூட ரெண்டு வருஷமாச்சு வெளிய எல்லார் கூடவும் அண்ணா கூட சேர்ந்து பிஸினெஸ் பாக்கறதா பந்தா விட்டுக்கிட்டு... ஆனா ஒரு சின்ன உதவியாவது நீ ஹரி அண்ணாவுக்குப் பண்ணிக் குடுத்திருப்பியா? அட நான் வேற உபத் திரவம் குடுக்காம இருந்தாப் போதாது?'' என்று கோபத் துடன் முடித்தாள்.

அதற்குக் கமலேஷ் ஏதோ சொல்ல வர, ''போதும் ரேவதி கிளம்பு எனக்கு லேட்டாயிடும்'' என்றான் ஸ்ரீஹரி.

அண்ணனின் அந்தக் குரலுக்கு தம்பி தங்கை இரு வருமே பணிந்திருக்க, ''சன்டேன்னு கூட இல்லாம முழு நாளும் கம்பெனியிலேயே உக்காந்துடதே ஹரி லஞ்ச் சுக்கு வந்துடு'' என்று பெரிய மகனிடம் சொன்னார் கல்யாணி.

''வந்துடுவேம்மா, ஆனா எனக்காக நீங்க உண்ணா விரதம் இருக்காதீங்க. நேரத்துல சாப்புடுங்க'' என்று விட்டுக் கிளம்பியிருந்தான் ஸ்ரீஹரி.

''மம்மி பை'' என்று விட்டுத் தானும் தனது பெரிய அண்ணனைப் பின் தொடர்ந்தாள் ரேவதி.

## 2

இருந்த வேலை மும்முரத்தில் அன்று ஞாயிற்றுக் கிழமை என்பது கூட மறந்து போயிருந்தது ஸ்ரீஹரிக்கு.



மதிய உணவு வேளைக்கு மேலேயே ஆகி விட்டிருக்க, உடனே மொபைலை எடுத்துத் தனது தாய்க்கு அழைத் திருந்தான்.

'இன்னும் வேலை முடியவில்லை, நான் வெளியில் சாப்பிட்டுக் கொள்கிறேன். எனக்காகக் காத்திருக்க வேண்டாமென்று' மீண்டுமொரு முறையும் சொல்லி விட்டுத் தான் வழக்கமாகச் சாப்பிடும் அருகிலிருக்கும் அந்த ஹோட்டலுக்குச் சென்று பசியாறி விட்டு வந்தான்.

இடையில் இரண்டு முறை தங்கைக்கும் அழைத்துப் பேசினான்.

அவள் தனது தோழிகளுடன் வீடு சென்று விட்டதாகச் சொல்ல, மீண்டும் வேலையில் முழுகிப் போனான்.

அனைத்து முக்கியமான வேலைகளையும் முடித்து விட்டவன், அந்த மாதத்தின் வரவு செலவைக் கணக் கிட்டுப் பார்த்தான்.

துல்லியமாகக் கணக்கிட்டுப் பார்த்தவனுக்கு வரவை விட, கூட செலவு பல மடங்கு அதிகமாகியிருந்தது தெரிந்தது.

ஒவ்வொரு மாதமும் ஒரு பெரிய தொகை துண்டு விழுந்து கொண்டே வருவதும்,

அதற்கும் தொழில் நல்லவிதமாகத் தான் போய்க் கொண்டிருந்தது.

ஸ்ரீஹரி நிர்வகித்துக் கொண்டிருக்கும் தொழில் நலிவடைய முடியுமா என்ன,

அப்புறம் ஏன் இந்தப் பற்றாக்குறை.

வேறென்ன, ஒவ்வொரு மாதமும் புதிது புதிதாக குடும்ப நபர்கள் அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு இழுத்து வைக்கும் அதிகப்படியான செலவுகள் தானென்று மனம் உடனே சொன்னது.

இப்படியே போனால் பின்னர் குடும்ப நிலை,

இதற்கு என்ன தீர்வு,

நன்கு யோசித்துப் பார்த்ததில் குடும்ப நபர்கள் செய்யும் செலவுகளும் கூட அதிகப்படியானதோ, ஆடம்பரமானதோ இல்லையென்று தான் தோன்றியது.

சிறு வயது முதலே செல்வச் செழிப்புடன் வளர்ந்து விட்டவர்களுக்கு இப்போதைய குடும்ப, முக்கியமாகத் தொழில் நிலை புரிவது சற்று சிரமம்தான்.

ஒருவேளை எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வார்களோ?

ஆனால் அதற்கும் ஸ்ரீஹரிக்கு மனம் வந்திருக்கவில்லை.

யாருடைய சந்தோஷத்தையும் குறைக்க அவனால் எப்படி முடியும், முக்கியமாகத் தம்பி தங்கையின் சந்தோஷத்தை.

அதிலும் இது அனுபவிக்கக் கூடிய வயதல்லவா.

யோசிக்காமல் லட்சலட்சமாக செலவு செய்து கொண்டிருந்தவர்கள். இப்பொழுது சில ஆயிரத்திற்குக் கூடப் பலமுறை யோசித்த பிறகே தன்னைக் கேட்பது அவனுக்கும் புரியாமல் இல்லையே,

அப்படியானால் இதற்கு என்னதான் தீர்வு.



சந்தேகமே இல்லை வரவை அதிகப்படுத்துவது தான்.

அதற்காகத் தான் எவ்வளவு சிரமப்பட நேர்ந்தாலும் சரிதான்.

இப்பொழுதே பசி, உறக்கம் பாராது உழைத்துக் கொண்டு தானே இருக்கிறோமென்பதை அவனுடைய மனம் ஒப்புக் கொள்வதாக இல்லை.

தேவைகளைப் பூர்த்தி செய்யாத உழைப்பு முற்றுப் பெறாதது தான்.

அதனால் எந்தப் பலனும் இல்லை.

தந்தை இருந்து நல்லவிதமாகத் தொழிலும் போய்க் கொண்டிருந்த காலத்தில் தான் செய்யாத செலவுகளா என்ன.

அதற்கு அவர் கணக்குப் பார்த்தார் இல்லையே,

இப்பொழுது இருக்கும் தம்பியை விடவும் கூடப் பல மடங்கு செலவுகளைச் செய்து கொண்டு ஒரு பட்டாம் பூச்சி போலத் துள்ளித் திரிந்து கொண்டிருந்தோம் தானே.

அதே வாழ்க்கையைத் தன்னுடைய குடும்பத்திற்கும் தான் தராவிட்டால் பின்னர் தன்னைப் போல சுயநலவாதி யார் இருக்க முடியும்.

ஸ்ரீஹரி குடும்பத்தின் மூத்த ஆண் பிள்ளை.

இப்பொழுது குடும்பத் தலைவனாகவும் இருப்பவன்.

அவனுக்கு அடுத்ததாக ஆண் பிள்ளை கமலேஷ், கடைசியாகப் பெண் ரேவதி என அவனோடு சேர்த்து மொத்தம் மூன்று பேர்.

அவர்களுடைய தந்தை அதாவது அந்தக் குடும்பத்தின் தலைவரான கிருஷ்ணன் மறைந்து ஐந்து வருடங்களுக்கும் மேலேயே ஆகி விட்டிருந்தன.

அவர் மறைந்த சமயம் குடும்பத் தொழில் மிகவும் நலிவடைந்திருந்த நேரம்.

முக்கியமாகத் தொழில் நிலை சரிந்ததாலேயே அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டார் என்று சொன்னால் சரியாக இருக்கும்.

ஸ்ரீஹரியும் அப்பொழுது தான் படிப்பை முடித்திருந்த சமயம்.

தம்பி, தங்கை இருவரும் கல்லூரியிலும் பள்ளியிலும் படித்துக் கொண்டிருக்க, அவ்வளவுதான் இனி அனைத்துமே முடிந்தது என்று கிருஷ்ணன் முடிவு செய்திருந்த வேளையில் சரியாக வந்து தந்தைக்குக் கை கொடுத்திருந்தான் ஸ்ரீஹரி.

அவனுடைய வரவால் படுத்திருந்த தொழில் கொஞ்சம் கொஞ்சமாக எழத் தொடங்கியிருந்தாலும், அவனுடைய தந்தையான கிருஷ்ணனின் உடல் நிலையோ நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே தான் சென்றது.

அவ்வளவுதான் தொழில் இனி சீர்பட வாய்ப்பே இல்லை என்னும் எண்ணமே அவரை அந்த அளவிற்குக் கிடை சேர்த்திருந்ததென்று சொல்லலாம்.

ஸ்ரீஹரிக்கும் கண்களைக் கட்டிக் காட்டுக்குள் விட்ட நிலைதான்.

தொழிலுக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பு வரை அவனுக்கும் தந்தை என்ன தொழில் செய்து



கொண்டிருக்கிறார் என்பதற்கு மேல் தொழிலைப் பற்றி எதுவும் தெரியாது.

அப்படிப்பட்டவன் புதிதாகத் தொழிலை, அதுவும் கிட்டத்தட்ட முடிந்து போய் விட்டிருந்த தொழிலை முதல் படியிலிருந்து எடுத்து நிறுத்த அவன் பட்ட பாடு அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

அதற்காக சோர்ந்து போய் விட்டான் என்பது பொருளல்ல.

உழைக்கவோ, சிரமங்களை எதிர்கொள்ளவோ அவன் என்றுமே துளியும் தயங்கியவன் கிடையாது.

என்ன தொழிலைக் கற்றுக் கொள்ள நேர்ந்த போதே அவன் எதிர்கொண்ட தந்தையின் மறைவு, தொழிலில் ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவு, பணப் பற்றாக்குறை என அனைத்தும் அவனை சற்றே நிலைகுலையச் செய்து விட்டிருந்தன என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஆனால் அதெல்லாம் அந்தந்த நேரங்களில் மட்டும் தான்.

சில நாட்களுக்குள்ளேயே முழுமையாகத் தெளிந்து எழுந்தும் இருந்தான்.

ஆனாலும் சான் ஏறினால் முழம் சறுக்குகிற கதையாக மிகப்பெரிய சரிவை சந்தித்திருந்த தொழில் ஒன்றும் அவ்வளவு விரைவில் முன்னேற்றப் பாதையில் நடைபோடத் தொடங்கி விடவில்லை.

பரவாயில்லை கொஞ்சம் சீர்படத் தொடங்கி விட்டது என்று அவன் நினைப்பதற்கு முன்பாகவே புதிது

புதிதாகப் பிரச்சனைகள் முளைத்துக் கொண்டே இருந்தன.

அவை எல்லாவற்றையும் தாண்டிச் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், முன்னைக்கு இப்பொழுது தொழில் அபாய கட்டத்தைக் கடந்து விட்டிருக்கிறது அவ்வளவே.

ஆனாலும் இனி எப்பொழுதும் சறுக்குவதற்கு வழியே இல்லை என்பதிலும், இனி வருகின்ற காலங்களில் முன்னேற்றப் பாதையில் மிக வேகமாக நடை போடலாம் என்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்.

இந்த நிலையை அடைவதற்கு அவன் பட்ட பாடும் அவ்வளவு சாதாரணமானதல்ல.

ஏன், அப்படி அவன் பட்ட சிரமம் குடும்ப நபர்களுக்குமே கூடப் பாதி தெரியாதே.

ஒருவேளை தெரிந்திருந்தால் செலவுகளைக் குறைத்துக் கொண்டிருப்பார்களோ.

இல்லை, அதற்கு அவசியமே இல்லை.

அவர்களுக்கு எதுவும் தெரியாமலே இருக்கட்டும்.

தான் நினைக்கிறபடி, தொழில் செல்லத் தொடங்கி விட்டால் பிறகு இது என்ன, இது போல நூறு மடங்கு செலவுகளைக் கூட சர்வசாதாரணமாக ஈடுகட்டலாமே.

தனது மொபைல் அழைக்க உடனே அட்டெண்ட் செய்து பேசினான்.

எதிர்ப்பக்கத்தில் தாய் சொன்ன செய்தி மிகுந்த சந்தோஷத்தைக் கொடுப்பதாகவே இருந்தது.

சில வினாடிகள் பேசியவன், ''நேர்ல வர்றேன்'' என்று மொபைலை வைத்திருந்தான்?



வைத்தவன், அடுத்த சில நிமிடங்களிலேயே வீட்டிற்கும் கிளம்பியிருந்தான்.

தங்கையைப் பெண் கேட்டு தூரத்து உறவினர்கள் வீட்டிற்கு வந்திருக்கும் செய்தி அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒன்று தான்.

ஏற்கனவே பேச்சு வாக்கில் சில முறை கேட்டவர்கள் இப்பொழுது வீட்டிற்கே வந்திருக்கிறார்கள் அவ்வளவே.

எந்த விதத்திலும் தட்டிக் கழித்து விட முடியாத நல்ல சம்பந்தம்தான்.

தங்கையும் படிப்பை முடித்து வருடத்திற்கும் மேலேயே ஆகி விட்டதே.

எப்படியோ அனைத்தும் நல்ல விதமாக நடந்தால் சரிதானென்று எண்ணிக் கொண்டே உற்சாக மனநிலையுடன் வீடு வந்து சேர்ந்திருந்தான் ஸ்ரீஹரி.

## 3

பெண் மற்றும் மாப்பிள்ளை வீட்டார் இருவருக்குமே பரஸ்பரம் பிடித்து விட்டிருக்க, இருவரும் கலந்து பேசி திருமண நாள் நிச்சயிக்கப்பட்டது.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருந்த நிலையில், பெண்ணிற்குத் தேவையான நகைகள், துணிகள், பாத்திரங்கள் என அனைத்தையும் சேர்ப்பதில் முழு மூச்சுடன் இறங்கியிருந்தார் கல்யாணி.

''அம்மா...''

''வா ஹரி, என்ன இன்னைக்குக் கம்பெனியிலிருந்து அதிசயமா நேரத்துலயே கிளம்பி வந்துட்ட போல?'' என்று சந்தோஷமாக மகனை எதிர் கொண்டார் கல்யாணி.

''ஆமாம்மா, அப்புறம் எங்க யாரையும் காணல?''

''ரேவதி இன்னும் வேலையிலிருந்து வரல, கமல் உள்ள இருந்தான்.''

''எங்கயோ கிளம்பிட்டிருக்கீங்க போல?''

''ஆமாம் ஹரி, கொஞ்சம் கடைவீதி வரைக்கும் போக வேண்டியிருக்கு. கமலத்தான் கூட்டிட்டுப் போகச் சொன்னேன். நீயும் வாயேன் கண்ணா...''

''எதுக்குமா?''

''நகைக்கு ஆர்டர் குடுக்கணும். கொஞ்சம் பழைய நகைகளை மாத்திப் புதுசாவும் எடுக்கணும், அதான்.''

''எடுக்கப் போறது ரேவதிக்கு அவ இல்லாமப் போகப் போறீங்களா?''

''அவதான் உங்க இஷ்டம்னு சொன்னா ஹரி.''

''அது எப்பிடிமா, அவளக் கூட்டிட்டுப் போய் அவ மனசுக்குப் பிடிச்சத எடுங்க'' என்ற மகனைப் பெருமை பொங்கப் பார்த்தார் கல்யாணி.

நம் கடமை பணம் கொடுப்பது அதற்கு மேல் எது எப்படி நடந்தால் நமக்கென்ன என்று இருந்து விடாமல் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் கவனத்துடன் நடந்து கொள்ளும் பெரிய மகனின் அக்கறையில் மனம் நெகிழ்ந்து போனார்.

''என்னம்மா?''



''இல்ல, அவளக் கூட்டிட்டுப் போனா மாடர்னாப் பாக் கறேன் அது இதுன்னு கசகசன்னு செலக்ட் பண்ணுவா, அதோட...''

''என்னமா சொல்லுங்க?''

''அதோட பட்ஜெட்டும் ஏகத்துக்கு எகிறிடும்.''

''அட என்னமா நீங்க, நல்லவேள இந்த வார்த்தையை நீங்க அவளுக்கு முன்னாடி சொல்லிடல. லைஃப்ல ஒரு தடவ வர்ற கல்யாணம் அதுலயும் குடும்பத்துக்கு ஒரே பெண் வாரிசு, எல்லாத்துக்கும் மேல என்னோட தங் கைக்குக் கணக்குப் பாக்க வேண்டாம்...''

அப்பொழுதிருந்த நிலையில் மகளின் திருமணத் தையே நினைத்துப் பார்த்திராத கல்யாணிக்கு மகன் சொன்ன வார்த்தைகள் மிகுந்த சந்தோஷத்தையும் முக் கியமாக ஆறுதலையும் கொடுத்திருந்தன.

அப்படியானால் மகனுக்குப் பணத்தைப் பற்றிய பிரச் சனை இல்லையோ,

அப்படியே இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளக் கூடியவன் இல்லையே,

ஏன் எதையுமே கூட.

அந்த அளவிற்கு அழுத்தக்காரனாயிற்றே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவர் உடனே தனது எண்ணப் போக்கின் தவறை உணர்ந்தார்.

நாம் இப்படி நினைப்பது சரியாகுமா.

பாவம் கஷ்டங்களைச் சொல்லி குடும்பத்தினரை முக்கியமாகத் தன்னைச் சிரமப்படுத்த வேண்டாமென்று கூட மகன் நினைத்திருக்கலாம் அல்லவா.

ஏன் அதுதானே அவனுடைய குணமும்,

''என்னமா யோசன?''

''தொழில் எப்பிடிப் போயிட்டிருக்குப்பா?''

''ஸ்லோ அண்ட் ஸ்டெடியா முன்னேறிட்டிருக்குமா...''

அப்படிச் சொன்ன மகனைக் கல்யாணி புரியாமல் பார்க்க, ''முன்னைக்கு இப்ப ரொம்ப நல்லாப் போயிட்டிருக்குன்னே சொல்லலாம்'' என்றான்.

''இருந்தாலும் கல்யாணத்துக்கு செலவு நிறைய ஆகுமே...''

அது சரி தான், ஆனால் அவர்களுடைய நிலைக்கு அது ஒன்றும் சமாளிக்கவே முடியாது என்னுமளவிற்குப் பெரிய தொகையும் அல்லவே.

''என்ன கண்ணா?''

''அப்பிடியெல்லாம் இல்லமா, என்ன எதிர்பாராம திடீர்னு வந்த செலவுன்னு வேணும்னா சொல்லலாம். ஆனா.... ஒரேடியா அப்பிடித்தான்னும் சொல்லிட முடியாது''

''ஆனா அது கூட அவசரத் தேவைக்குன்னு ஒதுக்கி வெச்சிருந்த தொகை கை கொடுத்திருக்கு அவ்வளவு தான்.''

அப்படிச் சொன்ன மகனைக் கல்யாணி கவலையுடன் பார்க்க, என்ன முயன்றும் ஸ்ரீஹரியால் புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''நான் ஸீரியஸாப் பேசிட்டிருக்கேன், உனக்கு என்னடா சிரிப்பு?''



''பின்ன இவ்வளவு ஸீரியஸா இருந்தா, நம்ம வீட்டுக் கல்யாணம் சந்தோஷமா எதிர்பாக்க வேண்டாம்?''

''அது சரிதான் ஹரி, ஆனா எல்லா பாரமும் உன் தலை மேலேயே வந்து விழுதே... ம்கூம் நான் ஒன்னும் உனக்குக் கஷ்டம்னு சொல்ல வரல, தொழில் திரும்பவும் இப்பதான் தலையெடுத்திருக்கிற இந்த நேரத்துல செலவு மேல செ...''

''அது ஒரு பக்கம், இது ஒரு பக்கம்மா, எல்லாத்துக்கும் மேல பணத்தப் புரட்டறது ஒரு பெரிய விஷயமே கிடையாது...''

''என்னவோ கண்ணா ஆனா உன்னால முடியாத துன்னும் ஒண்ணும் இருக்க முடியாதே. அடடா நீ வந்து கூட எவ்வளவு நேரமாச்சு உனக்கு சாப்பிடக் கூட ஒண்ணும் குடுக்காம...'' என்றவர் எழுந்து சமையலறைக்குச் செல்ல, '' டீ மட்டும் போதும்மா'' என்றான் ஸ்ரீஹரி.

சில நிமிடங்களில் டீயோடு, ஸ்நேக்ஸையும் எடுத்துக் கொண்டு வந்த மகனுக்குக் கொடுத்து உபசரித்தார் கல்யாணி.

''அப்புறம் ஹரி....''

''என்னமா?''

''நீ வாயேன் இப்ப எங்கூட...''

''தாராளமாப் போலாம். ஒரு பதினஞ்சு நிமிஷம் மட்டும் வெயிட் பண்ணினீங்கன்னாக் குளிச்சுட்டு வந்துடுவேன்.''

''மெதுவாவே கிளம்பி வா ஹரி, அதுக்குள்ள ரேவதியும் வந்துடுவா வேணும்னா கூட அழைச்சுட்டுப் போலாம்.''

''சரிதான்மா'' என்றவன் கிளம்பி வருகிறேனென்று எழுந்து உள்ளே வந்திருந்தான்.

சொன்னது போலக் கிளம்பி வந்திருந்தவன், தங்கை வந்து விட்டதைக் கண்டான்.

# 4

''வாம்மா...''

''வாவ் அண்ணா!''

''என்ன இவ்வளவு ஆச்சரியம்?''

''பின்ன நீங்களா இப்ப எனக்கு முன்னாடி இருக்கிறது? நீங்க இந்த நேரத்துல வீட்ல இருந்து அதுவும் நான் பாத்துப் பல காலமாச்சே...''

''சரி சரி ரேவதி, சீக்கிரம் போய்க் கிளம்பி வா.''

''எதுக்குமா...?''

''ம், கடைவீதி வரைக்கும் போய்ட்டு வரலாம்...''

''எதுக்கு...?''

''உனக்கு நகை ஆர்டர் குடுக்கத் தான்...''

''ம்கூம், நான் வரல...''

''ஏன்...?''

''நீங்க மட்டும் போய்ட்டு வாங்க...''

''அதான் ஏன்னு கேக்கறேன்?''



''டிரஸ்னாக் கூடக் கிளம்பி வரலாம், நகைகள்னா நீங்க சொல்றதத் தான் எடுத்தாகணும் அதோட எனக்கும் செலக்ட் பண்ணவும் தெரியாது. ப்ளீஸ் நீங்க மட்டும் போய்ட்டு வாங்களேன்...''

''சரிதான் கிளம்புங்கமா, நாம செலக்ட் பண்ணின டிஸைன மட்டும் வாங்கிட்டு வந்துடலாம். ரேவதி பாத்த துக்கப்புறமே ஆர்டர் குடுத்துடலாம்.''

''தேங்க்யூண்ணா, அப்பிடின்னா உங்க கூடத் தான் மம்மி வர்றாங்களா?''

''பின்ன?''

''அடடா இது தெரிஞ்சிருந்தா நானும் வந்திரு...''

''அப்ப வா கிளம்பு...''

''இல்லண்ணா பியூட்டி பார்லர் போகணும், அப்பாயிண்டமெண்ட் வாங்கிட்டு வந்துட்டேன். உடனே கிளம்பினா தான் சரியா இருக்கும்.''

''சரிதான் அப்புறம் ஜாப் ரிஸைன் பண்றதப் பத்தி கம்பெனில பேசிட்டயாம்மா...''

''ஆமாண்ணா, ஒன் மந்த் ரெஸிக்னேஷன் லெட்டர் நாளைக்குக் குடுக்கலாம்னு இருக்கேன்...''

''ஆமாம் குடுத்துரு...''

''அப்புறம் அண்ணா...''

''என்ன ரேவதி..?''

''வினிதா சொல்லியிருக்கேன் தானண்ணா?''

''ம் சொல்லு, உன்னோட வேலை செய்யறவங்க...''

''சரிதாண்ணா, அவளுக்கு ரிலேட்டிவ் அதுவும் தூரத்து சொந்தத்துல ஒரு பொண்ணுக்கு ஏதாவது வேலை

யிருந்தா சொல்லுன்னு என்ன ரொம்ப நாளாக் கேட்டுட்டே இருக்கா உங்களால ஏதாவது செய்ய முடியுமாண்ணா?''

''ஏன், என்ன படிச்சிருக்காங்களோ அதுக்குத் தகுந்த மாதிரி வேலைக்கு அப்ளை பண்ண வேண்டியது தான?''

''பிரச்சனையே அங்க தாண்ணா, அவங்க ப்ளஸ் டூ முடிச்சுட்டு கரஸ்ல இப்பதான் ஏதோ டிகிரி படிச்சுட்டிருக் காங்களாம். அது முடியக் கூட இன்னும் ஒரு வருஷத் துக்கு மேல ஆகுமாம்....''

''சரிதான், ஏதாவது இருந்தா சொல்றேன்...''

''........''

''என்னமா, இன்னும் என்ன?''

''இல்ல அவ என்ன ரொம்ப நாளாக் கேட்டுட்டிருக்கா, சரி சொல்றேன்னு அப்பத்துக்கு ஏதாவது பதில சொல்ற தோட நான் அந்த விஷயத்தப் பத்தியே மறந்துட்டேன். ஆனா அவ ஸீரியஸா என்னத்தான் நம்பியிருக்காங்கறதே எனக்கு இன்னைக்கு தான் தெரிஞ்சது...''

நேரமாகிக் கொண்டே போகிறதே, இப்பொழுது கிளம் பினால்தானே திரும்பி வந்து மீதமிருக்கும் கம்பெனி பெண்டிங் வேலைகளை முடிக்க முடியும்.

''ஸாரிண்ணா, உங்களுக்கு ஏதோ ஒரு விதத்துல தொல்ல குடுக்கறதே எனக்கு வேலையாய் போயிடுச்சு...''

''என்ன நீ பெரிய மனுஷி மாதிரி பேசிட்டே போற கொஞ்சம் டிடெய்லா சொல்லு என்னால ஏதாவது செய்ய முடியுமான்னு பாக்கறேன்.''



''இல்லண்ணா நான் வேணும்னா உங்க போன் நம்பரக் குடுத்துடட்டுமா, ஒரு நாலு நாள் கழிச்சு உங்களக் கூப்புட்டுக் கேட்டுக்கச் சொல்றேன்...''

''............''

''ப்ளீஸ்ணா, அட்லீஸ்ட் நான் ஒரு சின்ன எஃபர்ட் டாவது எடுத்திருக்கேங்கறது வினிதாவுக்குத் தெரி யட்டும்....''

எதற்காக உறுதியுடன் சொல்ல வேண்டும், பிறகு அதை செய்ய முடியாமல் போக வேண்டும்.

''ப்ளீஸ்ணா...''

''சரிமா கூப்புடச் சொல்லு, எதையாவது சொல்லி சமாளிச்சாப் போதுந்தான?''

''இல்லண்ணா, வேல...''

''சரிமா நாளைக்குச் சொல்றேன்...''

''தேங்க்ஸ்ணா...''

சரியாக அதே நேரம் ஹாலுக்கு வந்த தம்பி கமலேஷை ''வாப்பா'' என்று அழைத்தான் ஹரி.

தன்னை வரவேற்ற அண்ணனைக் குற்ற மனப்பான்மையுடன் பார்த்தான் கமலேஷ்.

''என்னப்பா ரொம்ப பிஸியா...?''

அண்ணன் கேட்க, ''அதெல்லாம் ஒன்னுமில்லண்ணா'' என்று தயக்கத்துடன் சொன்னான்.

அதே நேரம் ''வா கமல் என்ன முடிவு பண்ணியிருக்க?'' என்ற தாயை மகன்கள் இருவரும் ஒருசேரப் பார்த்தனர்.

''இனியெல்லாம் கேன்சல் பண்ண முடியாதுமா, முடிவு செஞ்சது செஞ்சதுதான்.''

''என்னடா நீ, இந்த சமயத்துலயும் கூட நீ டூர் போய்த் தான் ஆகணுமா?''

''ஏன் அவன் டூர் போறதுல இப்ப என்ன பிரச்சன...?''

''பின்ன கல்யாணம் வாற இந்த நேரத்துல எதுக் குப்பா...?''

''அட என்னமா நீங்க, அதுக்கும் கமல் டூர் போறதுக்கும் என்ன சம்பந்தம்? அதுலயும் கல்யாணத்துக்கு இருபது நாள் இருக்கும் போதே வந்துடப் போறான்...''

''கமல் இருந்தா அழைப்புக்கெல்லாம் சவுகர்யமா இருக்கும்பா, இல்லன்னா நீ தான பிஸினஸையும் பாத் துட்டு கல்யாண வேலைகளையும் பாத்து சிரமப்படணும்...''

தாய் சொல்வதில் இருக்கும் உண்மை புரிந்தாலும், பாவம் தம்பி பயணத்தை ஆசையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் தான் தோன்றியது ஸ்ரீஹரிக்கு.

''எதுக்கும் நீ டூர கேன்சல் பண்ணிடேன் கமல்...''

''விடுங்கமா அவன் டூர் போய்ட்டே வரட்டும்...''

''என்ன இருந்தாலும்...''

''போதும் விடுங்கமா, இப்பக் கிளம்புங்க லேட்டாச்சு...''

அந்தக் குரலில் மகன் சொல்லி விட்ட பிறகு அதற்கு மேல் கல்யாணியாலும் எதையும் பேச முடிந்திருக்க வில்லை.



# 5

உடனே கிளம்பி விட்டிருந்தவர்கள், வேலையை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர வெகு நேரமாகி விட்டிருந்தது.

அதிலும் கல்யாணி மட்டுமே வீடு வந்து சேர்ந்திருக்க, ஸ்ரீஹரி அப்படியே கம்பெனிக்குச் சென்று விட்டிருந் தான்.

அவனுக்காகப் பார்த்துக் கொண்டிருக்காமல் தான் உணவை முடித்துக் கொண்டு தூங்கச் சென்று விட வேண்டுமென்று மகன் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டது தான் நினைவிற்கு வந்தது கல்யாணிக்கு.

மகனை நினைக்கவே பெருமையாக இருந்தது அவ ருக்கு.

யாரையும் குற்றம் சொல்லாமல், முக்கியமாக எதற்கும் சலித்துக் கொள்ளாமல், எந்நேரமும் உழைத்துக் கொண்டு, குடும்பத்தையும், தொழிலையும் இரு கண்களாகப் பார்த்துக் கொண்டு....

இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாமே.

''ஹாய்மா...''

''வா ரேவதி...''

''ஆமா நீங்க எப்ப வந்தீங்க...''

''பத்து நிமிஷமாச்சு...''

''அண்ணா...''

''அவன் கம்பெனிக்குப் போய்ட்டான்...''

''கம்பெனிக்கா!...''

''ஆமாம்மா, வா நீ வந்து சாப்புடு...''

''அதிருக்கட்டும்மா, இந்நேரத்துக்கு தூங்கத்தான் போகணும். அத விட்டுட்டுக் கம்பெனிக்குப் போயி....''

''அது நமக்கு...''

''பின்ன அண்ணாவுக்கு...?''

ஏன் அவன் வீட்டிலேயே இருந்தாலும் கூட அவனுடைய அறையில் பன்னிரெண்டு ஒரு மணி வரை மின்சார விளக்கு எரிந்து கொண்டு தானே இருக்கிறது.

அதிலும் தங்கையின் திருமணப் பேச்சிற்குப் பிறகு மகன் உழைக்கும் நேரத்தை இன்னும் அதிகமாக்கிக் கொண்டானோ என்று கூடத் தோன்றியது கல்யாணிக்கு.

இந்த அழுத்தக்காரனும் தான் பிரச்சனைகளையும், கஷ்டங்களையும் கொஞ்சம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டால் என்னவாம் என்று சற்று எரிச்சலாகக் கூட இருந்தது.

''என்னமா யோசன...?''

''முதல்ல உக்காந்து சாப்புடு...''

''நீங்களும் வாங்க...''

''நான் ஆச்சு...''

''நிஜமாவா...!''

''ஆமாம்மா, அவ்வளவு பசி. கமலும் சாப்பிட்டுப் போயிட்டான். நீ மட்டும் தான் பாக்கி.''



''சரிதான் நானும் சாப்பிட்டுப் போய்ப் படுக்கறேன், அப்ப தான் காலைல நேரத்துல எழ முடியும்....''

''ஏன் நேரத்துல எழுந்து எங்க போகப் போற...?''

''ம், எக்ஸர்சைஸ் வாக்கிங் எல்லாம் போயாகணுமே. உடம்பக் குறைக்கணும்மா'' என்று அமர்ந்து சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தாள் ரேவதி.

''அப்புறம் மம்மி...''

''என்னமா...?''

''இல்ல...''

''என்னடி சொல்லு, என்ன தயங்கற...?''

''இல்ல இப்ப நாம இருக்கற நிலமைக்கு எனக்குக் கல்யாணம் அவசியமா....?''

''என்ன நீ, ஏதேதோ பேசிட்டிருக்க...?''

''இருக்கறத சொல்றேன்....''

''பேசாம சாப்டுட்டுப் போய்த் தூங்கு ரேவதி, உங்கண்ணன் கேட்டா சங்கடப்படுவான். அவங்கிட்ட நானே சில விஷயங்களப் பத்திப் பேசறதில்ல...''

''க்கும் பேசினாலும் உங்க மகன் வெளிப்படையா பதில் சொல்லிடுவாராக்கும்...''

''ஏய் என்னடி நீ...''

''பின்ன என்னமா, கஷ்டப்படறதுக்கும் உழைக்கறதுக்கும் ஒரு அளவு இருக்கு தான? ஹரி அண்ணா எப்பிடிப்போனா நமக்கென்னன்னு இருக்க முடிஞ்சுட்டா அப்புறம் நாமெல்லாம் என்ன சொந்தங்களாம்.''

மகளின் ஆதங்கம் கல்யாணிக்கும் புரியவே செய்தது.

ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.....

மகன் தான் ஒரு பக்கம் சிரமப்படுகிறானென்றால், இனி நாம் மகளையும் சிரமப்படுத்த வேண்டுமா என்ற எண்ணம் கல்யாணிக்கு.

இவளிடம் ஆம் என்று ஒப்புக் கொண்டால் பிறகு மகன் சிரமப்படுவதாக நாமே ஒப்புக் கொள்வது போல் ஆகாதா.

எத்தனை எத்தனையோ சிரமங்களைக் கடந்து இந்த அளவிற்கு சாதித்தவனால் இனியும் முடியாதா என்ன?

நிச்சயம் அவனால் முடியும்.

''என்னமா நான் சொல்றது சரி தான?''

''என்ன சொன்ன...?''

''அட என்னமா நீங்க, அண்...''

''சாப்டாச்சுன்னா தூங்கப் போ ரேவதி, சின்னப் பொண்ணா லட்சணமா நடந்துதுக்கோ. அவசியமே இல்லாததையெல்லாம் திங்க் பண்ணி நிம்மதியக் கெடுத்துக்காம ஃப்ரியா இரு.''

''என்னமா திடீர்னு நீங்க டென்ஷனாயிட்டீங்க...?''

''அதெல்லாம் இல்லமா, நீ சந்தோஷமா இருக்கணும். உங்க அண்ணன் மட்டுமல்ல நானும் அதத்தான் விரும்பறேன். கல்யாணங்கறது எப்ப இருந்தாலும், செஞ்சாக வேண்டிய ஒண்ணுதான். அத நானும் ஸ்ரீஹரியும் சில வருஷங்களாவே எதிர்பாத்துட்டும் இருக்கோம். அதனால



இந்த மாதிரி உப்புப் பெறாத விஷயத்தப் பத்தியெல்லாம் கவலைப்படாம சந்தோஷமா இருக்கணும். அதத்தான் நாங்களும் உங்கிட்ட எதிர்பார்க்கறோம்'' என்று முடித்தார் கல்யாணி.

# 6

பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.

ஸ்ரீஹரி எப்பொழுதும் போல நிமிடத்தைக் கூட வீணாக்காது தொழிலில் மூழ்கி விட்டிருக்க, ரேவதி வேலையை ராஜினாமா செய்வதற்கு இன்னும் பதினைந்து நாட்களே மீதமிருந்தன.

கல்யாணி மகளுக்குக் கல்யாணத்திற்கு சேர்க்க வேண்டிய சீர் முறைகளில் மும்முரமாகி விட்டிருக்க, கமலேஷ் ஆல் இன்டியா டூர் கிளம்பிச் சென்றிருந்தான்.

அன்று ஞாயிறு.

விடுமுறை நாள்.

வழக்கம் போல ஏழு மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள் ரேவதி.

''மம்மி காபி...''

''ரெண்டு நிமிஷம்மா...''

''சரிதான்மா, மெதுவா எடுத்துட்டு வாங்க அவசரமில்ல'' என்றவள் டி.வியை ஆன் செய்து கொண்டு சோபாவில் அமர்ந்தாள்.

''என்னடா பண்ணிட்டிருக்க?'' என்ற குரலில் திரும்பி னாள் ரேவதி.

ஸ்ரீஹரி வெளியே கிளம்புவதற்குத் தயாராகிக் கொண் டிருக்க,

''குட்மார்னிங்ணா'' என்றாள்.

''வெரி குட்மார்னிங்மா, மாப்ள என்ன சொன்னார், எப்படியிருக்கார்?''

''..........''

''ரேவதி...''

''........''

''ரேவதி உங்கூடத் தான்.''

''நான் உங்க கூடப் பேச மாட்டேண்ணா..''

''ஏன்?''

''எனக்கு உங்க மேல கோபம்...''

''அடடா, என்ன விஷயம்?''

''ம். அது உங்களுக்கே தெரியும்.''

''எனக்கே தெரியுமா?''

''ம். நான் இந்த வீட்ல இருக்கப் போறதே இன்னும் ஒரு மாசத்துக்கு தான்...''

''இன்னும் ஒரு மாசமிருக்கா, ரொம்பக் கஷ்டம்...''

''அண்ணா வே...''

''சரிதான், அது வரைக்குமாவது மாப்ள ஃப்ரீயா இருக் கட்டும்...''

''வேண்டாண்ணா, நான் ஸீரியஸாப் பேசிட்டிருக்கேன்.''



''அடடா, சொல்லுங்க மேடம் நான் இப்ப என்ன செய் யட்டும்? எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம் மேடம் அத விட்டுட்டுக் கோபப்பட்டு எதை...''

அண்ணனின் அடக்கமான பாவனையில் சிரிப்பு வந்து விட்டிருக்க ''நீங்க இந்த மாதிரி ஜாலியாய் பேசி எவ்வளவு நாளாச்சு தெரியுமாண்ணா?'' என்று ஏக்கத் துடன் கேட்டாள் ரேவதி.

''உங்களையெல்லாம் விட்டுட்டு அவ்வளவு தூரம் நான் எப்பிடிண்ணா போய் இருப்பேன்'' என்ற தங்கை யின் கண்கள் இப்பொழுது கலங்கி விட்டிருக்க, ''ஏய் அசடு'' என்று அருகில் சென்று அமர்ந்திருந்தான் ஸ்ரீஹரி.

அமர்ந்தவன் தங்கையின் கைகளைத் தனது கைகளில் எடுத்து வைத்துக் கொண்டு ''கல்யாணத்துக்கு அப்புறம் நீ இத சொல்... ம்கூம் முதல்ல எங்களையெல்லாம் ஞாபகமாவது வெச்சுட்டிருப்பியா?'' என்று கேட்டான்.

அப்படிக் கேட்ட அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள் ரேவதி.

''முதல்ல மாப்பிள்ளையத் தவிர மத்தவங்க உன் கண்லயாவது பட்டா தா...''

அண்ணனின் கேலியில் ''உங்கள'' என்று விளையாட் டுக்கு அடிக்கப் போனவள் உடனே ''ஸாரிண்ணா'' என்றாள்.

அண்ணனுக்கும், தங்கைக்குமாக காபி எடுத்துக் கொண்டு வந்த கல்யாணி அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதை புன்னகையுடன் பார்த்தார்.

''என்னமா நான் சொல்றது சரிதான?''

மகன் கேட்க, "அதுலென்னப்பா சந்தேகம்?" என்றா
கல்யாணி.

"இப்பவே மாப்ள கூடத்தான் எந்நேரமும் பேசிட்
டிருக்கா, அவரும் அப்பிடித்தான் ஒண்ணுமே இல்லாத
சின்னச்சின்ன விஷயத்துக்கெல்லாம் கூட இவளுக்கு
போன் பண்ணிடறது..."

தாயின் வார்த்தைகளில் ரேவதியின் முகம் வெட்
கத்தில் சிவந்து விட்டிருக்க, "போங்கம்மா" என்றாள்.

அப்பொழுது தங்கையைப் பார்த்த ஸ்ரீஹரிக்கும்
புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்க
வில்லை.

"இப்ப தான் எனக்கு சந்தோஷமா இருக்கு," என்று
சிரிப்பிற்கிடையே சொன்னான்.

"ஏனோ?"

"பின்ன? நல்ல இடம் பிரமாதமான மாப்பிள்ளைன்னு
நாம பாட்டுக்கு முடிவு பண்ணிட்டோம். ஆனா தங்
கைக்குப் பிடிச்சிருக்கா இல்லையோன்னு நான் பயந்துட்
டுல்ல இருந்தேன்."

"நீங்க தான, சரிதான் நம்பிக்கறேன்."

"அட ஆமாம்மா."

"சரிதாண்ணா விடுங்க."

"என்னமா நீ..."

"ஹலோ, அப்பிடியொரு எண்ணம் இருந்திருந்தா
மாப்பிள்ளையப் பிடிச்சிருக்கான்னு நீங்க ஒரு வார்த்
எங்கிட்டுக் கேட்டிருப்பீங்க."



"கேக்கணும்னு நினைச்சது உண்மைதான், ஆனா போகப்போக அதுக்கு அவசியமில்லாப் போயிடுச்சு."

"ஏன்?"

"பின்ன குறைஞ்சது ஒரு நாளைக்குப் பத்து முறையாவது மாப்ள கூடப் பேசிட்றயே, எங்களுக்குத் தெரிஞ்சு..."

"நானொன்னும்..."

"எந்நேரமும் போன் பேசிட்டே இருந்தா என்ன வீட்ல எல்லாரும் ஒரு மாதிரியாப் பாக்கறாங்க. பேசாம ஏதோ ஒரு பொய்யச் சொல்லி உடனே எங்க கல்யாணத்த முடிச்சிடுங்கன்னு மாப்ளயே நேத்து எங்கிட்டக் கேட்டுக்கிட்டாருன்னாப் பாத்துக்கோயேன்."

"இத நான் நம்பணுமாக்கும்...?"

"வேணும்னா மாப்ளயக் கூப்புட்டுக் கேட்டுக்கலாமா?"

"ஒண்ணும் வேண்டா..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள் ரேவதி.

அவளுடைய முகம் சிவந்து விட்டதிலிருந்தே அழைப்பு மாப்பிள்ளையிடமிருந்து தான் என்பது தாய் மகன் இருவருக்குமே புரிந்து போய் விட்டிருந்தது.

புன்னகையுடன் தங்கையைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

தனது வருங்காலக் கணவனுடன் இயல்பாகப் பேச அப்பொழுதிருந்த நிலையிலும், மற்றவர்களின் முன்னிலையிலும் ரேவதியால் சுத்தமாக முடிந்திருக்கவில்லை, முடிந்த அளவு சமாளித்துக் கொண்டு சில வார்த்தைகள்

பேசிய ரேவதி உடனே மொபைலைத் தனது அண்ண
னிடம் கொடுத்திருந்தாள்.

தங்களுடைய வருங்கால மாப்பிள்ளையுடன் தானு
புன்னகையுடன் சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலை
வைத்திருந்த ஸ்ரீஹரி, திரும்பி தங்கையைப் பார்த்தான்

''இது நியாயமா?''

''எது?''

''அவரு கூப்புட்டதே உங்கூடப் பேசணும்னு தான்
இப்பிடிப் பண்ணலாமா?''

தனது அண்ணன் கேட்பது காதில் விழாதது போல
''எங்காவது போய்ட்டு வரலாம்ணா'' என்றாள் ரேவதி.

''எங்க?''

''உங்க கூட வெளிய போய் ரொம்ப நாளாச்சு, இன்
னைக்கு டிரஸ் எடுக்கப் போலாம்னு அம்மா சொன்னாங்க
நீங்களும் வாங்களேன்...''

''நானா...''

தனது அண்ணன் யோசிப்பதைப் பார்த்த ரேவதி
''சரிதாண்ணா உங்களுக்கும் பாவம் எத்தனையோ
வேலையிருக்கும் வேண்டாம்'' என்று விட்டிருந்தாள்.

''ம்கூம், நான் யோசிச்சது எங்க டிரஸ் பர்ச்சேஸ் பண்ண
லாம்னு...''

''சும்மா சொல்லாதீங்க.''

''நிஜம்மா, டிரஸ் எடுக்கறதுக்குன்னு மட்டுமல்ல இன்
னைக்கு முழுக்கவே நாம மூணு பேரும் வெளிய போய்ட்டு
வரலாம்.''



ஸ்ரீஹரி சொன்னதைக் கேட்டு கல்யாணி ரேவதி இருவருமே அவனை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

''என்ன பாக்கறீங்க? நான் ரெடி நீங்க ரெண்டு பேரும் போய் கிளம்பி வந்தா சரி.''

''என்னமா?''

''இல்ல இன்னைக்கு ஏதோ முக்கியமான வேலையிருக்குன்னு சொல்லிட்டிருந்தியே கண்ணா?''

''இதுவும் முக்கியம் தான்.''

''அது சரிதான்'' என்ற கல்யாணியும் மகளைத் தொடர்ந்து உடனே கிளம்பி வருகிறேனென்று சந்தோஷமாக உள்ளே சென்றார்.

தொடர்ந்து வந்த அரை மணி நேரத்தில் மூவரும் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தனர்.

கல்யாணியின் ஆசைக்காக முதலில் அருகிலிருக்கும் அவர்களுடைய குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வேண்டுதலை முடித்துக் கொண்டு, பிறகு ஒரு ஹோட்டலுக்குச் சென்று பசியாறி விட்டு அதற்குப் பிறகே துணி எடுப்பதற்காகக் கடைக்குச் சென்றார்கள்.

# 7

''அண்ணா...''

''என்னமா?''

''நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?''

''அப்பிடியா!''

''பின்ன, என் கல்யாணத்துக்கு நானே உங்க எல்லாருக்கும் துணி எடுத்துக் குடுக்கப் போறேன்...''

''அப்பிடியா, ஓ செலக்ட் பண்ணிக் குடுக்கப் போறியா?''

''ம்கூம், நானே எடுத்துக் குடுக்கப் போறேன்.''

''அட!''

''ஆமாண்ணா, நான் சம்பாதிச்ச காசுல எடுத்துத் தரப் போறேனாக்கும்.''

''ஓ பெரிய மனுஷி எவ்வளவு வெச்சிருக்கீங்க?''

''அது சஸ்பென்ஸ்...''

''இல்லன்னு ஒப்புக்கோயேன்...''

''யார் சொன்னது? டூ லேக்ஸ் வெச்சிருக்கேனாக்கும்.''

''ஓ, அப்பப் பெரிய மனுஷிதான்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லண்ணா...''

''எது எப்படியோ உன் பணத்த நீ தொடக் கூடாது. அதுக்கும் மேல ஏதாவது வாங்கித்தான் ஆகணும்னாலும் உனக்குத் தேவையானத வாங்கிக்கோ. எங்களுக்கெல்லாம் நீ செலவு பண்ண வேண்டாம்மா.''

அண்ணனின் வார்த்தைகளில் உடனே ரேவதியின் முகம் சுருங்கிப் போய் விட்டிருந்தது.

''என்னமா?''

''சரிதாண்ணா, விடுங்க பரவாயில்ல.''

''ரேவதி இங்க பாரு...''

''ரேவதி உன்னைத்தான்...''



அண்ணனின் அழைப்பில் நிமிர்ந்தாள்.

''என்னாச்சு உனக்கு?''

''நான் எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா? அதும் நான் எடுத்துக் குடுக்கறேன்னு சொல்றத மத்தவங்கள விடவும் நீங்க என்கரேஜ் பண்ணுவீங்கன்னு ரொம்பவும் எதிர்பாத்தேண்ணா.''

''.........''

''ஆனா நீங்க... நான் கொஞ்சங் கூட எதிர்பாக்கலண்ணா...''

தங்கையை ஏதோ சொல்ல வந்த தாயைத் தடுத்திருந்த ஸ்ரீஹரி,

''சரிமா உன் கல்யாணத்துக்கு எங்களுக்கெல்லாம் டிரஸ் எடுத்துக் குடுக்கப் போறது நீ தான்'' என்றான்.

''நிஜமாவாண்ணா!''

''ஆமாம் ரேவதி, தங்கையே அவளோட கையால எடுத்துக் குடுக்கற டிரஸ்ஸப் போட்டுக்கிட்டு அவளுடைய கல்யாணத்த அட்டெண்ட் பண்ற பாக்கியம் எத்தன பேருக்குக் கிடைக்கும்?''

''அச்சச்சோ பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க.''

தனது அண்ணனே உடன் வந்ததோடல்லாமல் அவர் தன்னை வார்த்தைக்கு வார்த்தை சிரிக்க வைத்துக் கொண்டே பர்ச்சேஸ் செய்தது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது ரேவதிக்கு.

கல்யாணிக்கும்.

ஏன் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஸ்ரீஹரியுமே சந்தோஷமான மனநிலையில் இருந்தான் என்றால் அது அன்றுதானென்று சொல்ல வேண்டும்.

''அண்ணா இந்த டிரஸ் எப்படியிருக்கு?''

தங்கை ஒரு சுடிதார் மெட்டீரியலை எடுத்துக் காட்ட, உண்மையிலேயே அது மிகவும் நன்றாக இருந்ததைக் கண்டான் ஸ்ரீஹரி.

''என்னண்ணா?''

''ரொம்ப நல்லார்க்குமா, அத எடுத்து வைக்கச் சொல்லு.''

அண்ணன் தங்கை இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே ''அத ஏற்கனவே செலக்ட் பண்ணிட்டாங்க மேடம்'' என்றான் சேல்ஸ் பாய்.

அவன் சொல்வதை நம்ப முடியாதவளாய் ''இது...?'' என்று மீண்டுமொரு முறையும் தனது கையிலிருந்த மெட்டீரியலைக் காட்டிக் கேட்டாள் ரேவதி.

''அதத்தான் சொல்றேன் மேடம்'' என்று இந்த முறை அவனிடமிருந்து சற்றே அழுத்தத்துடன் பதில் வர, ''ஓ ஸாரி'' என்றாள்.

''இதுலயே இன்னொரு ஸெட் இருந்தா எடுப்பா'' என்று ஸ்ரீஹரி சொல்ல, ''இல்ல ஸார் இந்த மாடல்லயே இது தான் லாஸ்ட் பீஸ்'' என்றான்.

அதே நேரம் அங்கு வந்த அந்தப் பெண் ''எங்கப்பா நான் செலக்ட் பண்ணி வெச்ச அந்த மெட்டீரியல்?'' என்று கேட்க, ''இதோ இங்க இருக்கு மேடம்'' என்று ரேவதி நீட்டியதை ''இவங்க தான் செலக்ட்



பண்ணியிருக்காங்க'' என்று அங்கு வந்த அந்தப் பெண்ணைக் கைகாட்டி சொல்லிக் கொண்டே வாங்கிக் கொண்டான்.

''அப்பவே உள்ள எடுத்து வைக்கச் சொன்னேனே, ஏன் வைக்கல?''

வந்த பெண் அதிகாரத்துடன் மிரட்ட ''ஸாரி மேடம்'' என்றான்.

''ஒரு நிமிஷம் வெயிட் பண்ணு.என் ஸிஸ்டர் வந்தும் ஃபைனலா செலக்ட் பண்ணிக்கறேன்'' என்றவள் அங்கிருந்த இருக்கை ஒன்றை இழுத்துப் போட்டு அமர்ந்திருந்தாள்.

ஆனால் அதற்குள் ''பரவாயில்ல வேற எடுத்துக் காட்டுங்க'' என்ற ரேவதியின் வார்த்தைக்கிணங்க, ஷெல்ஃப்பில் இருந்த புதிய மெட்டீரியல்களை எடுத்துக் காட்டத் தொடங்கினான் கடைப் பையன்.

சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

மற்றொரு பெண் உள்ளே வந்திருக்க, ''ம் கொஞ்சம் முன்னாடி செலக்ட் பண்ணி வெச்சதையெல்லாம் எடு'' என்றாள் அங்கு அமர்ந்திருந்த அதிகார தோரணையுடன் பேசிய அந்தப் பெண்.

அதற்குப் பிறகு தான் வந்தவள், அந்தப் பெண்ணுடைய தங்கை என்பது புரிந்தது.

''ஒரு நிமிஷம் மேடம்'' என்று விட்டு அந்த விற்பனைப் பையன் சென்று அவற்றை எடுத்துக் காட்டத் தொடங்கியிருக்க, ''இது எப்பிடிண்ணா இருக்கு?'' என்று தனது அண்ணனிடம் வேறு சில மெட்டீரியல்களைக் காட்டிக் கருத்துக் கேட்டாள் ரேவதி.

தங்கைக்கு உரிய பதிலை சொல்லிக் கொண்டே யதேச்சையாகத் திரும்பிய ஸ்ரீஹரி, சற்று முன் கடை ஊழியனை மிரட்டிய அந்தப் பெண் இப்பொழுது அவளுடைய தங்கையிடமும் தனது கோபத்தையும் எரிச்சலையும் காட்டுவதைக் கண்டான்.

சரிதான் நமக்கென்ன என்று மீண்டும் திரும்பிக் கொள்ளப் போனவன் அதற்குப் பிறகு தான் அந்தத் தங்கையின் முகத்தைக் கண்டான்.

யாரோ ஒரு பெண்ணைப் பற்றி நமக்கென்ன என்று மனதிற்குள் தோன்றவே செய்தாலும், அவனால் ஏனோ உடனே அந்தப் பெண்ணிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அழகி தான்,

மறுப்பதற்கில்லை.

ஆனால் அதற்கு மேலேயும் ஏதோ ஒரு ஈர்ப்பு.

எங்கோ பார்த்த மாதிரி,

ம்கூம் இல்லையில்லை, எப்பொழுதோ பார்த்துப் பழக்கப்பட்ட மாதிரி...

சரிதான் எங்கே.

இல்லையே, அப்படியும் ஒன்றுமில்லையே, மீண்டும் அந்தப் பெண்ணைப் பார்த்தாக வேண்டும் போலத் தோன்றிய ஒரு வித ஆவலில் ஆச்சரியப்பட்டுப் போனான்.

அதற்குள் ''என்னமா செலக்ட் பண்ணிட்டயா?'' என்று கேட்டுக் கொண்டே கல்யாணியும் அங்கு வந்திருக்க, ''ம் பண்ணியாச்சு'' என்றாள் ரேவதி.



''என்ன மனசே இல்லாம சொல்ற, ஒண்ணும் அவசரமில்ல இன்னும் கொஞ்ச நேரங்கூட டைம் எடுத்துப் பாரு.''

தாய் சொல்ல ''அதெல்லாமில்லமா எனக்கு ரொம்ப பிடிச்ச மெட்டீரியல் ஒன்று ஸ்டாக் தீந்து போயிடுச்சு அதான்'' என்றாள்.

''அதுக்கு ஏன் இப்பிடி ஃபீல் பண்ற? இதப் பாரு'' என்று கல்யாணி மகளுக்கு அங்கு இருக்கும் வேறு சில வற்றை எடுத்துக் காட்ட, பிறகு அவற்றைப் பார்க்கத் தொடங்கிவிட்டிருந்தாள் ரேவதி.

அதே நேரம் ''அப்ப உனக்கு இந்த மெட்டீரியல் வேண்டாமா?'' என்று அந்தப் பெண் கோபத்துடன் தனது தங்கையைப் பார்த்துக் கேட்க, திடீரென்று வந்த அந்த சத்தத்தில் அந்த வினாடியில் அங்கிருந்த அனைவருமே அவர்களைத் திரும்பிப் பார்த்தனர்.

சூழ்நிலையை உணர்ந்த அந்தப் பெண்ணுடைய தங்கையின் உடல் ஒருவித வேதனையில் கூனிக் குறுகிப் போயிருக்க முகமும் கன்றிப் போய் விட்டிருந்தது தெரிந்தது.

''என்ன, பதில் சொல்றதுக்கென்ன?''

''இல்லக்கா வேண்டாம்.''

''ஏன்? கொஞ்சம் சத்தமாத்தான் பேசேன்.''

''..........''

''ஓ, மேடம் கணக்குப் பாக்கறீங்களாக்கும்...''

''..........''

இன்னும் அந்தப் பெண்பாட்டிற்கு சத்தமாகப் பேசிக் கொண்டே போக, காதுகளைப் பொத்திக் கொண்டால் ஒழிய அவளுடைய வார்த்தைகளைக் கேட்காமல் இருப்ப தற்கு வேறு வழியில்லை என்னும் நிலை உருவானது.

மற்றவர்களுக்கு எப்படியோ வீட்டிற்கு வந்து சேர்ந்த பிறகும் கூட அந்தத் துணிக்கடையில் நடந்ததுதான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது ஸ்ரீஹரிக்கு.

அந்தப் பெண்ணின் தோற்றத்தை விடவும் கூடப் பணத்திற்காக மிகவும் யோசித்த அவளுடைய நிலை அவனுடைய மனதிற்குள் ஒருவிதத் தாக்கத்தை ஏற் படுத்தியிருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

# 8

"அண்ணா..."

"வாம்மா. கிளம்பியாச்சா?"

"ஆமாண்ணா..."

"என்ன ரேவதி சொல்லு?"

"எனக்கொரு சின்ன ஹெல்ப் மட்டும்..."

"என்னமா சொல்லு?"

"என்ன ஆபீஸ் வரைக்கும் கொண்டு வந்து ட்ராப் பண்ண முடியுமாண்ணா?"

"அட இவ்வளவு தானா? நீ தயங்கறதப் பாத்து நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்..."



"இல்ல ஏதாவது ஹெல்ப் வேணும்னா நேரத்துலயே சொல்லுன்னு சொல்லியிருக்கீங்க..."

"சரிதான், அது எப்பவாவது அவசரமான வேலையிருக் கும் போது இப்ப ஒண்ணும் பிரச்சனையில்ல கிளம்ப லாமா?"

அதே நேரம் ஹாலுக்கு வந்த தாயிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த ரேவதி "போலாம்ணா" என்று சொல்ல, தானும் சென்று தனது தாயிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான் ஸ்ரீஹரி.

காரில் டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்திருந்தவன் தங்கைக்கு மறுபக்கக் கதவைத் திறந்து விட்டிருந்தான்.

தங்கை ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய்திருந் தவன், "ஒன் மந்த் ரெஸிக்னேஷன் டைம் முடிய இன் னும் பத்து நாள் தான் இருக்கு இல்லையா?" என்று கேட் டான்.

"ஆமாண்ணா அதுலயும் இன்னைக்கு சேக்கலேன்னா ஒன்பது நாள் தான் இருக்கு."

"சந்தோஷம். மாப்ள பேசினார்மா."

"........"

"என்னன்னு கேக்க மாட்டியா?"

"சொல்லுங்க..."

"கல்யாண அழைப்பு சம்பந்தமா நாளைக்குக் குடும் பத்தோட சென்னைக்கு வர்றாங்களாம்..."

"ஓ..."

"உன்ன ஒரு ரெண்டு மணி நேரம் கூட அனுப்ப முடியுமான்னு கேட்டார், உனக்கு மாப்ள ஸ்பெஷலா

ஏதோ நகை எடுத்துக் குடுக்கப் போறார் போல... என்னமா அப்பிடியா?''

''ஆமாண்ணா'' என்று மெல்லிய குரலில் சொன்ன ரேவதி, ''உங்களுக்கு எப்படித் தெரியும் அவரு சொன்னாரா?'' என்று கேட்டாள்.

''சரிதான், உன்னக் கூட அழைச்சுட்டுப் போகணுங்கறதுக்காக மேலோட்டமா சொன்னார். அதனால நானும் விளக்கமா எதையும் கேட்டுக்கல...''

''ஓ, அப்புறம்...''

''என்னமா?''

''எனக்கு இப்ப இருக்கற நகைகளே போதுண்ணா, அதுவே அளவுக்கு அதிகமா இருக்கு இனிமேல் எதுவும் வேண்டாம்.''

''அப்ப ஆர்டர் குடுத்த நகைகள என்ன பண்றதாம்?''

''வெச்சுக்கோங்க, வேற எப்பவாவது யூஸாகும்...''

''ஓ புரியுது புரியுது, என் மருமகனுக்கு...''

அண்ணனின் வார்த்தைகளில் முகம் சிவந்து விட்டிருக்க, ''போங்கண்ணா'' என்று பொய்க் கோபத்துடன் சொன்னாள் ரேவதி.

''அடடா, என் தங்கையா இப்பிடி...''

''அண்ணா...''

''சரிதான் விடு...''

''சொல்லிட்டேண்ணா எனக்கு இப்ப இருக்கற நகை...''

''போதும் ரேவதி, நீ சின்னப் பொண்ணு கொஞ்சம் பேசாம இரு.''



''இப்பவே ரொம்பக் குறைவா இருக்கோன்னு ஒரே யோசனையா இருக்கு, வேண்டாம்மா இந்த விஷயத்துல யெல்லாம் நீ ஒண்ணும் கருத்து சொல்லி உன் மண்டையப் போட்டுக் கசக்கிக்க வேண்டாம்.''

மேலும் ஏதோ சொல்ல வந்த தங்கையை அன்பாக அதட்டிய ஸ்ரீஹரி, ''இனிமேல் இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி நீ பேசக் கூடாது'' என்று முடிவாக சொல்லி விட்டிருந்தான்.

ஏற்கனவே தனது ஒரே தங்கைக்குத் தான் செய்ய விருக்கும் சீர் முறைகள் மிகவும் குறைவுதானோ என்ற ஆதங்கம் அவனுக்கு.

அப்படியிருக்க தங்கை சொன்னது அவனுக்கு மனதிற்குள் லேசான கோபத்தை உண்டாக்கி விட்டிருந்தது.

.........

''என்னமா அண்ணா மேல கோபமா?''

''அச்சச்சோ என்னண்ணா நீங்க? நீங்களே சொல்ற மாதிரி சின்னப் பொண்ணு மாதிரி தான் நான் பேசறேன் போலிருக்கு. இனிமேல் இப்பிடியெல்லாம் பேச மாட்டேன் விடுங்க'' என்றாள்.

''சரிதான் சந்தோஷம்.''

''அப்புறம் அண்ணா...''

''என்னடாம்மா?''

''ஒரு பொண்ணுக்கு வேல வேணும்னு சொல்லியிருந்தேனே, அதான்.''

''ஆமாம்மா சொல்லு.''

"அவங்க இன்னைக்கு உங்களப் பாக்க வருவாங்கன்னு நினைக்கறேன்."

"........."

"அண்ணா."

"சொல்லுமா, நானென்ன பண்ணணும்?"

"ஏதாவது வேல இருந்தா..."

"சரி."

"போட்டுக் குடுங்கண்ணா ப்ளீஸ்."

"இனிமேல் தான் நான் அவங்களுக்கு ஒரு வேலய உருவாக்கணும், அதுவும் உனக்காக."

அப்படிச் சொன்ன தனது அண்ணனைக் குற்ற மனப் பான்மையுடன் பார்த்தாள் ரேவதி.

"இல்லம்மா, சும்மா பேருக்கு ஒரு வேலயக் குடுத் துட்டு சம்பளத்தக் குடுத்துடறேன் விடு."

அண்ணனின் வார்த்தைகளில் எரிச்சல் தென்படு கிறதோ என்று ரேவதியால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

"இல்லண்ணா நம்ம கம்பெனிலயும் குறைஞ்சது நூறு பேராவது வேல செய்வாங்க இல்லையா, அந்த மாதிரி இவங்களுக்கும்..."

அவர்களிலேயே நிறையப் பேரை நிறுத்த வேண்டிய நிலையில் இப்பொழுது நம்முடைய கம்பெனி இருக் கிறது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ஸ்ரீஹரி அதைத் தனது தங்கையிடம் சொல்லவில்லை.

வேண்டாம், அவசியமே இல்லாமல் அவளை ஏன் கலவரப்படுத்த வேண்டும்.



அதிலும் நிறுத்த வேண்டுமென்பதற்கான காரணமும் கூட தொழில் சரியில்லாததாலோ, சம்பளம் கொடுக்க முடியாததாலோ அல்லவே.

வேலைகளனைத்தும் நவீன மயமாக்கப்பட்டு விட்டதோடு அவசியமற்ற வேலைகளும் சுருக்கப்பட்டு அன்றன்றைக்கே முடிக்கப்பட்டு விடுவதால் ஆட்களின் தேவை பாதிக்குப் பாதியாகக் குறைந்து போனதே அதற்குக் காரணம்.

என்னதான் நாளுக்குநாள் புதிது புதிதாக வரும் ஆர்டர்களினால் ஆட்களுக்குத் தேவை ஏற்பட்டாலும், புதிதாக யாரையும் வேலைக்கு எடுத்தாக வேண்டுமென்ற நிலை இப்பொழுது துளியும் இருக்கவில்லை.

அதைத் தங்கைக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது.

முதலில் சொன்னாலும் அவளால் புரிந்து கொள்ள முடியுமா.

தனது அண்ணனைப் பொறுத்தவரை அதுவும் தொழிலில் அவருக்கென்று சில தனிப்பட்ட கொள்கைகள் இருக்கும், அதில் என்னதான் தங்கையே என்றாலும், தான் தலையிடுவதை அவர் விரும்பமாட்டார் என்பது ரேவதிக்கும் புரியவே செய்தது.

"நம்ம கம்பெனில வேல இல்லேன்னாலும் பரவாயில்லண்ணா, அதச் சொல்லிடுங்க. அதே சமயம் வேற ஏதாவது வேல இருந்தாப் போய் ட்ரை பண்ண சொல்லிடுங்க அவ்வளவு தான்."

"சரிதான் ரேவதி, நீ இனி இந்த விஷயத்துக்காகக் கவலப்பட்றத விடு."

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் தான் வேலை செய்யும் நிறுவனத்தில் இறங்கிக் கொண்ட ரேவதி, அண்ணனுக்கு விடை கொடுத்தாள்.

# 9

''சஞ்சனா...''

''சொல்லுங்கமா.''

''என்னடி எங்க கிளம்பிட்ட?''

''வேலை பாக்கத்தான்.''

''உனக்கு வேலையே இல்லையா?''

''இல்லாததாலதானம்மா பாத்துட்டிருக்கேன்.''

''மேடம்க்கு ஜோக்காக்கும்?''

தனது அக்கா அகிலா வர, எதுவும் பேசாமல் பார்த்தாள் சஞ்சனா.

''என்னடிம்மா பேச மாட்டியா?''

''ஏன் பேசாம?''

''எங்க கிளம்பிட்ட?''

''அக்கா கேட்க, தாயிடம் சொன்ன பதிலையே அக்காவிடமும் சொன்னாள்.

''ஆரம்பிச்சுட்டியா?''

''ஆமாம்.''



''இன்னைக்கு எங்க இண்டர்வ்யூ?''

தனது அக்காவின் கேலி புரிய,

''ம்கூம் அது ஸீக்ரட்'' என்றாள்.

''ஓ, இன்னைக்கு எங்க, யார் கால்ல போய் விழறதுன்னு இன்னும் முடிவு பண்ணலையா?''

''.........''

''என்னடி பேசு?''

''போதும்.''

''என்ன போதும்?''

''இதுக்கு மேல பேசாத...''

''பேசாம? அப்பிடியென்ன வேலைக்கு போயே ஆகணுங்கற கட்டாயம் உனக்கு?''

''தயவு செஞ்சு விட்ரு. இதுக்கு மேல இந்த விஷயத்தப் பத்தி நீ பேசாத.''

''ஏன் சஞ்சனா, உன் அக்கா கேக்கறது நியாயந்தான?''

''சரி நான் கிளம்பறேன்.''

''என்னடி கேக்கறதுக்கு பதில் சொல்லிட்டுப் போ.''

''வேல கிடைச்சதும் வந்து சொல்றேன்.''

''ஒருவேள கிடைக்கலேன்னா...''

''வீட்டுக்கே வர மாட்டேன்.''

''பெருசா சொல்ற, ஒருவேள வேல கிடைக்காமப் போயிடுச்சுன்னா அப்...''

''போதும் அகிலா, இதுக்கு மேல ஒரு வார்த்த கூடப் பேசாத...''

''ஏய் என்ன உனக்கு இவ்வளவு கோபம் வருது'' என்று அகிலா தனது தங்கை சஞ்சனாவைப் பார்க்க, வெறுப்பு கலந்த ஒரு பார்வையை மட்டும் உதிர்த்து விட்டு சாலையில் இறங்கி நடக்கத் தொடங்கி விட்டிருந்தாள் அவள்.

தங்கையை இறக்கி விட்டு விட்டு வழக்கமான நேரத்திற்குள் தனது அலுவலகத்தை வந்தடைந்திருந்தான் ஸ்ரீஹரி.

''குட்மானிங் ஸார்.''

தனது பி.ஏ. காலை வாழ்த்துச் சொல்ல பதிலுக்கு தானும் சொன்னான்.

''என்னப்பா நேரத்துலயே வந்தாச்சா?''

''ஆமா ஸார்.''

''என்ன ரெஸ்ட்லெஸ்ஸா இருக்க?'

''அதெல்லாம் ஒண்ணுமில்ல ஸார்.''

''சரிதான் அப்ப என்னவோ இருக்கு.''

''ஸார்...''

தயக்கத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்தவனை ''ம் சொல்லு'' என்று புன்னகையுடன் பார்த்தான் ஸ்ரீஹரி.

''ஸார் எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கு.''

''வாழ்த்துக்கள், எப்பக் கல்யாணம்?''

''இன்னும் ரெண்டு மாசத்துக்கும் மேல இருக்கு ஸார், டிசம்பர் பதினாறாம் தேதி.''

''அப்பிடியா? பொண்ணு எந்த ஊரு?''

''பொள்ளாச்சிக்குப் பக்கம், எங்க சொந்த ஊரு தான் ஸார்.''

''சந்தோஷம், கல்யாண சாப்பாடு போடப் போறேம் என்ன சொல்லு?''



''எனக்கொரு ரெண்டு மாசம் லீவ் வேணும் ஸார்...''

தயக்கத்துடன் கேட்டவன் முடிக்காமலே பார்க்க, அவனை ஆச்சரியத்துடன் பார்த்தான் ஸ்ரீஹரி.

''என்ன ரெண்டு நாள் லீவு வேணுங்கற மாதிரி கேக்கற?''

''ஸார் நான் தான் வீட்டுக்குப் பெரிய பையன், தம்பிங்க ரெண்டு பேருமே சின்னப் பசங்க. அப்பாவும் இல்லாததால நாந்தான் போய் அம்மா கூட இருந்து எல்லா வேலைகளையும் பார்க்கணும்.''

''இன்னைக்கே கிளம்பணுங்கறியா?''

''அச்சச்சோ இல்ல ஸார், கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு மாசம் பின்னாடி ஒரு மாசம் வேணும் ஸார்.''

''அப்ப இன்னும் ஒரு மாசத்துக்கு தான் இருப்பேன்னு சொல்றியா?''

''நீங்க லீவ், குடுக்கறதுப் பொறுத்து ஸார்.''

''உனக்குக் கொடுக்காம என்னப்பா, லாஸ்ட் ஃபைவ் இயர்ஸா நீ செஞ்ச உதவி கொஞ்ச...''

''நான் ஜஸ்ட் வேல தான் ஸார் செஞ்சேன், ஆனா தகுதிக்கு மீறி அதுக்கு நீங்க எனக்குத் குடுத்த சம்பளத்துல தான் ஸார் என்னால என் குடும்பத்த இந்த அளவுக்கு நல்லா லீட் பண்ண முடிஞ்சது.''

''அது உன் திறமைக்குக் கிடைச்ச பலன் விஜய், உன் இடத்த மத்தவங்க வந்து ஃபில் பண்றதுன்னா ம்கூம் சிரமம் தான்...''

''அப்பிடியெல்லாம் இல்ல ஸார், உங்ககிட்ட வர்றவங்க மோசமா வேல செய்வது தான் சிரமம். ஸாரி ஸார்...''

''என்ன திடீர்னு...''

''இல்ல ஸார், உங்களுக்கும் வீட்ல தங்கை மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கு. இந்த சமயம் பாத்து நானும் லீவ் கேட்டாக வேண்டிய நிலை...''

''அட, என்னப்பா நீ. இந்த மாதிரி விசேஷங்களெல்லாம் நம்மளக் கேட்டுட்டு வருமா? ஒண்ணும் பிரச்சனையில்ல நீ டூ மந்த்ஸ் லீவ் எடுத்துக்கோ. அதுக்கு மேலயு வேணும்னாலும் தயங்காத.''

''அப்புறம் என் இடத்துக்கு யாரும் வரலையா... ஸார்...?''

''என்ன இவ்வளவு தயக்கம், வேண்டாம் விஜய் நானே சமாளிச்சுக்கறேன்.''

அப்படிச் சொன்ன தனது எம்.டி.யை எதுவும் பேசா மல் பார்த்தான் விஜய்.

''இனியும் என்ன?''

''இல்ல ஸார், அப்புறம் உங்களுக்கு தான் வொர்க் லோட் அதிகமாயிடும். அதுவும் இந்த மாதிரி சமயத் துல...''

''சரி அதுக்கு என்ன பண்ணலாம்?''

''ஸாரி ஸார், நான் பாட்டுக்கு என் மனசுக்குப் பட்டத சொல்லிட்டிருக்கேன் தப்பா எடுத்துக்காதீங்க...''

''தப்பா எடுத்துக்க இதுல என்ன இருக்கு, அதுவும் எனக்காக நீ பாக்கும் போது? கூல் விஜய், உன்னப் பத்தி எனக்குத் தெரியும். லைஃப்ல ஒரு தடவ வர்றது கல் யாணம். அதுக்கான ஏற்பாடுகள் ஒவ்வொன்னையும் நா தான் பாத்துப்பாத்து செய்யணும்.

ஃப்ரீயா இரு, எப்ப லீவ் வேணும்னாலும் தயங்கா கேளு, லீவ் மட்டுமில்ல என்ன ஹெல்ப் வேணும்னாலும்.''

''தேங்க் யூ ஸார்.''

''டெய்லி ரிப்போர்ட் ரெடியா?''



''ரெடி ஸார்.''

''எடுத்துட்டு என் டேபிளுக்கு வா.''

''யெஸ் ஸார்.''

''ம் என்னப்பா...''

''இல்ல என்ன விடவும் கூட நீங்க வயசுல பெரியவங்க நீங்க எப்ப ஸார் கல்யாண சாப்பாடு போடப் போறீங்க?''

''பொண்ணு கிடைச்சா.''

''உங்களுக்கு என்ன ஸார், க்யூல வந்து நிப்பாங்க.''

''சேச்சே, எனக்கு அந்த அளவுக்கெல்லாம் ஒண்ணும் பேராசை இல்லப்பா'' என்ற எம்.டி. ஹரியின் கேலியில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தான் விஜய்.

''வேலையப் பாக்கலாமா விஜய்'' என்ற தனது எம்.டி.யின் வார்த்தைகளில் ''யெஸ் ஸார்'' என்று விட்டு டெய்லி ரிப்போர்ட் பைலை எடுப்பதற்கு வேகமாகச் சென்றான்.

சிறிது நேரத்தில் வழக்கமான வேலைகளனைத்தும் முடிய, ''சரிப்பா நான் சொன்ன ரிப்போர்ட்ட ஈவினிங் வீட்டுக்குப் போறதுக்குள்ள முடிச்சுக் குடுத்துடு நான் ரவுண்ட்ஸ் போய்ட்டு வந்துட்றேன்'' என்று எழுந்தான்.

# 10

ரவுண்ட்ஸை முடித்து விட்டு ஸ்ரீஹரி மீண்டும் தனது இருக்கைக்கு வந்திருக்க ''ஸார் உங்களப் பாக்க யாரோ வந்திருக்காங்க. உங்க ஸிஸ்டர் அனுப்பினதா சொன்னாங்க'' என்று வந்து நின்றான் விஜய்.

சில வினாடிகளில் தான் கையில் வைத்திருந்த ஃபைலை பார்த்து முடித்து விட்டு நிமிர்ந்தவன், ''வரச் சொல்லு'' என்றான்.

தங்கை காலையில் சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது.

வேலைக்குக் கேட்டு வந்திருக்கும் பெண்ணாகத் தான் இருக்க வேண்டும்.

இன்றோடு சரி.

இனிமேல் இந்த மாதிரியான ஆட்களை ஊக்குவிக்க வேண்டாமென்று ரேவதியிடம் முடிவாகச் சொல்லிவிட வேண்டும்.

அப்படி நினைத்துக் கொண்டவனின் இதழ்கள் உடனே புன்னகையில் லேசாக விரிந்தன.

இனி எங்கே.

இன்னும் ஒரு மாதத்தில் தங்கையே திருமணமாகி சென்று விடப் போகிறாள்.

அதற்குப் பிறகு தான் அவளிடம் வழக்கம் போலப் பேசக் கூட முடியுமோ என்னவோ,

தங்கையின் விருப்பத்திற்காகவேணும் அந்தப் பெண்ணிற்கு நாம் உதவி செய்ய வேண்டுமோ,

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, அதேநேரம் ஒரு பெண் குரல் உள்ளே வருவதற்காக அனுமதி கேட்க ''யெஸ் கமின்'' என்றான்.

ஒருவித அலட்சியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தவனின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்துபோயின.



ஆனாலும் அவன் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இந்தப் பெண் அன்று தான் ஷாப்பிங் மாலில் துணியெடுக்கப் போன போது பார்த்த பெண்ணாயிற்றே.

உலகம் மிகவும் சுருங்கித்தான் போயிற்று.

''குட்மார்னிங் ஸார்.''

''மார்னிங், உக்காருங்க.''

''தேங்க்யூ ஸார்'' என்று அந்தப் பெண் அமர, சொல்லு என்ன விஷயம் என்பதைப் போல அவளைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

''ஸாரி ஃபார் தி டிஸ்டர்பன்ஸ் ஸார்...''

ஏதோ சொல்வதற்காக வாயெடுத்தவள் மீண்டும் பேசாமல் நின்று விட்டிருக்க, என்ன பேசு என்பதைப்போல அவளுடைய முகத்தையே பார்த்தான் ஸ்ரீஹரி.

இயல்பாகத்தான்.

''ஸார் எம்பேர் சஞ்சனா.''

''சொல்லுங்க.''

''என் கஸின் வினிதா உங்க தங்கைக் கூடத் தான் ஸாஃப்ட்வேர் கம்பெனில வேல செய்யறாங்க. அவங்க சொல்லித் தான் நான் இன்னைக்கு இங்க வந்திருக்கேன்...''

''நீங்க இன்னும் விஷயத்தையே சொல்லல.'' ஸ்ரீஹரியின் வார்த்தைகளில்,

''எனக்கு ஏதாவது வேலை இருந்தா வேணும் ஸார்'' என்று உடனே கேட்டு விட்டிருந்தாள் அந்த சஞ்சனா.

''ஏதாவது வேலைன்னா...''

''என்ன வேலையானாலும்..''

''புரியல?''

ஸ்ரீஹரி கேட்க, ''கூட்டித் துடைக்கற வேலையானாலும் என்று சொல்லியேவிட்டிருந்தாள் சஞ்சனா.

அப்படிச் சொன்னவளைக் கூர்ந்து பார்த்தான் ஸ்ரீஹரி ஒருவேளை விளையாடுகிறாளோ,

குனிந்து அமர்ந்திருந்தவளின் முகத்திலிருந்து எ யும் கண்டு கொள்ள முடியாது போக, ஏதோ கேட்பத காக வாயைத் திறக்கப் போனான்.

ஆனால் அவள் அதே நேரம் நிமிர்ந்து தன்னை பார்க்க, அவளுடைய முகத்தில் தெரிந்த ஒருவித வே னையை அவனாலும் இனம் கண்டு கொள்ள முடிந்த

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

மீண்டும் பழைய நிலைக்கு வந்திருந்தவள் ''ஸா ஸார்'' என்றாள்.

''இப்ப ஒரு வேலை எனக்கு ரொம்ப முக்கியம் தா ஆனா அது என் பிரச்சனை...''

''என்ன வேலை செய்யத் தெரியும்?''

ஸ்ரீஹரியின் கேள்வியில் ஒருவித நம்பிக்கை துள் விட்டிருக்க, நிமிர்ந்து பார்த்தாள்.

பார்த்தவள் அப்போதைய தனது படிப்பு மற்றும் பி தகுதிகளைப் பற்றிச் சொல்ல ''அப்பிடி நீ உன் படி பையே முழுசா முடிச்சிருந்தாக் கூட அதனால எனக் ஆகப் போறது ஒண்ணுமில்ல'' என்றான் ஸ்ரீஹரி.

அவனுடைய வார்த்தைகளில் சஞ்சனா மீண்டு அதிர்ந்து போய் விட்டிருக்க, அது அவளுடைய முகத்தி அப்படியே பிரதிபலித்தது.



''உனக்குத் தேவ அவசரத்துக்கு ஒரு வேல. அதுவும் என் தங்கை சொல்லி நீ வந்திருக்கும் போது மத்ததெல்லாம் எனக்கு அனாவசியம் உனக்கு வேலை குடுக்கறேன்.''

ஸ்ரீஹரியின் வார்த்தைகளில் எல்லையற்ற சந்தோஷத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''ரொம்ப நன்றி ஸார்.''

''ஆனா நீ இன்னொன்னும் தெரிஞ்சுக்கணும், உன்ன இப்ப வேலைக்கு எடுக்கப் போறதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு'' என்றவனைப் புரியாமல் பார்த்தாள்.

சரியாக அதேநேரம் ஒரு இளைஞன் உள்ளே வர, ''இங்க வா விஜய்'' என்று ஸ்ரீஹரி அவனை வரவேற்பதைக் கண்டாள்.

உடனே அவன் அருகில் வந்திருக்க ''இவங்க பேர் சஞ்சனா'' என்று தன்னை அந்த இளைஞனுக்கு அறிமுகப்படுத்தியவன், அந்த விஜயையும் தனக்கு அறிமுகப்படுத்தி வைக்க லேசான புன்னகையுடன் அந்த அறிமுகப் படலத்தை ஏற்றுக் கொண்டாள்.

''என் பி.ஏ. விஜய் இன்னும் சில நாள்ல ஊருக்குக் கிளம்பப் போறார், அந்த இடத்துக்கு ஆல்ட்டர்னேட்டிவா ஒருத்தர் உடனே தேவை. அதாவது டெம்பரவரியா.''

கடவுளே அப்படியானால் கிடைக்கப் போகிற இந்த வேலையும் நிரந்தரமில்லையோ,

தனது எண்ணம் போகும் போக்கை நினைத்துத் தன்னையே குட்டிக் கொண்டாள் சஞ்சனா.

இப்போதிருக்கும் தன்னுடைய நிலைக்கு இப்படியேனும் ஒரு தீர்வு கிடைத்ததே,

அதற்காக சந்தோஷப் படுவதை விட்டுவிட்டு...

“வேலை கிடைச்சுடுச்சுன்னு ரொம்பவும் சந்தோஷ
பட்டுக்க வேண்டாம் நான் எதிர்பாக்கற மாதிரி வேலை
செஞ்சா தான்.”

“என்னால முடியும் ஸார் எனக்கு அதுல நம்பிக்
யிருக்கு” என்று அவனை முந்திக் கொண்டு பதி
சொன்னவள், உடனே அதிகப்பிரசங்கித்தனமாக நடந்
கொண்டு விட்டோமோ என்று தன்னையே நொந்
கொண்டாள்.

“உன்னுடைய ஆர்வத்தப் பாராட்டறேன், எதுக்கு
வேலைக்கு வந்ததுக்கப்புறம் இனி மத்தத பேசிக்கலாம்

எப்பொழுதில் இருந்து வேலைக்குச் சேர வேண்டி வ
மென்று தெரியவில்லையே.

“உன் சர்ட்ஃபிகேட்ஸக் குடுத்துட்டுப்போ, குரியர்
ஆடர் அனுப்புவாங்க.”

பன்மை அழைப்பு எப்பொழுதோ ஒருமை அழைப்
மாறியிருந்தது. சஞ்சனாவின் கவனத்தில் படாம
இல்லை.

ஆனால் அது ஒன்றும் அவளுக்கு வித்யாசமாகவ
படவில்லை.

தனக்கு வேலை கொடுத்து உதவப் போகிறவன்,

முதலாளியும் கூட,

அப்படிப்பட்டவன் ஒருமையில் அழைப்பதைத்
றென்று சொல்லி விடுவதற்கில்லையே,

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் மீண்டும்
முறையும் நன்றி சொல்லி விட்டுக் கிளம்பியே வி
டிருந்தாள் சஞ்சனா.



வேலை கிடைத்து விட்டதென்று சந்தோஷப்பட முடி
யாமல் ஏதோ ஒருவிதத் தயக்கம் வந்து தனது நெஞ்சை
அரிப்பதை சஞ்சனாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

இப்படிக் கூட இந்த வேலை அவசியமா என்று கேள்வி
கேட்ட மனதை ஆம் என்று ஒரு குட்டு வைத்து அடக்கி
னாள்.

# 11

இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

நல்ல வேலையே கிடைத்து விட்டதாக ஜம்பமாக சொல்லி விட்டாயே என்று மனம் உறுத்த, அப்பாயிண்ட்மென்ட் ஆடருக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள் சஞ்சனா.

பிறர் அறியாமல் தான்.

எதிர்பார்த்தது போலவே அன்று ஆடர் கைக்கு வந்திருக்க, சந்தோஷத்தில் வானத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதிக்காத குறை தான்.

ஆடரை வாங்கிக் கொண்டு சந்தோஷமாக உள்ளே ஓடி வந்தாள்.

அப்படி வந்தவள் அவளுடைய தமக்கை அகிலாவின் மேல் நேருக்கு நேராக மோதிக் கொண்டாள்.

“ஏய் மெல்லடி மெல்ல” என்று தங்கையைப் பிடித்து நிறுத்திய அகிலா “என்ன இவ்வளவு அவசரம்?” என்று கேட்டாள்.

........

''என்ன பேசு, கைல என்ன?''

''ஒண்ணுமில்ல.''

''பொய் சொல்லாத...''

அக்கா முடிப்பதற்குள் ''அப்பாயிண்ட்மென்ட் ஆடர்'' என்று சொல்லி விட்டிருந்தாள் சஞ்சனா.

''அட வந்தாச்சா?''

''ஆமாம்.''

''இனி மேடம கைல புடிக்க முடியாது.''

.......

''எப்பிருந்து வேலைல ஜாய்ன் பண்ணனும்?''

''நாளைலிருந்து.''

''சம்பளம்?''

''தெரியல.''

''என்ன வேல?''

''போனா தான் தெரியும்.''

''எதுவுமே தெரியல. வேல கன்ஃபார்ம் தானான்னு எதுக்கும் இன்னொரு முறை கே...''

''போதும் அகிலா.''

''அது சரி, வேலை கிடைக்கறதுக்கு முன்னாடியே நீ எங்களையெல்லாம் மிரட்டிட்டு இருந்தவளாச்சே. இனி மேல் சொல்லவும் வேணுமா?''

''நான் எப்பவும், யாரையும் மிரட்டினது கிடையாது. அது என்னோட வேலையும் கிடையாது.''



''அது சரிதான், யாரையும் மதிக்க மட்டும் மாட்ட அவ்வளவுதான்...''

அதேநேரம் அவர்களுடைய தாய் ஆனந்தி அங்கே வர, ''மேடம் சாதிச்சுட்டாங்க பாத்தீங்களாம்மா?'' என்று தனது தங்கை சஞ்சனாவைக் காட்டித் தனது தாயிடம் சொன்னாள் அகிலா.

''அப்படியா, அப்பாயிண்ட்மென்ட் ஆடர் வந்தாச்சா?'' என்று தாய் கேட்க,

''அதெல்லாம்'' என்றாள் அகிலா.

''எப்பிருந்து வேலைக்குப் போகணும்?''

''ம், நாளைலிருந்தே...'' என்று மீண்டும் முந்திக் கொண்டு சொன்னாள் அகிலா.

''நீ பண்றது உனக்கே நல்லார்க்காம்மா?''

மீண்டும் தாய் கேட்க, ''அப்பிடியொன்னும் மத்தவங்க மாதிரியெல்லாம் நான் தப்பு பண்ணிட்டிருக்கல'' என்றாள் சஞ்சனா.

''ஓ அப்ப யார் பண்றது தப்புன்னு சொல்ற?''

தமக்கை கேட்க, ''நான் எதையும் பேச விரும்பல விட்டுடு'' என்றாள்.

''அப்ப நீ என்னதான் தப்பு சொல்ற இல்ல?''

''நீயே கற்பனை பண்ணிக்கறதுக்கெல்லாம் நான் பொறுப்பாக முடியாது.''

சஞ்சனா அப்படிச் சொல்லி விட்டு எங்கோ பார்க்க, ''பாத்தீங்களாம்மா இவ ஜாடையா என்னத்தான் பேசறா...'' என்றாள் அகிலா.

''போதும், ஆளாளுக்கு ரெண்டு பேரும் சண்டப் போட்டுட்டிருக்காமப் போய் வேலயப் பாருங்க...'' தாய் ஆனந்தி சொல்ல,

''நானொன்னும் சண்டப் போடல, எனக்கு உருப்படியான வேல எவ்வளவோ இருக்கு'' என்றாள் சஞ்சனா.

''அப்ப எனக்கு இல்லேங்கறி...''

அகிலா முடித்துக் கூட இருக்கவில்லை. ''அத நான் சொல்ல வேற செய்யணுமா?'' என்று கேட்டாள் சஞ்சனா.

''பாருங்கமா இவள...''

பெரிய மகள் சின்ன மகளைக் கைகாட்டி ஆதங்கத்துடன் ஏதோ சொல்ல வர ''போதும் சஞ்சு என்ன இருந்தாலும் அவ உனக்கு அக்கா மரியாதையாப் பேசு'' என்றாள் ஆனந்தி.

''சரிதான் அதுக்காகவாவது மரியாத குடுக்கத் தானே வேணும்...''

''வேண்டாம்...''

''ஆமாம் நானும் அதத்தான் சொல்றேன், வேண்டாம் இதுக்கு மேல நீ என் விஷயத்துல தலையிடாத'' என்று விட்டு நிற்காமல் தன்னுடைய அறைக்குச் சென்று விட்டிருந்தாள் சஞ்சனா.

## 12



அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்துக் கிளம்பினாள் சஞ்சனா.



மீண்டும் ஒரு முறையும் கண்ணாடிக்கு முன்பாக நின்று தனது தோற்றத்தைத் திருப்தியளிக்கும் விதமாக திருத்திக் கொண்டு அதற்குப் பிறகே வெளியே வந்தாள்.

''சஞ்சு.''

தாய் அழைக்க ''சொல்லுங்கமா'' என்று அருகில் வந்தாள்.

''வந்து சாப்புடு.''

''எடுத்து வைங்க.''

சிறிய மகள் வந்து சாப்பிட அமர பரிமாறினாள் ஆனந்தி.

''போதும்மா.''

''என்ன நீ, இன்னும் கொஞ்சம் வெச்சு சாப்புடு.''

கட்டாயப்படுத்தித் தாய் மேலும் பரிமாற, பேசாமல் தட்டையே பார்த்தாள்.

''என்னடி சாப்புடு.''

''விட்டா சாப்பிடலாம்.''

''நீ இப்ப கொஞ்சநாளா கண்டதுக்கெல்லாம் கோபப்பட்ற.''

தாய் சொல்ல ''ம் சும்மா ஜாலிக்குதான்மா விடுங்க'' என்றாள்.

''என்ன நக்கலா?''

''ஆமாம்.''

''போதும் சஞ்சனா...'' என்று ஆனந்தி மகளை மேலும் ஏதோ சொல்ல வர, சாப்பிடாமல் எழப் போனாள்.

''ஏய் என்ன நீ, முதல்ல உக்காந்து சாப்புடு.''

''அப்ப ஒரு அஞ்சு நிமிஷம்...'' என்று தனது தாயை பார்த்த சஞ்சனா ''தயவு செஞ்சு பேசாதீங்க'' என்று முடி தாள்.

என்ன இவளுக்கு இப்படி மூக்குக்கு மேல் கோப வருகிறதென்று நினைத்த ஆனந்தியும் சரிதான் மக சாப்பிடட்டுமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தார்.

சிறிய மகளின் கோபத்திற்கான காரணம் ஆனந்தி கும் புரியாமல் இல்லை.

ஆனால் அது அவசியமில்லாததென்று அவளுக் யார் புரிய வைப்பது.

சொன்னாலும் புரிந்து கொள்வாளா?

ம்கூம் புரிந்து கொள்ள முயற்சியேனும் செய்வா போலத் தெரியவில்லையே.

''என்னமா எழுந்துட்டே, இன்னுமொரு தோச வ சுக்கோ.''

''போதும்மா வயிறு ஃபுல். டிஃபன் பாக்ஸ மட்டு குடுங்க.''

''அதோ உன் பக்கத்துல தான் இருக்கு எடுத்து ப பேக்ல வெச்சுக்கோ. நீ சொன்ன மாதிரியே லெமன் சா மும் தயிர் சாதமும் கொஞ்சமா வெச்சிருக்கேன். மிச் வைக்காம சாப்புட்டுக்கோ.''

''சரிமா, நான் கிளம்பறேன்.''

''பணம் ஏதாவது வேணுமா சஞ்...''

''வேண்டாம் இருக்கு.''



''உன் அக்கா கிட்ட சொல்லிட்டயா?''

''இல்ல, சொல்லிடுங்க.''

''ஏன் நீயே சொல்லிட்றது?''

''ம், இன்னும் முக்காடு போட்டுட்டுத் தூங்கிட்டிருக் காங்க மேடம். உங்க பெரிய மக என்னைக்கு பத்து மணி யில்லாம எழுந்திருச்சிருக்காங்க'' என்று சற்றே எரிச்ச லுடன் கேட்ட சஞ்சனா, ஹேண்ட் பேக்கைத் தோளில் மாட்டிக் கொண்டு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

பஸ்ஸில் செல்ல வேண்டுமென்ற எண்ணமே பயத்தை வரவழைத்திருந்தது.

பேசாமல் தான் டூவீலரை எடுத்து வந்திருக்கலாமோ,

அதிலும் அது ஒன்றும் அக்காவின் சம்பாத்தியம் இல் லையே, தந்தை வாங்கிக் கொடுத்திருந்தது தானே,

ஆனாலும் வேண்டாம்.

பிறகு அதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு அதிக உரிமை எடுத்துக் கொள்வதோடு, மேலும் தவறு செய்யவும் தயங்க மாட்டாள்.

தனது அக்காவைப் பற்றிய எண்ணமே நல்ல மன நிலையைக் கெடுப்பதாக இருக்க, முயன்று மனதை நடப்பிற்குத் திருப்பினாள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் அலுவலகத்தை வந்தடைந்திருந்தாள் சஞ்சனா.

''வாங்க.''

எம்.டி.யின் பி.ஏ. விஜய் வரவேற்க, புன்னகையுடன் காலை வணக்கம் சொன்னாள்.

"குட்மார்னிங், வாங்க உக்காருங்க."

"உக்காரலாம், அதுக்கு முன்னாடி..."

"என்ன சொல்லுங்க."

"ஸாரப் பாத்து விஷ் பண்ணிட்டு வந்துடட்டுமா?"

"சரிதான், ஆனா ஸார் இப்ப ரவுண்ட்ஸ்ல இருக்கா

"ஓ, நான் லேட்டா வந்துட்டேன் போலிருக்கு..."

"அதெல்லாம் இல்ல, நீங்க வந்தது தான் சரியா நேரம். நாங்கெல்லாம் தான் முன்னாடியே வந்துட்டோம்

"எப்பவுமே இப்படி தான் வருவீங்களா?"

"நான் எப்பவும் எட்டு முப்பதுக்கு அதாவது அர ம நேரம் முன்னாடி வருவேன். ஆனா ஸார் எட்டு மணிக் வந்துடுவார். சில நாள் அதுக்கும் முன்னாடியே கூட"

"அப்ப நானும் உங்கள மாதிரி எட்டரைக்கு வந்து றேன்."

"சரிதான், அதெல்லாம் ஸார் உங்களுக்கு சொல்வா

"நீங்க இன்னும் எத்தன நாள் வேலைக்கு வருவீங் அதாவது எப்பிருந்து லீவ்ல போகப் போறீங்க?"

"விட்டா அடுத்த வாரத்திலிருந்தே கூடப் போக நா தயார் தான். ஆனா ஸார் என்ன சொல்றாரோ அப் செஞ்சுக்கலாம்னு இருக்கேன்."

"ஓ, அதுக்குள்ள எனக்கு ஒரளவுக்கு எல்லாத்தையு சொல்லிக் குடுத்துட்றீங்களா?"

"எம்பேர் விஜய். பேர் சொல்லியே கூப்புடுங்க."

"தேங்க்ஸ். எம்பேர் சஞ்சனா. என்னையும் அப்பிடி கூப்புடுங்க."



தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் எம்.டி. அவருடைய இருக்கைக்கு வர விஜயைத் தொடர்ந்து தானும் சென்று அவரைப் பார்த்து விட்டு வந்தாள் சஞ்சனா.

அவசியமற்ற அலட்டல்கள் எதுவுமில்லாமல் நட்பை மட்டுமே எம்.டி. ஸ்ரீஹரியும், அவருடைய பி.ஏ. விஜய யும் பேசிய விதம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

புது இடமென்ற எண்ணம் துளியும் தோன்றாததால் அவளும் மற்ற அனைவரையும் போல வேலையில் ஒன்றிப் போனாள்.

முதல் நாளான அன்றே ஓரளவு அனைத்து வேலை களையும் எதெது எப்படி என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டாள்.

எது எப்படியோ வேலை அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது.

சிரமமான வேலைகளைக் கூட மிகவும் எளிதாக அவர் கள் செய்த விதமும், எடுத்துச் சொன்ன விதமும் ஒரு பெரிய சவாலாகவே தோன்றியது சஞ்சனாவிற்கு.

சரிதான், சில நாட்கள் சென்றால் தனக்கும் பழகிவிடும் என்று தோன்றிவிட்டிருக்க, அதற்குப் பிறகே அவ ளுடைய மனம் நிம்மதியடைந்திருந்தது.

## 13

பத்து நாட்கள் சென்றிருந்தன.

அந்த வார இறுதியிலிருந்து விஜய் விடுமுறையில் செல்வதாக இருந்தது.

அதற்குள் ஓரளவுக்காவது அனைத்தையும் கற்றுக் கொண்டுவிட வேண்டுமென்று ஒரேயடியாக வேலையில் மூழ்கிப் போனாள் சஞ்சனா.

இயற்கையிலேயே துடிப்புள்ள பெண் என்பதால் நினைத்ததை அவளால் எளிதாகச் செய்யவும் முடிந்தது.

சஞ்சனாவின் ஆர்வத்தைப் பார்த்த விஜய்க்கும் தான் இல்லாவிட்டாலும் தன்னுடைய வேலையை ஈடு செய்ய இவளால் முடியுமென்று தோன்றி விட்டிருக்க, அவனும் தன்னால் இயன்ற மட்டும் அனைத்து வேலைகளையும் அவள் எளிதாகப் புரிந்து கொள்ளும் விதமாக பார்த்துப் பார்த்துக் கற்றுக் கொடுத்தான்.

சஞ்சனாவின் ஆர்வத்தையும், அனைத்தையும் மிக எளிதாக அவள் புரிந்து கொள்ளும் விதத்தையும் பார்த்த விஜய்யும் ஆச்சரியத்தில் திகைத்துத்தான் போனான்.

அதே சமயம் தான் இல்லையென்பதற்காக எந்த வேலையும் நின்று விடாதென்பதும் தெளிவாகத் தெரிந்து விட்டிருக்க மனமும் நிம்மதியடைந்தான்.

சஞ்சனா வேலைகள் அனைத்தையும் கற்றுக் கொண்ட பின் மேலும் சில விவரங்களையும் எடுத்துச் சொன்னான்.

''அப்புறம்...''

''என்ன விஜய் சொல்லுங்க?''

''ஸார்க்கு பங்க்சுவாலிட்டி ரொம்ப முக்கியம். கொஞ்சம் அதுலயும் கேர்ஃபுல்லா இருந்துக்கோங்க.''



எனக்கும் அது சுவாசிப்பதைப் போல மிகவும் முக்கியமானது என்று நினைத்துக் கொண்ட சஞ்சனா ''சரிதான் பாத்து நடந்துக்கறேன்'' என்றாள்.

''அப்புறம் உங்களுக்கு வேற ஏதாவது சந்தேகங்கள் இருந்தாலும் கேட்டுக்கோங்க.''

''வேறென்ன...''

''ம், என்ன?''

''இல்ல சில நேரங்கள்ல எம்.டி.யப் பார்த்தாலே பயமா இருக்கு...''

''ஏன்?''

''அவரு எப்பவும் கோபமா இருக்கற மாதிரி... ஸாரி எம் மனசுக்குப் பட்டத சொன்னேன் மத்தபடி அதுல எந்த உள்ளர்த்தமும் இல்ல...''

''புரியுது, புரியுது, இதுக்கு நீங்க இவ்வளவு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமே இல்ல.''

''ஓ. அப்ப எம்.டி. உண்மையிலயே ரொம்பவும் கோபக்காரர் தானா?''

''யார் சொன்னது? அவருக்கு எவ்வளவு நல்ல குணம் தெரியுமா? அதுலயும் ஸார் நல்ல மூட்ல இருக்கும் போது அவர்கிட்ட பேசக் குடுத்து வெச்சிருக்கணும்...

விஜய் பாட்டுக்கு எம்.டி.யைப் பற்றி மேலும் மேலும் புகழ்ந்து கொண்டே போக, சிறிது நேரத்தில் சஞ்சனாவிற்கே சற்றுப் போரடித்து விட்டதென்று தான் சொல்ல வேண்டும்.

அது அவளைப் பார்த்த விஜய்க்கும் புரிந்து விட்டிருக்க, ''நீங்களே கேட்டிங்கன்னுதான் சொன்னேன் போரடிச்சிருந்தா ஸாரி'' என்றான்.

''அச்சச்சோ என்ன விஜய் நீங்க...''

''அதே சமயம் ஸார்க்கு வேல நேரத்துல பர்ஃபெக்ட வேலயும் நடந்தாகணும். அவர் எதிர்பார்க்கிற மாதிரி நடந்துக்கலேன்னா அப்புறம்... ஆனா உங்களுக்கு இதையெல்லாம் சொல்ல வேண்டியதே இல்லையே?''

''ஏன்?''

''ஏன்னா நீங்க தான் எங்க எல்லார விடவும் கூட ஸின்ஸியர் சிகாமணியா இருக்கீங்களே.''

''என்ன பண்றது நீங்க கிளம்பறதுக்குள்ள சமாளிக்கிற அளவுக்காவது எல்லாத்தையும் கத்துக்கணுங்கற வேகம் தான்... மத்தபடி நானொன்னும் நீங்க சொல்ற அளவுக் கெல்லாம் கிடையாது.''

''இதுதான் உங்ககிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

அப்படிச் சொன்ன விஜயைப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன பாக்கறீங்க. உங்க தன்னடக்கத்தான் சொல் றேன்.''

''ஓ... நீங்க ரொம்ப நல்ல டைப் அதனால தான் உங்க கண்ணுக்கு எல்லாமே நிறைகளாத் தெரியுதுன்னு நினைக்கறேன். அப்புறம் விஜய்...''

''என்ன?''

''எனக்கு ஏதாவது டவுட்னா நீங்க லீவ்ல இருக்கும் போது, ரொம்பவும் அவசியப்பட்டாதான், உங்க மொபை லுக்குக் கூப்புடலாமா?''

''என்ன நீங்க எந்தக் காரணத்தக் கொண்டும் வேல பாதிச்சுடக் கூடாது. அத ஸார் துளியும் விரும்ப மாட்



டார். அதனால் தயங்காம அது எத்தன முறையானாலும் பரவாயில்ல கூப்புடுங்க.''

''ஓஹோ, வேண்டாம் அப்புறம் தேவையில்லாமக் கூட அடிக்கடி உங்களக் கூப்புட்டு தொந்தரவு செய்ய ஆரம்பிச்சிடுவேனாக்கும்...''

''நீங்களா...''

''என்ன, ஏன் சிரிக்கறீங்க.''

''ம்கூம், அதுக்கு நீங்க இன்னொரு பிறவி எடுத்து வரணும். அவசியமான நேரத்துல அவசியமான விஷ யங்களப் பேசக்கூட யோசிக்கற நீங்க அப்படியெல்லாம் செய்யவே மாட்டீங்க.''

''ம்கூம், நீங்க தான் என்னத் தப்பா நினைச்சுட்டிருக் கீங்க. இத்தன நாளும் நான் சும்மா தான் அந்த மாதிரி யெல்லாம் நடிச்சேன்...''

''சரிதான் விடுங்க.''

''ஏன், நான் சொல்றத நம்ப மாட்டீங்களாக்கும்?''

''சரிதான் நம்பிக்கிட்டேன்.''

.....

''எத்தனை விஷயங்களை நானே சொல்லிக் குடுத் திருக்கேன். நீங்க கேட்டத மட்டும் சொல்லிக் குடுத் திருந்தா இந்நேரம் நீங்க இப்ப கத்துக்கிட்டதுல கால் பங்கு கூடக் கத்துக்கிட்டிருக்க மாட்டீங்க.''

''ஏன் அப்படி சொல்றீங்க, நீங்களே எல்லாத்தையும் சொல்லிக் குடுத்துட்டதால கேக்கறதுக்கு அவசியமில் லாமப் போயிடுச்சுன்னு கூட எடுத்துக்கலாமே.''

''சரிதான், நீங்க அவசியமில்லாமல் பேச மாட்டீங்கன்னு தெரிஞ்சதால சொல்லிக் குடுத்தேன். எப்பிடியோ நான் இல்லேன்னு வேலைல எந்தத் தாமதமும் வந்துடக் கூடாதுன்னு நினைக்கறேன் அவ்வளவுதான்.''

''முடிஞ்ச அளவுக்கு வராமப் பாத்துக்கறேன். நீங்க இங்க வேலையப் பத்தியே நினைச்சுட்டிருக்காம அங்கே போய் நிம்மதியா உங்க கல்யாண வேலைகளப் பாருங்க. முடிஞ்சா...''

''ம், என்ன சொல்லுங்க?''

''எனக்கும் ஒரு இன்விடேஷன் அனுப்பி வையுங்க.''

''என்ன இப்பிடி சொல்லிட்டீங்க?''

''ஏன், அது சிரமமா?''

''நேர்லயே வந்து கூப்புடுவேனாக்கும்.''

''சரிதான்.''

''என்ன?''

''ஸாரக் கூப்புட வரும்போது அப்பிடியே என்னயும் அழைச்சுடலாம் இல்லையா?''

''ஸார அவர் வீட்டுக்குப் போய் தான் குடும்பத்தோட வரணும்னு இன்விடேஷன் வைக்கப் போறேன்.''

''உங்களக் கூப்புட்றதுக்கு உங்க வீட்டுக்கு...''

''வேண்டாம் விஜய், சிரமப்படாதீங்க. எப்பிடியும் நான் மட்டும் தான் வரப் போறேன். முடிஞ்சா போஸ்ட்ல ஒரு பத்திரிகை அனுப்பி வைங்க அதுவே போதும்.''

''ஓ. அப்ப அதுவும் முடியலேன்னா...''

''போன்ல கல்யாணத் தேதிய மட்டும் சொன்னீங்கன்னாக் கூடப் போதும் வந்துடுவேன்.''

மேலும் சிறிது நேரமும் கூட நட்பாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு எம்.டி வந்து விட்டார் பார்த்து விட்டு வருகிறேனென்று விஜய் செல்ல, தான் தனது வேலைகளில் மூழ்கிப் போனாள் சஞ்சனா.

# 14

அன்று கம்பெனிக்குள் காலடி எடுத்து வைக்கும் போதே இன்றிலிருந்து விஜய் இல்லை என்ற எண்ணமும், கூடவே பயமும் வந்து சஞ்சனாவை சூழ்ந்து கொண்டு விட்டிருந்தன.

அவளுடைய பயத்திற்கான காரணமும் வேறு ஒன்றுமில்லை. எம்.டி.யைத் தான் மட்டும் தனியாளாக எதிர் கொள்ள வேண்டுமே என்பதுதான்.

அந்தப் பயம், தயக்கம் எல்லாமும் கூட எம்.டி.யை சென்று பார்த்து, காலை வணக்கம் சொல்லும் வரை மட்டும் தான்.

அதற்குப் பிறகோ அவருடன், அவர் சொல்லச் சொல்ல உடனிருந்து வேலை செய்ய நேர்ந்தது அவளுடைய பயத்தினை சுத்தமாகப் போக்கி விட்டிருந்தது.

அந்த அளவிற்கு எம்.டி. ஸ்ரீஹரியின் வேகத்திற்கு சஞ்சனாவால் ஈடு கொடுக்க முடிந்தது.

ஆனால் நேரம் போகப்போக மீண்டும் பயம் வந்து அவளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

இந்த நிமிடம் வரை அனைத்தும் சரியாகப் போய்க் கொண்டிருக்கிறது சரிதான். ஆனால் இனி,

ஒருவேளை...

அவள் நினைத்தது தான் தாமதம்.

எம்.டி. அழைக்க அருகில் சென்றாள்.

''ஸார்...''

''என்ன இது?''

எம்.டி. ஸ்ரீஹரி காட்டிய பேப்பரைக் கையில் வாங்கிப் பார்த்தாள் சஞ்சனா.

அது அன்று காலையில் ஒரு கம்பெனிக்குத் தான் அனுப்பிய கொட்டேஷனின் நகல் என்பது வரை மட்டுமே புரிந்தது.

''என்ன பாக்கற?''

''ஸார்...''

''நான் என்ன ரேட் கோட் பண்ணச் சொன்னேன், நீ என்ன பண்ணியிருக்க?''

எம்.டி. கேட்ட பிறகு தான் ரேட் காலத்தையே பார்த்தாள் சஞ்சனா.

ரேட்டை கோட் செய்ததில், தான் பெரிய தவறை செய்திருப்பது புரிந்தது.

வேலை மும்முரத்தில் இயந்திர விலையை டைப் செய்ததில் கடைசி பூஜ்ஜியத்தையே விட்டு விட்டிருந்ததையும்,

கடவுளே எவ்வளவு பெரிய தவறு.



சிறு கவனக்குறைவு கூட வந்துவிடக் கூடாதென்று பார்த்துப் பார்த்து வேலை செய்தும் இப்படியாகி விட்டதே.

பயத்துடன் நிமிர்ந்து எம்.டி.யைப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன லாஸ நீ ஏத்துக்கறையா?''

''ஸார்...''

''இல்ல நஷ்டத்த நீ ஏத்துக்கறையான்னு கேக்கறேன்.''

அப்படிக் கேட்ட எம்.டி.யைத் தயக்கத்துடன் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன?''

''நீங்க தான்...''

''ம், என்ன?''

''நீங்களும் ஒரு தடவ செக் பண்ணிக்கறேன்னு சொன்னீங்க, அதான்...''

''ஓ. நான் சரியா வேல செய்யறேனான்னு செக் பண்ணியாக்கும்?''

எம்.டி. கேட்ட விதத்தில் சிரிப்பு வந்து விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

ஆனாலும் அதை முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

''என்ன அப்பிடித்தானா?''

''... இல்லில்ல ஸார்.''

''என்ன ரொம்ப யோசனையோட சொல்ற. இதுக்கு நீ ஆமான்னே சொல்லியிருக்கலாம்.''

எம்.டி. இலகுவாகப் பேசுவதைப் போலிருக்க, பட்டென்று சொல்லியே விட்டிருந்தாள் சஞ்சனா.

"சொல்லிடலாம் தான் ஸார். அப்புறம் வேலைக்கு உத்தரவாதம் இல்லையே."

அப்படிச் சொன்னவளைப் பார்த்த ஸ்ரீஹரியால் என்ன முயன்றும் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

"உனக்கு தைரியம் கொஞ்சம் அதிகம்தான்."

"தேங்க்யூ ஸார்" என்றவளின் ஸீரியஸான பதிலில் "ம் அப்புறம்?" என்று அவளுடைய முகத்தையே பார்த்தான் ஸ்ரீஹரி.

சில விநாடிகளில் நடப்புக்கு வந்திருந்த சஞ்சனா விற்கும் நாம் சற்று அதிகப்படியாகத் தான் போகிறோமோ என்று லேசான பயம் வந்து விட்டிருக்க, "ஸாரி ஸார்" என்று ஏதோ சொல்ல வந்தாள்.

ஆனால் அதேநேரம் "சரிதான் சாதாரண நேரங்களை விடவும் சிரிக்கும் போது நீ ரொம்பவும் அழகுதான்" என்று சொன்ன எம்.டி.யைப் பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே உணர்ந்து மீண்டுமொரு முறையும் "ஸாரி ஸார்" என்றிருந்தாள்.

"எதுக்கு?"

"கொட்டேஷன் தப்பாப் போட்டதுக்கும், அதிகப்படியாப் பேசினதுக்கும்..."



"நீ எதையுமே கொஞ்சம் லேட்டா தான் ஃபீல் பண்ணுவியா?"

அப்படிக் கேட்ட எம்.டி.யை இப்பொழுது லேசான குற்ற மனப்பான்மையுடன் பார்த்தாள் சஞ்சனா.

"எப்பிடியோ நானும் ஒரு தடவ செக் பண்ணினதால ஆச்சு, இல்லன்னா எத்தன பேருக்கு கைகட்டி நின்னு பதில் சொல்ல வேண்டியிருந்திருக்கும் தெரியுமா?"

என்னது

இவன் கைகட்டி நின்று பதில் சொல்வதா,

அந்த மாதிரி ஒரு நிலமையை ஏனோ சஞ்சனாவால் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க முடிந்திருக்கவில்லை.

"கற்பனையை ரொம்பவும் வளர்க்காத அப்பிடி நின்னிருக்க வேண்டியது நீதான்" என்ற ஸ்ரீஹரியின் வார்த்தைகளில் இப்பொழுது லேசாக அசடு கூட வழிந்தாள் சஞ்சனா.

கடவுளே என்ன இவன் அனைத்தையுமே கண்டு பிடித்து விடுகிறானென்று ஒரு மாதிரியாகவும்.

அந்த நிலையில் சஞ்சனாவைப் பார்த்த ஸ்ரீஹரிக்கும் இவளுக்கு உள்ளதை உள்ளபடி அப்படியே காட்டும் பளிங்கு முகமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"நீ எப்பவும் இப்பிடித்தானா?"

புன்னகையுடன் கேட்ட எம்.டி.யைப் புரியாமல் பார்த்தாள்.

"எப்பவுமே இப்பிடித்தான் சின்னப்பொண்ணு மாதிரி நடந்துக்குவியான்னு கேக்கறேன்."

ஓ, அப்படியானால் தன்னை விவரம் இல்லாதவள் என்கிறானோ.

சரிதான் இன்றைக்கு நாம் நடந்து கொண்ட விதமும் அப்படித்தானே.

பிறகு கேட்காமல் என்ன செய்வான்...

"என்ன?"

"இல்லில்ல ஸார், நான் இந்த மாதிரி எப்பவுமே நடந்துக்க மாட்டேன். இன்னைக்கு ஏன் இப்படி நடந்துக்கிட்டேன்னு எனக்கே தெரியல."

"வெகுளித்தனம் தான் என்னைக்குமே அழகு. ஆனா நீ திடீர்னு இப்பிடி சொல்லிட்டியே. சரிதான் விடு. உண்மையைப் பேசறது கூடப் பிடிச்சிருக்கு" என்றவனின் பார்வையை நேருக்கு நேராகச் சந்தித்தாள் சஞ்சனா.

அப்படிச் சொல்லும் போது அவனுடைய பார்வையில் என்ன இருந்தது.

என்னதான் நல்ல குணமுடையவன் என்றாலும் ஒ ஆடவனிடம் நாம் மேலும் பத்தடி தள்ளியே நிற்க வேண்டாமா.

ஏதேதோ எண்ணங்கள் வந்து மனதை உறுத்த நா இனிமேல் இந்த மாதிரி முட்டாள்தனமாக நிச்சய நடந்து கொள்ளவே கூடாதென்று தனக்குத்தானே சொல் லிக் கொண்டாள்.



# 15

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

தான் உண்டு, தன் வேலையுண்டு என்று மாறிப் போனாள் சஞ்சனா.

அவளுடைய இயற்கை குணமும் அதுவே என்பதால் அதற்கு அவளொன்றும் சிரமப்பட வேண்டியதும் இருக்கவில்லை.

அதே போல வேலையிலும் சிறு தவறு கூட வந்து விடாதபடி அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்தாள்.

ஒரு சில வேளைகளில் எம்.டி.யின் பார்வை ரசனையுடன் தன்மேல் விழுந்து மீண்டதை அவள் துளியும் அறியவில்லை.

"சஞ்சனா."

எம்.டி. அழைக்க, அருகில் வந்தாள்.

"சொல்லுங்க ஸார்."

"முக்கியமான வேல எதையாவது செஞ்சுட்டிருந்தியா?"

"இல்ல ஸார், ரொட்டின் வொர்க்ஸ் தான். சொல்லுங்க ஸார்..."

"உக்காரு."

"பரவாயில்லை ஸார்."

"சொல்றத செய்" என்ற எம்.டி.யின் வார்த்தைகளில் உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

"என்னாச்சு உனக்கு?"

அப்படிக் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன பாக்கற? ஒரு வாரமா வீட்ல யார் கூடவோ சண்டப் போட்டுட்டு வந்த மாதிரி வித்யாசமா நடந்துக்கற..."

"அப்பிடியெல்லாம் ஒன்னுமில்ல ஸார்."

"அப்ப சரிதான். ஒருவேள கோபமே எம்மேலே தானா?"

ஸ்ரீஹரியின் வார்த்தைகளில் லேசாகத் தெரிந்த கேலி சஞ்சனாவின் கவனத்தில் படாமல் இல்லை.

மனதிற்குள் லேசாகத் தோன்றிய எரிச்சலை முயன்று மறைத்துக் கொண்டு, "அச்சச்சோ என்ன ஸார் நீங்க" என்றாள்.

சஞ்சனாவின் மனநிலை அவனுக்கும் புரியவே செய்தது.

ஏதோ ஒரு இனம் புரியாத சந்தோஷம் வந்து மனதை நிரப்ப, அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"வர்ற வாரம் தங்கைக்குக் கல்யாணம் வருது. நீ உன் குடும்பத்தோட அவசியம் வரணும்" என்று எம்.டி. நீட்டிய பத்திரிக்கையை சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டாள்.

"நிச்சயம் வருவேன் ஸார்."

"ம்கூம். குடும்பத்தோட வரணும்."

"ட்ரை பண்றேன் ஸார்."

ஸ்ரீஹரி தொடர்ந்து ஏதோ கேட்க வருவதற்குள் "சரி ஸார் நான் போய் இனி வேலையப் பாக்கட்டுமா?" என்ற



திகைப்பும் பணிவுடன் கேட்டவாறு எழுந்தே விட்டிருந்தாள்.

அடுத்த விநாடியே அங்கிருந்து சென்றும் விட்டிருந்தாள்.

என்ன இவள், சட்டென்று தோன்றிய கோபத்தை முயன்று கட்டுப்படுத்திக் கொண்ட ஸ்ரீஹரியும் அதற்குப் பிறகு வேலையில் மூழ்கிப் போனான்.

# 16

"சீனு"

"சொல்லுங்கமா"

"எங்க கிளம்பிட்டிருக்க?"

"எங்க எம்.டி. ஸாரோட தங்கச்சி கல்யாணத்துக்கு."

"அது இன்னைக்கு தானா?"

"ஆமாம்மா."

"அப்புறம் நித்தியோட வீட்டுக் கல்யாணத்துக்கு?"

"எம்.டி. வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிட்டு அதுக்கப்புறமா..."

"அதுக்கப்புறம்?"

"முடிஞ்சா அங்கயும் வருவேன்."

"அப்ப முடியலேன்னா."

"வர முடியாது."

அப்படிச் சொன்ன சிறிய மகளை ஆதங்கத்துடன் பார்த்தார் ஆனந்தி.

''ஏம்மா இப்பிடிப் பண்ற?''

''என்னமா அப்பிடி நானென்ன செஞ்சேன்?''

''இனியும் என்ன செய்யணும். வேணும்னேதான நீ நித்திஷ் வீட்டுக் கல்யாணத்துக்கு வர்றத அவாய்ட் பண்ற...''

''கொஞ்சம் அறுக்காம இருங்கமா.''

''இருடி நான் கேக்கறதுக்கு நின்னு பதில் சொல்லு.''

''சொல்லுங்க, என்ன பதில் சொல்லணும்?''

''நீ வேணும்னே தான...''

''ஆமாம். வேணும்னே பர்ப்பஸ்ஃபுல்லாதான் அந்த வீட்டுக் கல்யாணத்துக்கு வர்றத தவிர்க்கப் போறேன் அதுக்கு என்ன இப்ப?''

''ஏம்மா, இப்படியெல்லாம் பேசற?''

''பின் எப்பிடிப் பேசணும்?''

''நீ வருவேன்னு அகிலா எவ்வளவு ஆசையோட எதிர்பாத்துட்டிருக்கா தெரியுமா?''

அவள் மட்டும் தானா என்று வாய் வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள் சஞ்சனா.

''என்னமா பேசு.''

''வேண்டாம்மா, சில விஷயங்களப் பேசாம இருக்கற வரைக்கும் பிரச்சனைகள் மிச்சம்.''



''எதையாவது பேசி சும்மா சமாளிக்காத...?''

''எதுக்காக சமாளிக்கணும். எம்மனசுல இருக்கறத அப்பிடியே சொல்றேன் கேட்டுக்கோங்க. எங்கயும் போகாம வீட்லயே இருந்தாலும் இருப்பேனே தவிர அந்த வீட்டுக் கல்யாணத்துக்கு வரமாட்டேன். உங்க பெரிய மககிட்டயும் சொல்லிடுங்க.''

கோபத்துடன் சொல்லி விட்டு சின்ன மகள் சஞ்சனா உள்ளே சென்று விட்டிருக்க, அப்படியே நின்று விட்டிருந்தார் ஆனந்தி.

இதைத் தான் பெரிய மகளிடம் எப்படிச் சொல்வது.

அவர் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அழைப்பு வர, அட்டெண்ட் செய்து பேசினார்.

''சொல்லு அகிலா...''

''நான் இதோ கிளம்பிட்டே இருக்கேன்.''

.....

''சஞ்சனாவோட எம்.டி. தங்கை கல்யாணத்துக்குப் போய்ட்டு அப்பிடியே வர்றேனாம்மா... சரிதான் சொல்லிப் பாக்கறேன்'' என்றவர் மேலும் சில வினாடிகளும் பேசிக் கொண்டிருந்து விட்டு மொபைலைக் கீழே வைத்தார்.

உடனே சென்று திருமணத்திற்கு செல்வதற்காகக் கிளம்பி வந்தவர், சிறிய மகளும் கிளம்பி வருவதைக் கண்டார்.

மகளின் அழகு கண்களில் பட தன் கண்ணே மகளின் மீது படுவதா என்று கவனத்தைத் திருப்பிக் கொண்டார்.

''சரிமா நான் கிளம்பறேன்.''

"எப்பிடிப் போகப் போற சஞ்சனா?"

"கால் டேக்ஸில தான்."

"நானும் உங்கூட வரட்டுமாம்மா. இங்க மண்டபம் பக்கம் தான. என்ன இறக்கி விட்டுட்டு அப்பிடியே நீ கிளம்பிக்கோயேன்."

ஒரு சில வினாடிகள் யோசனைக்குப் பிறகு மகள் சரியென்று சொல்ல, அதையே பற்றிக் கொண்டு பெரிய மகள் சொன்னதைத் தானே சொல்வதைப் போலச் சொன்னார்.

"என்னமா?"

"இல்ல எப்பிடியும் மண்டபம் வரைக்கும் வரப்போற. அப்பிடியே எங்கூடவே உள்ள வந்து தலய மட்டும் காட்டிட்டு உடனே கிளம்பிடேன்..."

"இல்லமா வர முடியாது."

"அம்மாவோட வார்த்தைக்காவது கொஞ்சம் மதிப்புக் குடேன் சஞ்சனா."

"நிச்சயமாம்மா. ஆனா இந்த விஷயத்துல நீங்க இப்பிடி மனசு மாறிப் போனதே எனக்குப் பிடிக்கல. உங்க முகத்துக்காகத்தான் என்னைக் கட்டுப்படுத்திட்டிருக்கேன். இதுக்கும் மேல என்னக் கம்பல் பண்ணாதீங்க அவ்வளவுதான்."

சிறிய மகளின் பிடிவாத குணத்தை அறிந்தவர் என்பதால், அவர் அந்த விஷயத்தை அத்தோடு விட்டு விட்டிருந்தார்.

அத்தோடு சிறிய மகள் எதயும், எப்பொழுதும் அநியாயமாகப் பேசுபவளும் அல்லவே.



# 17

எம்.டி.யின் தங்கை திருமணத்தை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்வதற்குள்ளேயே போதும் போதுமென்றாகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

எம்.டி.யைத் தவிர வேறு தெரிந்த முகம் அங்கு ஒன்று கூட இல்லையென்பதோடு, திருமணத்திற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கானோர் இடையே தான் மட்டும் தனித்து நிற்க நேர்ந்ததும் கூட அதற்கு ஒரு காரணமே.

அதற்காக அவளிடம் யாருமே வந்து பேசவில்லையென்று பொருளல்ல.

எம்.டி. ஸ்ரீஹரியே அவளை வரவேற்று சில வினாடிகள் பேசியதோடல்லாமல் அவனுடைய தாயிடமும் அறிமுகப்படுத்தி வைத்தான் தான்.

தனக்காக அந்த அளவிற்கு அவன் நேரம் ஒதுக்கியதே மனதிற்குள் அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது.

அந்த அளவிற்கு ஒரு ஆண் மகனாக மிகவும் பொறுப்புடன் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் அக்கறையுடன் கவனித்துக் கொண்டதோடு, திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் வரவேற்று இன்முகத்துடன் உபசரித்த எம்.டி.யின் மேல் ஏற்கனவே

அவளுக்கிருந்த மரியாதை இன்னும் அதிகம் தான் ஆகியிருந்தது.

தான் மட்டும் தனியாளாக எப்படித் திருமணத்திற்கு சென்று வருவதென்று மனதிற்குள் மிகவும் தயங்கிக் கொண்டிருந்தவளுக்கு, ஒரு பெரிய மலையையே புரட்டி இடம் மாற்றி வைத்தாற்போல மனதிற்கு இப்பொழுது தான் சற்று நிம்மதியாக இருந்தது.

ஆறடிக்கும் அதிகமான உயரத்தில் கம்பீரமாக நின்று இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்றுப் பேசிய எம்.டி. ஸ்ரீஹரியின் முகமே மீண்டும் மீண்டும் மனக் கண்களில் தோன்றிக் கொண்டிருக்க, ஒருவித இனம் புரியாத பரபரப்பில் சஞ்சனாவின் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

திருமணத்திற்கு செல்வதற்காகச் செய்திருந்த ஒப் பனைகளைக் கலைத்து விட்டு இரவு உடைக்கு மாறி யவள், சுவர்க்கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

தாய் வந்து சேரும் நேரம் நெருங்கியிருக்க அவர் வந்த பிறகே தூங்கச் செல்லலாமென்று ஹாலுக்கு வந்து டி.வி.யை ஆன் செய்து கொண்டு அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் தாயோடு தமக்கையும் வீடு வந்து சேர்ந்திருக்க அவர்களிடம் பொதுவாக சில வார்த்தைகள் பேசிவிட்டு நான் தூங்கப் போகிறேனென்று எழுந்தாள்.

''ஏன் கல்யாணத்துக்கு வரல?''

அக்கா கேட்க, தன்னறைக்கு செல்வதற்காக இரண்டு அடிகள் எடுத்து வைத்திருந்த சஞ்சனா திரும்பி அவளைப் பார்த்தாள்.



''எம்.டி. வீட்டுக் கல்யாணத்துக்குப் போய்ட்டு திரும்பி வரும் போது வரலாம்னு பாத்தேன். ஆனா அங்கயே லேட்டாயிடுச்சு.''

''சும்மா சமாளிக்காத.''

''ஆமாம்...''

''போதும். நீ என்ன சொன்னாலும் அதையெல்லாம் அப்பிடியே நம்பிக்கற அளவுக்கு நானொன்னும் முட் டாள் கிடையாது.''

''சந்தோஷம்.''

''அப்ப வரக் கூடாதுன்னு தான் வரல. அப்பிடித்தான?''

''ஆமாம்.''

''சரி. இனிமேல் நானும் பாத்துக்கறேன்.''

''பாக்கலாம்...''

''வரவர இவ என்னக் கொஞ்சங் கூட மனுஷியா மதிக்க மாட்டேங்கறா...'' என்று தமக்கை வழக்கம் போல இல்லாததையெல்லாம் சொல்லிப் புலம்பத் தொடங்கி யிருக்க, இனி தனக்கு தாயிடம் திட்டு உறுதி என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் சஞ்சனா.

''என்னமா பாத்துட்டு சும்மா இருக்கீங்க. ஏன் இப்பிடிப் பண்றேன்னு நீங்க அவள ஒரு வார்த்த கூடக் கேக்க மாட்டீங்களா?''

''அவ என்ன பண்ணுவா அகிலா. அவளோட எம்.டி. வீட்டுக் கல்யாணத்துக்குப் போயாகணுமே...''

''ம் தெரியும். நீங்க அவளுக்கு தான் சப்போர்ட் பண்ணுவீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். நீங்களும்

கூட அவ கூடவே சேந்துட்டீங்க இல்ல?'' என்று அகிலா கண்களைக் கசக்கத் தொடங்கி விட்டிருக்க, நடிப்புத் திலகம் பட்டம் இவளைத் தவிர வேறு யாருக்குக் கச்சிதமாகப் பொருந்துமென்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள் சஞ்சனா.

பெரிய மகளின் நடிப்பை உண்மையென நம்பி விட்டிருந்த ஆனந்தி சின்ன மகளைக் கோபத்துடன் ஏதோ சொல்ல வர, அதற்கு முன் தான் முந்திக் கொண்டாள் சஞ்சனா.

''என்ன நீங்க என்ன வேணும்னாலும் சொல்லுங்கம்மா அதுக்கு உங்களுக்கு முழு உரிமையிருக்கு. ஏன் அந்த உரிமை உங்களுக்கு மட்டும்தான் இருக்கு. அதுக்காக கண்டவங்களுக்காகவெல்லாம் வாங்கிக் கட்டிக்க நான் தயாரில்ல...''

அப்படிச் சொன்ன தங்கையை கடுங்கோபத்துடன் இடைமறித்திருந்த அகிலா, ''போதும் இதுக்கு மேல நீ ஒரு வார்த்த பேசினாலும் அப்புறம் நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்'' என்றாள்.

''இப்ப மட்டும் நீ என்ன மனுஷியாவா இருக்க?''

''போதும். வேண்டாம் இதுக்கு மேல பேசாத.''

''ஏன் உள்ளத உள்ளபடி அப்பிடியே சொல்லிடுவேன்னு பயமா இருக்கா?''

''நானெதுக்கு பயப்படணும்?''

''பின்ன நீ செய்யற தப்புக்கு வேற யாரு பயப்படுவாங்கன்னு நினைச்சுட்டிருக்க?''



மகள்கள் இருவரும் கோபத்துடன் பேசிக்கொள்வதைப் பார்த்து இடையில் வந்து இருவரையும் சமாதானப்படுத்தி வைக்க முயன்றார் ஆனந்தி.

தாயின் வார்த்தைகளுக்கிணங்கி சஞ்சனா உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டிருக்க, அகிலாவோ மேலும் அதிகமான கோபத்துடன் குதித்தாள்.

''ம்கூம், எப்ப என்னைப்பத்தி நீங்கெல்லாம் இந்த அளவுக்கு நினைச்சுட்டிருக்கீங்களோ இதுக்கு மேல ஒரு வினாடி கூட நான் இனி இந்த வீட்ல இருக்க மாட்டேன்'' என்று அவள் இன்னும் ஏதேதோ சொல்ல 'க்கும் இதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லையென்று' ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள் சஞ்சனா.

''இவ சொல்லுவா ஆனா செய்ய மாட்டாங்கற எண்ணந்தான உங்களுக்கெல்லாம்? நான் இப்பவே லேடீஸ் ஹாஸ்டலுக்குக் கிளம்பறேன்'' என்று அகிலா கைப்பையைத் தூக்கியிருக்க, ''ஐயோ வேண்டாம்மா'' என்று லேசான அழுகையுடன் தடுத்தார் ஆனந்தி.

தாயின் அழுகையில் தமக்கையின் மேலிருந்த சஞ்சனாவின் கோபம் இன்னும் அதிகம்தான் ஆகியிருந்தது.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

இதுவே வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் தாயின் நிலை பார்த்து உடனே இறங்கி வந்திருப்பாள். ஆனால் அகிலாவோ மேலும் கொஞ்சம் முறுக்கிக் கொண்டாள்.

''ம்கூம். அப்பிடியொரு தடவையாவது போனாத்தான் உங்களுக்கெல்லாம் என்னோட அருமை புரியும்'' என்று

அகிலா மேலும் நான்கடி எடுத்து வைத்திருக்க, ''தயவு செஞ்சு அப்பிடியெல்லாம் சொல்லாதமா வேண்டாம்மா'' என்று பெரிய மகளின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சாத குறையாகத் தடுத்தார் ஆனந்தி.

ஆனால் அவள் அதைத் துளியும் கண்டு கொள்ளாது மேலும் முன்னேற, இப்பொழுது திருப்தியா உனக்கு என்பதைப் போலத் தனது சிறிய மகளைப் பார்த்தார் ஆனந்தி.

தாயின் பார்வையில் தானே தவறு செய்து விட்டதைப் போலத் துடித்துப் போன சஞ்சனா தாயைத் தொடர்ந்து தானும் சென்று தமக்கையை உள்ளே அழைத்தாள்.

கெஞ்சாத குறையாகத்தான்.

சில நிமிடங்கள் திரும்பிக் கொண்ட அகிலா, ''இப்பப் போனாப் போகுதுன்னு வர்றேன் ஆனா இனிமேல் இந்த மாதிரி நடந்துக்கிட்டீங்கன்னா அப்புறம் சொல்லாமக் கொள்ளாமக் கிளம்பிப் போய்ட்டே இருப்பேன்'' என்று எச்சரித்து விட்டு தோரணையுடன் உள்ளே வந்தாள்.

தாயின் கண்கள் மேலும் கலங்குவது தெரிய, 'சை இப்படியும் ஒரு ஜென்மமா' என்று தமக்கையை நினைத்து மேலும் மனம் வெறுத்துப் போயிற்று சஞ்சனாவிற்கு.

# 18

சிறிது நேரத்தில் தாயும், தமக்கையும் அவரவர்களுடைய அறைக்குத் தூங்கச் சென்று விட்டிருக்க தானும் வந்து தன்னுடைய படுக்கையில் விழுந்தாள்.



சற்று முன் இருந்த நல்ல மனநிலை துணி கொண்டு துடைத்தாற் போலக் காணாமல் போய்விட்டிருக்க, ஏனோ எதிர்காலத்தை நினைத்துப் பார்க்கவே மிகவும் பயமாக இருந்தது.

நாளுக்கு நாள் தமக்கை செல்லும் பாதை சுத்தமாக சரியில்லையென்பதும், அதனால் தாயின் மனம் படும் வேதனையும் கண் முன்னே அப்படியே படமாக விரிந்து கொண்டே போக, இதற்குத் தான் ஒரு முடிவு கட்டித் தான் ஆக வேண்டுமென்று மனதிற்குள் தீவிரமாக நினைத்துக் கொண்டாள்.

ஆனால் எப்படி.

அதை யோசித்துத்தான் கண்டறிய வேண்டும்.

நிதானமாக யோசித்தால் நிச்சயம் ஒரு வழி கிடைக்காமல் போகாது.

ஏதேதோ எண்ணங்களின் போக்கில் தூக்கம் பிடிக்காமல் வெகுநேரம் புரண்டு கொண்டிருந்தவளுக்குத் தொண்டை வரண்டு போக, தண்ணீர் குடிப்பதற்காகப் படுக்கையை விட்டு எழுந்தாள்.

ஜக்கில் நீர் தீர்ந்து போயிருக்க, சரிதான் இனி யார் சென்று எடுத்து வருவதென்ற சோம்பேறித்தனத்தில் மீண்டும் படுக்கையில் விழப் போனாள்.

ஆனால் சுத்தமாகக் காய்ந்து போயிருந்த தொண்டை நீருக்காக ஏங்க, ஜக்கை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

தமக்கையின் அறையில் மின்விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

ஆனால் தாயின் அறையில் விளக்கு அணைக்கப்பட் டிருக்க, சத்தம் செய்யாது நடந்து சமையலறைக்குச் சென்றாள்.

ஜக்கில் நீரை நிரப்பிக் கொண்டு மீண்டும் பூனை நடையில் திரும்பி வந்தவள் வித்யாசமாக வந்த ஏதோ ஒலியில் நின்றாள்.

காதைக் கூர்மையாக்கிக் கொண்டு அப்படியே நின் றவள், மீண்டும் அப்படி எதுவும் கேட்காததில் தொடர்ந்து நடந்தாள்.

ஒரு அடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டாள்.

மீண்டும் அந்த ஒலி!

திடீரென்று தோன்றிய எண்ணத்தில் வேகமாகத் தாயின் அறைக்குள் வந்திருந்தவள் தட்டுத் தடுமாறி மின் விளக்கை ஆன் செய்தாள்.

தான் சந்தேகப்பட்டது சரியே என்பதைப் போல தாய் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தது தெரிந்தது.

அம்மா என்று அழுகையுடன் அருகில் ஓடி வந்தாள்.

''அம்மா என்னமா ஆச்சு?''

''சஞ்சு...''

பேச முடியாமல் திக்கித் திணறி அழைத்த தாயின் கைகளை பற்றிக் கொண்டவள், ''அம்மா... அம்மா...'' என்று அழுகையில் பேச்சு வராமல் விம்மினாள்.

''அங்க... அந்த ஷெல்ஃப்ல மருந்து இருக்கு எடுமா...''

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒருமுறை வந்திருந்த நெஞ்சுவலி மீண்டும் இப்பொழுது வந்திருப்பது தெரிய,



ஒரே எட்டில் பாய்ந்து சென்று அந்த மாத்திரையைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்து விழுங்க வைத் தாள்.

மேலும் ஒரு வாய் தண்ணீரைப் புகட்டியவள் போது மென்று சொன்ன தாயின் செய்கையில் டம்ளரைக் கீழே வைத்தாள்.

முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தாய்க்கு இதமாகத் தலையணையை நகர்த்திக் கொடுத் தாள்.

வலி குறைந்திருக்க வேண்டும். தாயின் முகத்தில் தெரிந்த கலவரம் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து அவருடைய முகம் பழைய நிலைக்கு வந் திருக்க மனதிற்குள் கடவுளுக்கு ஆயிரமாயிரம் நன்றி களைச் சொல்லிக்கொண்டே இன்னும் இயல்பு நிலைக் குத் திரும்ப முடியாதவளாய் பயத்துடனே அமர்ந்திருந் தாள்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் தன்னை இன் னும் கொஞ்சம் சமாளித்துக் கொண்ட ஆனந்தி சற்றே திரும்பி அருகில் அமர்ந்திருந்த மகளை பார்த்தார்.

''இப்ப எப்பிடிமா இருக்கு?''

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, அதேசமயம் குரல் இயல்பாக இருக்கும் வண்ணம் தாயைப் பார்த்துக் கேட்டாள் சஞ்சனா.

''பரவாயில்லமா, ஏன் பழைய நிலைக்கே வந்துட் டேன்'' என்று புன்னகைத்த தாயைக் கண்கள் கலங்கப் பார்த்தாள்.

"என்ன மன்னிச்சுடுங்கமா?"

"எதுக்கு? அட அசடு நீ என்ன தப்பு செஞ்ச மன்னிக்கறதுக்கு..."

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவள், அந்தப் பேச்சே வேண்டாமென்று கண்களைத் துடைத்துக் கொண்டு வேறு பேசினாள்.

"குடிக்க சூடா ஏதாவது குடுக்கட்டுமாம்மா?"

மகள் கேட்க வேண்டாமென்று மறுத்து விட்டிருந்தார்.

"அம்மா..."

"என்னடாம்மா சொல்லு?"

"இப்ப எப்பிடியிருக்கு?"

"அதான் சொன்னேனே, சுத்தமா சரியாயிடுச்சுடாம்மா."

"நிஜமாவா?"

"ஆமாம்மா போ நீ போய் படுத்துக்கோ..."

"எதுக்கும் டாக்டர்கிட்ட போய்ட்டு வந்துடலாமாம்மா?"

"டாக்டர்கிட்டயா அசடு அதான் சுத்தமா சரியாயிடுச்சே."

"அது சரிதான். ஆனாலும் டாக்டரப் பாத்துட்டு வந்துட்டா இன்னும் கொஞ்சம் நிம்மதியா இருக்கலாமே"

"நேரம் பாத்தியா? நடு ஜாமம் பன்னெண்டாகுது."

"அதனாலென்ன?"

"அதனால என்னவா? எனக்கு இப்ப ரெஸ்ட் தாம்மா ரொம்ப முக்கியம். எனக்கு என் உடல்நலம் உங்கள எல்லார விடவும் கூட ரொம்ப முக்கியம்மா. அப்பிடி



பயப்பட்ற மாதிரி ஏதாவதுன்னா இந்நேரம் நானே டாக்டரப் பாக்கப் போகலாம்னு சொல்லியிருப்பேன். ரெண்டு வயசுப் பொண்ணுங்களுக்கும் ஒரு நல்ல வாழ்க்க அமைச்சுக் குடுக்காம நான் உங்களையெல்லாம் விட்டு எங்கயும் போயிட மாட்டேன்" என்று சிரித்த தாயைப் பார்த்தாள் சஞ்சனா.

தாயின் குரல் வித்யாசமாக இருக்கிறதோ.

"சஞ்சு..."

"என்னமா?"

"அகிலா பண்றது சரியில்லைன்னு எனக்கும் புரியுதுமா. ஏன் என்னோட கவலையே கூட அதுதான். இதுக்கும் மேல நீங்க சண்ட வேற போட்டுக்கிட்டா அத என்னால தாங்கிக்க முடியாதுமா..."

"இல்லமா, இனிமேல் இல்ல."

"வயசுல சின்னவளானாலும் உன்னோட விவரத்துல பாதிகூட அவளுக்கு இல்லடாம்மா. இனிமேல் எந்தக் காரணத்தக் கொண்டும் நீ கோபப்படக் கூடாது நிதானமா நடந்துக்கணும்..."

"நிச்சயம்மா, அதையெல்லாத்தையும் மறந்துட்டு நீங்க நிம்மதியாத் தூங்குங்கமா."

"சரிதான்டாம்மா. நீ உன் ரூம்ல போய் படுத்துக்கோ போ."

"ம்கூம். இன்னைக்கு நான் இங்கயே படுத்துக்கறேன்" என்று தாயிடம் சொல்லிக் கொண்டே சற்று தள்ளி மற்றொரு சுவரோரமாக இருந்த கட்டிலில் படுக்கையை உதறிவிட்டுப் படுத்துக் கொண்டாள்.

தாயையே பார்த்தவாறு படுத்துக் கொண்டிருந்தவள் தாயின் சிறுசிறு அசைவிற்கும் விடிவிளக்கின் வெளிச்சத்தில் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தாள்.

இப்படியே மேலும் சில மணி நேரங்களும் கடந்து விட்டிருக்க, அதிகாலை நேரத்திற்குப் பிறகு அவளையறியாமலேயே தூங்கிப் போனாள்.

மீண்டும் கண் விழித்த போது சூரியனின் கதிர்கள் அறையெங்கும் பரவத் தொடங்கி விட்டிருந்ததைக் கண்டாள்.

அந்த வினாடியே திரும்பி தாயைப் பார்த்தாள்.

அவர் இன்னும் படுக்கையில் இருப்பது தெரிய, ஏதோ ஒரு அபாய மணி நெஞ்சை உலுக்குவதைப் போல உணர்ந்தாள்.

உடனே இறங்கித் தாயருகில் வந்தவள், அம்மா என்று மென்மையாக அழைத்தாள்.

மீண்டுமொரு முறையும் அழைத்துப் பார்த்தவள் தாயின் தோள்பட்டையில் கையை வைத்து எழுப்பினாள்.

பதட்டத்துடன் தாயைப் பிடித்துக் குலுக்கியவளுக்கு அதற்குப் பிறகு தான் அது மனதில் உறைத்தது.

சில்லிட்டிருந்த தாயின் உடலில் ''அம்மா'' என்று அலறி விட்டிருந்தாள்.

நடப்பை நம்ப மாட்டாதவளாய் வெறி கொண்டவளைப் போலத் தாயின் உடலைப் பிடித்துக் குலுக்கினாள்.



அந்த வினாடி வரை மட்டும் தான் அவள் அறிந்தது.

அடுத்த வினாடியில் மூர்ச்சையற்றுக் கீழே சாய்ந்திருந்தாள்.

மீண்டும் அவள் கண்விழித்த போது வீடு நிறைய ஜனங்கள் இருப்பது தெரிந்தது.

'முழிச்சுட்டா, சஞ்சனா எழுந்துட்டா' என்று பல குரல்கள் ஒரு சேரக் கேட்டன.

நடுக் கூடத்தில் உடலொன்று கிடத்தப்பட்டிருப்பது தெரிய, அதற்குப் பிறகே நடப்பு மூளையில் உறைத்தது.

எழுந்து ஓடியவள் ''அம்மா...'' என்று தாயின் மீது விழுந்து கதறினாள்.

## 19

பத்து நாட்கள் சென்றிருந்தன.

ஆனால் அதை எதையுமே அறியும் மனநிலையில் சஞ்சனா இருக்கவில்லை.

பிரம்மை பிடித்தாற் போல சூனியத்தை வெறித்தவாறு அமர்ந்து விட்டிருந்தாள்.

''சஞ்சனா.''

யாரோ தன்னை அழைப்பது போலக் கேட்கத் திரும்பிப் பார்த்தாள்.

சிறிய பாட்டி, அதாவது தாயின் சின்னம்மா நின்றிருப்பது தெரிந்தது.

''வாம்மா, எழுந்து வந்து சாப்புடு.''

.....

''உன்னத்தான் சஞ்சனா.''

மீண்டும் பாட்டி அழைக்க, வேண்டாம் என்பதைப் போலத் தலையை மட்டும் ஆட்டினாள்.

''ஏன் வேண்டாம், முதல்ல எழுந்து வா.''

''ம்கூம்.''

என்ன இவள் இப்படியே இருந்தால் எப்பொழுது மீண்டும் பழைய நிலைக்கு வருவது.

தான் எப்பொழுது கிளம்புவது

என்ன பேசினால், இல்லை எதைச் சொன்னால் இவள் நடப்பிற்கு வர முயற்சிப்பாள்.

முதல்நாள் மதியம் அவள் வேலை செய்யும் கம்பெனி யிலிருந்து போன் வந்திருந்தது அப்பொழுது பார்த்து நினைவிற்கு வர, அதைச் சொன்னார் பாட்டி ரஞ்சிதம்.

தான் நினைத்தது சரியே என்பதைப் போல பெண் யோசிப்பது தெரிந்தது.

தான் கடைசியாக வேலைக்குச் சென்றது எப்பொழுது

என்ன யோசித்தும் ஒன்றும் பிடிபடாது போகக் கண் களை மூடி மீண்டும் சோர்ந்து போய் அமர்ந்து விட் டிருந்தாள்.

இத்தனை நாளும் எப்படியோ. ஆனால் இப்பொழுத நடப்பைப் புரிந்து கொள்ள மிகவும் முயன்றாள் சஞ்சனா.

மீண்டும் பாட்டி சாப்பிட அழைக்க, அவருக்காகச் சென்று உணவருந்தி விட்டு வந்தாள்.



அவருக்காகத்தான்.

''சஞ்சு...''

அக்கா அகிலா நின்றிருக்க என்னவென்பதைப் போல பார்த்தாள்.

''அம்மா இறந்து போய் கூடப் பத்து நாளைக்கு மேலாச்சு. இன்னும் எத்தன நாளைக்கு நீ இப்படியே உக்காந் திருக்கப் போற?''

எத்தனை சாதாரணமாகச் சொல்கிறாளென்று நெஞ்சு பதறிப் போயிற்று சஞ்சனாவிற்கு.

கண்களைக் கரித்துக் கொண்டு வர, ஓவென்று கதறி அழ வேண்டும் போலப் பரபரத்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''உன்னைத்தான்.''

எதுவும் பேசாமல் எதிரே நின்றிருந்தவளை நிமிர்ந்து பார்த்தாள் சஞ்சனா.

''சின்னப்பாட்டி வேற ஊருக்குக் கிளம்பனுமாம். போய்ட்டு அப்பப்ப வேணும்னா வந்து நாலு நாள் இருந் துட்டுப் போறேன்னு சொல்றாங்க. அவங்களுக்கும் அவங்க குடும்பம் கடமைகள்னு எத்தனையோ இருக் கில்ல...''

.....

''என்ன நீ, நான் பாட்டுக்கு பேசிட்டே இருக்கேன். நீ இப்பிடிக் கல்லு மாதிரி உக்காந்துட்டே இருக்க?''

செய்வதெல்லாம் செய்துவிட்டு எவ்வளவு மெத்தன மாகக் கேள்வி கேட்கிறாள்.

தனக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறாளோ.

கடைசியாகத் தாய் சொன்ன வார்த்தைகள் தான் அப்பொழுது நினைவிற்கு வந்தன.

மீண்டும் எங்கெங்கோ செல்லத் தொடங்கிய எண்ண ஓட்டங்களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள் சஞ்சனா.

வேண்டாம் மனமே வேண்டாம்.

தன்னால் யாரும், எப்பொழுதும் சிரமப்படக்கூடாது.

இத்தனை நாட்கள் தான் எதையும் யோசிக்காமல் அமர்ந்து விட்டிருந்ததே பெரிய தவறு.

ஆனால் தான் ஒன்றும் வேண்டுமென்றே அப்படி அமர்ந்து விடவில்லையே என்ற எண்ணம் மட்டும் மனதின் ஒரு மூலையில் தோன்றி மறைந்தது.

ஆனால் காரணம் என்னவாக இருந்தாலும், தன்னால் யாரும் கஷ்டப்படக்கூடாது.

அந்த எண்ணம் தோன்றிய உடனே எழுந்து விட்டிருந்தாள் சஞ்சனா.

மனமும், உடலும் கொடுத்த வேதனையை அப்புறப் படுத்திவிட்டு மாற்று உடையை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் கிளம்பியே விட்டிருந்தாள்.

கிளம்பியவள் கண்ணாடியில் மீண்டுமொரு முறை முகம் பார்த்தாள்.



சோர்வு மட்டும் அப்படியே இருக்க, உடலும் நன்கு மெலிந்து போயிருந்தது தெரிந்தது.

ஏதோ நோயில் விழுந்து எழுந்தாற் போல என்று சின்னப்பாட்டி சில நாட்களுக்கு முன்பு சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

மீண்டும் மனம் சோர்ந்து போக, அதற்கு இடம் கொடுக்காமல் வேகமாக வெளியே வந்தாள்.

“என்னடாம்மா, எங்க கிளம்பிட்ட?”

பாட்டி கேட்க “வேலைக்கு” என்றாள்.

“பரவாயில்லையே, இப்பதாம்மா எனக்கு கொஞ்சமாவது நிம்மதியா இருக்கு.”

இன்னும் நடந்ததையெல்லாம் சொல்லிப் பாட்டி புலம்பத் தொடங்கியிருக்க, “சரி பாட்டி வர்றேன்” என்று விட்டுக் கிளம்பி விட்டிருந்தாள்.

## 20

சஞ்சனா அலுவலகத்திற்குள் காலடி எடுத்து வைத்த போது எம்.டி. இருக்கையில் இல்லாதது தெரிந்தது.

கடந்த பத்து நாட்களாகத் தான் இந்த உலகத்திலேயே இல்லாதது போல நடந்து கொண்டு விட்டதனைத்தையும் இப்பொழுது நினைக்கும் போது, தான் ஏதோ மிகப்பெரிய தவறை செய்து விட்டதைப் போல மனம் குறுகுறுத்தது.

எம்.டி. தன் மீது கோபப்படுவாரோ.

பின்னே, வேலைக்கு சேர்ந்து ஒரு மாதம் கூட முடிந்திருக்கவில்லை. அதற்குள் பத்து நாட்கள் விடுமுறை எடுத்தால்,

தான் ஏதோ வேண்டுமென்றே செய்ததைப் போல இப்பொழுது மிகவும் பயமாக இருந்தது.

ஒருவேளை தன்னுடைய இடத்திற்கு வேறு ஒருவர் கூட வந்திருந்தால்,

அந்த எண்ணம் வந்தது தான் தாமதம், மனதளவில் ஆடிப் போனாள் சஞ்சனா.

அனைத்தையும் இழந்து ஆதரவற்று நிற்கும் இந்த வேளையில் இருக்கும் வேலையும் கைவிட்டுப் போய் விட்டால்,

படிப்பையும் முழுமையாக முடிக்காமல்...

.....

அந்த எண்ணம் வந்து விட்டதற்குப் பிறகு, துளியும் மனம் நிலை கொள்ளாமல் தவித்தாள்.

சிறிது நேரம் அப்படியே நின்று விட்டிருந்தவள் பிறகு சென்று ஏதாவது வேலையிருந்தால் பார்க்கலாமென்று அந்த இடத்தை விட்டு நகரப் போனாள்.

திரும்பியவள், தன்னைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த எம்.டி. ஸ்ரீஹரியைப் பார்த்தாள்.

திடீரென்று பார்த்ததில் என்ன பேசுவதென்று தெரியாமல் சில வினாடிகள் விழித்தவள் பிறகு ''குட்மார்னிங் ஸார்'' என்றாள்.



தான் சொன்னது காதில் விழவில்லையோ என்னவோ, ''வா'' என்று ஒற்றை சொல்லில் வரவேற்ற எம்.டி.யையே பார்த்தாள்.

'எல்லாம் முடிஞ்சதா' என்று வாய் வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன், ''இப்பதான் வந்தியா?'' என்று கேட்டான்.

ஸ்ரீஹரியின் கேள்விக்கு ''ஆமாம் ஸார்'' என்று பதில் சொன்னவள் உடனே ''ஸாரி ஸார்'' என்றாள்.

அப்படிச் சொன்ன தன்னை எம்.டி. பார்க்க, ''ரொம்ப நாள் லீவ் எடுத்துட்டேன் அதான்...'' என்று திக்கித் திணறினாள்.

ஆனால் அதற்குள் ''நானும் மனுஷன் தான்'' என்ற ஸ்ரீஹரி ''இன்னும் கூட லீவ் தேவப்பட்டா எடுத்துக்கோ'' என்றான்.

வேண்டாம் என்பதைப் போலத் தலையை ஆட்டி மறுத்த சஞ்சனா, ''தேங்க்ஸ், ஆனா இனிமேல் அவ்வளவா லீவ் தேவப்படாதுன்னு நினைக்கறேன்'' என்றாள்.

அப்படிச் சொன்ன தன்னை எம்.டி. மீண்டும் புரியாமல் பார்க்க, ''அப்பிடிக் கட்டாயம் வீட்ல இருந்துதான் ஆகணுங்கற மாதிரி வேலையோ இல்ல வீட்ல இருந்து தான் ஆகணும்னு கம்பல் பண்ணவோ இனி யாருமில்ல'' என்றாள்.

அந்த வினாடியில் தாயின் மறைவு பூதாகரமாகத் தோன்ற, அவளையறியாமலேயே சஞ்சனாவின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே சமாளித்துக் கொண்டவள் ''நான் போய் வேலயப் பாக்கட்டுமா ஸார்?'' என்றாள்.

''முதல்ல இருந்தே உடம்பு சரியில்லாம இருந்தாங்களா?... ஸாரி கஷ்டமா இருந்தா இதப்பத்திப் பேச வேண்டாம்...''

கடைசி நாள் இரவு தாய் வலியில் துடித்தது தான் அப்பொழுது சஞ்சனாவிற்கு நினைவிற்கு வந்தது. ஒருவேளை தாய் மறுக்கிறார்களென்று பார்க்காமல் உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தால் பிழைத்திருப்பார்களே.

நாமே தாயைக் கொன்று விட்டோமோ.

ஆமாம் அப்படித்தான்.

ஐயோ அம்மா...

இந்தக் கோணத்தில் நான் இதுவரை யோசிக்கவே இல்லையே.

அந்த மாதிரி ஒரு எண்ணம் வந்து விட்ட பிறகு மனதளவில் மிகவும் துடித்துப் போனாள்.

இனி எப்பொழுது மீண்டும் உங்களைப் பார்ப்பேன் அம்மா என்று நினைத்தவளுக்கு மீண்டும் தாங்கிக் கொள்ள முடியாமல் அழுகை வந்து விட்டிருக்க, அப்படியே கைகளில் முகத்தைப் புதைத்துக் கதறி விட்டிருந்தாள்.

சில வினாடிகள் சுற்றுப்புறத்தையே சுத்தமாக மறந்து போயிருந்தவள், அதற்குப் பிறகே மெல்ல மெல்ல நடப்பிற்கு வந்தாள்.



தொடர்ந்து வந்த சில வினாடிகளில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தவள், மேலும் வந்த அழுகையை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

சஞ்சனாவை அந்த நிலையில் பார்த்த ஸ்ரீஹரிக்கும், அவளை அப்படியே மார்போடு அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருக்க, அந்த எண்ணத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள சற்று சிரமப்பட்டுத்தான் போனான்.

.....

''என்னால... என்னால...''

''ஸாரிமா, இப்ப எதுவும் பேச வேண்டாம். ஆனா ஒன்னு. உனக்கு ஏதாவது உதவி வேணும்னா தயங்காம கேளு'' என்றவன் ''இனி நீ போய் உன் வேலயப் பாரு'' என்றான்.

சில வினாடிகளில் முயன்று ''தேங்க்யூ ஸார்'' என்று விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்து விட்டிருந்தாள் சஞ்சனா.

தன்னுடைய இடத்தில் வந்து அமர்ந்த பிறகு தான் அவள் முற்றிலுமாகத் தெளிந்தாளென்று சொல்ல வேண்டும்.

சம்பிரதாயத்திற்காக ஒரு வார்த்தை கேட்டவனிடம் போய் இப்படி அழுது கதறி விட்டிருக்கிறோமே. அவன் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பானென்று கூனிக் குறுகிப் போனாள்.

தான் இவ்வளவு பலவீனமானவளா.

இனியொரு முறை அவன் தன்னிடம் எப்படிப் பேசக் கொடுப்பான்.

வேலை விஷயமாக அவசியத்திற்குப் பேசக் கூட பயந்து விட மாட்டானா?

பயப்படுவது மட்டுமா...

தனது டேபிளில் இருக்கும் இன்ட்டர்காம் ஒலிக்க சில வினாடிகள் எடுத்துத் தன்னை சுதாரித்துக் கொண்டு ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தாள்.

''இதோ எடுத்துட்டு வர்றேன் ஸார்'' என்றவள், உடனே எம்.டி. கேட்ட ஃபைலை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

அதற்குப் பிறகு வேறு எதைப் பற்றி யோசிக்கவும் அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

இடையிடையே தாயின் நினைவு வந்து கொண்டே இருந்ததென்றாலும் தொடர்ந்து அதையே நினைத்துக் கொண்டு சோர்ந்து போய் அமர்ந்து விட இடம் கொடுக்காமல் வேலை அவளை வழி நடத்திச் சென்று விட்டிருந்தது.

ஆனால் அதெல்லாம் மாலை வேலை முடிந்து கிளம்பும் வரை மட்டுமே.

அதற்குப் பிறகு மீண்டும் எல்லையற்ற வெறுமை வந்து அவளைச் சூழ்ந்து கொள்ள, மறுநாள் காலை வேலைக்கு வரும் வரை ஒரேயடியாகச் சோர்ந்து போய் வருவதும் வழக்கமாயிற்று.

அப்படியே மேலும் பதினைந்து நாட்களும் சென்றிருந்தன.



# 21

நாளுக்கு நாள் மாலை வேலை முடிந்து வீட்டிற்கு செல்வதை நினைத்தாலே நெஞ்சு நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

ஆனாலும் அதைத் துளியும் வெளிப்படுத்திக் கொள்ளாமல் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

சஞ்சனா அப்படி நினைத்துக் கொண்டிருக்க, நடப்போ வேறு மாதிரியிருந்தது.

அந்த அளவிற்கு சஞ்சனாவின் பளிங்கு முகம் உள்ளதை உள்ளபடி அப்படியே பிரதிபலிப்பதாய் இருந்தது.

எத்தனையோ முறை ஆதரவாக சில வார்த்தைகள் பேச வாய் வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான் ஸ்ரீஹரி.

மற்றவர்களின் அனுதாபத்தை சஞ்சனா எப்பொழுதும் விரும்புபவள் அல்ல என்பதை அவன் அறிந்திருந்ததே அதற்குக் காரணம்.

அது மட்டுமல்லாமல் அவளுடைய முயற்சிக்கு நாம் மதிப்பளிக்க வேண்டுமென்று அவன் நினைத்ததும்.

இடையில் விஜயின் திருமணம் வர வாழ்த்து அட்டையையும், அன்பளிப்பையும் மட்டும் அனுப்பி வைத்திருந்தாள் சஞ்சனா.

அன்று சில வினாடிகள் கூட நிற்க முடியாத அளவிற்கு வேலையே சரியாக இருந்தது.

அதிக வேலை தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொண்டிருக்க வழியில்லாமல் செய்து விடுவதால் அதையே அவளும் விரும்பினாள்.

அன்று எம்.டி. சொல்லியிருந்த வேலைகள் அனைத்தையும் முடித்துவிட்டு நிமிர்ந்த போது தான் வழக்கமாகக் கிளம்பும் நேரத்தை விடவும் ஒரு மணி நேரம் அதிகமாகி விட்டிருந்ததைக் கண்டாள்.

சரிதான் இனி இதைக் கொண்டு போய் எம்.டி.யின் பார்வைக்கு வைத்து விட்டுக் கிளம்பினால் சரியாக இருக்குமென்று எடுத்துக் கொண்டு சென்றாள்.

தனது வேலையில் மும்முரமாக இருந்த ஸ்ரீஹரி நிமிரவும், சஞ்சனா உள்ளே வரவும் சரியாக இருக்க, அவளை வா என்பதைப் போலப் பார்வையால் வரவேற்றான்

எம்.டி.யின் டேபிளுக்கு அருகில் வந்திருந்த சஞ்சனா ''ஸார் நீங்க கேட்ட ரிப்போர்ட்ஸ்'' என்று தனது கையிலிருந்த ஃபைலை பார்வைக்கு வைத்தாள்.

''பாத்துக்கறேன் வெச்சுடு.''

.......

''சரி நீ கிளம்பு.''

''தேங்க்யூ ஸார்.''

''எப்பிடிப் போகப் போற?''

''பஸ்ல தான்.''



''இன்னுமொரு பத்து நிமிஷம் இருந்தா நானும் கிளம்பற நேரம் தான், பஸ் ஸ்டேண்ட்லயோ இல்லன்னா வீட்லயோ கூட ட்ராப் பண்ணிடுவேன்.''

''நோ தேங்க்ஸ் ஸார், நான் இப்பவே கிளம்பிக்கறேன். போற வழில எனக்கு வேறொரு வேலையிருக்கு. பாத்துட்டுப் போகணும்'' என்றுவிட்டு எம்.டி.யின் பதிலுக்காகக் காத்திருக்காமல் வெளியே வந்திருந்தாள் சஞ்சனா.

தானாக வலியப் போய் கேட்டும் கூட அதற்கு அவள் பதில் சொன்ன விதம் ஏதோ தன்னை உதாசீனப்படுத்துவதைப் போலிருந்தது ஸ்ரீஹரிக்கு.

அது மட்டுமா, சில வினாடிகள் கூட நிற்காமல் வேகமாகச் சென்றே விட்டாளே.

சரிதான் பார்த்துக் கொள்ளலாம்.

## 22

''குட்மார்னிங் ஸார்.''

காலையில் வந்ததும் எம்.டி.யைப் பார்த்து வணக்கம் சொன்னாள் சஞ்சனா.

''வெரி குட்மார்னிங்.''

''அப்புறம் ஸார்...''

''என்ன சொல்லு?''

''பழைய பையர்ஸ் லிஸ்ட் இயர், மந்த், டேட் வைஸா ரெடி பண்ணச் சொன்னீங்க ஸார், அதுக்கான டீடெய்ல்ஸ்ஸ...''

''சிரமப்படாத அத விஜய் வந்து பாத்துக்குவான்...''

அப்படிச் சொன்ன எம்.டி.யைப் பார்த்தாள் சஞ்சனா.

''நெக்ஸ்ட் வீக்ல இருந்து விஜய் வந்துடுவான். அவன் வந்து பாத்துக்கட்டும்.''

அப்படியானால் அதற்குப் பிறகு உனக்கு இங்கே வேலையில்லை என்கிறானோ.

அதிலென்ன சந்தேகம்.

வேலைக்கு வந்த அன்றே தற்காலிகமாக என்று எம்.டி.யும் சொல்லத்தானே செய்தார்.

நாம் அதை மறந்து விட்டதற்கெல்லாம் அவர் என்ன செய்ய முடியும்.

வேறு வேலையைப் பார்த்துக் கொண்டு கிளம்பு என்று துரத்தியடிக்கும் வரை அமர்ந்து கொண்டிருக்காமல் இனி நாமும் வேறு வழியைப் பார்த்துக் கொள்ளத் தான் வேண்டும்.

விஜய் வந்ததும் இரண்டு நாட்கள் அனைத்தையும் ஹேண்ட் ஓவர் செய்யும் வேலையிருக்கும், அவ்வளவு தான்.

அதாவது அதிகபட்சமாக இன்னுமொரு வாரம்.

அதற்குப் பிறகு மருந்திற்குக் கூட தனக்கு இங்கே வேலை இல்லை.

''நீ போய் வேலையப் பாரு அவசியப்படும் போது கூப்புட்றேன்.''

எம்.டி. சொல்ல சரியென்பதைப் போலத் தலையை ஆட்டி விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.



எவ்வளவு பிரமாதமான வேலை.

தகுதிக்கு மீறிய சம்பளம்.

இனி வெளியே சென்றால் இதில் பாதியளவு சம்பளத் திற்கேனும் உத்தரவாதம் இல்லையே.

எல்லவற்றிட்கும் மேலாக நல்ல பிரமாதமான குண முடைய எம்.டி. வேறு.

அவசியமில்லாமல் ஒரு சிறு பேச்சு கூடக் கிடை யாதே.

அதிலும் சில இடங்களில் எந்த அளவிற்குக் கேவல மாக நடந்து கொள்கிறார்கள்.

அதிலும் தன்னைப் போலக் கேட்க ஆளில்லாத பெண்களுக்கு, கேட்கவே வேண்டியதில்லையே.

அன்று எப்படி வேலைகளை செய்தாளென்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

அன்றெல்லாம் எம்.டி.யை சந்திக்க நேர்ந்த போது ஏதோ அனைத்துமே கைவிட்டுப் போய் விட்டது போல ஒரு உணர்வு தோன்றி அவளை ஏங்கச் செய்திருந்ததென் றால் அது சற்றும் மிகையல்ல.

அன்று மாலை வேலையை விட்டுக் கிளம்பும் போதும் முதல் நாளைப் போல ஒரு மணி நேரம் தாமதமாகி விட் டிருக்க, கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

இனி இன்னும் இங்கு ஒரு வாரமோ பத்து நாளோ, அதற்கு பிறகு என்று நினைத்துக் கொண்டே பஸ் ஸ்டேண்டை அடைந்தவள், பஸ்க்காகக் காத்திருக்க லானாள்.

திடீரென அக்கா அகிலாவின் நினைவு வந்தது.

வரவர அவளுடைய செய்கைகள் அனைத்தும் வேதனை அளிப்பதாய் இருக்க, அதற்காகவும் மனதிற்குள் வருந்தினாள்.

சரியாக அதேநேரம் தன்னருகில் ஒரு கார் வந்து நிற்க, நிமிர்ந்து பார்த்தாள்.

ஆனால் அதற்குள் காரை ஓட்டி வந்தவன் காரை விட்டு இறங்கியிருந்ததையும், தன்னை நோக்கி வருவதையும் கண்டாள்.

இவனா.

ஏனோ மனதிற்குள் அபாய மணி ஒலித்தது.

''என்ன சஞ்சு எப்பிடியிருக்க?''

.......

கடவுளே இது இது என்ன கொடுமை. ஏற்கனவே இன்று தனது மனம் படும்பாடு போதாதா.

''என்னமா பேச மாட்டியா?''

''போயிடு உங்கூடப் பேச எனக்கு விருப்பமில்ல.''

எரிச்சல் கலந்த கோபத்துடன் அடிக்குரலில் வந்திருப்பவனைப் பார்த்துச் சொன்னாள் சஞ்சனா.

''இப்பிடி சொன்னா எப்பிடி, அதுசரி நீ என்னைக்கு சிரிச்ச மாதிரி சந்தோஷமாப் பேசியிருக்க? ஆமா புதுசா வேலைக்கெல்லாம் கூடப் போக ஆரம்பிச்சுட்டியாமே கேள்விப்பட்டேன்.''

.......

''பதில் சொன்னா பேச வந்த விஷயத்தை சீக்கிரமாப் பேசிட்டுப் போயிட்டே இருப்பேன். இல்லன்னா ரொம்ப



நேரம் நின்னு பொறுமையாய் பேசிட்டே இருக்கலாம். உன் விருப்பம் எப்பிடி?''

''என் விருப்பமா? சரிதான் நல்லாக் கேட்டுக்கோ, எனக்கு உன் முகத்தப் பாக்கவே பிடிக்கல. முதல்ல இங்கிருந்து போயிடு இல்லன்னா...''

''ம். இல்லன்னா என்ன பண்ணுவ?''

.......

''ஓ. என்ன பண்ணுவேன்னு உனக்கே தெரியாதா?''

''தெரியாம என்ன, போலீஸக் கூப்புடுவேன்.''

''அட, அப்புறம்!''

''என்ன நிஜமாவே போலீஸக் கூப்டாதான் இங்கிருந்து போவியா?''

''நான் பாக்காத போலீஸா? ஆனாலும் விஷயம் திசை மாறிப் போறதுல எனக்கு விருப்பமில்ல. அதனால சொல்ல வந்த விஷயத்த சொல்லிடறேன்...''

அப்படிச் சொன்னவனை ஏளனத்துடன் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன பாக்கற, நீ போலீஸ்க்குப் போனா நானென்ன பாத்துட்டு சும்மா இருப்பேனாக்கும். எனக்கும் கமிஷனர் வரைக்கும் பழக்கமிருக்கு. ஏன் அவசியப்பட்டா அதுக்கும் மேல போகக்கூட என்னால முடியும். ஆனா நான் பேச வந்த விஷயத்துக்கும், இப்ப நாம பேசிட்டிருக்கறதுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமே இல்ல...''

''அப்பிடி என்னதான் பேச வந்த, சொல்லித் தொல...''

''ம் அப்பிடிக் கேளு. ஆனாலும் இத நீ கொஞ்சம் சிரிச்சுக்கிட்டே கேட்டிருக்கலாம்...''

அவன் பாட்டுக்கு பெரிய ஹீரோ மாதிரி இளிக்க கன்னத்திலேயே இரண்டு கொடுக்க வேண்டும் போல ஆத்திரமாக வந்தது.

அதேசமயம் சுற்றி நின்றிருப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களென்று தயக்கமாகவும்,

நல்லவேளையாகக் கூட்டம் அவ்வளவாக இல்லாதிருக்க, நெரிசல் ஆகாதென்று தான் எப்பொழுதும் பேருந்து நிலையத்தை விட்டு வெகுதூரம் தள்ளி நிற்பதும் கூட ஒரு விதத்தில் வசதியாகத்தான் போயிற்று என்று நினைத்துக் கொண்டாள்.

ஒருவேளை அதுதான் இப்போதைக்கு இவனுடைய பலமோ.

அந்தத் தைரியத்தில் தான் இப்படி தெனாவெட்டாக நின்று பேசிக் கொண்டிருக்கிறானோ.

# 23

ஆனால் அவனைப் பற்றி ஒரேயடியாக அப்படி நினைத்து விடவும் சஞ்சனாவால் முடிந்திருக்கவில்லை.

அந்த மாதிரியெல்லாம் சிந்திப்பவன் என்றால் முதலில் இப்படி வந்து நின்று பேசுவானா என்ன.

தான் செல்ல வேண்டிய பேருந்து வர, முற்றிலுமாகப் பொறுமையை இழந்து விட்டிருந்தாள் சஞ்சனா.

''தள்ளு, நான் கிளம்பணும்.''



''கிளம்பறையா? ம்கூம் நான் இன்னும் பேசி முடிக்கல.''

''ஏய் நீயென்ன முட்டாளா? அதான் எனக்கு உங்கூடப் பேச விருப்பமில்லேன்னு சொல்றேனில்ல. மண்டைல ஏறலையா?''

''திவ்யமா ஏறுது. ஆனா பாரு எனக்கு உங்கூடப் பேச ரொம்பவும் விருப்பம். மூனு வருஷமா லவ் பண்ணிட்டிருக்கற என் அண்ணாவும், உன் அக்காவும் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணியிருக்காங்க. அப்பதான் நான் என் விருப்பத்தப் பத்தி அண்ணாகிட்ட சொன்னேன். நான் சொன்னதக் கேட்டு அவருக்கும் ரொம்ப சந்தோஷம். உன் சம்மதத்த மட்டும் வாங்கிட்டு வா மத்தத அப்புறமாப் பாத்துக்கலாம்னு சொன்னார்.''

என்ன சம்மதம், என்ன சந்தோஷம்.

ஏன் இப்படி உளறிக் கொண்டிருக்கிறான்...

''என்ன தல, வால் ஒண்ணும் புரியல இல்லையா?'' சரிதான் ஒரு அழகான பொண்ணுகிட்ட தன் காதல வெளிப்படுத்தறது ரொம்பவும் தில்லான விஷயம்னு சொல்லக் கேட்டிருக்கேன். ஆனா இப்பதான் நேர்ல அனுபவிக்கறேன். ஐ லவ் யூ சஞ்சு...''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை.

''செருப்பு பிஞ்சிடும்'' என்று கோபத்தில் கத்தி விட்டிருந்தாள் சஞ்சனா.

என்ன இவன் இவ்வளவு கேவலமாக இருக்கிறானென்ற எண்ணம் ஓட, ''இப்ப நீ இங்கிருந்து போகலேன்னா அப்புறம் நடக்கறதே வேற'' என்று உடல் நடுங்கச் சொன்னாள்.

''பின்ன போகாம இங்கயேவா நின்னுட்டிருக்கப் போறேன். உன் விருப்பத்தத் தெரிஞ்...''

''இந்த உலகத்துல உன்னத் தவிர வேற ஆம்பளைகளே இல்லன்னாக் கூட உன்ன எனக்குப் பிடிக்கப் போறதில்ல...''

''பொறுமை, பொறுமை. உன் பதில் எதுவா இருந்தாலும் அத சந்தோஷமா ஏத்துக்க நான் தயார்...''

மீண்டும் சுற்றியிருப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களென்ற எண்ணம் தோன்றி விட்டிருக்க கண்கள் கலங்கி விட்டிருந்தன சஞ்சனாவிற்கு.

எல்லாம் இந்த அகிலாவால் வந்தது.

அவளால் ஏற்கனவே குடும்பம் படும்பாடு போதாதா.

இன்னும் என்னவெல்லாம் பிரச்சனைகளை கொண்டு வரப் போகிறாளோ.

இப்படியெல்லாம் கண்ட நாய்கள் நடுத்தெருவில் வழி மறித்துப் பேசுமளவிற்குக் கேவலமாகத் தன்னுடைய நிலை வந்து விட்டதா.

மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டுவர, கேவலம் இவனுக்கு முன்பாக அழுவதா என்று முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மேலும் சில நிமிடங்களுக்குப் பிறகே அந்த யோகித் அதாவது நித்திஷின் தம்பி அங்கிருந்து கிளம்ப, தன்னுடைய நிலையிலிருந்து மிகவும் கீழிறங்கி விட்டாற் போன்றதொரு எண்ணத்தில் சஞ்சனாவின் பூவுடல் நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது.



தன்னைக் கடந்து செல்பவர்களில் ஒரிருவர் கேவலமாகப் பார்த்துக் கொண்டே செல்வதைப் போலிருக்க, ஒரு மாதிரி உணர்வில் கூனிக் குறுகிப் போனாள்.

சஞ்சனாவைப் பொறுத்தவரை, அவள் எப்பொழுதும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிப்பவள்.

அதிலும் ஆடவர்களிடம் அவசியத்திற்குப் பேசக் கூட நிறைய யோசிப்பவள்.

அதனாலோ என்னவோ அந்த யோகித் ஒரு பொது இடத்தில் அப்படி நடந்து கொண்டதைத் தனக்கு நேர்ந்த அவமானமாகவே கருதினாள்.

வழியோடு போன ஒரு ஆட்டோவை இடைமறித்து அதில் ஏறியிருந்தவள், அடுத்த பதினைந்து நிமிடங்களில் வீடு வந்து சேர்ந்திருந்தாள்.

ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவள் அதற்குப் பிறகு தான் வீடு திறந்திருப்பதைக் கண்டாள்.

அக்கா உள்ளே அவளுடைய அறையில் இருப்பது தெரிய, கையிலிருந்த ஹேண்ட் பேக்கை ஹால் சோபாவில் வீசியெறிந்துவிட்டு அவளைப் பார்ப்பதற்காக வேகமாக உள்ளே வந்திருந்தாள்.

தனது துணியைப் பெட்டி தேய்த்துக் கொண்டிருந்த அகிலா, கோபத்தில் முகம் சிவக்கத் தனக்கு முன்பாக வந்து நின்றிருந்த தங்கையைப் புரியாமல் பார்த்தாள்.

பெரிய மூச்சுகள் எடுத்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்ட தங்கையின் சிவந்த முகம் அகிலாவை இவள் இவ்வளவு அழகா என்று பொறாமையுடன் நினைக்க வைத்திருந்தது.

கோபத்துடன் உறுத்து விழித்த தங்கையிடம் "என்ன?" என்று கேட்டாள்.

"நீயெல்லாம் ஒரு பொண்ணா?"

"என்ன திடீர்னு இப்பிடியொரு சந்தேகம்?"

"இப்ப என்ன நடந்தது தெரியுமா?" என்று கேட்பதற்குள் சஞ்சனாவிற்கு ஆதங்கத்தில் அழுகை வந்து விட்டிருந்தது.

"என்ன நடந்தது. ஆடு, மாடு..."

"போதும், இதுக்கு மேல பேசினா..."

"ஏய் இப்ப என்னாச்சு உனக்கு? ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்க?"

அகிலா கேட்க, நடந்ததை சொன்னாள் சஞ்சனா. அதாவது சொல்ல முயன்றாள்.

ஆனால் அதற்குள் அழுகை வந்து விட்டிருக்க, சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்டு மீண்டும் நிமிர்ந்தாள்.

"என்ன சஞ்சு என்னாச்சு உனக்கு?"

"ஏன் இப்பிடி உணர்ச்சிப் பிழம்பா இருக்க?"

"இப்பக் கொஞ்சம் முன்னாடி பஸ் ஸ்டேண்ட்ல வெச்சு அந்த யோகித் வந்து எப்பிடியெல்லாம் பேசினான் தெரியுமா..."

.......

"ஒரு பொது இடத்துல வந்து நின்னுக்கிட்டு அவன் பேசினது எனக்கு எவ்வளவு கஷ்டமா இருந்தது தெரியுமா?"



"என்ன சொன்னான்?"

நடந்ததை சொல்ல வாயெடுத்த சஞ்சனாவிற்கு மீண்டும் அழுகை வந்து விட்டிருக்க, "சரி சரி அவன் என்ன சொன்னான்னு முதல்ல சொல்லு" என்று எரிச்சலுடன் கேட்டாள் அகிலா.

"ம்."

"அவன்... அவன் என்ன லவ் பண்றதா சொல்றான்."

"ஆமாம், எங்கிட்டயும் சொன்னான் அதுக்கென்ன?"

அப்படிக் கேட்டவளை அதிர்ச்சியுடன் பார்த்தாள் சஞ்சனா.

என்ன இவள், இவ்வளவு சாதாரணமாகக் கேட்கிறாள்.

"ஆமா அதுக்கு நீ என்ன பதில் சொன்ன?"

அக்கா அகிலாவின் கேள்வி உச்சகட்ட அருவெறுப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

"என்னடி பேசித் தொல?"

"இந்த மாதிரி... இந்த மாதிரியெல்லாம் அவன் பேசினான்னா அப்புறம்..."

"ம், என்ன செய்வ?"

"போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணிடுவே..."

"ஏன் என்ன நீ பிடிக்கலேன்னா பிடிக்கலன்னு சொல்லிட்டுப் போ."

தனது அக்காவிடம் இதைப் பற்றிப் பேசுவதால் எந்தப் பலனும் இல்லையென்பது தொடர்ந்து வந்த சில நிமிடங்களிலேயே தெரிந்து விட்டிருக்க, உடனே தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

உள்ளே வந்து கதவைத் தாளிட்டவள், ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் படுக்கையில் விழுந்து வெகுநேரம் அழுதாள்.

அழுது தீர்த்தவள், பிறகு தெளிந்து எழுந்தாள்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். இரவு மணி ஒன்பது ஆகியிருந்தது தெரிந்தது.

துளியும் பசியில்லா விட்டாலும் தூக்கம் வர வேண்டு மென்பதற்காகச் சென்று பெயருக்கு இரண்டு பிரட் ஸ்லைஸ்களைப் பாலில் நனைத்து உண்டு விட்டு வந்து மீண்டும் படுக்கையில் விழுந்திருந்தாள்.

வழக்கமாகச் செய்யும் எந்த வேலையும் அன்று நடந் திருக்கவில்லை.

அதாவது செய்ய மனம் வந்திருக்கவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு அன்று அம்மாவின் ஏக்கம் ஏனோ மீண்டும் அதிகமாயிருந்தது.

அம்மா இருந்த வரைக்கும் கால் மேல் கால் போடாத குறையாக ராணிபோல அனைவரையும் அதிகாரம் செய்து கொண்டிருந்ததுதான் நினைவிற்கு வந்தது.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த் தாள்.

எம்.டி. லைனில் இருக்க, எழுந்து அமர்ந்தவள் சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அட்டெண்ட் செய்து பேசினாள்.

சில வார்த்தைகள் பேசியவள் ''சரி ஸார் காலைல ஒன் அவர் முன்னாடியே வந்துட்றேன்'' என்று மொபைலை வைத்திருந்தாள்.



காலையில் நேரத்தில் எழ வேண்டுமென்ற எண்ணம் தோன்றி விட்டிருக்க, உடனே படுக்கையில் விழுந்தவள் தான், அன்று அடித்துப் போட்டது போலத் தூங்கி விட் டாள்.

அப்படித் தூங்கியதாலோ என்னவோ பல நாட்களுக் குப் பிறகு அன்று காலையில் எழுந்தபோது மிகவும் சுறுசுறுப்பாக உணர்ந்தாள்.

காலைக் கடன்களை முடித்தவள், வேகமாகச் சென்று சமையலை முடித்து அனைத்தையும் டேபிளின் மீது தயா ராக எடுத்து வைத்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் தலைக்குக் குளித்து விட்டுத் தனக்கு மிகவும் பிடித்த அந்தச் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

பல நாட்களுக்குப் பிறகு தோற்றத்தில் அக்கறை செலுத்தியிருந்தவளுக்குத் தன்னைப் பார்க்கவே மிகவும் பிடித்துப் போனது.

எம்.டி. சொல்லியிருந்தது போல ஒரு மணி நேரத் துக்கு முன்னதாகவே அலுவலகத்தை வந்தடைந்திருந்த சஞ்சனா எம்.டி.யின் அறைக்கு வந்தாள்.

''குட்மார்னிங் ஸார்.''

வேலையாக இருந்தவன், சஞ்சனாவின் குரலில் நிமிர்ந்தான்.

''வெரி குட்மார்னிங்'' என்றவனால் ஏனோ அவளிட மிருந்து பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிய வில்லை.

எம்.டி.யின் பார்வையில் தானும் அவனைப் பார்த்தாள்.

''என்ன விசேஷம்?''

அப்படிக் கேட்டவனை சஞ்சனா புரியாமல் பார்க்க, ''இல்ல புது டிரஸ் போட்டுட்டு வந்திருக்கியேன்னு கேட்டேன்'' என்றான்.

''அப்படியெல்லாம் இல்ல ஸார்.''

''அப்படியெல்லாம் இல்லன்னா, இது புது டிரஸ் இல்லையா? இல்ல விசேஷமில்லையா?''

''ரெண்டும் தான்.''

''சாப்டாச்சா?... உண்மையச் சொல்லணும்.''

''இல்ல ஸார்.''

''ஏன்?''

தானே செய்து சாப்பிட வேண்டுமென்றால் பிடிக்கவில்லையென்று இவனிடம் எப்படிச் சொல்வது.

இப்படியெல்லாம் கூட ஒரு காரணமா என்று சிரித்து விட மாட்டானா.

''நீயே சமைக்கணுமில்லையா?''

அப்படிக் கேட்டவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''ஏன் நீயே செஞ்சு சாப்பிடணும்னா பிடிக்கலையா?''

சில வினாடிகள் எதுவும் பேசாமல் பார்த்தவள் ''ஒரு விதத்துல அப்படித்தான்'' என்றாள்.

''அப்ப தினமுமே முக்கால் பட்டினி தான் இல்லையா?''

''ம்கூம்...''

''ஓ. அரைப் பட்டினிதானா?''



''அப்பிடியெ...''

''சரிதான் வா முதல்ல சாப்டுட்டு வந்து அப்புறமா வேலையப் பாக்கலாம். என்ன பாக்கற, நானும் இன்னும் டிபன் சாப்புட்ல வா வந்து எனக்குக் கம்பெனி குடு.''

''இல்ல ஸார் தே...''

''நோ. இது எம்.டி.யோட ஆடர் வா.''

புன்னகையுடன் என்றாலும் கண்டிப்பான குரலில் எம்.டி. ஸ்ரீஹரி அழைக்க, மறுக்க முடியாமல் அவனுடன் சேர்ந்து காலை உணவை எடுத்துக் கொண்டாள்.

''இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோ.''

''இல்ல ஸார் போதும்.''

''சரிதான், ஆனா இனிமேல் வயித்தக் காயப் போடாத. அப்புறம் இப்படித்தான் தினமும் எங்கூட உக்காந்து சாப்புடற தண்டனைய அனுபவிச்சாகணும் சொல்லிட்டேன்.''

என்னது, இது தண்டனையா, இல்லையே.

இன்னதென்று சொல்லிவிட முடியாத அளவிற்கு அந்த வேளையில் மனதிற்குள் மிகவும் இதமாக உணர்ந்தாள்.

சரியென்று சொன்னாலும் அவன் சொல்வதை ஆமோதிப்பதைப் போல ஆகி விடுமென்பதால் லேசாகச் சிரித்து மட்டும் வைத்தாள்.

ஆனால் இதெல்லாம் எத்தனை நாட்களுக்கு. அதிக பட்சம் இன்னுமொரு வாரம்,

அதற்குப் பிறகு,

காலை உணவிற்குப் பிறகு இருவரும் வேலையில் மும்முரமாகி விட்டிருந்தனர்.

குறிப்பாக சஞ்சனா.

# 24



எம்.டி. எதிர்பார்ப்பது போல வேலையை முடித்துத் தர வேண்டுமென்பது ஒரு பக்கமென்றால், வேலையே கதியென்று அந்த நினைப்புடனேயே இருந்து விட்டால் மற்ற மனபாரங்கள் பெரியதாகத் தெரியாதென்பது மற்றொரு காரணம்.

அப்படி வேலையெனும் போர்வைக்குள் ஒளிந்து கொண்டதாலோ, என்னவோ, மாலை வரை சற்று நிம்மதியாகத்தான் இருந்தாள் சஞ்சனா.

ஆனால் அதெல்லாம் வேலை முடிந்து கிளம்பும் வரை தான்.

கிளம்பிக் கொள்ளச் சொன்ன பிறகும் ஏன் இப்படி நின்று கொண்டே இருக்கிறாள்.

ஆச்சரியத்துடன் தன்னைப் பார்த்த எம்.டி.யைத் தானும் பார்த்தாள் சஞ்சனா.

''என்னாச்சு, யோசன பலமா இருக்கு?''

''அதெல்லாம் இல்ல ஸார்.''

''சரிதான் நம்பிகிட்டேன்.''



''............''

''ஏதாவது ஹெல்ப் வேணும்னாலும் தயங்க வேண்டாம்...''

''இல்ல ஸார் திடீர்னு போற வழில செய்ய வேண்டிய வேலையொன்று ஞாபகத்துக்கு வந்துடுச்சு அதான்'' என்று விட்டு மீண்டுமொரு முறையும் எம்.டி.க்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்திருந்தாள்.

தன்னுடைய பதிலுக்கு எம்.டி. சிரித்ததுதான் அவளுடைய மனக் கண்களில் ஓடிக் கொண்டே இருந்தது.

அவனுடைய சிரிப்பில் ஏளனம் இருந்ததோ.

எது இருந்ததோ இல்லையோ ஆனால் நம்ப மாட்டாமை இருந்தது.

அவள் மனதிற்குள் நினைத்து அஞ்சிக் கொண்டே சென்றதாலோ என்னவோ, அன்றும் அந்த யோகித் பேருந்து நிலையத்திற்கு வந்து விட்டிருந்தான்.

முதல் நாளைப் போல அல்லாமல் அன்று வாயைத் திறந்தாலே வெடித்து விடுவாள் போன்ற மனநிலையில் இருந்தாள் சஞ்சனா.

அது அந்த யோகித்திற்கும் தெரிந்து விட்டதோ என்னவோ மிகவும் பொறுமையாகவே பேச்சைத் தொடங்கினான்.

ஆனால் அதற்குள் ''உனக்கெல்லாம் வாயில பேசுனாப் புரியாது இரு போலீஸக் கூப்புட்றேன்'' என்று மொபைலை எடுத்திருந்தாள் சஞ்சனா.

சரியாக அதே நேரம் தனக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றிருக்க, யதேச்சையாகப் பார்த்தாள்.

பார்த்தவளுக்கு அதற்குப் பிறகுதான் அது தனது எம்.டி. ஸ்ரீஹரியுடைய கார் என்பது புரிந்தது.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே முன்பக்கமாகத் தனக்குப் பக்கவாட்டில் இருந்த கார்க் கதவைத் திறந்து விட்டு "ஏறு" என்றான் ஸ்ரீஹரி.

ஒரு சில வினாடிகள், அது கூட இன்னும் இவளை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டுப் போவதா என்று எண்ணியதால் ஏற்பட்ட தயக்கமே,

அடுத்த வினாடி ஏறி அமர்ந்தே இருந்தாள்.

காரில் ஏறி அமர்ந்திருந்த சஞ்சனாவின் மனம் வெறுமையாக இருக்க, அருகில் அமர்ந்திருப்பவன் தன்னைப் பற்றி என்ன எண்ணுவான் என்ற எண்ணம் மட்டும் அவளையறியாமலேயே வந்து போனது.

"நாளையிலிருந்து கம்பெனி டிரைவர தினமும் கொண்டு வந்து வீட்ல விடச் சொல்றேன்."

ஸ்ரீஹரி சொல்ல எதுவும் பேசாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள் சஞ்சனா.

சரிதான்.

ஆனால் அதெல்லாம் இன்னும் எத்தனை நாட்களுக்காம்,

ஏனோ ஏற்கனவே இருந்த வெறுமை இன்னும் பல மடங்கு அதிகமாகி விட்டாற் போல உணர்ந்தாள்.

"என்ன மேடம்?"

"இல்ல, அதெல்லாம் வேண்டாம்."

"ஏன்...?"



"..........."

"உன்னத்தான் சஞ்சனா."

"என்ன பதில் சொல்றது?"

"உண்மைய."

"அதிகத்துக்கு ஆசைப்பட்றது என்னோட குணம் கிடையாது."

"இத அதிகம்னு ஏன் நினைக்கற? பி.ஏ.வுக்கு வெகிக்கிள் ப்ரவைட் பண்றது வழக்கமான ஒண்ணுதான்..."

"..........."

"ஏன் விஜய் யூஸ் பண்ணிட்டிருக்கறது கூட கம்பெனி வெகிக்கள் தான்."

அது சரி.

அவனைப் போன்ற நிரந்தர ஊழியனுக்குக் கொடுப்பது நியாயம்தான்.

"சரிதான் வீட்ல போய் உக்காந்து மெதுவா யோசி" என்றவன் "யாரது பஸ் ஸ்டேண்ட்ல?" என்று கேட்டான்.

ஸ்ரீஹரி கேட்க உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் அவனைப் பார்த்தாள்.

அந்த அசிங்கத்தை என்னவென்று சொல்வது என்று நினைத்தவளுக்கு மனம் மேலும் இறுகிப் போனது.

எம்.டி. தன்னைப் பார்ப்பது தெரிய "கண்ட பொறுக்கிகளப் பத்தியெல்லாம் எனக்கென்ன தெரியும்?" என்றாள்.

"சரிதான் மேடம், தெரியாமக் கேட்டுட்டேன் விட்டுடுங்க."

ஸ்ரீஹரி சூழ்நிலையை எளிதாக்க முயல அது சஞ்சனாவிற்கும் புரியவே செய்தது.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் கார் தனது வீட்டின் முன்பாக வந்து நின்றிருக்க, அதற்குப் பிறகு தான் நடப்பிற்கு வந்தாள் சஞ்சனா.

காரை நிறுத்தி விட்டு ஸ்ரீஹரி தன்னைத் திரும்பிப் பார்க்க, எப்படி தன்னுடைய வீடு இவனுக்குத் தெரியும் என்ற ஆச்சரியத்தை மனதிற்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள்.

''பரவாயில்ல டீயெல்லாம் இன்னொரு நாளைக்கு வந்து சாப்புட்டுக்கறேன் நான் இப்படியே கிளம்பறேன்'' என்ற எம்.டி.யின் வார்த்தைகளில் தன்னையறியாமலேயே சிரித்து விட்டிருந்தாள்.

''அப்ப இன்னைக்கு வந்து காபி சாப்டுட்டுப் போங்க.''

''வந்துடுவேன்...''

''அப்ப வேண்டாம்.''

எம்.டி.யின் பார்வை ரசனையுடன் தன் மேல் விழுவது தெரிய, தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள சற்று சிரமப்பட்டுத்தான் போனாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அவள் மீண்டும் முழுமையாக நடப்பிற்கு வருவதற்குள் ஸ்ரீஹரி அங்கிருந்து கிளம்பிச் சென்று வெகு நேரம் ஆகி விட்டிருந்தது.

ஆனால் அதற்குப் பிறகே அவனாக உள்ளே வரக் கேட்டும் கூடத் தான் அதைக் கண்டு கொள்ளாதது



போல நடந்து கொண்டு விட்டோமே என்று மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

இந்நேரம் தன் மேல் கோபமாக இருப்பானோ.

இனிமேல் தன்னிடம் இயல்பாகப் பேச மாட்டானோ.

எங்கே தான் அவனைப் பார்க்கப் போவதே இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டும்தான்.

அது கூட அதிக பட்சமே.

## 25

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது. அன்றிலிருந்து எம்.டி.யின் பழைய பி.ஏ. விஜய் மீண்டும் வேலைக்கு வரத் தொடங்கி விட்டிருந்தான்.

அவன் விடுமுறையில் சென்றிருந்த நாட்களில் நடந்தவற்றைப் பற்றிக் கேட்பதிலேயே முதல் நாள் கழிந்திருக்க, இரண்டாம் நாளிலிருந்து பழையபடி தானே அனைத்து வேலைகளையும் செய்யத் தொடங்கி விட்டிருந்தான்.

ஏற்கனவே விஜய் வந்ததும் கிளம்பிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த சஞ்சனாவிற்கு, இப்பொழுது தான் அங்கு மிகவும் அதிகப்படி என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதிலும் வேலைக்கு வந்த அன்று தற்காலிகமாகத் தான் உன்னை வேலைக்கு எடுக்கிறேன் என்று எம்.டி.

சொன்னதே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டிருந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்க தான் வேலையிலிருந்து நின்று கொள்வதைப் பற்றி அன்றே எம்.டி.யிடம் பேசி விட வேண்டுமென்று அன்று மதியத்திலிருந்து பலமுறை முயன்று விட்டிருந்தாள்.

முயற்சி தான் செய்ய முடிந்ததே தவிர, அதற்கான வாய்ப்பு மாலை வேலை முடிந்து கிளம்பும் வரை கூடக் கிடைக்கவே இல்லை.

வேலை முடிந்து கிளம்பப் போனவள் எம்.டி.யின் பார்வையில் நின்றாள்.

அவன் ஏதோ கேட்க வருவதைப் போலிருக்க, எதுவும் பேசாமல் பார்த்தாள்.

''அப்படி எங்கிட்ட என்ன கேக்க முயற்சி பண்ணிட்டிருக்க?''

அப்பாடா இப்பொழுதேனும் பேச வாய்ப்புக் கிடைத்ததே என்று வாயைத் திறக்கப் போனவள், விஜய் உள்ளே வர மீண்டும் பேசாமல் நின்று விட்டிருந்தாள்.

''வா விஜய்.''

எம்.டி. அவனைப் பார்க்க, ''ஸார் எனக்குத் திங்கட்கிழமை காலைல ஒரு அரை நாள் மட்டும் லீவ் வேணும்...'' என்றான்.

''அதுக்கு ஏன் இவ்வளவு தயங்கற, மதியம் வந்துடுவ தான?''

''ஸ்யூர் ஸார்...''

''ஆமம்பா, இப்பதான் பழையபடி எல்லாம் ஒழுங்காப் போக ஆரம்பிச்சிருக்கு. திங்கட்கிழமை மதியம் வந்துடு.''



எம்.டி.யின் அந்த வார்த்தைகளில் தொடர்ந்து அங்கு நிற்கக்கூட முடியாமல் தவித்துப் போனாள் சஞ்சனா.

ஆனாலும் அப்போதைக்கு அவள் எதையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

சரியாக அதே நேரம் எம்.டி.யின் மொபைல் ஒலிக்க மீண்டுமொரு முறையும் சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பியே விட்டிருந்தாள்.

அன்று ஞாயிறு, விடுமுறை நாள்.

காலையில் படுக்கையை விட்டு எழவே தோன்றவில்லை.

மனம் ஏனோ மிகவும் வெறுமையாக இருக்க, அந்த அளவிற்கு அதற்கு முன் எப்பொழுதும் அவள் உணர்ந்ததில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

மெதுவாக எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தவளால் யாராவது சூடாகக் காபியைக் கலக்கிக் கொண்டு வந்து கையில் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தாயின் மறைவு பயங்கரமாக வாட்ட அந்த வேதனை இருக்கின்ற வெறுமையை மேலும் அதிகப்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் செய்து கொண்டிருக்கும் வேலையையும் விட நேர்ந்தால்,

மற்றவை இருக்கட்டும், முதலில் செலவு செய்ய பணத்திற்கு எங்கே செல்வது.

பிறகு அகிலா சொல்வதைப் போல அவள் விருப்பப்படி ஆட வேண்டியது தான்,

ம்கூம்.

உயிரே போனாலும் அது மட்டும் நடக்காது.

அப்படியொரு நிலைக்குப் பதிலாக உயிரை விட்டாலும் விடலாமே தவிர அதற்குத் தான் சம்மதித்து விடக் கூடாது.

''எவ்வளவு நேரமாக் கூப்புட்றது அப்படியென்ன கனவுல மெய் மறந்து போயிருக்க.''

அக்கா அகிலாவின் குரலில் அவளைத் திரும்பிப் பார்த்தாள் சஞ்சனா.

''உன்னோட ரூம்ல ரொம்ப நேரமா மொபைல் அடிக்குது...''

அவள் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை, ஓடிச் சென்று மொபைலை எடுத்துப் பார்த்தாள்.

சில நிமிட வித்யாசத்தில் எம்.டி. ஸ்ரீஹரி இருமுறை அழைத்திருந்தது தெரிய, திரும்ப தான் அவனுக்கு அழைத்தாள்.

சில வினாடிகள் பேசியவள், ''சரி ஸார் ரெடியா இருக்கேன்'' என்று மொபைலை வைத்திருந்தாள்.

உன்னிடம் பேச வேண்டுமென்றால்...

அப்படி என்ன பேசுவதற்காக அழைக்கிறான்.

ஒருவேளை உனக்கு இனி வேலையில்லை. வேறு வேலை தேடிக் கொள்ளென்று சொல்வதற்காகத் தான் அழைக்கிறானா.

கம்பெனியில் வைத்துச் சொன்னால் எங்கே அழுதி ஆர்ப்பாட்டம் செய்து விடுவாளோ என்று வெளியே



வைத்துச் சொல்ல அழைக்கிறானோ என்னவோ. இருந்திருந்து தன்னை பற்றி ஒருவர் அப்படி எண்ணுவதா,

ம்கூம்...

ஒருவேளை அவன் பேச வேண்டிய விஷயமே வேறாக இருந்தால்,

ஏதேதோ எண்ணங்கள் மனதிற்குள் முட்டி மோத, முதலில் சென்று குளித்துக் கிளம்பி வெளியே வந்தாள்.

ஹாலிலிருக்கும் ஆளுயரக் கண்ணாடியில் தனது தோற்றத்தை நன்றாகப் பார்த்தவளுக்கு உடலின் மெலிவு மனதில் உறைத்தது.

இப்படியே போனால் நாளடைவில் நோயாளியாகி விடுவோமோ.

''எங்க கிளம்பிட்ட?''

தமக்கை வர, எதுவும் பேசாமல் பார்த்தாள் சஞ்சனா.

''என்னடி உன்னத்தான் பேசு.''

''அது உனக்கு அனாவசியம்.''

''ஓ, என்ன நீ...''

''போதும் அகிலா, ஏற்கனவே நான் சில விஷயங்கள்ல கோபமா இருக்கேன்...''

''அடடா நல்லவேள மேடம் சொன்னீங்க இல்லன்னா நான் பாட்டுக்கு உங்க மனநிலை தெரியாம பேசிட்டே போயிருப்பேன்'' என்று ஏளனமாகச் சிரித்தவள் ''எங்க போறேன்னு சொல்றதுக்கென்ன?'' என்று கேட்டாள்.

''அது முடியாது.''

''ஏன்?''

"அப்புறம் அந்தப் பொறுக்கியப் பின்னால அனுப்புவ..."

"கொஞ்சம் மரியாதையாப் பேசு சஞ்சனா."

"அப்ப மரியாதையா நடந்துக்கணும்."

"சரிதான்" என்று சிரித்த தமக்கையைப் பார்த்தாள்.

"வரவர உன் போக்கே வித்யாசமா இருக்கு எனக்கு ஒண்ணும் புரிபடல."

என்ன சொல்கிறாள் இவள்.

தான் அப்படி என்ன செய்தோம்...

"ஆமா உன்ன ஒரு நாள் வீட்ல கொண்டு வந்து ட்ராப் பண்ணிட்டுப் போனாரே யாரது உன் பாய் ஃப்ரண்..."

"நாக்க அடக்கிப் பேசு..."

"ஏய் கூல், இப்ப எதுக்கு இவ்வளவு டென்ஷனாகறே? இல்லன்னா இல்லன்னு சொல்லு."

கோபத்தில் கண்கள் சிவந்து விட்டிருக்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கத் தன்னைப் பார்த்தத் தங்கையின் தோற்றத்தில் நன்றாகவே சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் அகிலா.

"அட விட்டா அடிச்சுடுவ போலிருக்கு?"

"நீயெல்லாம்..."

கோபத்துடன் தொடங்கி விட்டிருந்த சஞ்சனாவால் ஏனோ தொடர்ந்து பேச முடிந்திருக்கவில்லை.

சை என்று மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தது.

என்ன பெண்ணிவள்.



எவ்வளவு சாதாரணமாக எத்தனை பெரிய கேள்வியைக் கேட்டு விட்டாள்.

இவளைப் போலத் தனக்கும் ஒழுக்கம் கடைச் சரக்கென்று நினைத்து விட்டாளோ.

"என்ன பேசு."

"தயவு செஞ்சு போயிடு."

"ஏனோ?"

"உங்கூடப் பேசற அளவுக்கு எனக்குத் திறமையோ, பொறுமையோ இல்ல."

"ஓ, இப்படி சொல்லித் தப்பிச்சுக்கலாம்னு பாக்கறியா?"

"ஏன் இப்பக்கூட உன் எம்.டி.க்காகத்தான வெயிட் பண்ணிட்டிருக்க...? சரி சரி அதெல்லாம் உன் சொந்த விஷயம் அதப்பத்தி எனக்கெதுக்கு? ஏதோ கேக்கணும்னு மனசுக்குத் தோணுச்சு. அதான் கேட்டேன்..." என்று விட்டுத் தமக்கை செல்ல ஏற்கனவே இருந்த மனநிலையில் மனம் மேலும் வெறுத்துப் போய் விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

கையிலிருக்கும் மொபைல் ஒலிக்க வேகமாக வெளியே வந்தாள்.

வாசலில் எம்.டி.யின் கார் வந்து நின்றிருப்பது தெரிந்தது.

உள்ளே அழைக்க வேண்டுமே என்ற எண்ணம் ஓடியவளுக்கு, தமக்கைப் பேசியதுதான் நினைவிற்கு வந்தது.

உடனே வேண்டாமென்ற முடிவுக்கு வந்திருந்தவள், தான் வெளியே வந்திருந்தாள்.

தன்னைக் கண்டதும் எம்.டி. முன் பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டிருக்க, காருக்குள் ஏறாமல் வழக்கம் போல காலை வணக்கம் சொல்லி விட்டு என்னவென்று விசாரித்தாள்.

அதற்கு அவனும் சற்று முன் சொன்னதையே சொல்ல சில வினாடிகள் யோசித்தவள் பிறகு ஏறி அமர்ந்து விட்டிருந்தாள்.

சஞ்சனா ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய்து விட்டிருந்தான் ஸ்ரீஹரி.

சஞ்சனா தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவன், ''என்ன மேடம் சொல்லுங்க?'' என்றான்.

அத நான் கேக்கணும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவளால் ஏனோ அதை அப்படியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில நிமிடங்கள் காருக்குள் அமைதி நிலவியது.

திடீரென்று திரும்பி எம்.டி. ஸ்ரீஹரியைப் பார்த்த சஞ்சனா ''நாம இப்ப எங்க போறோம்னு முதல்ல சொல்லுங்க'' என்று கேட்டாள்.

''பரவாயில்லயே ரொம்ப சீக்கிரமாக் கேட்டுட்ட.''

''...........''

''ம், பேச மாட்டியா?''

''பேச்ச மாத்தாதீங்க.''



''நானெதுக்கு, அதுவும் ஏன் மாத்தப் போறேன், என்னமா எதுவானாலும் கேளு எதுக்குத் தயங்கற?''

இதென்ன இப்படிக் கேட்கிறான், ஏதோ பேச வேண்டுமென்று அழைத்து வந்து விட்டு இப்படிக் கேட்கிறான்.

''என்ன பேசு?''

''சரிதான், அதுக்கு எனக்கு உரிமையில்லேன்னு நினைக்கற அப்படித்தான?''

..............

''எது எப்படியோ நான் உங்கிட்டக் கொஞ்சம் பேசணும் சஞ்சனா.''

அப்படி என்ன பேசப் போகிறான்.

''சாப்டாச்சா?''

''இன்னும் இல்ல.''

''அப்பாடா உண்மைய ஒத்துக்கிட்ட'' என்றவன், ''ஒரு வேள...'' என்று புன்னகையுடன் எதையோ சொல்ல வந்தான்.

ஆனால் அதை எதையும் உணர்ந்து கொள்ளும் மன நிலையில் சஞ்சனா இருக்கவில்லை.

சில வினாடிகளில் அதை ஸ்ரீஹரியும் புரிந்து கொண்டான்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் ஒரு பெரிய ஹோட்டலின் முன்பாகக் காரை நிறுத்தியிருந்தவன், ''வா'' என்று காரை விட்டு இறங்கினான்.

பார்ப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் மேலோங்க தானும் இறங்கி அவனைப் பின் தொடர்ந்தாள்.

உள்ளே வந்து அமர்ந்ததும், டிபனை ஆர்டர் கொடுத்து விட்டு தனக்கு எதிரே அமர்ந்திருந்த சஞ்சனாவைப் பார்த்தான்.

''கொஞ்சம் ப்ரீயா இரு எப்பவும் இறுக்கத்தோடயே இருந்தா எப்படி...''

''உங்க அறிவுரைக்கு நன்றி'' என்றவளைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

''நீங்க போன்ல கூப்புட்டப்பவே வர முடியாதுன்னு சொல்ல நினைச்சேன், ஆனா கம்பெனி விஷயமா ஏதாவது இருக்குமோன்னு தான் வந்தேன்...''

''ஆனா இப்ப அப்படி எதுவும் இல்லேன்னு தெரிஞ்சு போயிடுச்சு இல்ல?''

ஸ்ரீஹரியின் அர்த்த புஷ்டியான புன்னகையில் எதுவும் பேசாமல் அவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன அப்படித்தான?'' மீண்டும் கேட்டான்.

''அப்ப உருப்படியான விஷயம் ஒண்ணுமில்ல...'' என்று எழப் போனவளை,

''அட என்ன இது உக்காரு'' என்று அமரச் சொன்னான்.

ஆனால் அப்பொழுதும் அமராமல் புறப்படத் தயாரானவளிடம், ''என் வார்த்தைகளுக்கு மதிப்பு அவ்வளவுதான் இல்லையா?'' என்று கேட்டான்.

அந்த வார்த்தைகள் தன்னை என்னவோ செய்திருக்க, அதற்குக் கட்டுண்டவளாய் உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

சில நிமிடங்களில் உணவு வர ''சாப்புடு'' என்று ஒரு ப்ளேட்டை சஞ்சனாவின் பக்கமாக நகர்த்திக் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.



# 26

தொடர்ந்து வந்த பதினைந்து நிமிடங்களில் இருவரும் உணவை முடித்துக் கொண்டு வெளியே வந்திருந்தனர்.

அதற்கு அடுத்ததாக அவர்கள் சென்ற இடம் அலுவலகம்,

கேட்டில் நின்றிருந்த செக்யூரிட்டி எம்.டி.க்கு மரியாதையுடன் சல்யூட் ஒன்றை வைத்துவிட்டு அலுவலகத்தைத் திறந்து விடுகிறேனென்று வர, தானே திறந்து கொள்வதாகச் சொல்லி மறுத்து விட்டிருந்தான் ஸ்ரீஹரி.

உண்மையிலேயே அலுவலக வேலைக்காகத்தான் தன்னை அழைத்திருக்கிறானோ என்ற எண்ணத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள் சஞ்சனா.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் இருவரும் அலுவலகத்திற்குள் வந்திருக்க, தன்னுடைய இடத்தில் சென்று அமர்ந்திருந்தான் ஸ்ரீஹரி.

''சஞ்சனா.''

எம்.டி.யின் அழைப்பில் அருகில், அதாவது அவனுடைய டேபிளுக்கு முன்பாக வந்து நின்றாள் சஞ்சனா.

''உக்காரு.''

''பரவாயில்ல ஸார்.''

''அதான நான் சொல்லி கேட்...''

எம்.டி. சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை, உடனே அமர்ந்திருந்தாள்.

அமர்ந்தவள் தன்னைப் பார்க்க, "சொல்லு என்ன பிரச்னை உனக்கு?" என்று கேட்டான்.

............

"சஞ்சனா உன்னத்தான்."

"இல்ல சார்... அந்த மாதிரியெல்லாம் ஒண்ணுமில்..."

"சரி விடு."

பட்டும் படாமல் ஸ்ரீஹரியிடமிருந்து வந்த அந்த அழுத்தமான வார்த்தைகள் தான் சொல்வதை அவன் நம்பவில்லையென்பதை சொல்லாமல் சொன்னது.

அதைத் தொடர்ந்து சில வினாடிகள் அமைதியாகக் கழிய, மீண்டும் தானே பேச்சைத் தொடங்கினான் ஸ்ரீஹரி.

"உங்கிட்ட நான் சில விஷயங்களைச் சொல்லணும், எல்லாத்துக்கும் முதல்ல நீ ஒண்ணும் வேலைய விட வேண்டிய அவசியமில்ல."

............

"என்ன பாக்கற? உன்ன வேலைய விட்டு அனுப்பற எண்ணம் எனக்குத் துளி கூட இல்ல. ம் என்ன சொல்லு?"

"அதெப்பிடி, சும்மா பேருக்கு என்ன உக்கார வெச்சுக்கிட்டு சம்பளம் குடுக்கறதுனால உங்களுக்கு என்ன லாபம்?"



"நியாயமாப் பேசு இடியலா உக்காந்துட்டு தான் அப்ப நீ சம்பளம் வாங்கிட்டிருக்கியா?"

"இத்தனை நாளும் அப்படி இல்ல தான், ஆனா இனிமேல்.... விஜயும் வந்...."

"அதான் சொல்றேனே, ரொம்ப யோசிக்காதேன்னு..."

"ஸாரி ஸார் என்னால யாரும் சிரமப்பட்றதுல எனக்கு விருப்பமில்ல அவசியத்துக்கு வேல போட்டுக் குடுத்தீங்க நன்றி..."

"ஓ, நீ சொல்றதப் பாத்தா இப்ப உனக்கிந்த வேலை அவசியமில்ல அப்படித்தான?"

ஸ்ரீஹரியின் அந்தக் கேள்வி நெஞ்சைத் துளைப்பதாய் இருக்க, 'ஐயோ இல்லையே' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஏன் அன்றை விடக்கூட இப்போதைய தன் நிலை தானே மிகவும் பரிதாபத்திற்கு உரியதாய் இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக படிப்பைக் கூட முடிக்காமல் இப்போது தான் இருக்கும் நிலைக்கு யார் வேலை தருவார்கள்.

"என்ன?"

ஸ்ரீஹரியின் கேள்வியில் நடப்பிற்கு வந்தவள், அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"ம், பேசு."

ஏனோ அந்த வினாடியில் தன் நிலை படு மோசமாகத் தெரிய, அவளையறியாமலேயே அவளுடைய உடல் ஒரு வினாடி நடுங்கி விட்டிருந்தது.

சஞ்சனாவின் அந்த நிலை ஸ்ரீஹரிக்கும் புரியவே செய்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான் மீண்டும் பழைய நிலைக்கு வந்திருந்தாள் சஞ்சனா.

''ஊர் உலகத்துல ஆயிரம் பேருக்கு லட்சம் பிரச்சனைகள் இருக்கும், அதப் பத்தியெல்லாம் உங்களுக்கென்ன ஸார்...''

''இருக்கலாம், ஆனா நீ எனக்கு அந்த ஆயிரத்தில ஒருத்தி கிடையாது.''

வினாடி கூட யோசிக்காமல் பட்டென்று ஸ்ரீஹரியிடமிருந்து வந்த அந்த வார்த்தைகள் சஞ்சனாவை சில வினாடிகள் நிலை குலையச் செய்து விட்டிருந்தன என்றால் அது சற்றும் மிகையல்ல.

கூடவே அவளுடைய கண்களும் லேசாகக் கலங்கி விட்டிருக்க, அந்த வேளையில் தான் ஒரு பெரிய தவறைச் செய்திருந்தான் ஸ்ரீஹரி.

அவனும் ஒன்றும் எந்தவொரு தவறான நோக்கத்துடனும் அப்படிச் செய்திருக்கவில்லை.

அவன் செய்தது இதைத்தான்.

டேபிளின் மேலிருந்த சஞ்சனாவின் கைகளைத் தனது கைகளுக்குள் எடுத்துக் கொண்டிருந்தவன், வேண்டாம் கவலைப்படாதே என்பதைப் போல மென்மையாக வருடிக் கொடுத்தான்.

அதுவரை எப்படியோ ஸ்ரீஹரியின் ஸ்பரிசத்தில் உடனே நடப்பிற்கு வந்திருந்த சஞ்சனா, பட்டென்று கையை இழுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.



சிறு குழந்தையைப் போல அவள் நடந்து கொண்ட விதம் ஸ்ரீஹரிக்குப் புன்னகையை வரவழைத்திருந்தது.

ஆனாலும் அவன் அதைத் துளியும் அப்போதைக்கு வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அதே சமயம் சஞ்சனாவின் கோபப் பார்வையை எதிர்கொண்டவன், என்னவென்று விசாரித்தான்.

''இருந்தாலும் நீங்க இந்த மாதிரி இருப்பீங்கன்னு நான் கொஞ்சங்கூட எதிர்பாக்கல.''

''எப்படி?''

..........

''என்ன சொல்லு சஞ்...''

''எனக்கு இதெல்லாம் புடிக்காது.''

''எது?''

என்ன இவன் வேண்டுமென்றே புரியாதது போல நடிக்கிறானா.

''ம்....''

ஸ்ரீஹரியின் பார்வை சஞ்சனாவின் ரோஷத்தை மேலும் அதிகப்படுத்தி விட்டிருந்தது.

''நான் கிளம்பறேன்'' என்று சொன்னதோடு, மட்டுமல்லாமல் உடனே எழுந்து விட்டிருந்தவளை இப்பொழுது புன்னகையை மறைக்கக் கூட முயலாமல் பார்த்தான் ஸ்ரீஹரி.

''ஏன் சின்னக் குழந்தை மாதிரி நடந்துக்கற?''

''ஓ அப்ப எப்படி நடந்துக்கணும்னு சொல்றீங்க?''

''என்ன சொன்னாலும் செய்வியா?''

ஆச்சரியத்துடன் கேட்டவனை ''வேண்டாம்...'' என்று முறைத்தாள் சஞ்சனா.

''என்ன வேண்டாம்?''

............

''நான் ஒண்ணு சொல்லலலாமா?''

அப்படிக் கேட்டவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் சஞ்சனா.

''நீ ரொம்ப அழகா இருக்க, அதுலயும் கோபமா இருக்கும்போது சொல்லவே வேண்டாம்.''

..........

''என்ன நான் சொல்றது சரிதான?''

அப்படிக் கேட்ட ஸ்ரீஹரியைப் பார்த்தாள் சஞ்சனா உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் தான்.

திசை மாறிப் போய்க் கொண்டிருந்த ஸ்ரீஹரியின் பேச்சு அவளுடைய மனதிற்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருந்தது, கூடவே பயத்தையும்,

ஏதோ பேச வேண்டுமென்று சற்று முன்னர் கூடச் சொன்னானே,

அது, இதுதானா.

பேச்சு போகும் திசை ஒன்றும் மனதிற்கு சரியாகப் படவில்லையே.

ஒருவேளை...

ம்கூம் இருக்காது.



இருக்கவே இருக்காது.

பிறகு ஏன் இப்படியெல்லாம் பேசுகிறான்.

இந்த மாதிரியெல்லாம் பேசுவது இவனுடைய இயல்பல்லவே,

இன்று என்னவாயிற்று இவனுக்கு.

''முதல்ல உக்காரு சஞ்சனா, இப்படி திடீர் திடீர்னு கோபப்பட்டு நீயும் டென்ஷனாகி என்னயும் பேச நினைக்கற விஷயத்தையே மறக்கடிச்சு ஏதேதோ பேச வெச்சுட்டிருக்கறையே இது நியாயமா?''

தான் நினைத்தது சரியே என்பதைப் போல அப்படிக் கேட்ட ஸ்ரீஹரியை எதுவும் பேசாமல் சாதாரணம் போலப் பார்த்தாள்.

அவன் கேட்பதில் இருக்கும் நியாயம் புரிந்தது.

ஆனாலும் அதை அவனிடம் ஒப்புக் கொள்ள மனம் மறுத்தது.

''முதல்ல உக்காரு.''

மற்றது எப்படியோ எம்.டி. ஸ்ரீஹரியின் குரலுக்குத் தன்னையறியாமலேயே பணிந்து விட்டிருந்தாள் சஞ்சனா.

அதற்குப் பிறகு ஸ்ரீஹரியும் அவசியமற்ற எதையும் பேசவில்லை.

எம்.டி. ஸ்ரீஹரி பாட்டுக்கு நடந்து விட்டதனைத்தையும் சொல்லிக் கொண்டே போக, அது சஞ்சனாவை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதை ஸ்ரீஹரியாலும் புரிந்து கொள்ள முடிந்தது. சஞ்சனா அறியாமல் அவளுடைய முக பாவனையை உற்று நோக்கினான்.

எது எப்படியே தொடக்கத்திலிருந்தே எம்.டி. ஸ்ரீஹரி தன்னைப் பார்த்த கோணம் வேறாக இருந்தது தெரிய வந்ததில் செய்வதறியாது திகைத்து நின்றாள் சஞ்சனா.

ஏதேதோ எண்ண ஓட்டங்கள் வந்து அவளுடைய மனதை அலைக்கழிக்கச் செய்தன.

என்ன முயன்றும் பாவம் போனால் போகிறதென்று பரிதாபப்பட்டு ஒருவர் தனக்கு உதவி செய்வதா என்ற எண்ணம் மட்டும் அவளைத் துளியும் நிம்மதியின்றித் தவிக்கச் செய்தது.

''நீ நினைக்கற மாதிரி உம்மேல பரிதாபப்பட்டோ, உனக்கு வேற வேல கிடைக்காதுன்னோ உன்ன நான் வேலைக்கு எடுக்கல. அந்த நேரத்துல உனக்கொரு வேலை அவசியம்னு தெரிஞ்சது அவ்வளவுதான்.''

வழக்கத்திற்கு மாறாக எம்.டி.யிடமிருந்து வந்த விளக்கம் சஞ்சனாவின் காதுகளுக்குள் கூடச் சென்றிருக்க வில்லை.

இந்த அளவிற்கா நாம் எதையுமே அறியாதவளாக இருந்திருக்கிறோமென்பதை நினைத்துப் பார்த்தவளுக்கு மனம் மேலும் பாரமாகி விட்டிருந்தது.

சஞ்சனாவின் நிலை புரிய, சிலவற்றைச் சொல்லா மலும் விட்டிருந்தான்.

சந்தித்த முதல் வினாடியிலேயே மனதிற்குள் வந்து விட்டவள், வெகுளியான சிறு குழந்தைத்தனத்தாலும், இனிய பழக்க வழக்கங்களினாலும் அதற்குப் பிறகு வந்த



நாட்களில் மேலும் மேலும் நெருங்கி இப்பொழுது என் மனதுடன் இரண்டறக் கலந்து விட்டாய் பெண்ணே என்று நெகிழ்ச்சியுடன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

ஆனால் சஞ்சனாவோ தன்னைச் சுற்றி நடக்கும் எதையுமே உணர்ந்து கொள்ளும் மன நிலையில் இருக்க வில்லை.

''என்னமா?''

.........

''சஞ்சனா என்னாச்சு உன்னத்தான்...''

''ஸாரி ஸார்...''

''எதுக்கு?''

''என்னால... என்னால எல்லாருக்கும் முக்கியமா உங்களுக்கு ரொம்பவும் சிரமம் இல்லையா...''

''எனக்கென்ன சிரமம் ஜஸ்ட் வேல போட்டுக் குடுத்தேன் அவ்வளவுதான். சரிதான் அதையெல்லாம் விடு இனிமேல் நடக்க வேண்டியதப் பாக்கலாம்.''

அப்படிச் சொன்னவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன பாக்கற? இன்னைலிருந்து நாம ரெண்டு பேரும் ப்ரண்ட்ஸ் ஓகே.''

அப்படிச் சொல்லிக் கொண்டே ஸ்ரீஹரி தன்னுடைய வலது கையை சஞ்சனவிற்கு முன்பாக நீட்டியிருக்க, மிகுந்த யோசனைக்குப் பிறகு அதுவும் மனமே இல்லா மல் தன்னுடைய உள்ளங்கையை அவனுடைய கையில் வைத்திருந்தாள் சஞ்சனா.

சஞ்சனாவின் நிலை எப்படியோ, ஆனால் சில்லிட்டுப் போயிருந்த அவளுடைய மென்மையான கையை விடுவிக்க மனமில்லாமல் இறுகப் பற்றிக் கொள்ளத் தோன்றிய எண்ணத்தை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான் ஸ்ரீஹரி.

கூடவே அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போலப் பரபரத்த மனதையும்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

சஞ்சனா தனது கையை விடுவித்துக் கொள்ள முயல, அவனும் விட்டிருந்தான்.

''என்ன மேடம் டீல்க்கு ஓ.கே.வா?''

குறுகுறுத்த உள்ளங்கையைத் தனது இடது கையால் தேய்த்து விட்டுக் கொண்டே முயன்று ஆமாம் என்பதைப் போல மெதுவாகத் தலையை ஆட்டினாள்.

## 27

''அண்ணா.''

தங்கை ரேவதி அழைக்க ''என்னமா?'' என்றான் ஸ்ரீஹரி.

''நான் சொன்னது என்னாச்சு? அதப்பத்தி யோசிச்சீங்களா?''

''என்ன சொன்ன? எதப் பத்தி?''

''எதயா? போங்கண்ணா நீங்க.''



''அதான் கிளம்பிட்டே இருக்கேன் ஆபீஸ்க்கு.''

''அம்மா.''

''என்ன ரேவதி.''

''நானும் கிளம்பறேன்...''

''கிளம்பறியா? எங்க...''

''ம், எங்க வீட்டுக்கு தான்.''

''மாப்ள வருவார்னு சொன்னியேம்மா.'' என்று மகளைப் பார்த்த கல்யாணிக்கு அதற்குப் பிறகே விஷயம் புரிந்தது.

''சில விஷயங்கள்ல மூக்க நுழைக்காம இருக்கற வரைக்கும் நல்லது...''

''என்ன பண்றது அது சிலருக்கு லேட்டா தான புரியுது.''

அண்ணனின் அந்த வார்த்தைகள் ரேவதிக்கு உண்மையிலேயே ரோஷத்தைக் கிளப்பி விட்டிருந்தன.

அது தாய், மகன் இருவருக்கும் ஒருசேர புன்னகையை வரவழைத்திருந்தன.

மகனை முந்திக்காண்டு ''சரி சரி சாப்பிடலாம் வா ரேவதி'' என்று மகளைப் பசியாற அழைத்தார் கல்யாணி.

''வேண்டாம்.''

''என்னடி வேண்டாம்.''

''ம், நானென்ன சாப்பாட்டுக்கு வழியில்லாமலா இங்க வந்தேன்...''

''அதான என்னமா நீங்க?'' என்று இடையில் வந்த ஸ்ரீஹரி ''ரேவதிக்குக் கோபமே எம்மேல தான் சாப்பாடு

மேல கிடையாது. என்னமா அப்படிதான?'' என்று தங்கையைப் பார்த்தான்.

அப்படிக் கேட்ட அண்ணனை எதுவும் பேசாமல் பார்த்தாள் ரேவதி.

''என்ன ரேவதி.''

''அந்த அளவுக்கு எனக்கு உரிமை இருந்தாப் பரவாயில்லையேண்ணா...''

''அட, என்ன நீ உருக்கமாப் பேசற.''

''பின்ன, இருக்கறதச் சொல்றேன்.''

''ம்கூம், என் தங்கையோட அழகான முகத்துக்கு இந்த சோகம் துளியும் பொருந்தவே இல்லையே'' என்று தங்கையின் அருகில் அமர்ந்த ஸ்ரீஹரி, ''என்ன விஷயம் ரேவதி நீயும் கொஞ்சம் சுத்தி வளைக்காம நேரடியா விஷயத்துக்கு வரலாமே'' என்றான்.

''அது ஒண்ணுமில்லன்னா.''

''ம்கூம் இப்படிச் சொன்னா நான் ஒத்துக்க மாட்டேன்...''

''வேண்டாம்னா விடுங்க.''

''ம்கூம் முடியாது, நீ சொல்லத்தான் வேணும்.''

''என்னமா?''

''ஊர்ல அவருக்கு...''

''ம்.''

''இல்ல ஊர்ல... அவருக்குப் பெரியம்மா பொண்ணு ஆகுது. பேர் சுமிதான்னு... அவங்கள உங்களுக்குப் பாக்கலாம்னு ஒரு சின்ன ஆச...''



''அப்படின்னு மாப்ள சொன்னாராம்மா?''

தாய் கேட்க, ''இல்லில்லமா சும்மா பேச்சு வாக்குல நாங்க பேசிட்டிருந்தபோது இப்படியொரு ஐடியா வந்தது. அதான்...''

அப்படிச் சொல்லிக் கொண்டே தயக்கத்துடன் ரேவதி தனது அண்ணனைப் பார்க்க, ''ரொம்ப சந்தோஷம்'' என்றான் ஸ்ரீஹரி.

புன்னகையுடன் தான்.

அண்ணனின் அந்த வார்த்தைகள் அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்க, ''அவர் அப்பவே சொன்னார்ணா'' என்றாள்.

''யாரு மாப்ளையா?''

''ம்.''

''என்ன சொன்னார்?''

''என் தங்கைய எல்லாருக்குமே பார்த்ததும் புடிச்சுப் போகும்னு சொல்லுவார், ஆனா அதுக்கும் ஒரு படி மேல போய் நீங்க பாக்காமல் இப்படி சொல்லிட்டிங்களேண்ணா...''

தங்கையின் சந்தோஷம் மனதை உறுத்த, அவள் தவறாகப் புரிந்து கொண்டதை எப்படி எடுத்துச் சொல்வதென்று தெரியாமல் திகைத்தான்.

அது கல்யாணிக்கும் புரியவே செய்தது.

மகனறியாமல் அவனுடைய முக பாவனையை உற்று நோக்கினார்.

''மாப்ளயே ஒண்ணு சொல்றார்னா சரியா தான் இருக்கும்'' என்ற கல்யாணி ''ஆனா அதுக்கு மேலயும் எவ்வளவோ இருக்கு தானம்மழ'' என்றார்.

''என்னமா நீங்க? அண்ணனே ஒண்ணும் சொல்லல...''

''சரிதான் ரேவதி, மாப்பிள்ளையே சொன்னாரேன்னு தான் நானும் பாக்கறேன். இல்லன்னா வேண்டாம்னு சொல்ல எனக்கும் தான் எவ்வளவு நேரமாயிருக்கும்'' என்று ஸ்ரீஹரி சொல்ல,

''என்னண்ணா இப்படிச் சொல்றீங்க?'' என்றாள் சஞ்சனா.

''இல்லடாம்மா, எனக்குன்னு வரப் போறவ இப்படி, இந்த மாதிரியிருந்தாப் பரவாயில்லைன்னு எனக்கும் சில ஆசைகள் இருக்குமில்லையா?''

''சரிதாண்ணா, நான் அப்படி யோசிக்காம விட்டுட்டேன் ஸாரி...''

தங்கை முகம் வாடியது பிடிக்காமல், ''நோ நோ நோ நான் என் மனச சொன்னேன். அவ்வளவுதான், ஒருவேள மாப்ள சொன்ன பொண்ணே நான் எதிர்பாக்கற மாதிரி இருந்தா. அம்மா சொன்ன மாதிரி அதெல்லாம் நம்ம கைல இல்லம்மா, அதனால இப்பத்துக்கு இந்தப் பேச்சு வேண்டாமே. எல்லாத்துக்கும் மேல இப்ப மேரேஜ் பண்ணிக்கற ஐடியா எனக்கும் இல்ல ரேவதி'' என்றான்.

பாவம் அண்ணன், தனது திருமணத்திற்கே எவ்வளவு செலவாயிற்று. அதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் நாம் பாட்டுக்கு சிறு பிள்ளைத்தனமாக ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோமே என்றிருந்தது.

''என்ன ரேவதி?''

''சரிதாண்ணா, நம்ம வீட்ல இன்னொரு விசேஷம் வந்தா நல்லா இருக்குமேன்னு பாத்தேன். அதுலயும்



உங்களுக்குக் கல்யாணம்னதும் ரொம்ப சந்தோஷமா யிடுச்சு வேறொன்னுமில்ல'' என்ற தங்கையைப் புன்னகையுடன் பார்த்த ஸ்ரீஹரி ''சரிதான் உன் வாய் முகூர்த்தம் கூடிய சீக்கிரம் பலிக்கட்டும்'' என்றான்.

# 28

''அம்மா.''

சிறிய மகன் கமலேஷ் வர, அவனைப் பார்த்தார் கல்யாணி.

''என்னமா டிபன் எடுத்து வைங்க.''

.........

''அம்மா உங்களத்தான்.''

..........

''அட என்னமா நீங்க, என் அவசரம் புரியாம நீங்க பாட்டுக்கு இப்படி உக்காந்துட்டிருக்கீங்க?''

''இப்ப என்னடா செய்யணுங்கற?''

''சீக்கிரம் டிபன் எடுத்து வைங்க, சாப்டுட்டுக் கிளம்பணும்.''

''அதத் தான் கேக்கறேன், அப்படி எத சாதிக்கப் போறேங்கற.''

''அம்மா...''

''உனக்கெல்லாம் எப்படிடா சாப்பாடு இறங்குது, கொஞ்சங்கூட மனசுல உறைக்காதா?''

“இப்ப என்னதான் சொல்றீங்க?”

“உனக்கு சாப்பாடு வேணும்னா நீயே போட்டுச் சாப்புடு, இனி என் கையால உனக்குப் பரிமாற மாட்டேன்.”

“சரிதான், அப்ப நான் கிளம்பறேன்.”

“ரொம்ப சந்தோஷம் கிளம்பு.”

மகனுக்குப் பரிமாறவில்லையே, சாப்பிடாமல் சென்று விடுவானோ என்றெல்லாம் மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும் முயன்று மனதைக் கல்லாக்கிக் கொண்டார் கல்யாணி.

ஏற்கனவே சிறிய மகனின் மேல் மிகுந்த ஆதங்கத்துடன்தான் இருந்தார் என்பதால் அதற்கு அவரொன்றும் அதிக சிரமப்பட வேண்டியும் இருக்கவில்லை.

“இன்னைக்கு என்னமா ஆச்சு உங்களுக்கு?”

“நிஜமாவே தெரியாமத்தான் கேக்கறியா?”

“தெரிஞ்சுட்டே நான் ஏன் கேக்கப் போறேன்?”

“உங்கண்ணன் எவ்வளவு சிரமப்பட்டுட்டிருக்கான். நீ போய் அவனுக்கு உதவி செய்யலேன்னாலும் பரவாயில்ல ஒரு நாளாவது ஆதரவா ஒரு வார்த்த பேசியிருப்பியா? அது சரி நீ உபத்திரவம் கொடுக்காம, இருந்தா அதுவே பெரிய விஷயம் இல்லையா?”

“இப்ப என்னதான் செய்யணுங்கறீங்க?”

“தொடர்ந்து நீ இப்படியே தான் இருப்பேன்னா இனிமேல் எங்கிட்டப் பேசாத, என் கையால நான் உனக்கு எதுவுமே செய்ய மாட்டேன்டா.”

“அட என்னமா நீங்க இப்ப நான் என்னதான் செய்யணும்?”



“இதென்னடா ஒண்ணுமே தெரியாதவன் மாதிரி இப்படியொரு கேள்வி கேக்கற, உங்கண்ணன் பட்ற சிரமம் தெரிஞ்சு தான் பேசறியா?”

“அப்படியென்ன ஐயா பெரிசா சிரமப்பட்றாராம்?”

அப்படிக் கேட்ட சிறிய மகனை வெறுப்பையும் கோபத்தையும் முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் கல்யாணி.

அனைத்துமே தெரிந்திருந்தும் இப்படியொரு கேள்வி கேட்பவனிடம் பேசுவதற்கு இனி என்ன இருக்கிறது.

அப்படியே பேசினாலும் பெரிதாக என்ன பயன் விளைந்து விடப் போகிறது.

எதுவும் பேசாமல் வெறுமையுடன் தன்னைப் பார்த்த தாயைப் பார்த்தான் கமலேஷ்.

“என்னமா பதில் சொல்ல முடியலையா?”

“தயவு செஞ்சு போயிடுப்பா, உனக்கெல்லாம் பதில் சொல்ற அளவுக்கு எனக்குப் பெரிசா திறமையெல்லாம் ஒண்ணும் கிடையாது.”

“ஏன் இப்படியெல்லாம் பேசறீங்கமா?”

“போடா போ போய் கண்டபடி பணத்த செலவழிச்சுட்டு காலிப் பசங்களோட உன் இஷ்டத்துக்கு ஊர் மேஞ்சுட்டு வா...”

“அம்மா.”

“ஏன், நீ செய்யறதத் தானேப்பா நான் சொல்றேன்.”

“ஆமா அப்படியென்ன உங்க பெரிய மகன் பெரிசா சாதிச்சுட்டார் என்ன கொஞ்சம் டல்லாப் போயிட்டிருந்த

அப்பாவோட தொழில எடுத்து நடத்திட்டிருக்கார் அவ்வளவுதான். இதுக்குப் போய் விட்டாத் தலமேல தூக்கி வெச்சுக் கொண்டாடுவீங்க போலிருக்கு.''

''எவ்வளவு சிம்பிளா சொல்லிட்ட, உங்கப்பா நம்மளையெல்லாம் விட்டுட்டுப் போகும் போது நம்ம தொழில் இருந்த நிலம தெரியுமாடா உனக்கு?''

''அவ்வளவு தான் இனி எல்லாமே முடிஞ்சு போயிடுச்சுங்கற நிலம.''

''அந்தக் கவலைலதான்டா உங்கப்பாவே கிட சேந்தார்?

அந்த நாள் நினைவுகள் நெஞ்சைக் கசக்கிப் பிழிய, அந்த வேதனை தந்த வலியில் கண்கள் கலங்கி விட்டிருந்தன கல்யாணிக்கு.

''தொழில் மட்டுமா, தலைக்கு மேல கடனும் வேற.''

''தொழிலுக்காகத் தானேன்னு உங்கப்பா பாட்டுக்கு கணக்கு வழக்கில்லாம பேங்குல கடன வாங்கிட்டார்.''

''எல்லாமே முடிஞ்சது, அவ்வளவுதான். உங்களையெல்லாம் இப்படி அனாதரவா விட்டுட்டுப் போறேன்னு உங்கப்பா பட்ட கவல, அப்ப உங்கண்ணன் என்ன சொன்னான் தெரியுமா?''

''அதுக்கும் அவன் அப்பப் படிப்ப முடிச்சே ஒரு மாசம் கூட ஆகல.''

''இப்ப நீ இருக்கியே ம்கூம் அத விடக்கூடச் செல்லமா வளந்தவன், தலப் பிள்ளையானதால அவன் தாத்தா, பாட்டி எல்லாருக்குமே ரொம்ப செல்லம் வேற.''



அதுதான் தெரிந்த விஷயமாயிறறே, அனைவருமே அவனைத் தலையில் தூக்கிக் கொண்டாடியதை அவ்வளவு விரைவில் மறந்து விட முடியுமா என்ன,

''குருவி தலைல பனங்காய வைக்கற மாதிரி... ம்கூம் அதவிடக் கூடப் பல மடங்கு அதிகமான சுமைய அது தலைல திடீர்னு தூக்கி வெச்சா எப்படியிருக்கும். அப்ப அந்த மாதிரிதான் இருந்தது உன் அண்ணனோட நிலமை.''

''இதுவே வேற யாராவது இருந்திருந்தா வீடு வாசல் தொழில்னு எல்லாத்தையும் வர்ற விலைக்கு வித்துட்டுப் போயிருப்பாங்க.''

''ஏன் சுத்தி இருக்கற சொந்த பந்தம், பழகினவங்க தெரிஞ்சவங்கன்னு எல்லாருமே அதத்தான் சொன்னாங்க.''

''ஆனா ஹரி அப்படியெல்லாம் செய்யாததோட, பிழைக்கறதே கஷ்டம். ஏன் கண்டிப்பா முடியாதுன்ற நிலைமைல இருந்த உங்கப்பாவுக்குக் கைல மிஞ்சியிருந்த பணத்தையெல்லாம் கூடப் போட்டு வைத்தியமும் பாத்தான்.''

''அது மட்டுமா, அந்த நேரத்துல கூட எனக்கு மரணப் படுக்கைல இருந்த உங்கப்பாவுக்குன்னு எல்லாருக்கும் எவ்வளவு நம்பிக்கை குடுத்தான் தெரியுமா?''

''உங்கப்பாவோட நோய் முத்திப் போனதால காப்பாத்த முடியாமப் போயிடுச்சுன்னாலும் ஹரி குடுத்த நம்பிக்கையால அவர் எவ்வளவு நிம்மதியானார் தெரியுமாடா?''

''மத்தவங்களப் போல நானும்கூட அந்த நேரத்துல தப்புக் கணக்கு தான் போட்டேன்.''

''உங்கப்பாவாலேயே முடியாதது என்னதான் நம் பிக்கையோட திறமையா எடுத்து செஞ்சாலும் ஹரியால மட்டும் எப்படி முடியும்னு தோணுச்சு.''

''ஆனா அவன் சொன்னத, ஏன் அதுக்கும் மேலயே கூடப் பல மடங்கு நினைச்சத சாதிச்சான்.''

''தொடர்ந்து சாதிச்சுட்டும் இருக்கான்.''

''ஆனா நீ நினைக்கற மாதிரி அதெல்லாம் ஒண்ணும் பொழுது விடியறதுக்குள்ள நடந்துடல.''

''அதுக்காக அவன் பட்ட, ஏன் இன்னும் பட்டுட்டிருக் கிற சிரமம் கொஞ்ச நஞ்சம் கிடையாது.''

''அப்படியென்ன பெரிசா சாதிச்சுட்டான்னு கேக்கறியேப்பா, அது இதுதான்னு சொல்ற அளவுக்கு ஹரி ஒண் ணும் சாதாரண விஷயத்தையும் செய்யல. அதுக்கும் மேல அது இவ்வளவுதான்னு வார்த்தையால சொல்லி முடிச்சுட்ற அளவுக்கு எனக்குத் திறமையும் கிடையாது.''

தாயின் வார்த்தைகளில் தெரிந்த விரக்தி கமலேஷை தான் அப்படிக் கேட்டிருக்கக் கூடாதோ என்று நினைக்க வைத்திருந்தது.

ஆனால் அதற்கு மேல் கல்யாணி மகனிடம் எதையும் பேசவில்லை.

மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தது.

தனக்கே இப்படியென்றால் இவன் ஹரியிடம் இப்படி யெல்லாம் பேசினால் அவனுடைய மனம் எவ்வளவு வேதனைப்படுமென்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் கமலேஷ் கிளம்பிச் செல்ல, சாப்பிடாமல் கூடச் செல்கிறானே என்று அவருடைய தாய் மனம் வேதனையடைந்தது.

இவனுடைய வயதில் ஹரி குடும்பத்தையும், தொழி லையும் தன் சிரமேற் கொண்டது மட்டுமா, யாருடைய மனதையும் எதற்காகவுமே புண்படுத்தவும் மாட்டானே.

தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தத் தான் இப்படியெல் லாம் பேசினேன் என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் சாப்பிடாமல் சென்று விட்டானே.

தவறையும் அவன் மேலேயே வைத்துக் கொண்டு அதற்கு மேல் கோபமும் வேறு படுகிறானே என்று சிறிய மகனை நினைத்துக் கல்யாணியின் மனம் மேலும் வேதனை தான் அடைந்தது.

# 29

''அம்மா.''

''வா ஹரி.''

''ஏன் டல்லா இருக்கீங்க?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே.''

''அப்படின்னா நிச்சயம் என்னவோ இருக்கு. அப்புறம் கமலேஷ் எங்கமா காணல?''

''அவன் காலைல போனதுப்பா இன்னும் வரல, அப் புறம் ரேவதியும் மாப்பிள்ளையும் அஞ்சு மணிக்கு வெளிய கிளம்பிப் போனாங்கப்பா...''

"ஆமாம்மா, நானும் அவங்ககிட்டப் பேசினேன்" என்றவன் தனக்கு வந்திருக்கும் மொபைல் அழைப்பை எடுத்துப் பார்த்து விட்டு, "மாப்ளதான் கூப்புட்றார்" என்று அட்டெண்ட் செய்து பேசினான்.

பேசி முடித்துவிட்டு சில நிமிடங்களில் போனை வைத்தவன், "அவங்க டிபனுக்கு வரலையாம்மா, வர ஒன்பது மணிக்கு மேல ஆகுமாம்" என்றான்.

"அப்படியா...?"

"என்னமா அவங்களுக்காக ஸ்பெஷலா ஏதாவது செஞ்சுட்டிங்களா?"

"இன்னும் இல்லப்பா, வழக்கமான டிபன் ரெடி. இனிமேல்தான் ஏதாவது ஸ்பெஷலா செய்யலாம்னு இருந்தேன்."

"பரவாயில்ல, சரியா இருக்கற டிபன் எடுத்து வைங்க ரொம்பவும் பசி உடனே சாப்பிட்டாகணும்."

"குளிச்சுட்டு வர்றியாப்பா?"

"ம்கூம் அதெல்லாம் அப்புறம். முதல்ல வயித்துக்கு எதையாவது குடுத்தாகணும்" என்று பெரிய மகன் கைகளைக் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட அமர, பரிமாறினார் கல்யாணி.

காலையில் சிறியவன் சாப்பிடாமலே கோபத்துடன் சென்றது தான் நினைவிற்கு வந்தது.

அதே நேரம் ஸ்ரீஹரி தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, "என்னப்பா?" என்று கேட்டார்.

"நீங்க சாப்டிங்களாம்மா?"



"இன்னும் இல்லப்பா."

"உக்காருங்க சாப்புட்லாம்."

"கமல் வந்துடட்டும்பா."

"சரிதான், ஆனா இன்னைக்கு என்னால அவனுக்காக வெயிட் பண்ண முடியாமப்..."

"நீ சாப்புடு கண்ணா தினமும் கூப்புட்டாக்கூட எல்லாரும் வரட்டும்னு சொல்லுவ. இன்னைக்கு எவ்வளவு பசியிருந்தா சாப்பிட உக்காந்திருப்ப."

"அது சரிதான். போதும்மா போதும். சாப்டுட்டு வெச்சுக்கறேன்" என்று தடுத்தவன் "உங்க கை வண்ணம் யாருக்குமே வராதுமா அவ்வளவு ருசி" என்று மெச்சிக் கொண்டே சாப்பிட்டான்."

"அது சரி."

"ஏம்மா சிரிக்கறீங்க?"

"பசி நேரத்துல நல்லா இல்லன்னா தான் ஆச்சரியம். ஆனா இதெல்லாம் என்னப்பா நாளைக்கு உனக்குன்னு ஒருத்தி வந்து செஞ்சு குடுத்தா இன்னும் கூட ருசியா இருக்கும்..."

"இருக்கலாம், ஆனாலும் உங்க கை பக்குவம் தனி தாம்மா."

"அப்புறம் ஹரி..."

"என்னம்மா சொல்லுங்க."

"இல்ல வீட்டுக்கு ஒரு மருமக வந்தா நல்லார்க்கும்னு பாத்தேன். நீ மனசு வெச்சா உடனே நடக்கும்."

"சரிதாம்மா இப்பதான தங்கச்சி கல்யாணம் முடிஞ்சிருக்கு. இன்னுமொரு ஆறு மாசம் போகட்டும்."

''அதுவும் சரிதான் செலவுக்கு மேல செலவு வந்துட்டே இருந்தா உனக்கு சிரமம்தான...''

''பணத்துக்குக் கூடப் பிரச்சனையில்லமா சமாளிச் சுடலாம், எதுக்கும் இன்னும் சில மாசங்கள் போகட்டும்.''

ஸ்ரீஹரி சாப்பிட்டு முடித்து எழவும் அவனுடைய தம்பி கமலேஷ் வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

''வா கமல்.''

உள்ளே வந்த தம்பியை யதார்த்தமாக வரவேற்றான் ஸ்ரீஹரி.

ஆனால் தன்னை மட்டுமல்லாது எதையுமே கண்டு கொள்ளாமல் தம்பி விடுவிடுவென்று வீட்டிற்குள் சென்று விட்டிருக்க, இன்று என்னவாயிற்று இவனுக்கு என்று நினைத்துக் கொண்டே சென்று கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தான் ஸ்ரீஹரி.

''என்னமா சொல்லுங்க?''

''இல்ல கமலேஷ் இப்படியே இருக்கானேப்பா, அவன என்ன பண்றதுன்னே தெரியல...''

''என்ன ஹரி?''

''இன்னும் சின்னப் பையன் தானேம்மா. போகப் போக மாறிடுவான்.''

''அப்படின்னு தானப்பா ரெண்டு வருஷமா நினைச்சுட்டிருக்கோம். ஆனா அவனெங்க...''

''எல்லாம் சரியாயிடும்மா...''

''அதே நேரம் வேகமாக ஹாலுக்கு வந்த கமலேஷ், ''அப்படியெல்லாம் மாற வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது'' என்றான்.



சிறிய மகனின் வார்த்தைகள் கல்யாணிக்கு மிகுந்த ஆதங்கத்தை வரவழைத்திருக்க ''என்னடா நீ... என்று கோபத்துடன் ஏதையோ சொல்ல வந்தார்.

ஆனால் அதற்குள் ''ஓ விட்டா மிரட்டக்கூட செய்வீங்களோ'' என்று கமலேஷ் கோபத்துடன் கேட்க, ''பின்ன அதுல என்னடா உனக்கு சந்தேகம்?'' என்றார்.

''அப்படிக்கூட எல்லாத்தையும் கேட்டுட்டுப் பேசாம இருக்கணுங்கற அவசியம் எனக்கில்ல...''

''விடு கமல் அம்மா அவங்க ஆதங்கத்துக்கு ஏதோ சொல்றாங்க. இத்தன நாளும் நீ செஞ்சதெல்லாம் சரி தான் ஆனால் இனிமேல் கொஞ்சம் மாறலாம் இல்லையா?''

''என்னடா, ஹரி கேக்கறானே பேசு?''

''நீங்க இருங்கம்மா'' என்று தாயைப் பார்த்த ஸ்ரீஹரி, ''அஞ்சு விரலும் ஒரே மாதிரி இருக்கறதில்ல. நான் எப்படி இருக்கேனோ அதே மாதிரி கமலும் இருக்கணுங்கற அவசியம் கிடையாது, ஏன் இருக்கவும் முடியாது. அதனால கம்பேர் பண்ணி இனிமேல் தயவு செஞ்சு பேசாதீங்கம்மா'' என்றான்.

''முன்னைக்கு இப்பத் தொழில் நல்லா போயிட்டிருக்குப்பா, ஆடர்களும் புதுசு புதுசா நிறைய வர ஆரம்பிச்சிருக்கு. இப்ப நீ தொழிலுக்குள்ள வந்தா எல்லாத்தையும் கத்துக்கலாம். நான் ஒருத்தனே எல்லாத்தையும் பாத்துட்டிருக்கறதுக்கு பதிலா நீயும் வந்தா நல்லார்க்கும். பாக்கறவங்களுக்கும் ஒரு பயம் வரும்.''

.........

''என்ன கமல்...''

அண்ணனை முந்திக் கொண்டு ''அதெல்லாம் எனக்கு அவசியமில்ல'' என்று ஒற்றை வார்த்தையில் சொல்லி முடித்திருந்தான் கமலேஷ்.

சிறியவனின் பதிலில் வாயடைத்துப் போய் விட்டிருந் தார் கல்யாணி. கூடவே பெரிய மகன் என்ன சொல்லி விடுவானோ என்ற பயமும் வந்து அவரைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

''இப்படிச் சொன்னா எப்படி கமல், அப்பாவோட தொழில்ல உனக்கும் சம பங்கு இருக்கு தான?''

ஏன் தொழில் கடனில் தான் இன்னும் சென்று கொண் டிருக்கிறதா என்று வாய் வரை வந்திருந்த வார்த்தை களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு எங்கோ பார்த்தான் கமலேஷ்.

தன் மனதை அப்படியே படித்தவன் போல, ''நீ நினைக் கற மாதிரியெல்லாம் ஒண்ணும் கிடையாதுப்பா தொழில் நல்லா லாபகரமாவே போயிட்டிருக்கு. அதனால தான் நீ பிஸினஸ்க்குள்ள வர்றதுக்கு இது சரியான நேரம்னு சொல்றேன்'' என்றான் ஸ்ரீஹரி.

ஓ, அப்படியானால் தன்னைக் கையாலாகாதவன் என்கிறானா.

''நான் தொழிலுக்குள்ள காலடி எடுத்து வெச்ச போது இருந்த அந்த நிலமை இப்ப உனக்கில்லன்னு சொல் றேன். நீ என்ன மாதிரி அன்லக்கி கிடையாது. ரொம்ப லக்கின்னு சொல்றேன் கமல்...''

அவனுடைய இயல்புக்கு மாறாகப் பெரியவன் அன்று மிகவும் பொறுமையாகப் பேசிக் கொண்டிருப்பது



கல்யாணிக்கு உள்ளுக்குள் சற்று நிம்மதியைக் கொடுத் திருந்தது.

எப்படியோ சிறியவன் திருந்தினால் சரியென்ற எண் ணத்தையும்,

ஆனால் ஸ்ரீஹரி அவ்வளவு எடுத்துச் சொல்லியும் கூட அதற்குக் கமலேஷிடமிருந்து எந்த ஒரு பதிலும் வந்திருக்கவில்லை.

மாறாகத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தான்.

''சரிதான் கமல் இனி நீயே யோசிச்சு உன் மனசுக்குப் பட்றத செய். இந்நேர வரைக்கும் நான் உனக்கு சொன்னது அட்வைஸ்னு நினைச்சுக்காதே. இத எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமை. அதோட நான் ஏதாவது தப்பா சொல்லியிருந்தாலும் மன்னிச்சுடு.''

'ஐயோ அப்படியெல்லாம் இல்லண்ணா பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க' என்று சொல்வதற் காக வாய் வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

அவ்வளவு நேரமும் எப்படியோ, ஆனால் கடைசியாக அண்ணன் சொன்ன வார்த்தைகள் கமலேஷை யோசிக்க வைத்திருந்தன என்று தான் சொல்ல வேண்டும்.

## 30

அன்று ஏனோ கமலேஷிற்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டிருந்தது.

சும்மா படுத்துக் கொண்டிருக்கவும் மனம் வராது போயிருக்க வழக்கத்திற்கு மாறாக அன்று உடனே எழுந்திருந்தவன், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்திருந்தான்.

மணி ஐந்தரை ஆகியிருக்க, உடலோடு மனமும் சுறுசுறுப்பாக இருப்பதை உணர்ந்தான்.

அண்ணன் வழக்கம்போல மாடியில் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

குளிர் காற்று முகத்தில் மோதியபடி சில வினாடிகள் வெளியே நின்றவன், அண்ணன் கீழே இறங்கி வரும் அரவம் கேட்டதில் உடனே உள்ளே வந்திருந்தான்.

அதே நேரம் தாய் ஃப்ளாஸ்க்கில் காபியும் இரண்டு கப்களையும் வைத்து விட்டுப் போவது தெரிய, சென்று தனக்கு ஒரு கப்பில் காபியை ஊற்றிக் கொண்டான்.

அதை எடுத்துக் கொண்டு தன்னறைக்கு வருவதற்காகத் திருப்பியவன், அண்ணனின் அழைப்பில் நின்று மீண்டும் திரும்பினான்.

காலை வணக்கத்துடன் தம்பியின் அருகில் வந்திருந்த ஸ்ரீஹரி, ''புதுசா பைக் எடுக்கணும்னு சொல்லிட்டிருந்தியே கமல் அதுக்கான செக்க என் ஆபீஸ் ட்ராயர்ல வெச்சிருக்கேன் எடுத்துக்கோ'' என்றான்.

''பைக் வந்தாலும் முடிஞ்ச அளவுக்கு வெளிய போகும் போது காரையே யூஸ் பண்ணுப்பா, டூ வீலர்ல போறது அவ்வளவு ஸேஃப்டி கிடையாது.''

''தேங்க்ஸ்.''

மனமே இல்லாமல் ஒற்றை வார்த்தையை உதிர்த்தான் கமலேஷ்.



''நான் உன் அண்ணன் தான்பா, நோ ஃபார்மாலிட்டிஸ். அதோட அப்பா ஸ்தானத்துல இருந்து இதையெல்லாம் செய்ய வேண்டியது என் கடமை, நீ எதுவுமே சொல்லலேன்னாலும் நான் உனக்காக எல்லாத்தையும் செய்வேன்.''

''அதோட உங்கிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சதே, யாருக்காகவும் பாக்காம உம் மனசுக்கு என்ன படுதோ அதச் செய்யற அந்த குணம் தான். அத உன் ஸ்டைல்னு கூடச் சொல்லலாம், அத அப்படியே மெயின்டெய்ன் பண்ணு'' என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு அண்ணன் செல்ல, அவன் சென்ற திசையையே பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தான் கமலேஷ்.

வழக்கம் போல அன்று காலையில் அலுவலகத்திற்கு வந்த சஞ்சனா கைப்பையைக் கொண்டு போய்த் தன்னிடத்தில் வைத்து விட்டு வந்து வேலையை கவனிக்கத் தொடங்கினாள்.

அன்றோடு எம்.டி. ஆபீஸ்க்கு வந்து சென்று சில நாட்களாகி விட்டிருந்தது. நினைவிற்கு வந்தது.

பேக்டரியிலிருந்த வேலைப் பளுவே அதற்குக் காரணம்.

கணக்குப்படி பார்த்தால் அந்த வேலை நேற்று இரவோடு முடிந்திருக்க வேண்டும்.

அப்படியானால் இன்று எம்.டி. ஆபீஸ்க்கு வருவாரோ.

ஏனோ ஒரு இனம் புரியாத உணர்வு தோன்றி மனதை வருடுவதைப் போல உணர்ந்தாள், கூடவே பயத்தையும்.

இப்பொழுது சில நாட்களாக எம்.டி.யின் பார்வை ரசனையுடன் தன்மேல் விழுந்து மீள்வது நினைவிற்கு வந்ததில், காரணம் புரியாத ஒருவித படபடப்பும் வந்து அவளை ஆட்கொண்டது.

பார்வை மட்டுமா.

பேச்சுக்கூட சற்று வித்யாசமாகத்தானே இருக்கிறது.

இதைத் தொடர விடுவது சரியா?

அப்படியே பார்த்தாலும் தன் கையில் எதுவும் இருப்பது போலத் தெரியவில்லையே,

அவனுடைய ஒரு பார்வையில் தலை குப்புற விழுந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை போலல்லவா தெரிகிறது.

தான் எந்த அளவிற்கு மனதைக் கல்லாக்கிக் கொண்டாலும் அவை அனைத்தும் அவனுடைய ஒரு சிறு முயற்சியில் தவிடு பொடியாகி விடும் போலிருக்கிறதே.

அதற்காகத் தான் எதையுமே செய்யாமல் இருந்து விடுவதா.

இந்த அளவிற்கு முயன்றே தன்னுடைய மனக்கட்டுப்பாடு இவ்வளவு தானென்றால் இதைக்கூடத் தான் முயலா விட்டால் நிலமை இன்னும் படு மோசமாகத்தானே ஆகும்.

சரிதான்.

முடிந்தவரை பார்க்கலாம்.

அதற்கு மேல் நடப்பது போல நடக்கட்டும்.

ஒரு வழியாக மனதை அமைதிப்படுத்திக் கொண்டு வேலையில் கவனத்தை செலுத்தத் தொடங்கினாள் சஞ்சனா.



சிறிது நேரம் சென்றிருக்கும்.

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்கத் திரும்பிப் பார்த்தாள்.

இளைஞன் ஒருவன் அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வர, வரவேற்றாள்.

ஆறடி உயரத்தில் களையுடன் இருந்த அந்த இளைஞனின் முகத்தில் பணக்காரத்தனம் துல்லியமாகத் தெரிவதைக் கண்டாள்.

உள்ளே வந்திருந்தவனிடம் என்னவென்று விசாரித்தாள்.

''எம்.டி. இருக்காரா?''

''இன்னும் வரல, நீங்க?''

''எப்ப வருவார்னு தெரிஞ்சா இருந்து பாத்துட்டுப் போறதா, இல்ல போய்ட்டுத் திரும்பவும் வர்றதான்னு முடிவு பண்ணுவேன்.''

''சரிதான், நீங்க யாருன்னு சொன்னீங்கன்னா நான் எம்.டி.ய மொபைல்ல கூப்புட்டுப் பேசிட்டு சொல்றேன்.''

''அப்ப நானே பேசிக்கறேன்'' என்று வெளியே செல்வதற்காக அந்த இளைஞன் திரும்பவும், எம்.டி. உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''வா கமல்.''

வந்தவன் வேறு யாருமல்ல, ஸ்ரீஹரியின் தம்பி கமலேஷ் தான்.

திடீரென்று தனது தம்பியை அங்கு பார்த்த ஸ்ரீஹரிக்கும் ஆச்சரியமாகத் தான் இருந்தது.

''என்ன ஆச்சரியம் வா உக்காரு'' என்று வரவேற்ற எம்.டி.யை அந்த இளைஞன் தயக்கத்துடன் பின் தொடர்ந்து வருவது தெரிந்தது.

''குட் மார்னிங் ஸார்.''

எம்.டி.க்குக் காலை வணக்கம் சொன்னாள் சஞ்சனா.

''வெரி குட்மார்னிங்'' என்றவன், ''இவரு என் தம்பி கமலேஷ்'' என்று தனது தம்பியை அவளுக்கு அறிமுகப் படுத்தினான்.

அதே போல அவளைத் தனது தம்பிக்கும், தொடர்ந்து வந்த சில வினாடிகளில் எம்.டி.யிடம் சொல்லி விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள் சஞ்சனா.

எம்.டி. அறிமுகப்படுத்திய பிறகுதான் அவருடைய தம்பி கமலேஷை முன்பே அவர்களுடைய தங்கையின் திருமணத்தின் போது மண்டபத்தில் வைத்துப் பார்த்தது அவளுக்கு நினைவிற்கு வந்தது.

கமலேஷ் தனது அண்ணனிடம் மிகுந்த பணிவுடன் நடந்து கொண்டது தான் மீண்டும் மீண்டும் அவளுடைய மனக் கண்களில் தோன்றிக் கொண்டே இருந்தது.

இப்போது யோசிக்கத் யோசிக்கத் தான் அண்ணன் தம்பி இருவருக்குமான முக ஒற்றுமை மனதில் பட்டது.

என்ன இருவருமே ஆறடி உயரம் தானென்றாலும் அண்ணனைப் போலல்லாமல் தம்பியின் முகத்தில் அப்படியே மனதினைப் படிக்க முடிந்தது.

''என்ன கமல் திடீர்னு வந்திருக்க?''

............



''பணம் ஏதும் பத்தலையா எதுவா இருந்தாலும் போன்லயே பேசியிருக்கலாமே வீட்ல என் ரூம் ஷெல்ஃப்ல கூடப் பணத்த வெச்சுட்டு தான் வந்திருக்கேன்.''

''இல்ல, நான் பணத்துக்காக வரல.''

அப்படிச் சொன்ன தம்பியைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

''என்னப்பா எதுவானாலும் கேளு?''

..........

''கமல்...''

''என்ன மன்னிச்சுடுங்கண்ணா.''

''எதுக்கு?''

''நான் பாட்டுக்கு கொஞ்சங்கூட யோசிக்காம ஏதேதோ பேசிட்டேன், திரும்பத் திரும்ப நான் சின்னப் பையன் தாங்கறத ப்ரூஃப் பண்ணிட்டே இருக்கேன்.''

''அப்படியென்ன பேசின?''

''இன்னும் என்ன பேசணும். அப்பாவே இருந்திருந்தாக் கூட எனக்கு இந்த அளவுக்கு எல்லாத்தையும் பாத்துப் பாத்து செஞ்சிருப்பாராங்கிறது சந்தேகம்தான். அப்படிப்பட்ட உங்க மனசையே நான் ஏதேதோ சொல்லி புண்படுத்திட்டேன். உங்களால என்ன மன்னிக்க முடியுமாண்ணா?''

''போதும் கமல், இப்பதான் எனக்குப் புரியாத மாதிரி ஏதேதோ பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டிருக்க...''

''இல்லண்ணா நான் எவ்வளவு முட்டாள்தனமா நடந்துக்கிட்டிருக்கேங்கறது எனக்கு இப்பத்தான் புரியுது'' என்றவனின் குரல் கரகரத்து விட்டிருக்க, ''வேண்டாம்பா'' என்று தம்பியை ஆசுவாசப்படுத்தினான் ஸ்ரீஹரி.

சில வினாடிகளில் தன்னை ஓரளவு சமனப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தான் கமலேஷ்.

''காலைல சாப்டியா?''

அண்ணன் கேட்க ''சாப்டேண்ணா'' என்றான்.

''வண்டி எடுத்தாச்சா?''

''இல்லண்ணா.''

''ஏன்?''

''வேண்டாம்னு தோணுச்சு, அதான்.''

அப்படிச் சொன்ன தன்னை அண்ணன் புரியாமல் பார்ப்பது தெரிய, ''இல்ல எதுக்கு அவசியமில்லாம அதுல ரெண்டு லட்சத்தப் போடணும்னு தோணுச்சு...''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல உனக்கு வேணும்னா நீ எடுத்துக்கோ...''

''இல்லண்ணா வேண்டாம்'' என்றவன் தனது சட்டைப் பாக்கெட்டிலிருந்த செக்கை எடுத்து அண்ணனின் டேபிளின் மீது வைத்தான்.

''ஏன் திடீர்னு இப்படியொரு முடிவெடுத்தேன்னு தெரியல, ஆனாலும் உனக்கு எப்ப வண்டி எடுக்கணும்னு மனசுக்குப் பட்டாலும் கேளு. ம் என்னப்பா சொல்லு?''

''நீங்க சொன்ன மாதிரி செய்யலாம்னு இருக்கேண்ணா இனிமேல் நீங்க என்ன சொன்னாலும் செய்யறேன். எனக்கும் எல்லாமே சொல்லிக்குடுங்க, என்னால முடிஞ்ச வரைக்கும் உங்களுக்கு ஹெல்ப் ஃபுல்லா இருக்கேன்...''

''ரொம்ப சந்தோஷம் கமல், முதல்ல இத அம்மா கிட்டப் போய் சொல்லு அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க.''



''சரிதாண்ணா, அவங்க மனசையும் ரொம்ப நோகடிச்சுட்டேன். இனிமேல் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்க மாட்டேன்.''

''ஆனாலும் இந்த அளவுக்கு மாறிட்டயேப்பா'' என்று சிரித்த அண்ணனைத் தானும் புன்னகையுடன் பார்த்தான் கமலேஷ்.

சொன்னதுபோல அன்றிலிருந்து தானும் தனது அண்ணனுடன் சேர்ந்து தொழிலை கவனிக்கத் தொடங்கி விட்டிருந்தான் கமலேஷ்.

சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் அப்படி கவனிக்கத் தொடங்கியதற்குப் பிறகுதான் தனது அண்ணனின் திறமையைப் பற்றி அவனுக்குத் தெரிந்தது, மற்றவர்கள் சொல்லக் கேட்டது என அனைத்துமே பத்தில் ஒரு பங்கு தான் என்பதும் புரிந்தது.

தான் இன்னும் எத்தனை வருடங்கள் அண்ணனிடமே இருந்து கற்றுக் கொள்ள முயன்றாலும் அவரளவிற்குத் தன்னால் முடியாது என்பதும்,

ஆனால் தனது அண்ணனோ தான் நினைப்பதற்கு மாறாகச் சொல்ல அது தன்னை ஊக்குவிப்பதற்காகத் தான் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

கூடவே தனது அண்ணனுடைய நல்ல மனதையும்,

அவன் நினைத்ததைப் போலவே அண்ணனின் அந்த ஊக்குவிப்பு நாளுக்கு நாள் அவனுடைய தன்னம்பிக்கையை அதிகமாக்கிக் கொண்டே செல்வதையும் கமலேஷால் புரிந்து கொள்ள முடிந்தது.

அன்றோடு கமலேஷ் தொழிலைக் கற்றுக் கொள்ளத் தொடங்கி ஒரு மாதம் நிறைவடைந்திருந்தது.

இவ்வளவு பெரிய தொழிலை ஒற்றையாளாக வழி நடத்திச் செல்வதே சிரமமென்னும் போது, இதை இந்த நிலைக்குக் கொண்டு வர தனது அண்ணன் எத்தனை யெத்தனை சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந் திருக்கும் என்று நினைத்தபோது மலைப்புதான் தோன் றியது.

இதைக் குறிப்பிட்டுத் தான் எப்பொழுதும் தனது தாய் சொல்லிக் கொண்டே இருக்கிறாரோ என்றும்,

ஏதோ ஒரு திறமை மட்டுமல்ல எல்லாத் திறமை களும் ஒரு சேர அமைந்தால் மட்டுமே இது சாத்தியம் என்பதும்,

அது பல மடங்கு தனது அண்ணனிடம் இருப்பதும்,

இத்தனைக்கும் இடையிலும் கூட எப்படித் தன் அண்ணனால் சிறுசிறு விஷயங்களுக்கும் கூட மதிப் பளித்து அனைவரிடமும் வெகு இயல்பாகச் சிரித்துப் பேச முடிகிறதென்று ஆச்சரியமாகவும்,

அது மட்டுமா,

எம்.டி.யாகத் தனது அண்ணன் ஒரு வார்த்தை தட்டிக் கொடுத்துப் பேசி விட்டால் ஏதோ புதையலே கிடைத்து விட்டாற் போல அனைவரும் சந்தோஷப்படுவதும், அதற்காக மேலும் பல மடங்கு உழைக்கத் துணிவதும்,

எது எப்படியோ அவனையறியாமலேயே அண்ணன் ஸ்ரீஹரியின் மீது அவனுக்கிருக்கும் மரியாதை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றது.



# 31

''குட்மார்னிங் கமல்.''

''வாங்க சஞ்சனா, குட்மார்னிங்.''

''என்ன இன்னைக்கு நேரத்துலயே வந்துட்டிங்க போலிருக்கு?''

''ஆமாம், அண்ணன் ஒரு வேல குடுத்தார் அதான்.''

''ஓ உங்கள அனுப்பி வெச்சுட்டு உங்க அண்ணன் வீட்ல ரெஸ்ட் எடுத்துட்டிருக்காராக்கும்'' என்று கேட்டு விட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள் சஞ்சனா.

''ஹலோ எங்க அண்ணன் ஒண்ணும் அந்த மாதிரி கிடையாது.''

''சரிதான் கேள்விப்பட்டேன்.''

''ஆமா நீங்க எப்பவுமே இப்படித்தானா?''

''எப்படி?''

''ஒரு பர்மிஷன் கூட எடுக்காம வேலைல இவ்வளவு சின்சியரா இருக்கீங்க, எப்படி அண்ணன் அவருக்கு ஏத்த மாதிரியே ஒரு பி.ஏ.வப் புடிச்சாரோ தெரியல.''

''அது சரி, வேல வேணும்னு நான் கெஞ்சினது எனக்குத் தான தெரியும்.''

''என்னது கெஞ்சினீங்களா, சும்மா சொல்லாதீங்க.''

''பின்ன, நானெதுக்குப் பொய் சொல்லப் போறேன். சரியா அந்த நேரம் பாத்து விஜய் மேரேஜ் லீவ்ல போக வும் ஒரு வழியா வேலையும் கிடைச்சதுன்னு வைங்க.''

''அப்படி இருந்திருந்தா லீவ் முடிஞ்சு விஜய் வந்ததும் உங்கள வேற டிபார்ட்மெண்டுக்கு மாத்தியிருக்கணுமே. ஆனா இப்ப விஜய் இல்ல வேற டிபார்ட்மென்டல வேல செஞ்சுட்டிருக்கார்.''

''அத விஜயத் தான கேக்கணும், என்னக் கேட்டா? ஏன் அவரே கூட ஸார்கிட்டக் கேட்டுட்டு வேற டிபார்ட் மெண்ட் மாறியிருக்கலாம்.''

''சரிதான் நம்பிக்கறேன்.''

அப்படிச் சொன்ன கமலேஷை சஞ்சனா பார்க்க, ''இல்ல ஒருவேள இந்த மாதிரியொரு அழகான அறி வான பி.ஏ.வ இழக்க மனசில்லாம எம்.டி. செஞ்ச வேலையா இருக்குமோன்னு நான் நினைச்சேன்'' என் றான்.

''ம், அப்படியா?''

கமலேஷ் மீண்டும் அழுத்திக் கேட்க, ''நல்லா ஜோக் கடிக்கறீங்க'' என்று சிரித்து வைத்தாள் சஞ்சனா.

வெளியே சாதாரணமாகக் காட்டி சமாளித்து வைத் தாலும் கமலேஷ் ஓரளவு சரியாகவே கணித்து விட்டதை நினைத்து பயமும், ஆச்சரியமும் ஒரு சேரத் தோன்றி மறைந்தன.

''சாப்டிங்களா சஞ்சனா?''

''ஆச்சு கமல், நீங்க?''



''நான் சாப்டாச்சு. அப்புறம் நானொரு மூணு நாளைக்கு ஆபீஸுக்கு வர மாட்டேன்.''

''ஏன், எங்காவது வெளிய போறீங்களா?''

''ஆமாம், ப்ரெண்ட் கல்யாணத்துக்காக மும்பை போறேன்.''

''அப்படியா, சரிதான் போய் நல்லா என்ஜாய் பண் ணிட்டு வாங்க.''

''பின்ன அதிலென்ன சந்தேகம்?'' என்றவன்,

''ஆமா நீங்க எப்ப கல்யாணச் சாப்பாடு போடப் போறீங்க?'' என்று கேட்டான்.

''என்ன திடீர்னு இப்படியொரு கேள்வியக் கேக்க றீங்க?''

''பின்ன, ரெண்டு நாள் யோசிச்சு முன்னறிவிப்போட கேக்கணுங்கறீங்களா?''

''எப்படிக் கேட்டாலும் இன்னும் சில வருஷங்களாகும்.''

''ஏன்?''

''ஏன்னா என்ன சொல்றது?'' என்றவள்,

''எம்.டி. வர்றதுக்குள்ள முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு, கமல் அதப் பாத்துட்டே பேசலாமா?'' என்றாள்.

சஞ்சனா பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைப்பது புரிய, தானும் உடனே ''ஓ தாராளமாப் பாக்கலாமே'' என்றான்.

அதற்குப் பிறகு இருவருக்குமே மற்றது பேச நேர மிருக்கவில்லை, வேலையே சரியாக இருந்தது.

அன்று மட்டும் என்றில்லை,

எப்பொழுதுமே சஞ்சனா ஒரு எல்லைக்கு மேல் பேசி கமலேஷ் பார்த்ததில்லை.

அதனால் சஞ்சனாவின் மேல் அவனுக்கு எப்பொழுதுமே தனி மதிப்புண்டு.

தன்னிடம் மட்டுமென்றில்லாமல் தனது அண்ணன் முதல் அனைத்து ஆண்களிடமும் என்னதான் வெளிப் படையாக இனிமையாகப் பேசினாலும் தள்ளி நில் என்று பார்வையாலேயே தூர நிறுத்தும் அவளுடைய குணம் இந்தத் தலைமுறைப் பெண்களின் மேல் அவனுக் கிருந்த தவறான அபிப்ராயத்தை மாற்றியிருந்தது.

''என்ன கமல் அமைதியாயிட்டிங்க?''

''நீங்க தான் வேலையப் பாருன்னு சொல்லிட்டிங் களே.''

''அச்சச்சோ பாக்கலாம்னு தான் சொன்னேன்.''

''நீங்க என்ன விட ரெண்டு வயசுப் பெரியவங்க இல் லையா?''

''ஆமா ஏன்?''

''சும்மா தெரிஞ்சுக்கலாமேன்னு தான்.''

''புரியல?''

''சம்பந்தமில்லாததப் பத்தியெல்லாம் கேட்டாவது உங்களப் பத்தியும் உங்க குடும்பத்தப் பத்தியும், எதை யாவது தெரிஞ்சுக்கலாமேன்னுதான்.''

''ஏன், எதுக்குத் தெரிஞ்சுக்கணும்?''

''எதுக்குன்னா நீங்களா எதையும் சொல்ல மாட்டேங் கறீங்களே அதான். ஏன் பேசக் கூடக் காசு கேக்கறீங்க...''



''எனக்கு விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்து உங்ககிட்ட மட்டும் தான் நான் இந்த அளவுக்கு நிறையப் பேசி யிருக்கேனாக்கும்.''

''சரிதான் அதனால தான் நானும் உங்களப் பத்தி நிறையத் தெரிஞ்சுக்கிட்டேன். உங்க பேர் சஞ்சனாங்கற அளவுக்கு.''

''சொல்லுங்க, என்னப் பத்தி அப்படி என்ன தெரிஞ் சுக்கணும் உங்களுக்கு?''

புன்னகையுடன் கேட்டாள் சஞ்சனா.

''ஒண்ணும் தெரிஞ்சுக்க வேண்டாம். உங்கள மாதி ரியே ஊர் உலகத்துல இருக்கற பொண்ணுங்க எல்லாரும் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னு நினைக்கத் தோணுது.''

''ஏனோ?''

''உங்களக் கட்டிக்கப் போறவர் ரொம்ப லக்கியா இருக் கணும் சஞ்சனா, முகம் தெரியாத அந்த நபருக்கு நான் மனசார வாழ்த்துச் சொல்றேன்.''

கமலேஷின் அந்த வார்த்தைகளில் உடல் சிலிர்த்துப் போனாள் சஞ்சனா.

ஏனோ அந்த வினாடியில் ஸ்ரீஹரியின் முகம் தான் மனதிற்குள் வந்து போனது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே தனது எண்ணப் போக்கின் தவறை உணர்ந்து நடப்பிற்கு வந்திருந்தாள்.

மேலும் இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

அன்று ஞாயிறு.

விடுமுறை நாள்.

செய்வதற்கு வேலையென்று எதுவுமில்லாமல், வீட்டிலும் தனியாக இருக்கப் பிடிக்காமல் தவித்துப் போனாள்.

ஏன் இந்த வார விடுமுறை நாள் வருகிறதென்று மனதிற்குள் சபித்தாள்.

ஏதாவது வேலை செய்து கொண்டே இருந்தாலன்றி மனதிற்கு நிம்மதியில்லையென்பது தெளிவாகப் புரிந்தது.

சரியாக அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர எடுத்துப் பார்த்தாள்.

எம்.டி. ஸ்ரீஹரி.

ஏதோ ஒருவித இனம் புரியாத படபடப்பில் மனம் நடுங்க சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமனப் படுத்திக் கொண்டு பிறகு அட்டெண்ட் செய்து பேசினாள்.

எதிர்ப்பக்கம் அவன் கேட்ட கேள்விக்கு இல்லை இன்று என் அத்தை வீட்டிற்குச் செல்கிறேன். நாளையும் கூட ஒரு நாள் விடுமுறை தேவைப்பட்டாலும் படலாம் என்று பொய் சொன்னாள்.

அதைச் சொல்லத் தான் இத்தனை சிரமப்பட வேண்டியிருக்குமென்று அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு மொபைலை வைப்பதற்குள் அவளுடைய கண்கள் கலங்கி விட்டிருந்தன.



கடவுளே என்னை ஏன் இப்படியெல்லாம் சோதிக்கிறாய் என்று தன்னையறியாமலேயே கண்ணீர் வடித்தாள்.

நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டாது என்பதைப் போல, ஸ்ரீஹரியைப் போன்ற ஒரு முழுமையான ஆடவனின் அன்பை ஏற்றுக் கொள்ளத் தான் கொடுத்து வைக்கவில்லையே என்று மனதால் துடித்தாள்.

## 32

''சஞ்சு.''

தமக்கை அழைக்க திரும்பிப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன எங்காவது வெளிய கிளம்பப் போறியா?''

''இல்ல.''

''அப்பாடா சந்தோஷம் என்ன பாக்கற இன்னைக்கு நம்ம வீட்டுக்கு கெஸ்ட் வரப் போறாங்க.''

..............

''ம், யார்னு சொல்லு பாக்கலாம்.''

............

''சரிதான், நானே சொல்றேன் கேட்டுக்கோ நித்தீசும், அவரு தம்பி யோகித்தும் தான்.''

............

''என்னடி ஏதாவது பேசு.''

............

''சரிதான், ஆனா அவங்க வந்தா ஜஸ்ட் ஒரு ரெண்டு வார்த்தையாவது சிரிச்ச மாதிரி வந்து பேசிட்டுப் போயிடு அவ்வளவுதான். ஏய் எங்கப் போறே? இன்னைக்கு நானே லஞ்ச் ரெடி பண்ணலாம்னு இருக்கேன். எனக்குக் கொஞ்சம் ஹெல்ப் மட்டும் பண்றியா?''

..............

''ப்ளீஸ் சஞ்சு...''

எதுவும் பேசாமல் சென்று தமக்கைக்கு சமையலில் உதவினாள் சஞ்சனா.

இரண்டு மணி நேரத்தில் அனைத்துப் பதார்த்தங் களும் தயாராகியிருக்க, தனக்கென ஒரு கப் காபியை மட்டும் கலக்கி எடுத்துக் கொண்டு தன்னறைக்கு வந் திருந்தாள்.

அன்று தங்கை நல்ல மனநிலையில் இருப்பது தெரிய, முக்கியமாக மோசமான மனநிலையில் இல்லையென் பது உறுதியாக தன் மனதிலிருப்பதைப் பேசி விடலா மென்று தங்கையின் அறைக்குள் வந்தாள்.

தலைமுடிக்கு எண்ணெய் வைத்துக் கொண்டிருந்த சஞ்சனா உள்ளே வந்த அக்கா அகிலாவை என்னவென் பதைப் போலப் பார்த்தாள்.

''நான் உங்கூடக் கொஞ்சம் பேசணும் சஞ்சு...''

தங்கையின் மௌனத்தையே சம்மதமாக ஏற்று பேசத் தொடங்கினாள் அகிலா.

தயக்கத்துடன் தான், ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு அவளுடைய இயல் பான அதிகாரத் தோரணையிலேயே பேசினாள்.



''இங்க பாரு சஞ்சு, நான் உன் அக்கா உனக்கு எது செஞ்சாலும் அதுல ஒரு அர்த்தம் இருக்கும்.''

''இன்னும் சில மாசங்கள்ல நானும் நித்திசும் கல் யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கோம். அப்படி எங் களுக்குக் கல்யாணமாயிட்டா நான் இங்க இருக்க முடி யாது. அவங்க வீட்டுக்குப் போயாகணுங்கறது உனக்கே தெரியும். நீ மட்டும் எப்படி இந்த வீட்ல, அதுவும் வயசுப் பொண்ணு தனியா இருப்ப...? ம் ஏதாவது பேசுடி நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கறதா...''

''இப்ப என்ன சொல்ல வர்ற?''

தங்கை கேட்க ''அதனால உனக்கும் ஒரு நல்லது நடந்தா நான் நிம்மதியா என் லைஃப்ல கான்ஸன்ட்ரேட் பண்ணுவேன்...''

''என்னப் பத்தி நீ கவலைப்படாத...''

''அதெப்படி கவலப்படாம இருக்க முடியும்?''

அப்படிக் கேட்ட தமக்கையை வெறுப்பைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் சஞ்சனா. தாய் மறைந்து சில மாதங்கள் கூட ஆகவில்லை திருமணத்தைப் பற்றிப் பேசுகிறாள், ஏன் தாயின் மறைவுக்கே கூட இவள் தான் முக்கிய காரணம். இப்படிப்பட்டவள் தனக்காகக் கவலைப்படுகிறாளாமா, அதைத் தான் நம்ப வேண்டு மாமா.

இது ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிற கதை யாக அல்லவா இருக்கிறது.

''என்ன பாக்கற? உனக்கு ஒண்ணுன்னா கவலைப் பட என்னத் தவிர யாரு இருக்காங்க?''

''ஏன் எப்பப் பாத்தாலும் நெகட்டிவாவே பேசிட்டிருக்க? எல்லாமே நல்லது தான் நடக்கும் நீ ஒண்ணும் கவலைப்படாத. சந்தோஷமா நீ உன் லைஃப்ல கான்ஸன்ட்ரேட் பண்ணு.''

''எல்லாம் சரிதான், ஆனா...''

''என்ன?''

''இல்ல யோகித் உன்ன விரும்பறார், உன்ன அவருக்கே கல்யாணம் பண்ணி வெச்சுட்டா...''

''போதும் அகிலா, இதுக்கு மேல ஒண்ணும் சொல்லாத.''

''ஏன் சஞ்சு, அப்படியென்ன நான் தப்பா சொல்லிட்டேன்...''

''தப்புன்னாக் கூடப் பரவாயில்ல, அசிங்கமாப் பேசற. இனிமேல்... இனிமேல் இந்த மாதிரியெலலாம் பேசாத...''

''ஏன், நீ யாரையாவது லவ் பண்றியா?''

''போதும், தயவு செஞ்சு இங்கிருந்து போயிடு.''

''கேக்கற கேளவிக்கு பதில் சொல்லு சஞ்சனா.''

''ஸாரி என்னக் கொஞ்சம் தனியா விட்டுட்டுப் போ...''

''ஏய் என்ன நீ, யோகித் வேண்டாம் சரிதான், ஆனா யாரையாச்சும் நீ கல்யாணம் பண்ணிக்கிட்டுத் தான ஆகணும்...''

எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ, ''போயிடு போ முதல்ல இங்கிருந்து'' என்று கோபத்துடன் கத்திவிட்டிருந்தாள் சஞ்சனா.



''போதுண்டி, உன் கத்தலுக்கெல்லாம் பயப்பட்றவ நான் கிடையாது. இப்பப் போறேன், ஆனா இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க ரெண்டு பேரும் வந்துடுவாங்க. ஒழுங்கா வந்து கூட உக்காந்து லஞ்ச் சாப்டுட்டு சிரிச்ச மாதிரி பேசிட்டு வந்துடு சொல்லிட்டேன்.''

அப்படிச் சொல்லிவிட்டு அகிலா விடுவிடுவென்று வெளியே வந்திருக்க, எழுந்து வந்து கதவைத் தாளிட்டிருந்தாள் சஞ்சனா.

பெரிய மூச்சுக்களை எடுத்துக் கோபத்தை சமனப்படுத்திக் கொண்டவள், துணிகளை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள். குளித்து முடித்து கூந்தலில் தண்ணீர் சொட்ட வெளியே வந்தவள், அறைக்கு வெளியே கேட்ட பலவிதமான பேச்சுக் குரல்களில் தலையைத் துவட்டக் கூடத் தோன்றாது அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டிருந்தாள்.

இவ்வளவு வெறுப்பாக இருக்கிறதே, இனி எங்கே அவர்களை நேரில் பார்த்து சிரித்த முகத்துடன் பேசுவது,

இந்த அழகில் அவர்களுடன் அமர்ந்து சாப்பிட வேறு வேண்டுமாமே.

தனக்கு சட்டம் போட இவள் யாராம்.

ஆனால்...

இந்த அகிலாவும் ஒன்றும் போனால் போகிறது, தங்கைக்குப் பிடிக்காத போது ஏன் கட்டாயப்படுத்த வேண்டுமென்று விட்டு விடுகிறவள் கிடையாதே,

அதிலும் அவர்களுக்கு முன்பாக அவளுடைய அதிகாரத்தைக் காட்ட வேணும் ஏதாவது பேசத்தான் செய்வாள்,

மனதிற்குப் பிடித்த பழைய காட்டன் நைட்டியை அணிந்திருந்தவள் மனமே இல்லாமல் சுடிதாருக்கு மாறினாள்.

அதுவும் மிகவும் பழையதுதான்,

போதும், இவர்களுக்கு இது போதும்.

விடுமுறை நாளன்று கூட சுதந்திரமாக இருக்க முடியவில்லையே என்று மனம் அழுதது.

தலை முடியைத் துவட்டியவள், கூந்தல் பரவலாகப் போகாதவாறு ஒரு சிறிய கிளிப்பை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

பவுடர் கூடப் போடாமல் நெற்றியின் நடுவே ஸ்டிக்கர் பொட்டை எடுத்து வைத்துக் கொள்ளவும், வெளியே அகிலா கதவைத் தட்டவும் சரியாக இருந்தது.

உடல் விறைக்க சில வினாடிகள் அப்படியே அமர்ந்திருந்தவள், பிறகு மனமே இல்லாமல் எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

''என்னடி, என்ன பண்ணிட்டிருக்க? கூப்புட்லேன்னா உனக்கே வரத் தெரியாதா?'' என்று கோபத்துடன் கேட்டுக் கொண்டே தானும் உள்ளே வந்து கதவைத் தாளிட்டவள்,

''என்னடி இது?'' என்று கேட்டாள்.

எதைக் கேட்கிறாளென்று புரியாமல் சஞ்சனா பார்க்க, ''என்ன டிரஸ் இது? இதப் போட்டுட்டு வந்து என் மானத்த வாங்கப் போறியா?'' என்று கேட்டாள்.

.........



''பேசுடி...''

''ஏன் இதுக்கென்ன?''

''ச்சை, அசிங்கமா இருக்கு வேற துணிய மாத்திட்டு வா முதல்ல.''

''முடியாது.''

''வேண்டாம் சஞ்சனா, அப்புறம் நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்.''

இப்பொழுது மட்டுமென்ன மனிதப் பிறவி போலவா நடந்து கொள்கிறாள், அதிலும் அசிங்கத்தைப் பற்றி இவள் பேசுகிறாள்.

''என்ன பாக்கற, சீக்கிரம்...''

''இதப் பாரு. நீ இப்ப பேசாம வெளிய போனா வந்து பேசிட்டாவது வருவேன். இல்லன்னா வெளிய கூட வரமாட்டேன் சொல்லிட்டேன்.''

தங்கையின் குரல் அவள் சொல்வதைச் செய்வாள் என்பதைக் காட்ட, வந்த கோபத்தை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு ''சரி அதாவது சீக்கிரம் வா'' என்று வெளியே சென்றாள்.

பெரிதாக இருந்த அந்த சுடிதாரின் துப்பட்டாவை எடுத்துப் போர்த்திக் கொண்டது போல இரண்டு தோள் பட்டைகளிலும் பின் செய்து கொண்டவள் வந்த எரிச்சலையும், கோபத்தையும் முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

ஹாலில் யாரையும் காணாமல் போக, வராந்தாவில் பேச்சுக் குரல் கேட்டது.

ஒரு அடி கூட வர மாட்டேனென்று அடம் பிடித்த கால்களுடன் பிரம்மப் பிரயத்தனப்பட்டு வெளியே வந்தாள்.

''வாவ் உங்க தங்கச்சி வந்துட்டாங்க அண்ணி'' என்று அந்த யோகித் காது வரை இளித்து அவனுடைய ஆச் சரியத்தைக் காட்ட, ஓங்கிக் கன்னத்திலேயே அறைய வேண்டும் போல இருந்தது சஞ்சனாவிற்கு.

''வா சஞ்சனா, எப்படியிருக்க?''

யோகித்தின் அண்ணன் நித்திஷ் கேட்க, ''நல்லார்க் கேன்'' என்றாள்.

''என்ன இது, யார் யார வரவேற்கறது?''

அப்படிச் சொன்ன தம்பியை ''நீ பேசாம இருப்பா'' என்று நித்திஷ் அடக்க, முயன்று ''வாங்க'' என்று அழைத்து வைத்தாள் சஞ்சனா.

''அப்பவும் ஒத்த வார்த்த தான்'' என்று சிரித்த யோகித் ''ரொம்பவும் பெருந்தன்மை தான்'' என்றான்.

''வா, உக்காரு.''

''நித்திஷ் அழைக்க, இல்ல உள்ள கொஞ்சம் வேலை யிருக்கு'' என்று திரும்பப் போனாள் சஞ்சனா.

''என்ன வேல, ஓ லஞ்ச் எடுத்து வைக்கறியா?'' என்ற அகிலா ''அதெல்லாம் அப்புறமா எல்லாரும் சேந்தே போய் எடுத்து வெச்சுக்கலாம். இப்ப நீயும் எங்ககூட உக் காந்து பேசு வா'' என்று அழைத்தாள்.

''இல்ல...''

''என்ன சஞ்சு நீ, வா முதல்ல வந்து உக்காரு.''



''இல்ல எல்லாருக்கும் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வர்றேன்'' என்று சஞ்சனா அங்கிருந்து நகர ஒரு காரணத் தைக் கண்டுபிடித்திருக்க, ''என் தங்கைன்னா தங்கை தான் இது எனக்குத் தோனலையே'' என்று சிரித்தாள் அகிலா.

''எப்படியோ உங்க தங்கச்சி பரவாயில்ல அண்ணி, உங்கள மாதிரி ரொம்ப சிக்கனமில்ல...'' என்று யோகித் சொல்லிக் கொண்டிருந்தது உள்ளே வந்திருந்த சஞ்சனா வின் காதுகளில் விழுந்து தேய்ந்தது.

சொன்னதைச் செய்யாவிட்டால் எப்படி என்று சமையலறைக்கு வந்தவள், ஃப்ரிட்ஜில் இருந்த எலுமிச் சை பழங்களை எடுத்துப் பழச்சாறு தயாரித்தாள்.

அதை டம்ளர்களில் ஊற்றுவதற்காக அங்கு சற்று உயரத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி டம்ளர்களை எம்பி எடுத்தவள், பின்னால் யாரோ வரும் அரவம் கேட்டுத் திரும்பினாள்.

நினைத்தது சரியே என்பதைப் போல அங்கு அந்த யோகித் பல்லை இளித்துக் கொண்டு நின்றிருக்க, இப் பொழுது வந்த எரிச்சலை மறைக்கக் கூட முயலாது பார்த் தாள் சஞ்சனா.

''என்ன வேணும்?''

யோகித்தைப் பார்த்துக் கேட்டாள்.

''நீதான் வேணும்னு சொன்னா என்ன பண்ணுவ?''

வந்த கோபத்தில் அவளையறியாமலேயே கையை ஓங்கி விட்டிருந்தாள் சஞ்சனா.

ஆனால் அதற்குள் அவன் பின்னால் நகர்ந்து கொண்டு விட்டிருக்க, அறையிலிருந்து தப்பித்தான்.

''ஏய் உம் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்க?''

அப்படிக் கேட்டவனை அருவெறுப்புடன் பார்த்தாள் சஞ்சனா.

''உன்னப் பாக்கவே பிடிக்கல, தயவு செஞ்சு என் முகத்துல விழிக்காத போயிடு...''

''இல்லன்னா என்ன பண்ணுவ?''

அப்படிக் கேட்டதோடு மட்டும் நிற்காமல் அவன் மீண்டும் தன்னை நெருங்கி வர, ''அகிலா'' என்று கடுங் கோபத்துடன் கத்திவிட்டிருந்தாள்.

அந்த சத்தத்தில் அடுத்த சில வினாடிகளில் மற்ற இருவரும் உள்ளே வந்திருக்க, ''என்னாச்சு அண்ணி உங்க தங்கைக்கு காரணமே இல்லாம கத்தறாங்க'' என்று சிரித்தான் யோகித்.

''ஏய் பொய் சொல்லாத.''

''பொய்யா, ஏன் நான் எதுக்குப் பொய் சொல்லப் போறேன்?'' என்று அவன் அப்பாவியாய்க் கேட்க, ''முதல்ல மரியாத குடுத்துப் பேசு சஞ்சனா'' என்று தங்கைய அதட்டினாள் அகிலா.

''நடந்துக்கற விதத்துல நடந்துக்கிட்டா தாராளமாக் குடுக்கலாம்.''

''ஏன், அப்படி என்ன தப்பா நடந்துக்கிட்டார்?''

''ம், அத அவனையேக் கேளு.''

சஞ்சனா சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை, ''போதும் இதுக்கு மேல ஒரு வார்த்த பேசினாலும் அப்புறம் மரியாத கெட்டுப் போகும்'' என்று கடுங் கோபத்துடன் தங்கையின் மீது பாய்ந்தாள் அகிலா.



''போகட்டுமே, அதுக்காக என்ன நடந்தாலும் பரவா யில்லன்னு விட்டுட முடியாது.''

''பரவாயில்ல அண்ணி விடுங்க, பாவம் நீங்க எதுக்கு டென்ஷனாகறீங்க? ஆனா...''

''என்ன யோகித் எதுவானாலும் சொல்லுங்க, இவள எல்லாம் என் தங்கைன்னு சொல்லிக்கறதுக்கே எனக்கு வெட்கக் கேடா இருக்கு...''

''இல்ல உங்க தங்கை ஒரு ஹிஸ்டிரியா பேஷண்ட்டா இருப்பாங்களோன்னு தோணுது, அப்படியில்லாம இந்த அளவுக்குக் கேவலமா நடந்துக்கவே முடியாது. அதுவும் அவங்களா கற்பனை பண்ணி இல்லாதத, நடக்காததை யெல்லாம் சொல்றாங்க...''

''சரிதான் யோகித் விடுங்க, நீங்க டென்ஷனாகாதீங்க. அவ செஞ்ச தப்புக்கு நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்.''

''வாங்க நித்திஷ் நாம ஹாலுக்குப் போகலாம். ஏய் முதல்ல எல்லாருக்கும் ஜூஸ் எடுத்துட்டு வந்து குடு'' என்று தங்கையை அதட்டி விட்டு ''நீங்களும் வாங்க யோகித்'' என்று வெளியே சென்றாள் அகிலா.

அவர்கள் இருவரும் சென்ற பிறகும் கூட வெளியே செல்லாமல் நின்று தன்னையே பார்த்த யோகித்தை நெஞ்சு நடுங்கப் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன பாக்கற?''

............

''என்னையா கை நீட்டின? நீ நிம்மதியா இருக்க இனிமேல் நான் விடமாட்டேன். நோ நோ தப்புக்

கணக்கு எதுவும் போட்டுடாத உன்னக் கேவலப்படுத்தி அழ வெக்கறதுக்கு பெரிசா நான் எதுவுமே செய்ய வேண்டியதில்ல உன் அக்காவே போதும்.''

என்ன நெஞ்சழுத்தம், அவன் வேண்டுமென்றே இல்லாததையும் பொல்லாததையும் தான் சொன்னதாகச் சொன்னது மட்டுமல்லாமல், இனி தன்னை நிம்மதியாகவும் இருக்க விட மாட்டானாமே.

அது சரிதான்.

இவனே சொல்வது போல சொந்த அக்காவே தன்னை எதிரியாகப் பார்க்கும் பொழுது இவனென்ன இன்னும் எவன் வேண்டுமானாலும் வந்து என்ன வேண்டுமானாலும் சொல்லத்தானே செய்வான்.

பழச்சாறு அடங்கிய கண்ணாடி டம்ளர்களை ட்ரேயில் எடுத்து வைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள் சஞ்சனா.

கைகள் அதன் பாட்டிற்கு நடுங்கிக் கொண்டிருக்க, அது மற்றவர்களுக்குத் தெரியாமலிருக்கவும், கீழே போட்டு விடாமலிருக்கவும் முதலில் ட்ரேயை அவர்களுக்கு முன்பாக இருந்த டீபாயின் மீது வைத்தாள்.

மூவரும் தன்னையே வெறுப்புடன் பார்ப்பது தெரிய, தொடர்ந்து அங்கு நிற்கக் கூட அவளால் முடிந்திருக்க வில்லை.

அவளுடைய மனம் அவமானத்தில் கூனிக் குறுகிப் போயிருந்தது.

''என்னடி பாக்கற? எல்லாருக்கும் எடுத்துக் குடுக்கறதுக்கு இனி நான் போய் வேற ஆளையா கூட்டிட்டு வர முடியும்?''



''ஆனாலும் நீ இந்த அளவுக்கு மோசமா இருப்பேன்னு நான் நினைச்சு கூடப் பாக்கல'' என்று தங்கையை ஏளனமாகப் பார்த்த அகிலா ''ம் எல்லாருக்கும் எடுத்துக் குடுடி'' என்று கத்தினாள்.

அகிலாவின் ஏளனத்திலும், அதட்டலிலும் ஏற்கனவே மிகவும் மனமுடைந்து போயிருந்த சஞ்சனாவிற்கு இப்பொழுது உடலோடு சேர்ந்து உள்ளமும் நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது.

''என்னடி, ஏன் இப்படி மாடு மாதிரி நின்னுட்டே இருக்க. எடுத்துக் குடு...''

அகிலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீண்டும் ட்ரேயைக் கையிலெடுத்திருந்தாள் சஞ்சனா.

முன்னைக்கும் சற்று அதிகமாகவே இப்பொழுது கைகள் நடுங்க, ட்ரேயை இறுகப் பற்றிக் கொண்டாள்.

ஆனாலும் எப்படி அந்தத் தவறு நடந்ததென்று சஞ்சனாவிற்கு இப்பொழுது நினைத்தாலும் கூடப் புரியவில்லை.

அனைவருக்கும் பழச்சாறைக் கொடுப்பதற்காக ட்ரேயை எடுத்துக் கொண்டு முதலில் அமர்ந்திருந்த யோகித்தின் அண்ணன் நித்திஷிடம் வந்தது வரை மட்டுமே அவளுக்கு நினைவில் இருந்தது.

மனதால் கூட யாரையும் புண்படுத்திப் பழக்கப்பட்டிராத மென்மையான உள்ளம் கொண்ட சஞ்சனாவிற்கு அந்த வினாடியில் தன்னுடைய நிலை இன்னதென்று ...ால் விளக்கிச் சொல்ல முடியாத அளவிற்கு

படு மோசமாகவும், பயங்கரமாகவும் தெரிய, அதனால் வந்த விளைவு அவளையறியாமலேயே கையிலிருந்த ட்ரேயைத் தவற விட்டிருந்தாள்.

அது மிகச் சரியாக நித்தீஷின் மேலேயே விழ, கண்ணாடி டம்ளர்களில் இருந்த பழச்சாறு அவனுடைய உடலெங்கும் சிந்தி முக்கியமாக அவனுடைய துணிகளை நாசம் செய்திருந்தது.

வினாடியில் இவையனைத்தும் நடந்து முடிந்திருக்க, பயத்தில் இப்பொழுது வெளிப்படையாகவே நடுங்கத் தொடங்கி விட்டிருந்தாள் சஞ்சனா.

நடந்த தவறுக்காக அவள் மன்னிப்புக் கேட்க முயன்றாலும் அவளால் வாயைத் திறந்து பேச முடிந்திருக்கவில்லை.

அவளுடைய நிலை இப்படியிருக்க, ஏற்கனவே கோபத்திலிருந்த அகிலாவோ இப்பொழுது பத்ரகாளி ஆகியிருந்தாள்.

வெறி கொண்டவள் போல எழுந்து வந்திருந்தவள் தங்கையின் கன்னத்தில் ஓங்கி அறைந்திருந்தாள்.

அப்பொழுதும் கோபம் குறையாதவளாகத் தங்கையின் கழுத்தைப் பிடித்து ''முதல்ல மன்னிப்புக் கேளுடி'' என்று நித்தீஷின் காலடியில் தள்ளி விட்டிருந்தாள்.

சஞ்சனாவைப் பொறுத்தவரை அவள் எப்பொழுதுமே மிகவும் நியாயமானவள் என்பதால் நித்தீஷின் மீது பழச்சாறு கொட்டி விட்டதற்காக மனதார மிகவும் வருந்தவே செய்தாள்.

உணர்ந்து மன்னிப்பும் கேட்டாள்.



ஆனால் அதற்கு மேல் ஒரு வினாடி கூட அவளால் அங்கு நிற்க முடிந்திருக்கவில்லை.

அளவிட முடியாத அவமானத்தில் கூனிக் குறுகிப் போயிருந்தவள், அடுத்த வினாடி தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள்.

வந்தவள், அறையை உள்புறமாகத் தாளிட்டு விட்டு படுக்கையில் விழுந்திருந்தாள்.

சொல்லொணாத வேதனையில் உடலும் உள்ளமும் இறுகிப் போய் விட்டிருக்க, அது அழுகைக்கும் இடம் கொடுத்திருக்கவில்லை.

எவ்வளவு நேரம் அப்படியே கிடந்தாளோ, நடந்ததே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்ததில் நெஞ்சு உலைக்களம் போலக் கொதித்துக் கொண்டிருக்க, துளியும் மனம் அமைதி அடையாமல் தவித்தாள்.

ஆனாலும் படுக்கையை விட்டு எழவோ, யாரையும் பார்க்கவோ சுத்தமாகப் பிடிக்காமல் போக, அன்று முழுவதும் அந்த அறையே கதியெனக் கிடந்தாள்.

# 33

மேலும் எவ்வளவு நேரம் சென்றதோ, வெளியிலிருந்து யாரோ அறைக் கதவைத் தட்டுவது கேட்க எழுந்து அமர்ந்தாள்.

உடனே படுக்கையை விட்டும் எழுந்தவள் தலை முடியையும், உடையையும் ஓரளவு திருத்திக் கொண்டு மனமே இல்லாமல் சென்று கதவைத் திறந்தாள்.

வெளியே பக்கத்து வீட்டுப் பாட்டி நின்றிருப்பதைப் பார்த்தவள், ஓரளவு மனம் அமைதியடைய ''வாங்க பாட்டி'' என்றாள்.

''என்னமா, உடம்புக்கு என்ன செய்யுது?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையே பாட்டி.''

''பின்ன ஏன் காலைலிருந்து நீ உன் ரூமை விட்டு வெளியவே வரல, இந்நேரம் வாசலுக்கும் உள்ளுக்கும் எத்தன தடவ நடந்திருப்ப ஏன் இன்னைக்கு ஆளையேக் 'காணலன்னு மனசு கேக்காம பாக்க வந்தேம்மா...''

''வாங்க பாட்டி உக்காருங்க.''

''இருக்கட்டும், நீ என்ன சாப்புட்ட?''

..........

''பேசும்மா...''

''லேசா காய்ச்சலடிக்கிற மாதிரி இருந்தது பாட்டி, அதான் ஒரு நாளைக்கு சாப்பிடாம இருந்தா...''

''சொல்லு, காலைல இங்க என்ன பிரச்சன?''

............

''உன்னத்தான் சஞ்சனா.''

''அதெல்லாம்...''

''பொய் சொல்லாத உன் அக்கா ஏதாவது சொன்னாளா?''

.............



''வீட்டுக்கு யாரோ ஆம்பளைங்க ரெண்டு பேர் வந்துட்டுப் போன மாதிரி இருந்ததே, உங்கக்காவும் மதியம் அவங்க கூடவே கிளம்பிப் போனதப் பாத்தேன்.''

..............

''சொல்லுடாம்மா, என்ன உன் சொந்தப் பாட்டியாவே நினைச்சு உன் மனக் கஷ்டத்தையெல்லாம் சொல்லலாம். அத விட்டுட்டு எல்லாத்தையும் மனசுக்குள்ளயே பூட்டி வெச்சுக்கிட்டு நீயும் உங்கம்மா மாதிரி வேதனப் பட்டுட்டிருக்காத.''

அப்படிச் சொன்ன பாட்டியைப் பார்த்தாள் சஞ்சனா.

''ஆமாம்மா எனக்கும் எல்லாம் தெரியும். உங்கம்மா தான் சொன்னாங்க, பாவம் உங்கப்பா இல்லாம உங்க ரெண்டு பேரையும் வளர்த்து ஆளாக்கறதுக்கும், படிக்க வெக்கறதுக்கும் உங்கம்மா பட்ட கஷ்டம் எனக்குத் தெரியாததா? இனிமேல் உன் அக்கா செய்யறதையெல்லாம் பாத்துக்கிட்டு நீ சும்மா இருந்தாலும் என்னால சும்மா இருக்க முடியாது. மதியமே தாத்தா வந்து என்னன்னு கேக்கறேன்னு தான் சொன்னார். நாந்தான் வேண்டான்னுட்டேன்.''

...........

''ரொம்பவும் முடியலேன்னா நீ வந்து நம்ம வீட்ல இருந்துக்கோ...''

அதே நேரம் ''யார் வீட்ல யார் இருக்கணுங்கறது எங்களுக்குத் தெரியும் திறந்த வீட்ல எதுவோ வந்து நுழையற மாதிரி யாரும் வந்து எங்களுக்கு அறிவுரை சொல்ல

வேண்டிய அவசியமில்ல'' என்று அகிலா உள்ளே வர மற்ற இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

...............

''ஏய் என்னடி, நான் வெளிய போற வரைக்கும் கமுக்கமா உள்ள இருந்துட்டு அப்புறமா வந்து ஊரெல்லாம் நியாயம் சொல்லுவியா?''

அகிலா தங்கையை மிரட்ட, ''அவ எதுவும் சொல்லல, ஏன் அவ ரூம விட்டுக் கூட வெளிய வரல. நாந்தான் என்ன ஆளயே காணமேன்னு மனசு கேக்காம வந்து கதவத் தட்டினேன்'' என்றார் பாட்டி மரகதம்.

''அதுதான் தெரியுமே, இத்தன நாளும் எப்படியோ ஆனா இனிமேல் இந்த மாதிரியெல்லாம் கேக்க ஆளில்லேன்னு நினைச்சுக்கிட்டு குடும்பத்துக்குள்ள வந்து பிரச்சன பண்ணினா அப்புறம் நடக்கறதே வேற...''

''என்னடி, என்ன செய்வ?''

பாட்டி கோபத்துடன் கேட்க, ''ஏன் இனியும் என்ன செய்யணும். அவங்க அவங்களுக்கே ரோஷமிருக்குமே... தேவையில்லாம மூக்கை நுழைச்சு வாங்கிக் கட்டிக்கணும்னு தலைல எழுதியிருந்தா அதுக்கு நானென்ன செய்ய முடியும்'' என்றாள் அகிலா.

காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாததாலோ என்னவோ நிற்கக் கூட முடியாமல் எப்படியோ வர, ''ஸாரி பாட்டி எனக்காகப் பாக்கப் போய் தான இப்ப உங்களுக்கும் பிரச்சன...'' என்றாள் சஞ்சனா.

''நான் இவ்வளவு பேசிட்டிருக்கேன், திரும்பவும் நீ அவங்களுக்காகப் பரிஞ்சு பேசிட்டிருக்கியா?'' என்று



அகிலா மீண்டும் தங்கையின் மீது பாய, ''சரிதான் சஞ்சும்மா நீ போய் முதல்ல வயித்துக்குப் பாரு... உடம்பப் பாத்துக்கோ'' என்று விட்டு அதற்கு மேல் ஒரு வினாடி கூட நிற்காமல் வெளியே சென்றிருந்தார் மரகதம்.

பாட்டி சொன்னது போல வயிற்றுக்கு எதையாவது கொடுக்கலாமென்று நேராக சமையலறைக்கு வந்தாள் சஞ்சனா.

ஆனால் அங்கு அனைத்தும் துடைத்து வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பசி மேலும் சற்று அதிகமாகவே தெரிந்தது.

எப்படியோ அனைவரும் சாப்பிட்டிருக்கிறார்களே அதுவே போதுமென்று சஞ்சனாவின் மனம் அவளையறியாமலேயே நிம்மதியடைந்தது.

சரிதானென்று திரும்பியவளுக்கு அங்கு ஷெல்பில் இருந்த பிஸ்கட் பாக்கெட் கண்களில் பட, ஒரு கப் காபியை மட்டும் கலக்கிக் கொண்டு சில பிஸ்கட்டுகளை ப்ளேட்டில் வைத்து எடுத்துக் கொண்டு தன்னறைக்குச் செல்வதற்காக வெளியே வந்தாள்.

அதே நேரம் ''நில்லுடி'' என்று தமக்கை அகிலா வந்து குறுக்கே நின்றிருக்க என்னவென்பதைப் போலப் பார்த்தாள்.

உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன்தான்,

''அந்தக் கிழவி கிட்ட என்னவெல்லாம் சொன்ன?'' என்று அகிலா கோபத்துடன் கேட்க ''பெரியவங்கள மரியாதையாப் பேசு'' என்றாள் சஞ்சனா.

''அதெல்லாம் அந்தம்மாவுக்கு இந்த மரியாத போதும், சொல்லு என்ன சொன்ன?''

..........

''உன்னைத்தான்டி.''

''நானெதுவும் சொல்லல, குடும்பப் பிரச்சன வெளிய தெரிஞ்சா நமக்குதான் அவமானம். அதனால நீயே சொல்லச் சொன்னாக்கூட நான் எதயும் சொல்ல மாட்டேன்...''

''ஓ, உருக்கமாப் பேசினா நான் எல்லாத்தையும் மறந்து சிரிப்பேன்னு நினைச்சுட்டிருக்கியா?''

அப்படிக் கேட்ட தனது அக்காவை வெறுப்புடன் பார்த்தாள் சஞ்சனா.

என்ன பெண் இவள்.

ஒரு புழு பூச்சியை விடவும் கூடத் தன்னைக் கேவலமாக நடத்தி அவமானப் படுத்தியதுமில்லாமல் தன் மீது வேறு இவள் கோபமாக இருக்கிறாளாமா.

அதைச் சற்றும் சிந்திக்காமல் வெளிப்படையாகவே சொல்கிறாளென்றால் இவள் எவ்வளவு பெரிய சுயநலவாதியாக இருக்க வேண்டும்.

''என்னடி, என்ன பாக்கற?''

..............

''உன்னால எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா? உன்னையெல்லாம் என் தங்கைன்னு சொல்லிக்கறதுக்கே எனக்கு அவமானமா இருக்கு...''

என்ன இவள், தான் சொல்ல வேண்டியதை அனைத்தும் இவள் சொல்கிறாளென்று சஞ்சனாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



''கூடிய சீக்கிரமே நானும் நித்திசும் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கோம். ஆனா எங்க கல்யாணத்துக்கு நீ வராம இருந்தா எல்லாரும் ரொம்ப சந்தோஷப்படுவாங்க. முக்கியமா நான் அதத் தான் விரும்பறேன்.''

''ஏன் அவங்களே உன்ன மன்னிச்சாக் கூட என்னால மன்னிக்க முடியாது.''

''இதையெல்லாம் இப்ப ஏன் சொல்றேன்னா என் விஷயத்துல இனிமேல் நீ தலையிடக்கூடாது. முக்கியமா மத்தவங்ககிட்ட என்னப் பத்திப் பேசக்கூடாது. அப்படியே அவங்களாப் பேசினாலும் கூட நீ அத என்கரேஜ் பண்ணக் கூடாது. இல்லன்னா நான் மனுஷியாவே இருக்க மாட்டேன் சொல்லிட்டேன்.''

கண்களில் நெருப்பு உமிழத் தங்கையைப் பார்த்துச் சொல்லி விட்டு அகிலா தன்னுடைய அறைக்குச் சென்று விட்டிருக்க, கால்கள் வேரோடி விட்டாற் போல எதுவும் செய்யத் தோன்றாமல் அங்கேயே நின்று விட்டிருந்தாள் சஞ்சனா.

சில வினாடிகளில் நடப்பிற்கு வந்திருந்தவள், நேராகத் தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத அளவிற்கு மனம் வெறுப்படைந்திருக்க, கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

என்னவெல்லாம் சொல்லி விட்டாள்,

துளிகூட மனசாட்சியே இல்லாமல் இப்படியெல்லாம் இவளால் எப்படிப் பேச முடிந்தது.

இவள் இவ்வளவு வெறுப்பைக் காட்டும் அளவிற்குத் தான் செய்த தவறு தான் என்ன.

நியாயமாகப் பார்த்தால் நடந்ததற்கு இவள்தான் வேதனைப்பட வேண்டும்.

ஏன் தன்னிடம் மன்னிப்புக் கூட கேட்டிருக்க வேண்டும்.

அவளுக்கு வேண்டுமானால் காலையில் வந்தவர்கள் வேண்டியவர்களாக இருக்கலாம்.

ஆனால் தனக்கு மூன்றாவது மனிதர்கள்தான் அல்லவா. அப்படிப்பட்டவர்கள் முன்பு தன்னை எந்த அளவிற்குக் கேவலமாகப் பேசினாள்.

ஏன் கையைக்கூட நீட்டி விட்டாளே,

அப்படித் தான் செய்த தவறுதான் என்ன.

அந்த மாதிரி நடந்தது கூட அவள் கேவலமாக நடத்தியதால் மட்டுமே அல்லவா,

அதுவும் தன்னை அறியாமல், காலையிலிருந்து நடந்தவற்றையெல்லாம் மனம் வலிக்க மீண்டுமொரு முறை நினைத்துப் பார்த்தாள் சஞ்சனா.

பச்சை ரணமாக மனம் ஆற மறுத்தது.

அதுவே அப்படியிருக்க, இப்பொழுது மீண்டும் என்னவெல்லாம் சொல்லி விட்டாள்.

தாயின் நினைவு தான் வந்தது.

ஐயோ அம்மா, என்னை மட்டும் ஏன் இப்படித் தன்னந் தனியாக விட்டு விட்டு நீங்கள் மட்டும் சென்றுவிட்டீர்கள்.

என்னால் ஒன்றுமே முடியவில்லையே,

மிகவும் பயமாக இருக்கிறதே,



மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ம்கூம் வேண்டாம்.

இந்தக் கண்ணீர் இருக்கிற கொஞ்சநஞ்ச தன்னம்பிக்கையும் அழித்துவிடும்,

அதற்குத் தான் இடம் கொடுக்கவே கூடாது,

இவளென்ன தன்னை ஒதுக்கி வைப்பது,

நாமே ஒதுங்கிக் கொண்டுவிட வேண்டியதுதான்.

அந்த எண்ணம் வந்ததுதான் தாமதம்,

அவளையறியாமலேயே மனம் சற்று நிம்மதியடைந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்,

தொடர்ந்து யோசிக்க யோசிக்க அதுதான் சரியென்ற முடிவுக்கே வந்திருந்தாள் சஞ்சனா.

அடுத்ததாகத் தான் செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்தாள்,

எங்காவது வெளியூரில் வேலை தேடிக் கொண்டு சென்று விட்டால்,

ஆம், அதுதான் சரி.

சரிதான், ஆனால் யார் தனக்காக வேலையை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள்.

ஆனால் தான் நினைப்பது மட்டும் நடந்தால்,

முக்கியமாகத் தன்னால் யாரும் சிரமப்பட வேண்டிய அவசியம் வராது.

தானும் நிம்மதியாக இருக்கலாம்,

ஆனால் உண்மையான நிம்மதி அதுவல்ல என்று உள்மனம் குறுக்கே வந்து மூக்கை நுழைத்தது.

முதலில் தந்தையை இழந்து, இப்பொழுது உடன் பிறப்பையும் துறந்து கண்காணாத இடத்திற்கு போவதில் என்ன பெரிய நிம்மதியிருக்க முடியுமென்றும் மனம் கேள்வி கேட்டது.

சரிதான்,

அது நிம்மதியைக் கொடுக்காதுதான்,

ஆனால் தேவையற்ற பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம் அல்லவா,

அப்படியானால் நாளை இது பற்றி முதலில் எம்.டி. யிடம் பேசிவிட வேண்டும்.

சஞ்சனா அப்படி நினைக்கவும் எம்.டி.யிடமிருந்து அழைப்பு வரவும் சரியாக இருக்க, சில வினாடிகள் தயங்கி விட்டுப் பிறகு அட்டெண்ட் செய்து பேசினாள்.

பேசிவிட்டு அப்படிச் சொல்வதைவிட எதிர்பக்கத்தில் ஸ்ரீஹரி சொல்வதை கேட்டுவிட்டுப் போனை வைத்திருந்தாள் சஞ்சனா.

அவன் சொன்னது இதுதான்.

அது முக்கியமான விஷயம் பேச வேண்டும். உடனே கிளம்பி வா என்பதுதான்.

சொன்னான் என்பதை விடக் கட்டளையிட்டான் எனறு சொன்னால் அது சரியாக இருக்கும்.

நிமிர்ந்து கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி மாலை ஆறாகி இருந்தது.



இந்த நேரத்தில் அப்படியென்ன முக்கியமான விஷயம் பேச வேண்டுமாம்.

அவன் காலையில் அழைத்தது தான் இப்பொழுது நினைவிற்கு வந்தது.

தான் அப்பொழுதே கிளம்பிச் சென்றிருந்தால்,

எத்தனையோ பிரச்சனைகளைத் தடுத்திருக்கலாம் அல்லவா,

ஆனால் இனி அதை யோசித்து என்ன பயன்,

எப்படியோ இப்பொழுது இருக்கும் இறுக்கமான மனநிலை மாறினால் போதுமென்று நினைத்த சஞ்சனா சரிதான் சென்று வரலாமென்று முடிவு செய்து விட்டிருந்தாள்.

அரை மணி நேரத்தில் பக்கத்திலிருக்கும் பஸ் ஸ்டேண்டுக்கு அருகில் வந்து விடுவதாக அவன் சொன்னது நினைவிற்கு வர, உடனே குளிக்கச் சென்றாள்.

இருபது நிமிடங்களில் கிளம்பி முடித்தவள், கண்ணாடியின் முன்பாக நின்று தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

அவ்வளவாக ஏன் ஒப்பனைகள் எதுவுமே செய்யாத போதும் அன்று முகம் பளிச்சென்றிருப்பது தெரிய சிரிப்புதான் வந்தது.

ஸ்ரீஹரியைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே அன்று வழக்கத்திற்கு மாறாக ஒருவித படபடப்பையும் பயத்தையும் ஏற்படுத்தியது.

அன்று தான் இருக்கும் மனநிலையில் ஸ்ரீஹரியிடம் இயல்பாகப் பேச முடியுமா என்று மனம் கேள்வி கேட்டது.

அவன் தூண்டித் துருவி எதையாவது கேட்டால் தன்னால் அதற்கு ஈடு கொடுத்துப் பேச முடியுமா என்றும்,

நின்று யோசித்துக் கொண்டே இருந்தால் அதற்கு முடிவே இல்லையென்று தோன்றியதில் உடனே கிளம்பி விட்டிருந்தாள்.

கிளம்பி வெளியே வந்தாள், தமக்கை ஹால் சோபாவில் அமர்ந்திருப்பதைக் கண்டாள்.

தயக்கத்துடன் அவளுக்கு முன்பாகச் சென்று நின்றவளுக்கு, பயத்தில் நெஞ்சு நடுங்கியது.

இன்னும் என்னவெல்லாம் சொல்லி விடுவாளோ என்று நினைக்கத் தோன்றியது.

''நான் கொஞ்சம் வெளிய போய்ட்டு வர்றேன்.''

.........

''உங்கிட்ட...''

''நீ எங்க போனா எனக்கென்ன, இல்ல வராமலே அப்படியே போய்ட்டாலும் தான் எனக்கென்ன? அதை யேன் எங்கிட்ட சொல்ற?''

............

''உன்னப் பாத்தாலே எனக்கு வெறுப்பா இருக்கு. இனிமேல் நான் உனக்கு அக்காவும் கிடையாது நீ எனக்குத் தங்கையும் கிடையாது. என் முகத்துலயே விழிக்காத.''



அப்படிச் சொல்லிவிட்டு அகிலா மீண்டும் படிக்கத் தொடங்கி விட்டிருக்க, சஞ்சனாவின் உள்ளம் சுக்கல் நூறாகிப் போனது.

வினாடியில் என்னவெல்லாம் சொல்லி விட்டாள்,

இவளால் எப்படி இப்படியெல்லாம் பேச முடிகிறது.

''இன்னும் ஏன் நின்னுட்டிருக்க? சொன்னது எதுவும் காதுல விழலையா?''

என்னதான் காலையிலிருந்து அவள் பேசியதெல்லாம் மிகவும் அதிகப்படியே என்றாலும் அதற்கெல்லாம் ஏதாவது ஒரு சில சப்பைக் காரணங்களாவது இருந்தன.

அதனாலோ என்னவோ அது எவ்வளவு சிரமமானதாக இருந்தாலும் அதை ஜீரணித்துக் கொள்ள சஞ்சனாவால் முடிந்திருந்தது.

ஆனால் எந்தக் காரணமுமே இல்லாமல் இப்பொழுது அவள் சொன்ன வார்த்தைகள்,

காலையிலிருந்து அடக்கி வைத்திருந்ததற்கெல்லாம் சேர்த்து இப்பொழுது ஓவென்று வர, உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஏற்கனவே எடுத்த முடிவு இப்பொழுது வலுப் பெற்றிருந்தது.

எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் எங்காவது கண்காணாத தொலைவுக்குப் போய் விட வேண்டும்.

ஏதோ தோன்ற வெளியே வந்து பார்த்தாள் சஞ்சனா.

எம்.டி.யின் கார் நின்றிருக்க, வேகமாக அருகில் சென்றாள்.

''ஸார் நீங்க எப்ப வந்தீங்க?''

எதுவும் பேசாமல் ஸ்ரீஹரி தனக்குப் பக்கவாட்டு முன்பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டிருக்க, ஏறி அமர்ந்தாள் சஞ்சனா.

சிறு தயக்கத்துடன் தான்.

சொன்னது போல பஸ் ஸ்டேண்டுக்கு அருகிலேயே நிற்காமல் இங்கே ஏன் வந்தான், பார்ப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள் என்ற எண்ணம் தோன்றினாலும், அதைக் கேட்கும் துணிவோ மனநிலையோ அப்பொழுது அவளுக்கு இருக்கவில்லை.

ஸ்ரீஹரி அவன் பாட்டுக்குக் காரை செலுத்திக் கொண்டிருக்க, காருக்குள் அமைதி நிலவியது.

அப்படியே மேலும் சில நிமிடங்களும் சென்றிருக்க, திரும்பி ஸ்ரீஹரியைப் பார்த்தாள் சஞ்சனா.

சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்ட அவனுடைய முகத்திலிருந்து அவளால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும் எதையாவது பேச வேண்டுமே என்று வாயைத் திறந்தாள்.

''கமல் வெளியூர் போயிருந்தாரே ஸார், வந்துட்டாரா?'' என்று கேட்டாள்.

அதற்கும் பதில் வராது போக, அவனுடைய மௌனத்திற்கான காரணம் புரியாமல் திகைத்தாள்.



# 34

தொடர்ந்து வந்த பதினைந்து நிமிடங்களில் ஒரு கட்டடத்தின் முன்பாகக் கார் நின்றிருக்க ''வா'' என்ற ஒற்றை வார்த்தையுடன் தான் முதலில் இறங்கியிருந்தான் ஸ்ரீஹரி.

அவனைத் தொடர்ந்து தானும் இறங்கிக் கொண்ட சஞ்சனா, அவனைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றாள்.

உள்ளே சென்று பார்த்த பிறகு தான் அது ஒரு பயன்படுத்தப்படாத பழைய கட்டடம் என்பது புரிந்தது.

முன்பு எதற்கோ அலுவலகமாக உபயோகித்திருப்பார்களோ என்று நினைக்கத் தோன்றியது.

தயக்கத்துடன் உள்ளே வந்திருந்த சஞ்சனா, கல்லாக இறுகியிருந்த ஸ்ரீஹரியின் முகத்தைச் சற்றே பயத்துடன் பார்த்தாள்.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்,

''அப்படியொன்னும் எதையாவது பேசணுமேன்னு மனசுக்குப் பிடிக்காம கூடப் பேச வேண்டிய அவசியமில்ல.''

திடீரென்று அப்படிச் சொன்ன ஸ்ரீஹரியை நிமிர்ந்து பார்த்தாள் சஞ்சனா.

''வீட்லயே இருந்துட்டே கூட வர முடியாதுன்னு சொல்லலாம், அதுக்காக அத்தெ மாமா வீட்டுக்கெல் லாம் போக வேண்டிய அவசியமில்ல...''

''இப்பவும் கூடப் பிடிக்கலேன்னா கிளம்பிட்டே இருக் கலாம், கஷ்டப்பட்டு சகிச்சுக்கிட்டெல்லாம் இருக்க வேண் டிய அவசியமில்ல.''

தான் காலையில் சொன்னது பொய்யென்று தெரிந்து விட்டதோ,

அதை மனதில் வைத்துத்தான் இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறானோ,

சரிதான்...

தானும் காலையில் இவன் அழைத்ததுமே கிளம்பி வந்திருந்தால் எத்தனை பிரச்சனைகளைத் தவிர்த்திருக் கலாம்.

''காலைல நான்...''

''வேண்டாம்மா எதுவும் சொல்ல வேண்டாம் விடு.''

''ஸாரி ஸார்...''

''அந்த ஸார விடு முதல்ல.''

''பின்ன எப்படிக் கூப்டுட்றதாம்?''

''ஏன் எனக்குப் பேர் இருக்கு தான?''

''அதெப்பிடி...''

''அப்ப வாடா போடான்னு கூப்புடு.''

''ம், இது வேணும்னா கரெக்ட்.''

''எது?''



''வாடா போடா தான்.''

''சஞ்சு...''

ஆசையாக எதையோ சொல்ல வந்தவனின் குரலில் என்ன இருந்ததென்று சஞ்சனாவால் கண்டு கொள்ள முடியவில்லை.

ஆனாலும் அது நெஞ்சுக்குள் ஒருவிதப் படபடப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.

அங்கிருந்த சோபாவில் ஏற்கனவே சஞ்சனா அமர்ந் திருக்க, தானும் அமர்ந்தான்.

''சொல்லு என்ன பிரச்சன?''

அப்படிக் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தாள்.

என்னவென்று சொல்வது.

எதைச் சொல்வது,

அதையெல்லாம் அப்படியே சொன்னால் தன்னைக் கேவலமாக நினைத்துவிட மாட்டானா,

ஏன் தான் இருக்கும் திசையில் கூடத் தலை வைத்துப் படுக்க மாட்டானோ என்னவோ,

ஏனோ ஸ்ரீஹரியின் ஏளனப் பார்வையை சந்திப்பதைப் பற்றி சஞ்சனாவால் நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லை.

''ம்.''

''என்ன கேட்டிங்க?''

தனது கேள்வியில் உதட்டோரம் ஏளன வளைவுடன் பார்த்தவனை மனம் வலிக்கப் பார்த்தாள்.

''என்ன பிரச்சனைன்னு கேக்கறேன்.''

எவ்வளவு எளிதாகக் கேட்கிறான்.

எதில் தொடங்குவது, எதைச் சொல்வது எதுவுமே புரியாமல் விழித்தாள்.

''என்னமா?''

மனதைக் கல்லாக்கிக் கொண்டவள், ''அதெல்லாம் ஒரு பிரச்சனையும் இல்லையே'' என்றாள்.

சஞ்சனாவின் பதிலில் அவனையறியாமலேயே கோபம் வந்திருந்தது ஸ்ரீஹரிக்கு.

அது அப்படியே அவனுடைய வார்த்தைகளிலும் வெளிப்பட்டது.

''சரிதான் எவனோ ஒரு மூணாவது மனுஷங்கிட்ட நீ ஏன் உன் சொந்தப் பிரச்சனைகளப் பத்தியெல்லாம் சொல்லணும்?''

அப்படிச் சொன்னவனின் வார்த்தைகளில் விரக்தியும், வெறுப்பும் கலந்திருந்ததோ,

ஏனோ ஸ்ரீஹரியின் கோபத்தையும், வெறுப்பையும் அன்று அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

அதை வெளிப்படுத்தவும் செய்தாள்,

''சொல்ல வேண்டிய விஷயமா இருந்தா நானே உங்ககிட்டக் கட்டாயம் சொல்வேன்... ஹரி'' என்றாள்.

அப்படிச் சொன்னவளைப் பார்த்தான் ஸ்ரீஹரி.

என்னதான் யோசிக்காமல் பெயர் சொல்லி அழைத்து விட்டிருந்தாலும், அதற்குப் பிறகுதான் அப்படிச் செய்தது தவறோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு,



சற்றுப் பயமாகவும்,

ஏனோ இப்பொழுதெல்லாம் அவளால் ஸ்ரீஹரியை எம்.டி. என்ற கோணத்தில் மட்டும் பார்க்க முடிய வில்லை.

ஏன் அவனே ஒரு முறை சொன்னது போல நண்ப னாகவும் பார்க்கத் தோன்றியது.

ஆனாலும் தன்னுடைய குடும்பப் பிரச்சனையை மட்டும் அவனிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை,

எங்கே அதையெல்லாம் சொன்னால் தன்னை ஏளன மாகப் பார்ப்பதோடு, வெறுத்தும் விடுவானோ என்று பயமாக இருந்தது.

ஆனால் அப்போதைய ஸ்ரீஹரியின் நிலையோ அவள் மனதிற்குள் நினைப்பதற்கு நேர் மாறாக இருந்தது.

ஏன், அப்பொழுது மட்டும்தான் என்றில்லை,

தொடக்கத்திலிருந்தே அவன் சஞ்சனாவைப் பார்த்த கோணம் வேறாகத்தான் இருந்தது.

ஸ்ரீஹரியைப் பொறுத்தவரை அவன் எப்பொழுதும் சாதாரண இளைஞர்களைப் போல இல்லாமல் லட்சிய வாதியாக இருந்தான்.

தன்னைவிடவும் ஏன் அவன் தன்னைப் பற்றி யோசித் ததே இல்லை எனலாம்.

அந்த அளவிற்கு எந்நேரமும் குடும்பம், தொழில் என்று அதைப் பற்றியே யோசித்துக் கொண்டு, அதற்காக உழைத்துக் கொண்டும் இருந்தான்.

அப்படி உழைத்தவன் தான் நினைத்ததை சாதித்தும் இருந்தான்.

அதற்குப் பிறகும் தான், தன் குடும்பம் என்று மட்டும் பாராமல் தன்னைச் சார்ந்தவர்கள், நம்பியவர்கள் என அனைவருக்கும் அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்தான்.

அதனாலோ என்னவோ இத்தனை நாளும் அதுவும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் அவனுடைய வாழ்க்கையில் சஞ்சனாவைப் பார்க்கும் வரை அவன் ஒரு பெண்ணைப் பற்றி நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

ஆமாம், அது அவளைப் பார்க்கும் வரை மட்டும்தான்.

படிக்கும் காலம் தொட்டு அதற்குப் பிறகும் வெற்றிகரமாகத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கும் இத்தனை வருடங்களில் அவனும் எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்தும், பேசிப் பழகியும் இருக்கிறான்.

ஒரு குறிப்பிட்ட எல்லை வரை,

ஏன் அவன் மட்டும் 'ம்' என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அதில் எத்தனையோ பெண்கள் திருமண உறவிற்கும், மிகச் சிலர் வேறு மாதிரியான உறவிற்கும் தயாராக இருந்தனர். இருக்கின்றனர். என்பதையும் அவன் அறிவான்.

ஆனால் ஸ்ரீஹரி மனதால் கூட அவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்ததில்லை.

அவனைப் பொறுத்தவரை தனக்கென வரப் போகிறவளுக்காக அவன் உடலினும் மேலாக மனதைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று நினைப்பவன்.



அப்படியிருந்தவனின் மனதிற்குள் ஏன் அவனே கூட அறியாமல் உள்ளே வந்து சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்தாள் சஞ்சனா.

அந்த அளவிற்கு அவளுடைய நடை உடை பாவனை பழகும் விதம் என அனைத்து விதத்திலும் ஸ்ரீஹரியை மிகவும் ஈர்த்திருந்தாள்.

ஆனாலும் சஞ்சனாவின் விஷயத்தில் அவன் நினைத்தது அவ்வளவு எளிதாக நடந்து விடவில்லை.

அந்த அளவிற்கு அவள் தனக்கென ஒரு எல்லையை வகுத்துக் கொண்டு மற்றவர்களை, முக்கியமாக ஆண்களை அதிலிருந்து வெகு தொலைவில் தள்ளி நிறுத்தினாள்.

அவசியத்திற்குக் கூடப் பேசுவதைத் தவிர்த்தாள்.

# 35

சஞ்சனா அப்படியிருக்க, ஸ்ரீஹரியின் நிலையோ நாளுக்கு நாள் பரிதாபத்திற்கு உரியதாகிக் கொண்டிருந்தது.

பார்த்த உடனேயே மனதிற்குள் வந்திருந்தவள் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக உயிருடன் ஒன்றாகிப் போனாள்.

தொழிலைத் தவிர வேறு எதையுமே நினைக்கக் கூட நேரமில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தவனுக்கு இப்

பொழுது சஞ்சனாவைத் தவிர வேறு எந்த நினைவுமே வரவில்லை.

இனிமேலும் மனதிற்குள் வைத்துக் கொண்டிருக்க முடியாது என்னும் நிலைக்கு வந்திருந்தவன், இதைப் பற்றிப் பேசிவிட வேண்டுமென்று காலையிலேயே சஞ்சனாவை அழைத்திருந்தான்.

தன்னைப் போல சஞ்சனாவின் நிலை இல்லையென்றாலும், அவளுக்கும் தன்னைப் பிடித்திருக்கிறது என்பதில் ஸ்ரீஹரிக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

என்ன ஒரு பெண்ணாக, அதுவும் இப்பொழுது அவளிருக்கும் நிலையில் அதைத் தானாகக் காட்டிக் கொள்ள முடியாமலிருக்கும் என்பதும்,

அதிலும் தாயை இழந்து அவள் தவித்த தவிப்பு,

அதைவிட அதிகமாக இப்பொழுது குடும்பத்திற்குள் அவள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகள்,

என சஞ்சனாவுடைய இப்போதைய நிலை அனைத்தும் ஸ்ரீஹரிக்கும் தெரிந்தே இருந்தது.

அதனாலேயே அவள் மேல் இருக்கும் ஈர்ப்பு அவனுக்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்ததென்றும் சொல்லலாம்.

ஏன் அவள் மட்டும் சம்மதித்தால் எதைப் பற்றியும் யோசிக்காமல் உடனே சஞ்சனாவைத் தன்னவளாக்கிக் கொண்டு தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வரவும் தயாராக இருந்தான்.

ஆனால் தனது மனமும், எண்ணமும் சஞ்சனாவிற்குத் தெரியாதே என்று நினைத்தவன் உடனே அதை



அவளுக்குத் தெரியப்படுத்தி விட வேண்டுமென்று பெரும் ஆவல் கொண்டான்.

எதையெதையோ பேசி விஷயத்தை திசைதிருப்பிக் கொண்டிருக்க, வேண்டாமே என்று நேரடியாக விஷயத்திற்கு வரவும் எண்ணினான்.

"என்ன ரொம்பவும் யோசன போலிருக்கு?"

அப்படிக் கேட்ட சஞ்சனாவைப் பார்த்தவன், "அப்ப எங்கிட்ட சொல்லக்கூடாத விஷயங்களும் நிறைய இருக்குங்கற அப்பிடித்தான?" என்று கேட்டான்.

"அதல்லாம்..."

"என்னமா?"

ஸ்ரீஹரியின் அந்த அன்பான வார்த்தை என்னவோ செய்ய, தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள எவ்வளவோ முயன்றும் பின் முடியாமல் தோற்றாள்.

சஞ்சனாவின் அந்த நிலை ஸ்ரீஹரியையும் தன்னிலை மறக்கச் செய்திருக்க, "சஞ்சு..." என்று அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான்.

இழுத்தவன் அவளைத் தன் மார்போடு அணைத்திருக்க, அவளும் முற்றிலுமாகத் தன் வசமிழந்து அவன் மேலேயே சாய்ந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படியே சென்றதோ சஞ்சனாவின் நிலை புரிய மேலும் அவளை இறுக அணைத்து அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

ஆனால் அந்த வினாடியில் தன் நிலை புரிந்து நடப்பிற்கு வந்திருந்த சஞ்சனா, தன் முகம் நோக்கிக் குனிந்

திருந்த ஸ்ரீஹரியை பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளியிருந்தாள்.

தான் இந்த அளவிற்கு பலவீனமானவளா என்று நினைத்தவளுக்கு லேசாக உடல் நடுங்க, அவளையறியாமலேயே கண்களும் கலங்கிப் போய் விட்டிருந்தன.

அது அப்படியே கோபமாகவும் மாறியிருந்தது.

திடீரென்று சஞ்சனா அப்படித் தன்னைப் பிடித்துத் தள்ளி விடுவாளென்று துளியும் எதிர்பார்த்திருக்காத ஸ்ரீஹரி, சற்றே தடுமாறிப் பின் மீண்டும் இயல்பு நிலைக்கு வந்திருந்தான்.

''சஞ்சு...''

''என்னடா, என்னாச்சு?'' என்று உதடுகளில் ஒரு வித மந்தகாசப் புன்னகை தவழ மீண்டும் அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான்.

ஆனால் அவனுடைய கைகளுக்கு சிக்காமல் பின்னால் நகர்ந்து கொண்டிருந்த சஞ்சனாவிற்கு இப்பொழுது மேலும் அதிகமாகக் கோபம் வந்திருக்க, அவனை உதடுகள் துடிக்கப் பார்த்தாள்.

''என்னடா..''

''நீங்க... நீ...''

''ம், என்னமா?''

''நீங்க.. இந்த மாதிரி இருப்பீங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல.''

''எந்த மாதிரி?''

''சிரிக்காதீங்க.''



''ஆரம்பத்திலிருந்தே என் உடம்பு மேல உங்களுக்கு ஒரு கண் இருக்கறது எனக்குத் தெரியும்...''

''ஆனாலும்... நீங்க இவ்வளவு கேவலமானவராசை...''

உச்சகட்ட அருவெறுப்புடன் ஸ்ரீஹரியைப் பார்த்த சஞ்சனா ''உங்க எண்ணம் மட்டும் ஜெயிச்சிருந்தா அப்புறம் என் பிணத்தத் தான் நீங்க பார்த்திருக்கணும்'' என்று அழுகையுடன் அந்த அறையை விட்டு வெளியே ஓடி வந்திருந்தாள்.

கட்டிடத்திற்கு வெளியேயும், அடுத்ததாக வீதியில் இறங்கியிருந்தவள் அவள் பாட்டிற்கு வெறி கொண்டவளைப் போல கால் போன போக்கில் நடக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

கண்ணீர் மட்டும் கண்களிலிருந்து தாரை தாரையாக வழிந்து கொண்டே இருந்தது.

அப்படியே நடந்து போய்க் கொண்டிருந்தவள், திடீரென்று தன்னை உரசுவதைப் போல ஏதோ கார் ஒன்று வந்து அருகில் நின்றிருக்கத் திரும்பிப் பார்த்தாள்.

ஸ்ரீஹரியின் கார் தான்.

''ஏறு''

ஸ்ரீஹரி சொல்லச் சொல்ல அதைக் காதில் கூட வாங்கிக் கொள்ளாமல் மேலும் வேகமாக நடந்தாள்.

ஆனாலும் விடாமல் அவன் இப்பொழுது பாதையை மறைத்து நின்றிருக்க, எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள்.

''முதல்ல கார்ல ஏறு சஞ்...''

''முடியாது''

''நல்லா இருட்டிடுச்சு பாரு. அதோட இது ஒன்னும் அவ்வளவா நல்ல பாதையும் கிடையாது...''

''அதப்பத்தி உங்களுக்கென்ன?''

''ஏன்னா என்ன மாதிரி கேவலமானவங்க ஊர் உலகத்துல இன்னும் நிறையப் பேர் இருக்கலாம்...''

''அத நான் பார்த்துக்கறேன்.''

''சரிதான், இப்பக் கார்ல ஏறு.''

ஸ்ரீஹரியின் அந்த அழுத்தமான வார்த்தைகளில் இனி என்ன சக்தி இருந்ததோ, உடனே ஏறி அமர்ந் திருந்தாள்.

அவள் அமர்ந்தது தான் தாமதம், உடனே வேகமாகக் காரை செலுத்தத் தொடங்கிவிட்டிருந்தான் ஸ்ரீஹரி.

ஆனால் அவனைப் போலவே சஞ்சனாவும் அப் பொழுது எதையும் புரிந்து கொள்ளும் மனநிலையில் இருக்கவில்லை.

அடுத்த பத்து நிமிடங்களில் கார் தனது வீட்டின் முன் பாக வந்து நின்றிருக்க, வந்த அழுகையை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டபடி இறங்கிக் கொண்டாள்.

சஞ்சனா வீட்டிற்குள் செல்லும் வரை நின்று பார்த்த ஸ்ரீஹரி, அதற்குப் பிறகு முன்பை விட அதிக வேகத் துடன் காரை செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

அவனுடைய மனம் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத அளவிற்கு ஒரு வித விரக்தியில் ஆழ்ந்து போயிருந்தது.



எவ்வளவு கீழ்த்தரமாகத் தன்னை எண்ணி விட்டாள்.

அவளுடைய உடலின் மேல் தனக்கு தொடக்கத் திலிருந்தே கண்ணாமே,

அது மட்டுமா கேவலமானவன் என்றும் அல்லவா சொல்லிவிட்டாள்.

அதுவும் வினாடியில் என்னவெல்லாம் சொல்லிவிட் டாள்.

அவள் மீது ஒரேயடியாகத் தான் இத்தனை அன்பை யும் காதலையும் வைத்திருக்க வேண்டாமோ.

சரிதான் போகட்டும்.

போகட்டும் என்றால்,

அவளை மறந்து விட்டு விடுவதென்பது தன்னால் முடியுமா.

ஏன், அது இந்தப் பிறவியில் நடக்கக் கூடிய ஒன்றல் லவே.

எவ்வளவு சாதாரணமாகத் தூக்கியெறிந்து விட்டுப் போய் விட்டாள்.

அப்படிப் பார்த்தால் தான் செய்ததும் தவறு தானோ.

அதிலும் சஞ்சனாவைப் போன்று ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிக்கும் ஒரு பெண் தான் நடந்து கொண்டதை எப்படி அனுமதிப்பாள், அனுமதிக்க முடி யும்.

சரிதான்,

அனுமதிக்க முடியாதுதான்,

அதற்காக அந்த மாதிரியா பேசுவது.

அதிலும் கடைசியாக அவள் சொன்ன வார்த்தைகள், இப்பொழுது நினைத்தாலும் ஸ்ரீஹரியின் நெஞ்சுக் கூட்டை நடுங்கச் செய்வதாய் இருந்தன.

பிணத்தைப் பார்க்க நேர்ந்திருக்கும் என்று விட்டாளே,

எப்படிப்பட்ட பயங்கரமான வார்த்தைகள்,

லட்சத்தில் ஒரு பங்காகக் கூட அந்த மாதிரி தவறான எண்ணத்துடன் தான் தொட்டிராத போது, அப்படி ஒன்று நடக்கவும் வாய்ப்பே இல்லையே.

ஆனால் அது அவளுக்குத் தெரியாதே.

ஆனாலும் அவள் தன்னைப் பற்றிப் புரிந்து கொண்டது அவ்வளவுதானா.

முட்டாள்தனமாக யோசிக்கும் தன் மீது இப்பொழுது அவனுக்கே கோபம் வந்திருந்தது.

புரிந்து கொள்வதென்ன, அதற்கு முயற்சி கூட செய்ய மாட்டேன் என்னும் நிலையில் அல்லவா இப்பொழுது சஞ்சனா இருக்கிறாள்.

அப்படிப்பட்ட பெண்ணாக அவள் இருக்கையில் தனது எண்ணத்தின் போக்கே தவறல்லவா.

சந்தித்த முதல் தடவையிலேயே மனதிற்குள் வந்திருந்தவள், போகப் போகத் தன் உயிருடன் கலந்து விட்டது தனக்கு மட்டும் தானே தெரியும்.

அவளைப் பொறுத்த வரை நான் இன்னும் மூன்றாவது மனிதன் தானே.

முதலில் அதைத் தெரியப்படுத்த அல்லவா தான் முயற்சி செய்திருக்க வேண்டும்.



அதை விட்டுவிட்டு...

ஏதேதோ யோசனையுடன் வீட்டுக் காம்பவுண்டுக்குள் காரை விட்டிருந்தவன் அதற்குப் பிறகுதான், தான் வீடு வந்து சேர்ந்து விட்டிருந்ததையே உணர்ந்தான்.

''வா ஹரி''

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி உள்ளே வந்த மகனை வரவேற்றார்.

''என்னடாப்பா...''

''என்னமா?''

''இல்ல வர லேட்டாகும்னு சொல்லிட்டுப் போனியே, அதோட...''

''ம், என்னமா சொல்லுங்க?''

''இல்ல ஏனோ பாக்க டல்லாவும் தெரியற...''

''அப்படியா தெரியறேன்! இது தான் அம்மாங்கறது'' என்று புன்னகையுடன் தாயைப் பார்த்தவன், ''நீங்க சாப்டுட்டு எனக்கு டைனிங் டேபிள் மேலேயே மூடி வெச்சுடுங்க வேல நிறைய இருக்கு நான் சாப்பிட லேட்டாகும்'' என்று விட்டுத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தான்.

## 36

ஸ்ரீஹரியின் நிலை அப்படியிருக்க, சஞ்சனாவின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

அந்த அளவிற்கு அவளுடைய உடலும் உள்ளமும் கொதித்துக் கொண்டிருந்தது.

தன்னை என்னவென்று எண்ணினான்.

எதற்கும் ஒத்துழைக்கும் பெண்ணென்று நினைத்து விட்டானோ.

தன்னையெப்படி ஒருவர் அப்படி எண்ணலாம்.

அதிலும் காலையில் யோகித்தினால் வந்த பிரச்சனைகள் தான் அப்பொழுது அவளுக்கு நினைவிற்கு வந்தன.

இவர்களுடைய அக்கா, தங்கைகளிடம் எல்லாம் யாராவது இப்படி எல்லை மீறி நடந்து கொண்டால் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடுவார்களோ.

யாரோ ஒருத்தி என்றால் மட்டும் அப்படியென்ன ஏளனம், இளக்காரம்....

தொடர்ந்து மேலே யோசித்தவளுக்கு எதுவோ முரண்பாடாய்ப் பட்டது.

என்னதான் ஸ்ரீஹரி செய்தது மன்னிக்க முடியாத தவறென்றாலும் அவனை அந்த யோகித்துடன் ஒப்பிடுவதா.

அது மலைக்கும், மடுவுக்குமான வித்யாசமல்லவா.

முதலில் ஒப்பிடவே முடியாதே,

அந்த யோகித்...

ம்கூம் அவனைப் பற்றி யோசிப்பது கூட அனாவசியம், நேர விரயம்.

ஆனால் ஸ்ரீஹரி.



ஏனோ அவனை நினைத்த மாத்திரத்திலேயே நின்று போயிருந்த கண்ணீர் மீண்டும் வழியத் தொடங்கி விட்டிருந்தது.

இருந்திருந்து அவன் எப்படி...

தன் மனம் என்ன பாடுபடுமென்று கூட அவனுக்குப் புரியாமல் போய் விட்டதே.

ஏனோ ஸ்ரீஹரியை அந்த மாதிரி தவறான எண்ணத்துடன் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

நினைத்துப் பார்க்க முடியவில்லையா!

அப்படியானால் அவன் அப்படி நடந்து கொண்டது இல்லையென்று ஆகிவிடுமா,

இத்தனை நடந்து விட்டதற்குப் பிறகும் அதை ஒப்புக் கொள்ள மாட்டேனென்று அடம்பிடிக்கும் தனது முட்டாள் மனதை இனி என்னவென்று சொல்வது,

ஆனால்...

அப்படியொன்றும் அவன் தன்னை வலுக்கட்டாயமாகப் பணிய வைக்க முயலவில்லையே.

தானே அல்லவா அவனுடைய கைகளில் நெகிழ்ந்தோம்.

நெகிழ்ந்தது மட்டுமா...

ஏனோ சஞ்சனாவால் அதற்கு மேல் அதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தான் இந்த அளவிற்கு பலவீனமானவளா என்று நினைத்தவளுக்கு உடலும் உள்ளமும் ஒரு சேர நடுங்கத் தொடங்கிவிட்டிருந்தன.

முழுத் தவறையும் தன் மேல் வைத்துக் கொண்டு யோசிக்காமல் அவனை என்னவெல்லாம் சொல்லிவிட்டோம்.

பதிலுக்கு அவன் தன்னைத் திருப்பிக் கேட்டிருந்தால்,

பிறகு முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது,

ஆனால் ஸ்ரீஹரியைப் பொறுத்தவரை அவன் அந்த மாதிரியெல்லாம் எதையும் சொல்லிக் காட்டி வேதனைப் பட வைப்பவன் கிடையாதே.

அதுவும் தன் விஷயத்தில் தொடக்கத்திலிருந்தே அவன் எவ்வளவு இதமாக நடந்து கொள்கிறான்.

ஏன் இயல்பிலேயே கெட்டவனென்றால் இத்தனை நாட்களில் அது அவனது குணத்திலேயே வெளிப்பட்டிருக்குமே.

ஆனால் அப்படியெல்லாம் இல்லாமல் அவன் எந்த அளவிற்குப் பார்த்துப் பார்த்து, ஏன் பார்வையில் கூட கண்ணியத்தைக் கடைபிடித்தானே.

அப்படிப்பட்டவனைப் போய் தான் என்ன வார்த்தை சொல்லி விட்டோம்.

அதிலும் ஒரு பெண், தானே அப்படி அவனுடைய கைகளில் நெகிழ்ந்து விட்ட பொழுது, அவன் அப்படி நடந்து கொண்டதை மட்டும் தவறென்று எப்படிச் சொல்ல முடியும்,

தொடர்ந்து மேலே யோசித்துக் கொண்டே சென்றவளுக்கு இப்பொழுது முழுத் தவறும் தன் மீது தானென்று தோன்றத் தொடங்கிவிட்டிருந்தது.



ஏன் அப்படித்தான் என்ற முடிவுக்கே வந்திருந்தாள்.

இந்த அளவிற்கு யோசித்தவளுக்கு நிச்சயம் அவன் தவறான எண்ணத்துடன் தன்னை நெருங்கியிருக்கவில்லை என்பதும் இப்பொழுது உறுதியாகி இருந்தது.

அப்படியானால்...

ஏனோ வயிற்றிலிருந்து ஜிவ்வென்று ஏதோ ஒன்று பறந்து தொண்டைக் குழியில் வந்து நின்று கொண்டு விட்டதைப் போல உணர்ந்தாள்.

உடலும் உள்ளமும் ஒரு சேரப் படபடவென்று அடித்துக் கொள்ள, அந்த உணர்வை இன்னதென்று புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள்.

ஆனால் அது சில வினாடிகள் தான்,

உடனே அது என்னவென்று புரிய, இப்பொழுது சற்றும் நிலை கொள்ள முடியாமல், தலைகால் புரியாமல் தவித்தாள்.

ஏனோ இப்பொழுது உலகமே ஒளி மயமாகி விட்டாற் போலிருக்க, ஆறடிக்கும் உயரமான ஸ்ரீஹரியின் கம்பீரமான உருவம் அவளுடைய மனக்கண்களில் தோன்றி அவளை முகம் சிவக்கச் செய்தது.

இப்பொழுது தான் இருக்கும் மனநிலையில் தான் அப்பொழுது ஸ்ரீஹரியும் இருந்தானோ,

அப்படியானால் ஸ்ரீஹரிக்கும் தன் மேல் காதல் தானோ,

ஏனோ உடலும் உள்ளமும் சறுகாகி விட்டாற் போலிருக்க, இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத அள

விற்கு ஒருவித இன்ப வேதனையில் எங்கோ வானத்தில் பறந்தாள்.

உடனே ஸ்ரீஹரியிடம் பேசியாக வேண்டும் போலப் பரபரத்த மனதை அரும்பாடுபட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இனி நாளை எப்படி அவனை நேருக்கு நேர் எதிர் கொள்வது.

பார்வையை சந்திப்பது,

அதுவே சிரமமென்னும் பொழுது இனி எங்கே வழக்கம் போலப் பேசுவது,

அவளையறியாமலேயே முகம் சூடாகிச் சிவக்க, அந்தத் தனிமையிலும் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியாது தோற்றாள்.

அது நாள் வரையிலும் உணர்ந்திராத அளவிற்கு சஞ்சனாவின் உள்ளம் அன்று ஒருவித அமைதியில் ஆழ்ந்து போயிருந்தது.

அப்படியே படுக்கையில் விழுந்தவள்தான், அந்த அமைதி தந்த சுகத்தில் அன்று வழக்கத்தை விடவும் கூட நன்றாக உறங்கிப் போனாள்.

# 37

"குட்மார்னிங் கமல்"

"வாவ்..! குட்மானிங்"



"என்ன?"

"இல்ல இன்னைக்கு தேவதை மாதிரி வந்திருக்கீங்களேன்னு பாத்தேன்."

அப்படிக் கேட்ட கமலைப் புரியாமல் பார்த்தவள், "அப்படியெல்லாம் இல்லையே" என்றாள்.

கமல் சொல்வது போல அன்றைக்குத் தன்னை ஒப்பனை செய்து கொள்ளத் தோன்றியதென்னவோ உண்மை தான், ஆனால் வேண்டாமென்று கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருந்தாள்.

"நேரத்துலயே வந்துட்டீங்க போலிருக்கு?"

"சரிதான், அப்புறம் ஒரு குட் நியூஸ் தெரியுமா?" என்று கமலேஷ் கேட்க, "என்னது, உங்களுக்குக் கல்யாணம் முடிவாகி இருக்கா?" என்று கேட்டாள் சஞ்சனா.

"அது சரி, இனி அது ஒன்னு..."

"ஏன் விரக்தியாப் பேசறீங்க. அதுக்கு அண்ணன் தடையா இருக்காரேன்னா?"

"........"

"என்ன கமல் பாக்கறீங்க?"

"இல்ல இன்னிக்கு ஜாலி மூட்ல இருப்பீங்க போலிருக்கு, தினமும் பேசக் காசு கேப்பீங்க..."

"ஓ அப்பக் காரணம் அதில்லையா, சரி சொல்லுங்க என்ன விஷயம்?"

"நம்ம கம்பெனிக்கு இந்த வருஷம் தான் கோல்டன் ஜூப்ளி இயர் தெரியுமா?"

"அப்படியா!"

''ஆமாம், அத கிரேண்டா செலிப்ரேட் பண்ண லாம்னு இருக்கோமாக்கும்.''

''வாவ், சரிதான் பண்ணிடலாம்.''

''பண்ணிடலாம்னா?''

''நானும் என்னால முடிஞ்சத செய்யறேன்னு சொல் றேன்.''

''ரொம்ப சந்தோஷம், ஆனா அது எல்லாத்துக்கும் முன்னாடி நீங்க முக்கியமா ஒன்னு செய்யணும்.''

''என்ன?''

''நீங்க எப்பவும் இன்னைக்கு மாதிரியே சிரிச்சுக்கிட்டே இருக்கணும்.''

''பின்ன, இத்தன நாளும் எப்படி இருந்தேனாம்?''

''சரிதான், நீங்க நல்லாதான் இருந்தீங்க பிரச்சனை என் கண்ல தான் போதுமா?''

''ம்கூம், வேண்டாம் தப்பு எம்மேல தான்'' என்ற சஞ் சனா ''சரி நான் போய் என் வேலையைப் பாக்கட்டுமா?'' என்று விட்டுத் தன்னுடைய இடத்திற்கு ஓடியே வந் திருந்தாள்.

அடுத்த சில வினாடிகளில் தனது அண்ணன் உள்ளே வர, ''ஓ இதுதான் காரணமா'' என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டான் கமலேஷ்.

''கமல்''

''அண்ணா சொல்லுங்க.''

''வேலையெல்லாம் ஓரளவுக்குப் பழகிட்டயா?''

''ஆமான்னா, அப்பிடின்னு தான் நினைக்கறேன்.''



''என்ன தன்னடக்கமா?'' என்று சிரித்த ஸ்ரீஹரி, ''இனி மேல் நீ அப்படியே ஃபேக்டரியையும் கான்ஸன்ட்ரேட் பண்ண ஆரம்பிக்கணும்'' என்றான்.

''சரிண்ணா''

''ஃபங்கஷனுக்கு இன்னும் ஒன் மந்த் தான் இருக்கு, அதுக்குள்ள எத்தனையோ வேலைகளப் பாத்தாகணும்.''

''என்ன செய்யணும்னு சொன்னீங்கன்னா சைட்ல அதையும் பாத்துக்குவேன்.''

''அம்மா உம்மேல கம்ப்ளைன்ட் கமல்''

அப்படிச் சொன்ன அண்ணனை என்னவென்பதைப் போலப் பார்த்தான் கமலேஷ்.

''வீட்டுக்கே போக மாட்டேங்கறியாம். நேரத்துக்கு சாப்பிட மாட்டேங்கறியாம். ஆனாலும் அநியாயத்துக்கு நீ இவ்வளவு நல்லவனா மாறியிருக்கக் கூடாதுப்பா'' என்று சிரித்த அண்ணனைத் தானும் புன்னகையுடன் பார்த்தான் கமலேஷ்.

தனது அண்ணனைப் பார்த்துக் கமலேஷிற்குப் பெருமையாக இருந்தது.

சொல்ல வரும் விஷயம் எதுவாக இருந்தாலும் அதைத் தவறாக எடுத்துக் கொண்டு விடாதபடி சொல்ல அவ ரால் எப்படி முடிகிறதென்று ஆச்சரியமாகவும்,

''என்னப்பா''

''சரிண்ணா, இனிமேல் அப்படி நடக்காம பாத்துக் கறேன்.''

''சந்தோஷம், இல்லன்னா உன்ன நிறைய வேல வாங் கறேன்னு அப்புறம் என் சாப்பாட்டக் கட் பண்ணினாலும்

பண்ணிடுவாங்கப்பா கொஞ்சம் பாத்துக்கோ. என்னப்பா சொல்லு?''

''ராகினி போன் பண்ணியிருந்தாங்கண்ணா.''

''அப்படியா!''

''ஆமாம், உங்க மொபைல் நெம்பருக்குக் காலையிலிருந்து நாலஞ்சு தடவ கூப்பிட்டாங்களாம். லைன் கிடைக்கவே இல்லன்னு சொன்னாங்க.''

''இன்னைலிருந்தே ஒரு நாளைக்கு டூ அவர்ஸ் ஃபேக்டரிக்கும் போய் வேல பழகு கமல்.''

''சரிண்ணா, ஈவினிங் டைம் போகட்டுமா, இல்ல இப்பவே...''

''சாயங்காலமே போ, போதும்.''

எம்.டி. தனக்குக் கொடுத்திருந்த வேலைகளை செய்து முடித்திருந்த சஞ்சனா, அதை அவனுடைய பார்வைக்கு வைப்பதற்காக எடுத்து வந்தாள்.

மனம் படபடவென்று அடித்துக் கொள்ள, நெஞ்சு பதறத் தொடங்கி விட்டிருந்தது.

எங்கே லேசாக நடுங்கும் கைகள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்று மனதிற்குள் மிகவும் பயந்து போய் விட்டிருந்தாள்.

தன்னைப் பார்த்ததும் இறுகிப் போன எம்.டி.யின் முகம் அவளுக்கிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் காணாமல் போகச் செய்திருந்தது.

''கமல்.''

''அண்ணா.''



''இந்த வேலைகளையெல்லாம் இனிமேல் நீயே பாருப்பா, அப்ப தான் நான் முக்கியமான வேலைகள்ல கவனம் செலுத்த முடியும்.''

''சரிண்ணா...'' என்று கமலேஷ் சொல்வதற்கும், யாரோ உள்ளே வருவதற்கும் சரியாக இருக்க திரும்பிப் பார்த்தான் ஸ்ரீஹரி.

ஏன் மற்ற இருவரும் கூட,

யாரோ ஒரு பெண் உள்ளே வந்திருக்க, ''வாவ் ராகிணிக்கா!'' என்று ஆச்சரியத்துடன் அழைத்தான் கமலேஷ்.

வந்தவளை ஸ்ரீஹரியும் புன்னகையுடன் வரவேற்க, அந்த ராகினியோ சஞ்சனாவை ஒரு பார்வை பார்த்து விட்டுப் பிறகு திரும்பி ஸ்ரீஹரியைப் பார்த்தாள்.

''என்னப்பா நீங்க ரொம்பவும் பிஸியாயிட்டீங்க போலிருக்கு?'' என்று ஸ்ரீஹரியை ராகினி கேட்க, ''ஆமாம் எங்க அண்ணா என்னைக்கு ஃப்ரீயா இருந்து நீங்க பாத்திருக்கீங்க?'' என்று கேட்டான் கமலேஷ்.

அப்படிக் கேட்ட கமலேஷை ''ஆமா என்ன நீ இங்க இருக்க?'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள் ராகினி.

''ஏன் இருக்கக் கூடாதா?''

''அது உன் இஷ்டம் தான, உனக்கும் பிஸினஸ்க்கும் ரொம்ப தூரம்னு சொல்லிட்டிருப்பியே அதனால கேட்டேன். அதோட...''

''ம், என்ன சொல்லுங்க?''

''உங்க அண்ணனுக்கும், உனக்கும் வேற அவ்வளவா ஆகாதே'' என்று கமலேஷைப் பார்த்த ராகினி ''ஆனா

இப்ப அதெல்லாம் சரியாயிடுச்சு போலிருக்கே. நாந்தான் ஏதேதோ சொல்லிட்டிருக்கேன் போலிருக்கே'' என்று அதையும் தானே சொன்னாள்.

அந்த ராகிணி சொன்னதை ஸ்ரீஹரி ஒரு பொருட்டாகக் கூட எடுத்துக் கொள்ளவில்லையென்பது அவன் சஞ்சனா தனது பார்வைக்குக் கொண்டு வந்து வைத்திருந்த ஃபைலைப் பார்த்து கொண்டிருந்ததிலிருந்து தெரிய, கமலேஷின் நிலைதான் சற்று சங்கடமாகிப் போயிற்று.

என்றோ தான் விளையாட்டுக்குச் சொன்னதை இப்படித் தனது அண்ணனுக்கு முன்பாகப் போட்டு உடைத்து விட்டாளே என்றிருந்தது.

''அப்புறம் ஊர்ல இருந்து எப்ப வந்த?''

ஃபைலைப் பார்த்து முடித்த ஸ்ரீஹரி நிமிர்ந்து ராகிணியைப் பார்த்தான்.

''நேத்து''

''நினைச்சேன்''

''என்ன நினைச்சீங்க?''

''ரொம்பப் பிரச்சனைகள் புதுசு புதுசா வந்துட்டிருக்குன்னு காலைல போன் செஞ்சப்ப அங்கிள் புலம்பினார்.''

''ஓ, அப்ப நான் உங்களுக்குப் பிரச்சனையா?''

''அச்சச்சோ, உன்னப் போய் யாராவது அப்படி சொல்லுவாங்களா...''

''அதெல்லாம் இருக்கட்டும் ஸ்ரீ, நான் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஒன்னு சொல்லிட்டுப் போனேனே அத ஞாபகம் வெச்சுட்டிருக்கீங்களா?''



''ஓ எனக்கு ஞாபகமிருக்கே'' என்று கமலேஷ் சொல்ல, ''ஆமா யார் இந்தப் பொண்ணு?'' என்று சஞ்சனாவைக் கை காட்டிக் கேட்டாள் ராகிணி.

அப்படிக் கேட்டவளின் குரலில் ஏன் அத்தனை ஏளனம் என்று என்ன முயன்றும் சஞ்சனாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே முள்ளின் மேல் நிற்பதைப் போன்று அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தவளுக்கு, இப்பொழுது மேலும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

''அண்ணாவோட பி.ஏ. பேர் சஞ்சனா. ரொம்ப இன்டலிஜென்ட்...'' என்று கமலேஷ் பாட்டுக்கு இன்னும் சொல்லிக் கொண்டே போக ''போதும் போதும்'' என்று சத்தமாகச் சொன்னாள் ராகிணி.

''நீ போ, உன் வேலையைப் பாரு'' என்று சஞ்சனாவிடம் ஸ்ரீஹரி சொல்ல, ''ஒன் செகண்ட்'' என்று நிறுத்தினாள் ராகிணி.

''நீ எந்த ஸ்கூல்ல படிச்ச?''

..........

''இல்ல உன்ன எங்கயோ பாத்த மாதிரியே இருக்கு. என் ஜூனியர் கூட ஒருத்தி உன்ன மாதிரி தான் இருப்பா அதான்...''

அவளுடைய கேள்விக்கு சஞ்சனா பதில் சொல்லியிருக்க, ''ஓ அந்த ஸ்கூலா?'' என்று ஏளனமாக சிரித்தாள்.

''அது சரி, நீ எங்க அந்த மாதிரி பெரிய ஸ்கூல்ல எல்லாம் படிச்சிருக்கப் போற, நாந்தான் யோசிக்காம கேட்டுட்டேன். இப்ப நீ போ'' என்று அனுப்பினாள்.

அந்த ராகிணியின் ஏளனத்தில் இப்பொழுது பூமிக்குள்ளேயே போய் விட மாட்டோமா என்றிருந்தது சஞ்சனாவிற்கு.

சஞ்சனாவின் நிலை புரிய கமலேஷிற்கும் ராகிணியின் மீது கோபம் வந்திருந்தது.

ஆனாலும் தனது அண்ணனின் முகத்திற்காக அவன் அதை வெளியே காட்டாமல் மறைத்துக் கொண்டான்.

''நல்லவேளை அவங்க உன்னத் திருப்பி நீங்க எந்தக் காலேஜ்ல படிச்சீங்கன்னு கேக்கல'' என்று ஸ்ரீஹரி சொல்ல, ''ஏன் அப்படியே கேட்டிருந்தாலும் சொல்லப் போறேன்'' என்றாள் ராகிணி.

''அத சொல்லிடலாம், ஆனா அதுவே எவ்வளவு அரியர்ஸ்னு எதையாவது கேட்டுட்டா. ஏன் சொல்றேன்னா அவங்க ஃபர்ஸ்ட் மார்க் வாங்கறவங்களாக் கூட இருக்கலாம் அப்படியிருக்கும் போது நம்மளப் பாத்து அவங்க சிரிச்சுடக் கூடாது பாரு அதான்.''

தனது அண்ணனுக்கு ஒரு சபாஷ் போட வேண்டும் போலிருந்தது கமலேஷிற்கு.

அப்படிச் சொன்ன ஸ்ரீஹரியைக் கோபத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் ராகிணி.

ஏனென்றால் மற்றவர்களைப் போல இவனிடம் அவ்வளவு எளிதாகக் கோபத்தையும் வெறுப்பையும் காட்டி விட முடியாதே.

அழுத்தக்காரனாயிற்றே.

ஏற்கனவே இது வேலை நேரம், இப்பொழுது கிளம்பென்று சொல்லி விடுவானோ என்ற பயத்துடன் தான் வந்திருந்தாள்.



அதிலும் மற்றவர்களுக்கு முன்னால் மட்டும் அப்படிச் சொல்லிவிட்டால், பிறகு தன்னை யார் மதிப்பார்கள்.

ஆனால் ஸ்ரீஹரி அப்படிச் சொல்லி விடுகிறவனும் அல்ல தான்.

''அப்புறம் என்ன காலைலயே?''

ஸ்ரீஹரி கேட்க ''என்ன பண்றது பெரிய மனுஷங்கள அவங்க டைமுக்கு தான போய்ப் பிடிக்க வேண்டியிருக்கு'' என்றாள்.

''சரிதான், அப்ப நீ வேணும்னா போய் அவங்களப் பாத்துட்டு வா, எனக்கும் முக்கியமான வேலைகள் சிலது இருக்கு அதப் போய்ப் பாக்கணும்.''

முகத்திற்கு நேராக இல்லாவிட்டாலும் கிளம்பிக் கொள்ளென்று சொல்லாமல் சொல்லி விட்டிருந்த ஸ்ரீஹரியின் வார்த்தைகளில் மிகுந்த அவமானமாகிப் போயிற்று ராகிணிக்கு.

அந்தப் பெண் சஞ்சனாவை அப்படிச் சொன்னதால் தான் அவ்வளவு கோபமோ என்று நினைக்கத் தோன்றியது.

''சரி முடிஞ்சா வீட்டுக்கு வா அம்மா கூட உன்னப் பார்த்து ரொம்ப நாளாச்சுன்னு சொல்லிட்டிருந்தாங்க'' என்ற ஸ்ரீஹரி, தம்பி கமலேஷிடம் சில வேலைகளைச் சொல்லி விட்டுக் கிளம்பியிருந்தான்.

ஸ்ரீஹரி கிளம்பிச் சென்றிருக்க, திரும்பி கமலேஷைப் பார்த்தாள் ராகிணி.

''உங்க அண்ணன் முன்னைக்கு இப்ப ரொம்ப பிஸியாயிட்டார் போல?'' என்று கேட்டாள்.

''சரிதான், அவர் என்னைக்கு எந்த மாதிரியிருப்பார்னு கூட சொல்ல முடியாதே'' என்றவன், ''டீ சாப்பிடறீங் களா ராகிணி?'' என்று கேட்டான்.

''இது என்ன கேள்வி, கொண்டு வரச் சொல்லு.''

''இதோ'' என்று எழுந்த கமலேஷ் இரண்டு கப்களில் ஃப்ளாஸ்க்கிலிருந்து டீயை ஊற்றினான்.

''இந்த வேலையெல்லாம் நீ ஏன் செய்யற?''

''பின்ன யார் செய்வாங்க?''

''இதே உங்க அண்ணன் இருந்திருந்தா என்ன செஞ் சிருப்பார்?''

''எப்படியும் நாந்தான் அவருக்கும் எடுத்துக் குடுப் பேன்.''

''நீ இப்பக் கொஞ்ச நாளா தான வர்ற, அதுக்கு முன் னாடி?''

''சரியாத் தெரியல அண்ணாவோ இல்ல அவரோட பி.ஏ. விஜயோ யாராவது...''

''ஏன் அந்த பி.ஏ. மேடம்?''

ஓ இதற்காகத்தான் சுற்றி வளைத்து இத்தனை கேள்விகளா என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட கமலேஷ், ''அவங்க இந்த மாதிரி வேலைகளையெல் லாம் செய்யற மாதிரி எனக்குத் தெரியல'' என்றான்.

''ஏனோ?''

''என்னக் கேட்டா, சரிதான் ராகிணி அதையெல்லாம் விடுங்க. இந்த முறை எத்தன நாள் லீவ்ல வந்திருக் கீங்க?''



''லீவா, நான் ஜாப்ப ரிஸைன் பண்ணிட்டேன்.''

''ஓ, அப்ப இனிமேல் ஜாலி தான்.''

''சரிதான், வீட்ல கல்யாணம் பண்ணிக்க சொல்லி ஒரே டார்ச்சர் சரின்னு சொல்லிடலாம்னு இருக்கேன்.''

''அப்ப செம ஜாலி, அதுவும் லைஃப்ல செட்டிலாகப் போறீங்கன்னு சொல்லுங்க.''

''பின்ன''

''மாப்ள ரெடியா?''

''என்ன இப்படிக் கேட்டுட்ட, உங்க அண்ணா தான்.''

அப்படிச் சொன்னவளை ஆச்சரியத்துடன் பார்த்தான் கமலேஷ்.

''என்னப்பா நம்ப முடியலையா, ரெண்டு வருஷத் துக்கு முன்னாடி உங்கண்ணா என்ன சொன்னார்னு ஞாபகமிருக்கா..? சரிதான் அதையும் நானே சொல்லிட றேன் கேளு.''

''இதப்பத்திப் பேசலாம்னு தான் வந்தேன். உங்க அண்ணா தப்பிச்சுட்டுப் போய்ட்டார்'' என்றவள். ''ஆமா கொஞ்சம் முன்னாடி கேட்டதுக்கு அது உனக்கு ஞாபக மிருக்கறதா சொன்னியே'' என்று கமலேஷைப் பார்த் தாள்.

''சும்மா விளையாட்டுக்கு தான் அப்படி சொன்னேன், நீங்களே சொல்லுங்க.''

''சரிதான், படிக்கற காலத்திலிருந்தே ஸ்ரீன்னா எனக் குப் பிரியம். அவரு பின்னாடியே பைத்தியமா சுத்து வேங்கறது நான் சொல்லி உனக்குத் தெரியணுங்கற தில்ல.''

"அதே மாதிரி ஸ்ரீ கிட்டயும் கேட்டதுக்கு அவரு என்ன சொன்னார், இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சு வா அப்பவும் எனக்குக் கல்யாணமாகாம இப்படியே இருந்தேன்னா அப்ப நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொன்னாரா இல்லையா?"

"உங்கண்ணா அப்படிச் சொல்லி போன வாரத்தோட ரெண்டு வருஷம் முடிஞ்சது, அதான் வேலையை ரிஸைன் பண்ணிட்டு ஓடி வந்தேன்."

"சரியா போன வாரம் அதே நாள் வந்து நின்னிருப்பேன், ஆனா முடியல. நோ டியூஸ் அது இதுன்னு எல்லாத்தையும் முடிச்சுக் குடுக்காம அங்கிருந்து நகரக் கூட முடியல."

"அதனால என்ன, ஒரு வாரம் லேட்டா வந்திருந்தாலும் இப்ப நான் சுதந்திரப் பறவை."

ராகிணி பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போக, அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டிருந்தான் கமலேஷ்.

இதற்கு முன் எப்பொழுதும் இந்த அளவிற்கு வாயடைத்து அவன் நின்றதே இல்லை எனலாம்.

அவனுடைய அண்ணனுடைய விருப்பம் என்னவென்று தெரியாவிட்டாலும் கூட, ராகிணி தனக்கு அண்ணியாக வருவதைப் பற்றி அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஏன் ராகிணி அண்ணியாகக் கூடாது என்று தான் நினைக்கத் தோன்றியது.

"என்னப்பா பாக்கற, உங்கண்ணன் சொன்ன பேச்சு மாற மாட்டாருங்கற நம்பிக்கை தான் எனக்கும், மத்தபடி



நான் இவ்வளவு தைரியமா எப்படியிருக்க முடியும் சொல்லு?"

"அது கூடப் பாரு சரியா இந்த நேரத்துல தான் எங்க வீட்லயும் மேரேஜ் பிரஸர், நேரம் கூடி வருதுன்னு நினைக்கறேன்" என்று ராகிணி சிரிக்க, கமலேஷிற்கு அது ரசிக்கவில்லை.

என்ன இவள், திடீரென்று வந்து ஏதேதோ சொல்கிறாள் என்ற எண்ணம் அவனுக்கு.

ஆனாலும் தனது அண்ணனின் மேல் அவனுக்கு நம்பிக்கையிருந்தது.

இப்படியொரு பெண்ணை நிச்சயம் அவர் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுக்க மாட்டார் என்பதும்.

"என்ன கமலேஷ் ஸ்டன்னாயிட்ட? கைல இருக்கற டீயைக் குடி ஆறிடப் போகுது."

"எனக்கு இன்னும் கூட ஆறணும்" என்று சமாளித்தவன், முயன்று வேறு விஷயங்களைப் பேசினான்.

மேலும் ஒரு மணி நேரமும் கூட இருந்த ராகிணி, அதற்குப் பிறகே அங்கிருந்து கிளம்பினாள்.

அவள் சென்ற பிறகு தான் அவனால் இயல்பாக மூச்சு விடக் கூட முடிந்ததெனலாம்.

கமலேஷிற்கே அப்படியென்றால் சஞ்சனாவின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

ஏன், அந்த ராகிணியை சொல்வது போல, ஸ்ரீஹரி சொன்ன பேச்சு மாறுகிறவன் கிடையாதே.

அப்படியென்றால்...

ஆம், இனி தான் அவனை மறந்து விட வேண்டியது தான்.

மற்றது இருக்கட்டும்.

நிலைமை இப்படியிருக்க பிறகு ஏன் நேற்று அவன் தன்னிடம் அப்படி நடந்து கொண்டான்.

பதில் கிடைக்காத அந்தக் கேள்வியில், சஞ்சனாவிற்கு நெஞ்சுக் கூடே காலியாகி விட்டாற் போலிருந்தது.

இந்த ராகிணியை மனதிற்குள் வைத்துக் கொண்டு அவனால் எப்படித் தன்னிடம் அப்படி நடந்து கொள்ள முடிந்தது.

அவன் அவ்வளவு மோசமானவனா.

ம்கூம், இருக்காது.

மனம் அதை ஒப்புக் கொள்ள மறுத்தது.

அப்படியென்றால் அவனுடையது எந்த முகம் நிஜம்.

அவனுடைய மனதில் இருப்பதுதான் என்ன.

பதில் கிடைக்காத அந்தக் கேள்விகளால் நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்திருந்த அந்த அமைதி மீண்டும் காணாமல் போயிருந்தது.

சரிதான்.

தான் எப்படி நிம்மதியாக இருக்கலாம்.

அது கனவிலும் கூட நடக்கக் கூடாத ஒன்றாயிற்றே.

தன்னை யாரோ அழைப்பதைப் போலிருக்க, திரும்பினாள்.

கமலேஷ் நின்றிருக்க, ''என்ன கமல் சொல்லுங்க?'' என்றாள்.



''ஏதோ யோசனையா இருப்பீங்க போலிருக்கு?''

''இல்லையே.''

''இல்லையா பின்ன ஏன் ரெண்டு மூணு தடவை கூப்பிட்டும் கூட உங்க காதுல விழல?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள் சஞ்சனா.

''நீங்களும் டீ சாப்பிடுங்க சஞ்சனா. அதுக்கு தான் கூப்பிட்டேன்.''

''தேங்க்ஸ் கமல். ஆனா கொஞ்ச நேரம் போகட்டுமே.''

''சரிதான், பிஸியா?''

''ஸார் சொன்ன ரிப்போர்ட்ஸ் தான் ரெடி பண்ணிட்டிருக்கேன். என்ன கமல் சொல்லுங்க?''

''இல்ல ராகிணிக்கு எப்பவுமே மத்தவங்க மனசப் பத்திக் கவலை கிடையாது. அவங்க பாட்டுக்கு யோசிக்காம பேசிடுவாங்க. அதனால தான் டீ சாப்பிடக் கூட அப்ப நான் உங்களக் கூப்பிடலை.''

''பரவாயில்ல கமல்.''

''ஏன் டல்லா இருக்கீங்க? அதுவும் இன்னைக்கு காலைல எவ்வளவு ஹேப்பியா வந்தீங்க...''

''இல்லையே, நான் நல்லா தான் இருக்கேன்.''

''சரிதான், அப்ப என் கண்ணுக்கு தான் அப்படித் தோணுது போல.''

கமலேஷிற்கு ராகிணியை நினைத்துக் கோபமாக வந்தது.

அவர்கள் மட்டும் சஞ்சனாவை கேலி செய்து பேசாமல் இருந்திருந்தால் பாவம் சஞ்சனா இப்படி மனமுடைந்து போயிருக்க மாட்டார்களே என்றிருந்தது.

''எனக்கு உங்கள மாதிரி ஒருத்தங்க அண்ணியா வந்தா எவ்வளவு நல்லார்க்கும், அப்படி இல்லேன்னாக் கூடப் பரவாயில்லை அந்த ராகிணி மாதிரி மட்டும் ஒரு அண்ணி வேண்டவே வேண்டாம்'' என்று விளையாட்டாகச் சொல்லி விட்டு சஞ்சனாவின் முகத்தைப் பார்த்தான்.


''அச்சச்சோ என்ன சஞ்சனா ஸீரியஸா எடுத்துட்டீங்களா? நான் சும்மா ஒரு பேச்சுக்கு தான் அப்படி சொன்னேன்.''

''புரியுது கமல், ராகிணி அண்ணியா வர்றதுல உங்களுக்கு விருப்பமில்லாததால விளையாட்டுக்கு அப்படி சொன்னீங்க அதுல என்ன இருக்கு?'' என்றாள்.

கமலேஷ் மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் இயல்பாகத்தான் அப்படிச் சொன்னான் என்பது சஞ்சனாவிற்கு புரியவே செய்தது.

ஆனால் அப்படி எதுவும் நடக்க இனி வாய்ப்பே இல்லையே என்ற எண்ணமே இப்பொழுது அவளை மிகுந்த ஏக்கத்திற்குள் தள்ளியிருந்தது.

## 38



அன்று வீடு வந்து சேர்வதற்கு முன்னரே பிரச்சனை காத்திருந்தது சஞ்சனாவிற்கு.



ஆனால் அதை எதையும் அறியாதவளாக வழக்கம் போல வீட்டிற்குள் வந்தவள், சென்று கை கால் முகம் கழுவிக் கொண்டு வெளியே வந்தாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டே குளியலறையிலிருந்து வெளியே வந்தவள், ''வாங்க மேடம்'' என்ற குரலில் துள்ளி விழுந்தாள்.

யாரென்று பார்த்ததில் அங்கே யோகித்தின் பெரிய அண்ணன் விக்னேஷ் நின்று கொண்டிருப்பது தெரிய, இவன் எப்படி திடீரென்று இங்கே வந்தானென்று அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''என்னமா ஷாக்காயிட்டயா?''

..........

''சரிதான், நான் வந்த விஷயத்தப் பேசிட்டுக் கிளம்பறேன். ஏன்னா கழுத்து வரைக்கும் கல்யாண வேலைகள் இருக்கு பாரு'' என்றான்.

என்ன பேசப் போகிறான் என்பதைப் போல சஞ்சனா அவனைப் பார்க்க, ''யோகித் உன்ன நினைச்சுப் பைத்தியமாகக் கிடக்கறாம்மா. நீ மட்டும் ''ம்''னு ஒரு வார்த்த சொன்னா என் ரெண்டு தம்பிங்களோட கல்யாணத்தையும் ஒரே மேடைல...''

அந்த விக்னேஷ் பேசிக் கொண்டிருக்கும் போதே அவனை இடைமறித்திருந்தாள் சஞ்சனா.

''இதப் பத்தித் தான் பேச வந்திருக்கீங்கன்னா, ஸாரி நீங்க கிளம்புங்க.''

தங்கையின் அந்த வார்த்தையில் காளி ரூபமெடுத்து வந்து அங்கே நின்றிருந்தாள் அகிலா.

''என்னடி? யாரப் பாத்து என்ன வார்த்த சொன்ன? அவரக் கிளம்பச் சொல்ல நீ யாருடி...''

''நான் எந்தத் தப்பான எண்ணத்தோடவும் அப்படிச் சொல்லல'' என்று அந்த விக்னேஷைப் பார்த்தவள், ''நான் சொன்னது எந்த விதத்துலயாவது உங்கள ஹர்ட் பண்ணியிருந்தா மன்னிச்சுடுங்க'' என்று மீண்டுமொரு முறையும் சொன்னாள்.

''மன்னிப்பெல்லாம் எனக்கெதுக்குமா? என் தம்பி வாழ்க்கை தான் எனக்கு முக்கியம். ஆனா அவன் உன்னத் தவிர வேற ஒரு பொண்ண மனசளவுல கூட நினைச்சுப் பாக்க முடியதுங்கறான்...''

''இல்ல...''

''என்ன இல்ல?''

''நான்...''

''ம், என்னமா சொல்லு?''

''நான் வேற ஒருத்தர விரும்பறேன்.''

''அப்படிப் போடு, அதனாலதான் வேண்டாம் வேண் டாம்னு அதே பாட்டையே திரும்பத் திரும்ப பாடிட்டிருக் கியா?''

ஏளனத்துடன் சிரித்த தமக்கையை பயத்துடன் பார்த் தாள் சஞ்சனா.

அப்படியே இல்லையென்றாலும் கூட அந்த யோகித் தைத் தனக்குப் பிடிக்கப் போவதில்லையென்பதை இவளுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பதென்று தெரி யாமல் விழித்தாள்.



''பாருமா அகிலா, இனி இதுக்கு மேல நீ என்ன சங் கடப்படக் கூடாது'' என்று அந்த விக்னேஷ் தனது தமக்கையைப் பார்த்துச் சொல்ல, ஏன்? எதற்காக இவன் இப்படிச் சொல்கிறானென்று புரியாமல் விழித்தாள் சஞ்சனா.

''உன் தங்கையோ என் தம்பிய வேண்டாம்னு சொல் லிட்டா, அத நான் தப்புன்னோ, கூடாதுன்னோ சொல் லல. ஆனா எனக்கு என் ரெண்டு தம்பிங்க கல்யாணமும் ஒரே மேடைல நடக்கணும். அதனால...''

அக்கா, தங்கை இருவரும் அந்த விக்னேஷின் முகத் தையே அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

''அதனால யோகித் மனசு மாறி வேற பொண்ணக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கற வரைக்கும் உங்க கல்யாணம் தள்ளிப் போகும். இதப் பத்தி நித்திஷ் கிட்ட நான் பேசிடறேன். எதுக்கும் நீயும் பேசிடு'' என்றவன், ''அதுக்கு மேல உன் தங்கை மனசு மாறினா சொல்லு அப்புறம் பாக்கலாம்'' என்று கிளம்பத் தயாரானான்.

''இப்படி சொன்னீங்கன்னா எப்படி?''

தயக்கத்துடன் மெல்லிய குரலில் கேட்டாள் அகிலா.

''பின்ன என்ன என்னமா பண்ணச் சொல்ற, என் ரெண்டு தம்பிங்க கல்யாணத்தையும் ஒரே மண மேடைல வெச்சு நடத்தி அதக் கண் குளிரப் பாக்கணுங்கறதுல நான் உறுதியா இருக்கேன். ஏன் என் மனசு என் தம்பி களுக்கும் தெரியும். அதனால நானே மனசு மாறினாக் கூட அவங்க அதுக்கு சம்மதிக்கறது சந்தேகம் தான். சரிதான் விடு எல்லாம் நல்லபடியா நடக்கும்னு நம்பு வோம்.''

அப்படிச் சொல்லி விட்டு அந்த விக்னேஷ் கிளம்பியிருக்க, திரும்பி எரித்து விடுவதைப் போலத் தனது தங்கையைப் பார்த்தாள் அகிலா.

திடீரென்று ஏதோ தோன்றியவளாக அந்த விக்னேஷிடம் ஓடியவள், ''இருந்து சாப்பிட்டுப் போகலாமே, முதல் தடவையா வீட்டுக்கு வந்துட்டு இப்படி உடனே கிளம்பறீங்களே'' என்றாள்.

''என்ன சந்தோஷம்னு என்ன சாப்பிடச் சொல்ற, சந்தோஷமான விஷயம் ஏதாவது இருந்தா வந்து சொல்லுங்க அப்புறம் பாக்கலாம்'' என்றவன் காரில் ஏறிக் கிளம்பியே விட்டிருந்தான்.

அகிலாவின் மொத்தக் கோபமும் இப்பொழுது தங்கையின் மீது திரும்பியிருந்தது.

அதை எதிர்பார்த்திருந்த சஞ்சனாவும் சிலை போல அப்படியே நின்று விட்டிருந்தாள்.

அதிர்ச்சியும், பயமும் அவளுடைய கண்களில் அப்படியே பிரதிபலித்தன.

சும்மாவே ஆடுகிறவள் இப்பொழுது என்னவெல்லாம் சொல்லி விடுவாளோ என்றிருந்தது.

ஆனால் அதிசயமாக அவள் மனதிற்குள் எண்ணி அஞ்சியது போலெல்லாம் அகிலா தனது தங்கையை எதுவும் சொல்லி விட்டிருக்கவில்லை.

ஆனால் புலி எதற்காகப் பதுங்குகிறதோ என்று சஞ்சனாவின் பயம் மேலும் அதிகம் தான் ஆகியிருந்தது.

அகிலா நேராக அவளுடைய அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டிருக்க, தனக்கென ஒரு கப் காபியை மட்டும் கலக்கிக் கொண்டு தானும் தனது அறைக்கு வந்திருந்தாள் சஞ்சனா.

மனதிற்குள் எதுவோ தவறாகப் பட, சரிதான் கெட்டதையே எதிர்பார்த்துப் பார்த்துத் தனக்கு அதுவே பழகி விட்டது போல என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

அன்று வேலையெதுவும் செய்யத் தோன்றாமல் போக எதையெதையோ யோசித்துக் கொண்டே சும்மா படுத்திருந்தவள், எப்படி அவளையறியாமலேயே உறங்கினாள் என்று கூடத் தெரியவில்லை.

அந்த அளவிற்கு வெகுநேரம் ஆழ்ந்து உறங்கிப் போனவள், திடீரென்று விழித்துப் பார்த்தாள்.

வெளியே நன்கு இருட்டி விட்டிருந்தது தெரிய, ஏனோ அதற்குப் பிறகும் எழ மனம் வந்திருக்கவில்லை.

அப்படியே திரும்பிப் படுத்தவள் தான், மீண்டும் நன்கு உறங்கிப் போனாள்.

திடீரென்று தமக்கை தனது இரண்டு சக்கர வாகனத்தில் எங்கோ கிளம்பிச் செல்லும் ஒலி கேட்டு மீண்டும் விழித்திருந்தவள், நன்றாகத் தூக்கம் தெளிந்து படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

இந்த நேரத்தில் அப்படி எங்கே செல்கிறாளென்று நினைத்துக் கொண்டே படுக்கையை விட்டு இறங்கியவள், தனது அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

வந்தவள் அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டிருந்தாள்.

ஹாலின் முக்கியக் கதவு உட்புறமாகத் தாளிடப் பட்டிருப்பது தெரிய, இது எப்படி சாத்தியமென்று அதிர்ச்சியுடன் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அது எப்படியென்று புரிந்ததில் இப்பொழுது நடுங்கிப் போனாள்.

பக்கத்து அறைக்குள்ளிருந்து அந்த யோகித் வெளியே வர, செய்வதறியாத அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''என்ன பாக்கற?''

அந்த யோகித் ஏளனத்துடன் கேட்க, ''நீ.. நீ எப்படி, எப்ப வந்த?'' என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

''அதெல்லாம் எதுக்கு இப்ப, எப்படியோ வந்துட்டேன் அது தான் விஷயம். ஆமா நான் எதுக்கு வந்திருக்கேன்னு தெரியுமா உனக்கு?''

''சரிதான் அதையும் நானே சொல்லிடறேன். நீ என்னவோ வேற ஒருத்தன விரும்பறியாமே. சும்மா என்ன வேண்டாம்னு சொல்லியிருந்தாக் கூடப் பரவாயில்ல போனாப் போகுதுன்னு விட்டிருப்பேன். ஏன்னா நான் ஒன்னும் பாக்க மன்மதன் கிடையாது பாரு. அதோட உனக்கு எந்த விதத்துலயும் பொருத்தமும் கிடையாது. ஆனா வேற ஒருத்தனப்....''

''இப்ப என்னடா வேணும் உனக்கு.''

''ம், அப்படி வா வழிக்கு. பரவாயில்லையே நேரடியா விஷயத்துக்கே வர்றியே..''

''இப்ப இங்கிருந்து போகப் போறியா இல்ல...''



''ம், இல்லன்னா?''

''போலீஸக் கூப்புடவா?''

''ஏன், அந்த ஒருத்தன் அதான் மரியாதைக்குரியவர் உனக்கு ஒரு கஷ்டம்னாக் கூட வர மாட்டாரா?''

கடவுளே, இருந்திருந்து ஸ்ரீஹரிக்கு போய் இந்த அசிங்கமெல்லாம் தெரிவதா.

ம்கூம், கூடாது.

அவனுக்குக் கண்டிப்பாகத் தெரியவே கூடாது.

சரிதான், ஆனால் இப்பொழுது இவனை எந்த அசிங்கத்திற்கும் இடம் கொடுத்து விடாமல் வெளியே அனுப்பியாக வேண்டுமே எப்படி.

மூளையைக் கசக்கி யோசித்தாள் சஞ்சனா.

ஆனால் அதற்கும் அந்த யோகித் விட்டாலல்லவா.

''என்ன யோசனை, எது எப்படியானாலும் இன்னைக்கு என் கைல இருந்து நீ தப்பிக்க முடியாது.''

''என்ன பண்ணிடுவான்னு பாக்கறியா, உங்கிட்டெல்லாம் வாயில பேசறதுனால எந்தப் பலனும் இல்லேங்கறத நானும் கொஞ்சம் லேட்டாத்தான் புரிஞ்சுக்கிட்டேன்'' என்றவன் ஒரு அடி முன்னே எடுத்து வைத்திருக்க, நான்கடி பின்னால் நகர்ந்தாள் சஞ்சனா.

அவனைப் பார்க்கவே அருவெறுப்பாக இருந்தது சஞ்சனாவிற்கு. கொஞ்சம் பயமாகவும்.

சரிதான் நமக்கும் கை கால்கள் நன்றாகத்தானே இருக்கிறது எல்லை மீறி நடந்து கொண்டால் ஒரு கை

பார்த்து விட வேண்டியதுதானென்று நம்பிக்கையுடன் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அதற்கு முன்...

எப்படியாவது ஹாலின் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட வேண்டும்.

''என்ன விட்டா ஊர் உலகத்துல வேற பொண்ணுங்களா இல்ல, ஏன் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கணும்...'' என்று அவனுடைய கவனத்தை ஈர்க்காதவாறு பேச்சுக் கொடுத்துக் கொண்டே முன்னேறினாள்.

பாதி தூரத்திற்கும் மேலேயே வந்திருப்பாள்.

இன்னும் ஏழெட்டு அடி கூட இருக்காது.

பிறகு கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றும் விடலாம்.

ஆனால் அதற்குள் அந்த யோகித் சுதாரித்திருந்தான்.

''அப்படியே நில்லு...''

திடீரென்று அப்படிச் சொன்னவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''உன் பருப்பெல்லாம் எங்கிட்ட வேகாது. அப்படியே போய்க் கதவை திறந்துட்டு வெளியே போயிடலாங்கறதுதான உன் ப்ளான்? ஆனா அது முடியாதே...''

ஏன் இப்படிப் பல்லை இளிக்கிறான்.

அவனுடைய கன்னத்திலேயே ஓங்கிப் பளாரென்று ஒன்று கொடுக்க வேண்டும் போலப் பரபரத்த கைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.



''என்ன பாக்கற? பக்கத்து வீட்டுத் தாத்தா பாட்டி வெளியே போயிருக்காங்களாமே, அப்படியா?''

''சரிதான், அவங்களே இருந்தாலும் கூட என்ன ஒன்னும் செஞ்சுட முடியாது.''

''ஆனாலும் உங்க அப்பாவ ஒரு விஷயத்துல பாராட்டியே தீரணும், எப்படி அக்கம் பக்கத்துல வீடுகளே இல்லாத இந்த வனாந்தரத்துக்குள்ள வந்து வீட்டக் கட்டினான்...''

கத்தி வெளியில் போவோர், வருவோரின் கவனத்தை ஈர்த்தால் என்னவென்று நினைத்த சஞ்சனா, பிறகு அந்த எண்ணத்தைக் கை விட்டாள்.

வேண்டாம்.

இந்த விஷயமெல்லாம் வெளி மனிதர்களுக்குத் தெரிந்தால் பிறகு நமக்கு தான் அசிங்கம்.

பிறகு வயதுப் பெண்கள் தனியாக இருக்கும் வீடுதானே என்று எவன் வேண்டுமானாலும் வந்து வாலாட்டி விட்டுப் போவான்.

அதற்கு நாமே இடம் கொடுத்து விடக் கூடாது.

எந்த அசம்பாவிதமும் நடந்து விடுவதற்கு முன், அதே சமயம் யாருக்கும் தெரிந்து விடாமலும் தப்பிக்க முயல வேண்டும்.

''என்ன யோசிக்கற, எப்படித் தப்பிக்கறதுன்னா? எதுக்கும் இருக்கட்டும்னு உங்கக்கா வெளியே பூட்டிட்டுப் போய்ட்டாங்களே'' என்றவன் ''சரிதான் உன் பிரச்சனையே இப்போதைக்கு உன் அக்காதான்'' என்று மீண்டும் இளித்தான்.

''அதோட இந்த ஐடியாவக் குடுத்ததே உன் அக்கா தான், என் தங்கச்சி ஒழுக்கம் அது இதுன்னு பினாத்துவா, அவளத் தொட்டுட்டி...''

''வாய மூடு''

''அட, எம்மேல கோபப்பட்டு என்ன பலன்? போ போய் உங்கக்காவ வேணும்னா முதல்ல மாத்த முயற்சி பண்ணு. அவங்க கல்யாணம் நடக்கறதுக்காக, ம்கூம் அத விடக் கூட சரியா சொல்லணும்னா உன்னால அவங்க கல்யாணம் இப்ப நிக்கறத அவங்களால தாங்கிக்க முடியலங்கறதுதான் நிஜம்.''

''அதுக்காக என்ன செய்யவும் அவங்க தயாரா இருக் காங்க...''

''ஓ, அப்ப நீ ரொம்ப ஒழுங்கோ?''

''நான் மோசங்கறது தான் தெரிஞ்ச, ஊரறிஞ்ச விஷய மாச்சே...'' என்று இளித்தவனை கோபத்துடன் பார்த் தாள்.

நேரம் போகப் போக இருந்த கொஞ்சம் நம்பிக்கையும் காணாமல் போய்க் கொண்டிருந்தது சஞ்சனாவிற்கு.

முதலில் அவளும் அந்த யோகித்தை சாதாரணமாகத் தான் கணக்கிட்டிருந்தாள்.

ஆனால் போகப் போகத்தான் அவனொரு குள்ள நரி என்பது புரிந்தது.

எதற்கும் துணிந்தவன் என்பதும்,

எந்த நியாயமுமே இல்லாமல் கண் மூடித்தனமாக வெறி கொண்டவனைப் போல நடந்து கொண்டவனைத்



தனது சக்தியெல்லாம் வடிந்து போன நிலையில் பயத் துடன் பார்த்தாள் சஞ்சனா.

''வேண்டாம். கிட்ட வராத...''

''வர்றதா, இன்னும் கொஞ்ச நேரத்துல உன் தல விதியே மாறப் போகுது. அதுக்கப்புறம் எச்சில் பழமான உன்ன யாருமே சீந்த மாட்டாங்க...''

மீண்டும் தன்னைப் பிடித்து அருகில் இழுத்த யோகித்தை வெறி கொண்டவளைப் போலப் பிடித்துத் தள்ளி விட்டிருந்தாள்.

அந்த அளவிற்கு எதிர்பார்த்திராத யோகித், தூரப் போய் விழுந்தான்.

விழுந்தவன் அடிபட்ட வேங்கையென மீண்டும் சீறி யெழ, இப்பொழுது பயத்தில் கோழிக் குஞ்சாக நடுங்கவே தொடங்கி விட்டிருந்தாள் சஞ்சனா.

இனிமேல் தான் எதற்காகவும் யோசிக்கக் கூடாதென்ற முடிவுக்கு வந்திருந்தவள், ''உதவி உதவி'' என்று கத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆனால் அதற்கும் விடாமல் அடுத்த சில வினாடி களில் அந்த யோகித் சஞ்சனாவின் வாயைப் பொத்தி யிருக்க, அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தனது முழு பலத்தையும் பிரயோகித்து இயன்ற மட்டும் முயன்றாள்.

ஆனால் அந்த முயற்சியெல்லாம் யோகித் அப்போ திருந்த நிலையில் நூறில் ஒரு பங்காகக் கூட எடுபட வில்லை.

கையையும், காலையும் அசைக்கக் கூட முடியாத அளவிற்கு அவனிடம் சிக்கிக் கொண்டு விட்டிருந்தவள்,

அவ்வளவுதான் இனி குரங்கு கையில் சிக்கிய பூமாலையாக இவனிடம் சின்னாபின்னமாகி விடத்தான் போகிறோமென்ற முடிவுக்கே வந்திருந்தாள்.

ஆனால் அடுத்த வினாடியில் அந்த அதிசயம் நடந்திருந்தது.

ஆம், அதை அதிசயமென்று தான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் அப்பொழுது உள்ளே வந்திருந்த ஸ்ரீஹரி, யோகித்தின் கையில் சிக்கியிருந்த சஞ்சனாவை விடுவித்து விட்டு அவனைத் துவைத்து எடுத்திருந்தான்.

ஏற்கனவே நல்ல ஆரோக்கியமான பெண்ணான சஞ்சனாவிடம் போராடிக் களைத்து விட்டிருந்தவன், ஸ்ரீஹரியின் ஒரு சில அடிகளுக்குக் கூடத் தாக்குப் பிடிக்கவில்லை.

அப்படியே சுருண்டு விழுந்திருந்தவன், 'ஐயோ என்னை விட்டு விடுங்களென்று' ஸ்ரீஹரியின் காலைப் பிடித்திருந்தான்.

சரியாக அதே நேரம் உள்ளே வந்த சஞ்சனாவின் தமக்கை அகிலா ''ஐயோ என்ன, என்ன நடந்தது?'' என்று அதிர்ச்சியுடன் ஓடி வந்தாள்.

என்னவோ அங்கு நடந்தது எதுவுமே அவளுக்குத் தெரியாதது போலவும், அதற்கும் தனக்கும் துளியும் சம்பந்தமே இல்லாதது போலவும் அவளுடைய நடிப்பு இருந்தது.

ஆனாலும் அவளொரு முட்டாள்தனத்தை செய்திருந்தாள்.

அல்லது வேண்டுமென்றே தான் அப்படிச் செய்தாளோ.

உடன்பிறந்த தங்கையைச் சென்று பார்க்காமல் கீழே சுருண்டு விழுந்திருந்த யோகித்திடம் சென்று என்ன வாயிற்று என்று பதற்றத்துடன் விசாரித்தாள்.

அவளுடைய செய்கை ஸ்ரீஹரியின் சந்தேகத்தை உறுதிப்படுத்தியிருக்க, ''என்ன போலீஸக் கூப்புடணுமா?'' என்று கேட்டான்.

அவனுடைய கேள்வியில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள் அகிலா.

''என்ன பாக்கற, நீ சஞ்சனாவோட அக்காங்கற ஒரே காரணத்துக்காக மட்டும் தான் இப்ப உன்ன சும்மா விடறேன். ஆனா இன்னொரு தடவ உன்னால அவளுக்கொரு சின்ன இடைஞ்சல் வந்தாலும் அப்புறம் நான் இப்படிப் பேசிட்டிருக்க மாட்டேன். கூண்டோட உள்ளே போக வேண்டியது தா...''

''இல்ல, இனிமேல் நான் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்க மாட்டேன்.. என்ன... எங்கள விட்டுடுங்க...''

''முதல்ல ஒரு பொண்ணு மாதிரி நடந்துக்கோ'' என்ற ஸ்ரீஹரி திரும்பி சஞ்சனாவைப் பார்த்தான்.

ஆனால் அவளோ சுற்றி நடக்கும் எதையுமே அறியாதவளாக அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள்.

அருகில் வந்த ஸ்ரீஹரி அவளுடைய தோள்பட்டையில் கை வைத்து ''சஞ்சனா'' என்று அழைத்தான்.

அவனுடைய அழைப்பிற்கு எந்தப் பதிலும் இல்லாது போக, மீண்டும் ஒரு முறையும் அழைத்தான்.


அவளுடைய நிலை புரிய, ''வா'' என்று காருக்கு அழைத்து வந்திருந்தான்.

பொம்மை போல அவனைப் பின் தொடர்ந்து வந்தவள், அவன் முன்பக்கக் கார்க் கதவைத் திறந்து விட்டிருக்க ஏறி அமர்ந்திருந்தாள்.

எதுவும் கேட்காமல் தான் சொன்னதையெல்லாம் செய்ததிலிருந்தே, சஞ்சனாவின் அப்போதைய நிலையை ஸ்ரீஹரியால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

இதுவே மற்ற நேரமென்றால் ஏன், எதற்கு என்று எத்தனை கேள்விகளைக் கேட்டிருப்பாளென்று நினைத்தவனுக்கு நெஞ்சு உருகிப் போயிற்று.

# 39



தானும் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்திருந்தவன் நேராகச் சென்று சேர்ந்த இடம் அவனுடைய வீடு.

அவளை வீட்டுக்குள் அழைத்துச் சென்றவன், ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த தாயிடம் நடந்ததை சுருக்கமாகச் சொன்னான்.

''சரிப்பா நான் பாத்துக்கறேன்'' என்ற தாயிடம், ''வேற நல்ல லேடீஸ் ஹாஸ்டலப் பாத்துட்டு போற வரைக்கும் மேக்ஸிமம் ஒரு வாரம் இங்க இருக்கட்டும்மா...'' என்றான்.



''சரிதான் கண்ணா, பாவம் நடந்தது ரொம்ப அதிர்ச்சி போலிருக்கு. ஒரு வாரமென்ன எவ்வளவு நாள் வேணும்னாலும் பழையபடி ஆகற வரைக்கும் தங்கட்டும். ரேவதி இருந்தாப் பாக்க மாட்டேனா'' என்றவர் ''வாம்மா'' என்று சஞ்சனாவை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

சஞ்சனாவின் பொருட்கள் அனைத்தும் அவளுடைய வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்டிருந்தன.

அதிர்ச்சியின் பலனாகவோ என்னவோ அவள் அந்த வீட்டிற்கு வந்த நாளிலிருந்தே காய்ச்சலும் வந்து விட்டிருக்க, தன் சொந்த மகளைப் போலப் பார்த்துக் கொண்டார் கல்யாணி.

ஏன் அதை விட அதிகமாகவே,

உடலும், மனமும் மீண்டும் பழையபடி நலமடையும் வரை அலுவலகத்திற்கும் வேண்டாம் என்று விட்டிருந்தான் ஸ்ரீஹரி.

அன்றோடு மூன்றாவது நாளும் ஆகியிருக்க, பெருமளவு பழைய நிலைக்கே வந்திருந்தாள் சஞ்சனா.

உடல் நலமடைந்து விட்டதற்குப் பிறகு, ஏனோ அங்கு இருக்க அவளால் முடிந்திருக்கவில்லை.

தன்னை அங்கு அதிகப்படியாக உணர்ந்தாள்.

பாவம், வேறு வழியில்லையென்று அழைத்து வந்தவர்களின் தலையிலேயே கை வைப்பது நியாயமாகுமா என்றிருந்தது.

முடிந்த அளவு விரைவாக அங்கிருந்து கிளம்பி விட வேண்டும் என்றும்,

ஆனாலும் தன்னுடைய வீட்டிற்கு செல்வதைப் பற்றி மட்டும் சஞ்சனாவால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஏன் அந்த எண்ணமே அவளை மேலும் மனம் வேதனையடையச் செய்திருந்தது என்று கூடச் சொல்லலாம்.

அந்த வீட்டினர் யாருமே தன்னை வேற்றாளாகக் கருதாமல் நன்றாகப் பழகியது அவளுடைய மனப் புண்ணை ஆற்றும் பெருமருந்தாக அமைந்தது.

ஆனாலும் ஸ்ரீஹரியை மட்டும் அவளால் நேருக்கு நேர் பார்க்க முடிந்திருக்கவில்லை.

அவன் வீட்டிலிருக்கும் நேரம் அனைத்தையும் தனக்கெனக் கொடுக்கப்பட்டிருக்கும் அறைக்குள்ளேயே கழித்தாள்.

தொடக்கத்தில் அது வித்யாசமாகத் தெரியாவிட்டாலும், அதற்குப் பிறகோ அதுவே அனைவருடைய கண்களையும் ஒருசேர உருத்தத் தொடங்கி விட்டிருந்தது.

முக்கியமாகக் கல்யாணியை,

லேசாக அவருக்குள் இருந்த சந்தேகம் இப்பொழுது வலுவடைந்திருந்தது.

மகனுக்கும், சஞ்சனாவிற்கும் இடையில் எதுவோ இருக்கிறது,

அது என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

என்னவாக வேண்டுமானாலும் என்ன....

''அம்மா''

''வா கமல், என்ன இந்த நேரத்துல வீட்டுக்கு வந்திருக்க? ஆபீஸ் போகலையா?''

''போகணும்மா, ஏன் அங்கிருந்து தான் வர்றேன்...''

''ம், என்ன சொல்லு?''

''சஞ்சனா எங்க?''

''அவங்க ரூம்ல இருக்காங்க'' என்று கல்யாணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஹாலுக்கு வந்திருந்தாள் சஞ்சனா.

''வாங்க கமல்.''

''டிஸ்டர்ப் பண்ணியிருந்தா ஸாரி...''

''அச்சச்சோ என்ன கமல் நீங்க, உடம்பு சரியான துக்கப்புறமும் இப்படி உக்காந்துட்டிருக்கோமேன்னு ஏற்கனவே நான் பீல் பண்ணிட்டிருக்கேன்....''

''அப்ப சரி கிளம்பி வாங்க.''

''எங்க?''

''கம்பெனிக்கு தான்.''

''வாவ், நிஜமாவா சொல்றீங்க?''

''பின்ன, நீங்க இல்லாம எந்த வேலையும் சரியா நடக்கல, எல்லாமே அப்படி அப்படியே கெடக்குது. அண்ணா வேற...''

''ம், ஸார் என்ன சொன்னார்?''

‘‘என்னவோ ஒரு முக்கியமான வேல, அத நேத்து எங் கிட்ட சொல்லவும் செஞ்சார். ஆனா நான் அத எப் படியோ மறந்துட்டேன். காலைல ஒரே டென்ஷன்...’’

‘‘இன்னும் ஒன் அவர்ல அந்த ரிப்போர்ட் என் டேபிள்ல இருந்தாகணும்னு சொல்லிட்டு அவர் பாட்டுக்குக் கிளம்பிப் போய்ட்டார்.’’

‘‘ஓ...’’

‘‘அதான், உங்கள அழைச்சுட்டுப் போக நான் இங்க கிளம்பி வந்தேன்.’’

‘‘சரி தான் கமல், வாங்க கிளம்பலாம்.’’

‘‘அதுக்கு முன்னாடி ரெண்டு பேரும் இந்தாங்க காபி எடுத்துக்கோங்க’’ என்று கல்யாணி அங்கு வர, சிறிய வர்கள் இருவரும் எடுத்துக் கொண்டனர்.

‘‘என்னடா, என்ன பிரச்சனை?’’ என்று அவர் மகனைப் பார்க்க, ‘‘எல்லாம் உங்க பெரிய மகனால தான் வேறென்ன?’’ என்றான் கமலேஷ்.

‘‘ஏன், ஹரி என்ன சொன்னான்?’’

‘‘ஒன்னும் சொல்லலமா, என்ன திடீர் திடீர்னு ஆடர் போட...’’

‘‘என்னடா, ஏதாவது பிரச்சனையா?’’

கவலையுடன் கேட்ட தாயைப் புரியாமல் பார்த்தான் கமலேஷ்.

‘‘இல்ல உனக்கும், ஹரிக்கும்...’’

‘‘அட என்னமா நீங்க, உங்க பெரிய மகன் எள்ளுன்னா எண்ணெயா இருக்கணுங்கறார். அவரளவுக்கு எல்லா ராலையும் இருக்க முடியணுமில்ல, சரிமா நாங்க கிளம்பறோம் அப்பதான் போய் வேலையைப் பார்க்க முடியும்’’ என்றவன் ‘‘கிளம்பலாமா?’’ என்று சஞ்சனாவைப் பார்த்தான்.

‘‘கிளம்பலாம் கமல்’’ என்று சொல்லிக் கொண்டே எழுந்த சஞ்சனா ‘‘போய்ட்டு வர்றோம் ஆன்ட்டி’’ என் றாள்.

‘‘சரிடாம்மா, இவங்களுக்கென்ன நீ ரொம்ப ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காத...’’

‘‘அடடா, எனக்கு ஒரு நாளாவது இப்படி சொல்லி யிருப்பீங்களா?’’ என்ற கமலேஷிடம்,

‘‘அது சரி, உன்னத் துரத்திட்டே இருந்தாக் கூட நீ ஒரு வேலைக்கும் சிக்க மாட்ட, இனி உன்ன...’’

‘‘சரி சரி விடுங்க, என்னோட அருமையும் ஒரு நாளைக் குப் புரியும் உங்களுக்கு.’’

‘‘சரிதான் கிளம்புப்பா’’ என்று கல்யாணி சொல்ல.

‘‘சாப்பாடுமா?’’ என்றான் கமலேஷ்.

‘‘என்னடா, பண்ணன்டு மணிக்கே பசிக்கிதா உனக்கு....’’

‘‘அட நீங்க வேற, இருக்கற டென்ஷன்ல அதுக்கொரு தடவையெல்லாம் வர முடியாதுன்னு கேட்டேன்.’’

‘‘சரிதான், டிரைவர் கிட்டக் குடுத்தனுப்பிடறேன்.’’

‘‘இவனொரு கூத்துல கோமாளி’’ என்று கல்யாணி மகனை செல்லமாகத் திட்ட, புன்னகையுடன் கமலேஷைப் பின் தொடர்ந்தாள் சஞ்சனா.

‘‘அது சரி,-என்ன ஏதாவது சொல்லலேன்னா உங் களுக்கு அன்னைக்குப் பொழுது போகாதே’’ என்று

திரும்பித் தாயைப் பார்த்து சொல்லிக் கொண்டே போனான் கமலேஷ்.

## 40

அடுத்த பதினைந்து நிமிடங்களில் கமலேஷ், சஞ்சனா இருவரும் கம்பெனியை வந்தடைந்திருந்தனர்.

வந்தவர்கள், எம்.டி. ஸ்ரீஹரி சொல்லியிருந்த வேலையை முதலில் முடித்தனர்.

அதற்குப் பிறகு வழக்கமான வேலைகளைப் பார்க்கத் தொடங்கியிருந்தனர்.

''என்ன சஞ்சனா சொல்லுங்க?''

''இல்ல....''

''ம், என்ன?''

''எனக்கொரு உதவி செய்ய முடியுமா?''

''சொல்லுங்க, என்ன செய்யணும்?''

''ஈவினிங் வீட்டுக்குப் போகும் போது, வெளியே ஒரு வேல அதப் பாத்துட்டுப் போகணும்.''

''தாராளமா, ஏன் கொஞ்சம் முன்னாடியே கூடக் கிளம்பி அதப் பாத்துட்டு அப்புறம் வீட்டுக்குப் போலாம். இல்ல நீங்க மட்டும் தனியாப் போகணும்னாலும் டிரைவரக் கார எடுக்கச் சொல்லிப் போய்ட்டு வாங்க.''

''தேங்க்ஸ் கமல்.''



''நான் ஏதாவது உதவி...''

''ஏன், அப்படி எங்க போகணும்னு நேருக்கு நேராவே கேக்கலாமே'' என்று சிரித்த சஞ்சனா ''லேடிஸ் ஹாஸ்டல்ல இடம் வேணும்னு கேட்டிருந்தேன், அதுக்கு இன்னைக்கு ஈவினிங் நேர்ல வரச் சொன்னாங்க அதான்'' என்றாள்.

''ஓ''

''சரி கமல், இந்தக் கொட்டேஷன்ல ஏதாவது மிஸ்டேக் இருக்கான்னு பாருங்க மெயில் பண்ணனும்.''

அதற்குப் பிறகு இருவருக்கும் வேலையே சரியாக இருந்தது.

ஏற்கனவே சொல்லியிருந்தது போல தம்பியை போனில் அழைத்து சொன்ன வேலை ஆயிற்றா என்று கேட்டுக் கொண்டிருந்தான் ஸ்ரீஹரி.

மதிய உணவிற்குப் பிறகு அண்ணன் சொன்னது போல சர்வே ஒன்றை எடுக்கும் வேலையில் கமலேஷ் மும்முரமாக ஈடுபட்டிருக்க, தான் வேலைக்கு வராத நாட்களில் சேர்ந்து விட்டிருந்த வேலைகளைத் தன்னுடைய இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் சஞ்சனா.

என்னதான் வெளியே இயல்பாகக் காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் அவளுடைய மனம் மிகுந்த வேதனையில் உழன்று கொண்டிருந்தது.

அதற்குக் காரணமும் முதல்நாள் அவளுடைய தமக்கை அகிலாவிடமிருந்து வந்த அழைப்பே.

அவள் கேட்டதும் இதுதான்.

'எவனோ ஒருவனுடன் கிளம்பிச் சென்று அவனுடைய வீட்டிலேயே மூன்று நாட்களாகத் தங்கிக் கொண்டும் இருக்கிறாயே நீ மட்டுமென்ன பெரிய ஒழுங்கா.

நானும் தான் ஒருவரைப் பல வருடங்களாகக் காதலித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு நாளாவது உன்னைப் போல வீட்டை விட்டு வெளியே சென்று தங்கியிருக்கிறேனா.

என்னவோ ஆண் வாடையே அறியாதவளைப் போல அன்று அந்த நடிப்பு நடித்தாயாமே, ஆனால் தற்போது நீ செய்து கொண்டிருக்கும் செயல் எவ்வளவு கீழ்த்தரமானதென்று உனக்கே புரியவில்லையா.

சை, எந்த மாதிரியொரு முகத்தை வைத்துக் கொண்டு கடைசியில் இப்படி இழிந்து போனாயே.

உன்னையெல்லாம் என் தங்கையென்று வெளியே சொல்லவே கேவலமாக இருக்கிறது.

இப்பொழுது நீ செய்து கொண்டிருக்கும் செயலைப் பார்த்து அனைவரும் கை கொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள், அதனால் தப்பித் தவறிக் கூடப் பகலில் இங்கே வந்து விடாதே.

பிறகு பார்ப்பவர்கள் முகத்திலேயே காரி உமிழ்ந்தாலும் தப்பு சொல்வதற்கில்லை.

நீ எவ்வளவு மோசமானவளாக இருந்தாலும், ஊரில் இருப்பவர்கள் எதிர்த்துத் துரத்தினாலும் என் தங்கையாகிப் போனாயே.



அதனால் எப்படியோ போகட்டும் நமக்கென்னவென்று விட்டுவிட என்னால் முடியவில்லை.

நீ என்னதான் மன்னிக்க முடியாத குற்றத்தையே செய்திருந்தாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் உன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள யோகித்தும், அவருடைய குடும்ப நபர்களும் இன்னும் தயாராகத்தான் இருக்கிறார்கள்.

நீ என்ன சொன்னாலும் இந்த வாய்ப்பை நழுவ விட இனி நான் தயாரில்லை.

முதலில் இனியும் உன்னுடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருக்க இங்கு யாருமே தயாரில்லை.

நாளை மறுநாள் நீ தங்கியிருக்கும் அவனுடைய வீட்டிற்கு நாங்கள் அனைவரும் கிளம்பி வருகிறோம்.

எந்தப் பிரச்சனைகளுக்கும் இடம் கொடுத்து விடாமல் நீயே வந்து விட்டால் தப்பித்தாய்.

அது மட்டுமல்லாமல், அப்பொழுதிருந்தே வாய் பேசாமல் நாங்கள் சொல்வதை செய்யவும் தயாராகி விடு, ஏனென்றால் வீண் பிரச்சனைகளை வளர்த்துக் கொண்டிருப்பதால் எந்தப் பலனும் கிடைத்து விடப் போவதில்லை பார்.

அதே போலக் கடைசியாகவும் ஒன்றைக் கேட்டுக் கொள், நாங்கள் அனைவரும் வந்து வலுக்கட்டாயமாக உன்னை இழுத்து வருவதற்கு முன் நீயே கிளம்பி வந்து விடுவது உனக்கு உத்தமம், முக்கியமாக உன் மானம் அது இன்னும் மிஞ்சியிருக்கும் பட்சத்தில் அதைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்.'

இப்படி, ஏன் இதை விடக் கூடக் கேவலமாக இன்னும் ஏதேதோ பேசிய தமக்கையின் வார்த்தைகளை மீண்டும் வேதனையுடன் நினைத்துப் பார்த்தாள் சஞ்சனா.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.

சொன்னது போல அகிலா மட்டும் அங்கு வந்து விட் டால்,

வந்து விட்டாலென்ன, அவள் வராவிட்டால் தான் ஆச்சரியப்பட வேண்டும்.

அந்த அளவிற்குத் தன்மேல் கோபமாகவும், பழி வாங்கவும் துடித்துக் கொண்டிருப்பவள் ஆயிற்றே.

எது எப்படியோ, அவள் மட்டும் அப்படி வந்து நின் றால் அதற்குப் பிறகு மற்றவர்களுடைய முகத்தில் எப் படி விழிப்பது.

பாவமென்று அடைக்கலம் கொடுத்தவர்களைக் கூட மனம் நோகச் செய்து விடுவாளே.

அது சரி, யாரைப் பற்றி அவளுக்கென்ன, அவள் நினைத்தது நடந்தால் போதுமே.

அதுவும் மற்றவர்களின் மனதை நோகச் செய்ய வேண்டும் என்பதற்காகவே எவ்வளவு மோசமான வார்த்தைகளையும் அனாயாசமாகப் பயன்படுத்துவாளே,

எல்லாவற்றிற்கும் மேலாக...

ஏனோ அதை நினைத்துப் பார்க்கும் போதே நெஞ்சு நடுங்கியது சஞ்சனாவிற்கு.

நாளை வரும் தமக்கை நிச்சயம் தன்னையும், ஸ்ரீஹரியை யும் இணைத்துப் பேசாமல்



ஏன் அவள் வருவதே கூட அதற்காகத்தானே.

அப்படி அவள் அசிங்கமாகப் பேசுவதையெல்லாம் கேட்டால் மகன் சொன்ன ஒரு வார்த்தைக்காக தன்னைப் பற்றி எதுவுமே தெரியாமல், எதைப் பற்றியும் யோசிக் காமல் அடைக்கலம் கொடுத்த கல்யாணி ஆன்ட்டியுடைய தாயுள்ளம் எவ்வளவு வேதனைப்படும்.

அதற்குப் பிறகு ஸ்ரீஹரியுமே தன்னை வெறுத்து விடுவானோ.

பின்னே, அதிலென்ன சந்தேகம்.

ஏறகனவே ராகினி வந்து விட்டதற்குப் பிறகு அவன் முன்பு போல இல்லை, எவ்வளவோ மாறி விட்டான்.

இதற்கு மேலும் அவன் தன்னை வெறுப்புடன் பார்த் தால்,

பார்ப்பது மட்டுமா, அதற்குப் பிறகு தன்னை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காமல் உதாசீனப்படுத்தி னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே.

ஏனோ அந்த எண்ணமே சஞ்சனாவை மிகுந்த வேதனைக்குள்ளாக்கியிருக்க, அவளையறியாமலேயே கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

யதேச்சையாக நிமிர்ந்தவள், தன்னையே பார்த்தபடி தனக்கு முன்னே நின்றிருந்த ஸ்ரீஹரியைப் பார்த்தாள்.

அவனைப் பார்த்த அதிர்ச்சியில் ''ஸார்'' என்று இருக் கையை விட்டு எழுந்தும் இருந்தாள்.

சஞ்சனாவின் அந்த நிலை ஸ்ரீஹரியையும் மனம் உருகச் செய்திருக்க, எதையோ சொல்ல வந்தான்.

ஆனால் அது சில வினாடிகள் தான் உடனே சுதா ரித்துக் கொண்டு நடப்பிற்கு வந்திருந்தான்.

அது மட்டுமல்லாமல், சற்றுக் கடுமையாகவும் பேசி னான்.

''எவ்வளவு நேரமாகக் கூப்பிடறது, டெய்லி ரிப் போர்ட் ஃபைல் எடுத்துட்டு உடனே என் டேபிளுக்கு வா'' என்று விட்டு ஸ்ரீஹரி பாட்டுக்கு நிற்காமல் அவ னுடைய இடத்திற்கு வந்திருக்க, நடப்பிற்கு வர சஞ்ச னாவிற்குதான் வெகுநேரம் பிடித்திருந்தது.

அடுத்த வினாடி ஃபைலை எடுத்துக் கொண்டு எம்.டி.யின் டேபிளுக்கு ஓடினாள்.

கமலேஷை அங்கு காணாது போக, சரிதான் ஏதாவது வேலையாகத் தம்பியை அனுப்பியிருப்பாராக இருக்கு மென்று நினைத்துக் கொண்டாள்.

வந்தவள் ஃபைலை அவனுக்கு முன்பாக வைத்தாள்.

ஃபைலைத் திறந்து பார்த்த ஸ்ரீஹரி, அடுத்த நிமிடம் கோபத்துடன் நிமிர்ந்தான்.

''என்ன இது?''

எதைப் பற்றி கேட்கிறானென்று தெரியாமல் விழித்த சஞ்சனா, ''ஸார்...'' என்றாள்.

ஆனால் அதே நேரம் அந்த ஃபைலை அவளுடைய முகத்திற்கு முன்பாக விசிறியடித்திருந்தான்.

அவனுடைய செய்கையில் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தாள் சஞ்சனா.



பயத்தில் அவளுடைய உடல் அவளையறியாம லேயே நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால் அதை எதையும் புரிந்து கொள்ளும் மன நிலையில் அப்பொழுது ஸ்ரீஹரியும் இருக்கவில்லை.

அவனுடைய கோபத்தின் காரணம் புரியாமல் விழித்த சஞ்சனாவை, மேலும் கோபத்துடன் பார்த்தான்.

''என்ன பாக்கற, அது என்ன ஃபைல்?''

அவன் கேட்க, உடனே ஃபைலை கையிலெடுத்துப் பார்த்தாள்.

''ஆடர் ஃபைல்.''

ஆனால் அவன் கேட்டது டெய்லி ரிப்போர்ட் ஃபைலை அல்லவா.

''ஸாரி ஸார்'' என்று வேகமாகத் திரும்பியவள், அடுத்த சில வினாடிகளில் அவன் கேட்ட ஃபைலுடன் வந்திருந்தாள்.

ஸ்ரீஹரியின் அன்பையும், ஆறுதல் வார்த்தைகளை யும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனா விற்கு அவனுடைய கோபமும், உதாசீனமும் மிகுந்த மன வேதனையைக் கொடுத்திருந்தன.

அவனுடைய கோபத்திற்கான காரணம் புரியாமல் தவித்தாள்.

இப்பொழுதே இப்படியிருந்தால்,

மறுநாள் நடக்கப் போவதை நினைத்துப் பார்த்த போது நெஞ்சுக் கூடே காலியாகி விட்டாற் போலிருந் தது.

''அதுக்குள்ள அப்படி யாரு உன்னக் கம்பெனிக்குக் கிளம்பி வரச் சொன்னது?''

அப்படி கேட்டவனை என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் பார்த்தாள்.

''இங்க வந்து நீ செஞ்சதெல்லாம் போதும்,''

..........

''உன் வேலைக்கு திங்கக் கிழமைல இருந்து வேற ஒருத்தர் வரப் போறாங்க.''

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் இடிக ளாய்த் தலையில் விழ, அந்த வேதனையில் ஆடிப் போய் விட்டிருந்தாள்.

ஆனால் அது சற்றும் வெளியே தெரியாமல் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

''எக்ஸேக்டா சொல்லணும்னா இனிமேல் உனக்கு இங்க வேல கிடையாது.''

ஸ்ரீஹரி முடிவாகச் சொல்லி விட்டிருக்க, எவ்வளவு எளிதாகச் சொல்லி விட்டானென்று சஞ்சனாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

திடீரென்று இப்படிச் சொன்னால் தன் மனம் என்ன பாடு படுமென்பதைக் கூட இவனால் புரிந்து கொள்ள முடியவில்லையே.

அது சரி, அந்த அளவிற்கு யோசிப்பவனாக இருந்தால் முதலில் இப்படியெல்லாம் சொல்லியிருக்கவே மாட் டானே.

சரிதான் ராகினியின் இடத்தில் தன்னை வைத்துப் பார்த்ததற்காக, இவளால் தானே அவளுக்கு துரோகம் செய்ய நேர்ந்ததென்று கோபப்படுகிறான் போலிருக் கிறது.

இல்லையென்றால் இப்படியெல்லாம் பேச வேண்டிய அவசியமே இல்லையே.

''இதுக்கு மேலயும் உனக்கு எதுவும் சொல்ல வேண் டிய அவசியமில்லைன்னு கேக்கறேன்.''

அவ்வளவு நேரமும் எப்படியோ, ஆனால் அந்த வார்த் தையில் மிகவும் மனமுடைந்து போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

முடிந்தால் இன்றே லேடீஸ் ஹாஸ்டலுக்கு சென்று விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

ஏற்கனவே மறுநாளை நினைத்து மனதிற்குள் பயந்து போயிருந்தவளுக்கு இப்பொழுது கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

''உன்னிடத்துக்குப் போலாம்.''

அப்படிச் சொல்லிவிட்டு ஸ்ரீஹரி தனது வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருக்க, தானும் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள் சஞ்சனா.

ஏன் திடீரென்று இவ்வளவு கோபப்படுகிறான்.

அப்படித் தான் செய்த தவறுதான் என்ன?

அதெப்படி தன்னை இந்த அளவிற்கு பேசிவிட்டு அவனால் இப்படி நிச்சிந்தையாக இருக்க முடிகிறது.

அந்த அளவிற்கு தன்னை வெறுத்து விட்டானோ.

# 41

''ஹாய் ஹரி.''

வாயெல்லாம் பல்லாக உள்ளே வந்த ராகினியை வர வேற்றான் ஸ்ரீஹரி.

''என்ன அதிசயமா இன்னைக்கு ஆஃபீஸ்ல இருக் கீங்க?''

எரிச்சலின் உச்ச கட்டத்தில் இருந்த ஸ்ரீஹரி முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டான்.

''ஏன் ஹரி டல்லா இருக்கீங்க?''

''அப்படியா,''

''ம், சரிதான் விடுங்க. உங்களுக்கு பிஸினஸ்ல எத் தனையோ டென்ஷன்'' என்றவள், ''நாளைக்கு சன்டே என்ன ப்ரொக்ராம்?'' என்று கேட்டாள்.

ஏனோ தலைவலி முணுமுணுவென்றிருக்க ஒரு கப் டீ சாப்பிட்டால் நன்றாக இருக்குமென்று தோன் றியது.

உடனே இண்டர்காமில் தனது பி.ஏ.வை அழைத்து இரண்டு கப் டீ எடுத்து வரச் சொன்னான்.

அடுத்த நிமிடம் டீ கப்களுடன் வந்த சஞ்சனா அங் கிருந்த ராகினியை அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு பார்த்தாள்.



அது ஸ்ரீஹரிக்கும் புரியவே செய்தது.

அதே நேரம் ''ஆமா ஏன் மூணு நாளா நீ வரல எங்க போய்ட்ட?'' என்று சஞ்சனாவைப் பார்த்துக் கேட்டாள் ராகினி.

.........

''வாய்ல என்ன கொழுக்கட்டையா, பேசறதுக்கென்ன?''

அப்படிக் கேட்டவளை என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் பார்த்தாள் சஞ்சனா, அப்படியே ஸ்ரீஹரியை யும்.

''சரிதான் இனி எம்.டி.கிட்ட என்ன பொய்ய சொல் லிட்டு லீவு எடுத்தியோ, இனி அத அப்படியே சொல்ல முடியுமா என்ன?'' என்று அதற்கு பதிலையும் தானே சொல்லிக் கொண்ட ராகினியிடம் ''டீ எடுத்துக்கோ, சூடு ஆறிடும்'' என்றான் ஸ்ரீஹரி.

''சரிதான் இவங்ககிட்டெல்லாம் பேச்சு வெச்சுக்க வேண்டாம்னு மறைமுகமா சொல்றீங்க இல்லையா ஹரி'' என்று அப்பாவி போல ராகினி கேட்க ''தெரிஞ்சா சரி'' என்றான் ஸ்ரீஹரி.

அவனுடைய அந்த வார்த்தையில் இப்படிச் சொல்லி விட்டாயே என்பதைப் போல் பார்த்தாள் சஞ்சனா.

சஞ்சனா ஏற்கனவே கேட்டுக் கொண்டது போல, மாலையில் ''கிளம்பலாமா'' என்று வந்து நின்றிருந்தான் கமலேஷ்.

''உங்களுக்குப் பிரச்சனையில்லையே கமல்?''

''பிரச்சனையா சந்தோஷமாவே கிளம்பி வந்திருக் கேன் வாங்க.''

''அப்ப சரிதான்.''

''அதுவும் நான் இன்னைக்கு மதியத்துக்கு மேல அண்ணா கண்லயே படலயாக்கும்'' என்று அதையும் ஒரு பெருமை போலச் சொன்ன கமலேஷைப் புன்னகை யுடன் பார்த்தாள்.

காரணமே இல்லாமல் அப்பொழுது கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

எவ்வளவு அன்பான குடும்பம் இவனுடையது.

அப்படிப்பட்ட குடும்பத்தில் சில நாட்கள் இருக்க தனக்கும் கொடுத்து வைத்திருந்ததே என்று ஏக்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

''என்னாச்சு, ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

கமலேஷ் கேட்க ''இல்லையே'' என்றாள் சஞ்சனா.

''சரிதான் நம்பிக்கறேன்.''

எம்.டி.யான அவனுடைய அண்ணன் ராகிணியுடன் ஏற்கனவே கிளம்பிச் சென்றிருக்க, சரிதானென்று அனைத் தையும் எடுத்து வைத்து விட்டுத் தானும் கிளம்ப ஆயத்தமானாள் சஞ்சனா.

வழக்கம் போல மொபைலில் அழைத்துச் சொல்ல வேண்டுமோ என்று மனதிற்குள் தோன்றினாலும் ஏனோ அதற்கு அப்பொழுது தைரியம் இருக்கவில்லை.

ராகிணியை அங்கிருந்து கிளப்ப வேண்டுமென்பதற் காகவே தானும் உடன் கிளம்பிச் சென்று விட்டு மீண் டும் வந்திருந்த ஸ்ரீஹரிக்கு, சஞ்சனா அங்கு இல்லாதது மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.



என்ன முயன்றும் ஏனோ அவனால் அன்று இயல்பாக இருக்க முடியவில்லை.

யாரைப் பார்த்தாலும் கோபம் வந்தது.

ஒரு பெண் தன்னை என்ன பாடுபடுத்துகிறாள் என் பதே அந்தக் கோபத்திற்கான காரணம்.

கண்ணில் படாமல் ஒதுங்கிக் கொள்வது, அதற்கு மேல் நேருக்கு நேராகப் பார்க்க நேர்ந்தாலும் பார்த்தும் பார்க் காதது போல சென்று விடுவது.

இப்படித் தன் மனம் புரிந்தும் புரியாதது போல நடந்து கொள்பவளை நினைத்து ஆதங்கம் தான் வந்தது ஸ்ரீஹரிக்கு.

இப்படி சற்றும் தனது அன்பைப் புரிந்து கொள்ள மாட் டேனென்று திருப்பிக் கொண்டு போகும் பெண்ணை நினைத்து மேலும் மேலும் மனதைப் புண்ணாக்கிக் கொள்ளக் கூடாது.

அதிலும் வீட்டை விட்டுக் கிளம்ப அவள் ஆயத்த மாகிக் கொண்டிருப்பதும் அவன் அறியாததல்லவே.

அதைத் தவறென்று சொல்ல முடியாதென்றாலும், இனிமேல் அவள் வேலைக்கு வரக் கூடாது.

தொடர்ந்து அவளைப் பார்க்காமல் இருப்பது தான் இன்றைய மனநிலையில் சற்றேனும் மன அமைதியைக் கொடுக்கக் கூடிய ஒன்றாக இருக்குமென்று நினைக்கத் தோன்றியது.

# 42

''வா ஹரி.''

மாலை அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்த மகனைப் புன்னகையுடன் வரவேற்றார் கல்யாணி.

''எங்கமா யாரையும் காணோம்?''

''சஞ்சனாவுக்கு அவ எதிர்பார்த்த மாதிரியே அந்த லேடீஸ் ஹாஸ்டல்ல இடம் கிடைச்சுடுச்சாம் கண்ணா, இன்னையிலிருந்தே இங்கயே தங்கிக்கட்டுமா ஆன்ட்டின்னு இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் கூப்பிட்டா...''

''சரிதான்மா, அது அவளுடைய முடிவு தான.''

''என்னப்பா இப்படிச் சொல்ற?''

''பின்ன, எதிர்பார்த்த நல்ல ஹாஸ்டல். கிளம்பிக்கறது தான நியாயம்?''

அப்படி சொன்ன மகனை எதுவும் பேசாமல் பார்த்தார் கல்யாணி.

''எனக்கொரு கப் காபி கிடைக்குமா?''

''இதோ தர்றேன் ஹரி...''

''என்னமா சொல்லுங்க?''

''இல்ல.. ரேவதி மாதிரி அந்தப் பொண்ணு சஞ்சனாவும் நல்ல பொண்ணுப்பா. ஏன் ரேவதியை விடக் கூட.. மனுஷங்க மேல எவ்வளவு அன்பு, பாசம், எல்லாத்



துக்கும் மேல ரொம்ப பணிவா அடக்கமா நடந்துக்கறா. எனக்கென்னவோ அந்தப் பொண்ணு வீட்ட விட்டுப் போறதே பிடிக்கலப்பா.''

தாய் என்ன சொல்ல வருகிறாளென்பது ஸ்ரீஹரிக்கும் புரிவதைப் போலத்தான் இருந்தது.

சரிதான். இந்த நான்கு நாட்களில் தாய்க்கும் ஓரளவு அனைத்தும் தெரிந்து போய் விட்டது போலத்தான் இருக்கிறது.

சரிதான்.

பெருமைக்குரிய மகனால் முடியாதது ஒன்றுமில்லையென்று நினைத்துக் கொண்டிருக்கும் தாய்க்கு, அந்தப் பெண் சஞ்சனா மகனின் அன்பை மறுத்து விட்டாளென்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை தான்.

அது மட்டுமல்லாமல் மகனால் இன்னொரு முறை அந்தப் பெண்ணின் வெறுப்பையும், உதாசீனத்தையும் தாங்கிக் கொள்ள முடியாது என்பதும்,

இதையெல்லாம் எப்படித் தனது தாயிடம் அவனால் எடுத்துச் சொல்ல முடியும்,

அதற்கு அவனுடைய தன்மானமே இடம் கொடுக்காதே,

அப்படியானால் இதற்கு என்ன தான் தீர்வு,

''என்னப்பா, நான் சொன்னதெல்...''

''சரிதாம்மா, உங்க நல்ல மனசுக்கு இப்படித் தோன்றதுல ஆச்சர்யம் ஒன்னுமில்ல. ஆனா நீங்க மனசுக்குள்ள நினைக்கறதெல்லாம் நடப்புக்கு ஒத்து வராது. அதனால தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காதீங்க.''

........

''எனக்கு ஒரு கப் காபி கிடைக்குமாம்மா?''

''இதோ'' என்று அங்கிருந்து நகர்ந்த கல்யாணிக்கு மகனின் மனம் புரிந்தது.

அவனைப் பொறுத்தவரை எதற்கும் மனமுடைந்து போக மாட்டானே,

அப்படியிருக்கும் பொழுது இப்பொழுது மட்டும் ஏன் அவனுடைய வார்த்தைகளில் அவ்வளவு விரக்தி.

ஏனோ மகனின் நிலையைப் பார்த்த கல்யாணிக்கு, அவனுக்காக எதையாவது செய்தே ஆக வேண்டும் போல தோன்றத் தொடங்கிவிட்டிருந்தது.

காபி கலக்கிக் கொண்டிருந்தவருக்கு மீண்டும் சஞ்சனாவிடமிருந்து அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினார்.

எதிர் முனையில் அவள் பேசுவதை சில வினாடிகள் கேட்டுக் கொண்டிருந்தவர், ''அதெல்லாம் சரிதான்மா ஆனா வயசுப் பொண்ண திடீர்னு அனுப்ப எனக்கென்னவோ கொஞ்சம் தயக்கமா இருக்கு. அதனால நீ இப்பக் கமல் கூடவே கிளம்பி வீட்டுக்கு வந்துடு. நாளைக்கு நானும் ஒரு முறை வந்து பாத்துட்டு வந்துடறேன் அப்புறம் பாத்துக்கலாம்'' என்று போனை வைத்திருந்தார்.

ஒரு மணி நேரம் சென்றிருந்தது.

சஞ்சனாவும் கமலேஷும் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

கல்யாணி சமயலறையில் வேலையாக இருக்க, ஸ்ரீஹரி அவனுடைய அறையில் இருந்தான்.



அடுத்து தான் செய்ய வேண்டியதைப் பற்றி மனதிற்குள் யோசித்துக் கொண்டிருந்தார் கல்யாணி.

அவரைப் பொறுத்தவரை எதையும் யாருக்காகவும் தயங்காமல் பட்டென்று கேட்டு விடக் கூடியவர் தான்.

ஆனாலும் பெரிய மகனின் விஷயத்தில் அவரால் ஏனோ அப்படி செய்ய முடிந்திருக்கவில்லை.

தான் அவசரப்பட்டுக் கேட்கப் போய் அவன் பாட்டுக்கு அப்படியெல்லாம் எதுவுமில்லையென்று ஒற்றை வார்த்தையில் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டால்,

வைத்து விட்டாலென்ன, அவன் அதைத் தான் செய்வான்.

ஏதோ தோன்ற, முதலில் இதைப் பற்றி சஞ்சனாவிடம் பேசி விடலாமென்ற முடிவுக்கு வந்திருந்தார்.

இரவு உணவின் போது மகனையும், சஞ்சனாவையும் ஊன்றிக் கவனித்தார்.

அவர்கள் அறியாமல் தான்.

மகன் எப்பொழுதும் போல இருப்பதாகத்தான் தோன்றியது, சரிதான் அவன் எப்பொழுது, எந்த விஷயத்தில் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறானென்று நினைத்துக் கொண்டவர் சஞ்சனாவைப் பார்த்தார்.

மகன் மாதிரியல்லாமல் அவளுடைய முகத்தில் வித்யாசம் நன்றாகவே தெரிந்தது.

அதில் லேசான பயம், பதட்டம், ஏக்கம் என அனைத்துமே கூடத் தெரிந்தன.

இரவு அனைவரும் தங்களுடைய அறைகளுக்குத் தூங்கச் சென்றதும் சஞ்சனாவிடம் சென்று பேசினார்.

தன்னுடைய அறைக்கு வந்த கல்யாணியை எழுந்து நின்று வரவேற்றாள் சஞ்சனா.

உள்ளே வந்திருந்தவள் ''உக்காருமா'' என்றார்.

''பரவாயில்ல ஆன்ட்டி'' என்றவளை மீண்டும் ஒரு முறை அமரச் சொன்னவர் தானும் அமர்ந்தார்.

''நான் உங்கிட்ட ஒரு விஷயம் பேசறதுக்காக வந் திருக்கேன், மறைக்காம பதில் சொல்லணும்.''

அப்படிச் சொன்னவரைப் புரியாத பாவனையுடன் பார்த்தாள் சஞ்சனா.

''உனக்கு என்னமா பிரச்சனை?''

''இல்லையே ஆன்ட்...''

''ம்கூம், மறைக்காம சொல்லணும்.''

...........

''என்ன பாக்கற, பேச மாட்டியா?''

''அப்படியெல்லாம் ஒன்னுமில்ல ஆன்ட்டி.''

''உண்மையை சொல்லுமா, உனக்கும் ஹரிக்கும் இடையில என்ன பிரச்சனை?''

திடீரென்று அவர் அப்படிக் கேட்பாரென்று சஞ்சனா கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''என்னமா?''

.........



''எனக்கு ஓரளவு எல்லாமே தெரியும், நீ மறைச்சா நான் போய் ஹரியக் கேட்டுக்கப் போறேன்.''

''அவரு...''

''ம்''

''அவரு வேற ஒரு பொண்ண விரும்பறார்...''

தயக்கத்துடன் என்றாலும் சொல்லியே விட்டிருந்தாள்.

''யாரு ஹரியா?''

''ம்''

''அப்படின்னு அவன் உங்கிட்ட சொன்னானா?''

........

''என்ன சஞ்சனா சொல்லு...''

''இல்ல ஆன்ட்டி, ஆனா...''

''சரி நீ.. ம்கூம் உம் மனசுல யாரு இருக்கா?''

.......

எப்பொழுது ஒரு பெண்ணை என்னதான் பெரிய பிரச்சனையே என்றாலும் வீட்டிற்கே அழைத்து வந்து தன்னிடமே அறிமுகப்படுத்தினானோ அப்பொழுதே அவருக்கு மனதிற்குள் சந்தேகம்தான்.

ஆனாலும் என்ன, ஏது என்று ஒன்றும் அறியாமல் அதை அப்படியே மகனிடம் கேட்க அவரால் முடிந் திருக்கவில்லை.

ஆனால் கடந்த சில நாட்களாக நடந்ததையெல்லாம் யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தவருக்கு, அந்த சந்தேகம் இப்பொழுது வலுவடைந்திருந்தது.

''ம், பேசுடாம்மா.''

''அப்படியெல்லாம் ஒன்னு...''

''எனக்கு உண்மையான பதில் வேணும் சஞ்சனா.''

........

''சரிதான் நானே கேக்கறேன். உம் மனசுல இருக்கறது ஹரிதான?''

.......

''பேசு...''

''ஆனா... ஆனா அவருக்கு...''

''ம்''

''அவர் மனசுல வேற ஒரு பொண்ணு தான் இருக்காங்க.''

''யாரது?''

.......

''சொல்லுடாம்மா.''

''தெரியல ஆன்ட்டி, ஆனா இப்ப ஹரி உலகத்துலயே ரொம்பவும் வெறுக்கற பொண்ணு ஒருத்தி இருக்கான்னா அது நான்தான்.''

''எத வெச்சு இப்படி சொல்ற?''

''என்ன...''

ஏதோ சொல்ல வந்தவளுக்கு அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

..........

''அவர்... அவரு இனிமேல் என்ன வேலைக்கு வர வேண்டாம்னு சொல்லிட்டார். நாளையிலிருந்து வேற ஒருத்தர் வரப் போறாங்களாம்'' என்று அழுகையினூடே சொல்லி முடித்தாள் சஞ்சனா.



சஞ்சனா சொன்னது கல்யாணிக்கும் லேசான அதிர்ச்சி தான், ஆனாலும் அதை அவளறியாமல் மறைத்துக் கொண்டார்.

தான் ஒன்று நினைக்க, நடப்பது வேறாக இருக்கும் போல் தெரிகிறதே.

ஏன் ஹரி அப்படிச் சொன்னான்.

''இல்லடாம்மா, நீ எதையோ தப்பாப் புரிஞ்சுட்டிருக்கற மாதிரி தான் எனக்குத் தோணுது'' என்றவர், ''இதப்பத்தி ஹரிகிட்ட நான் கூடிய சீக்கிரம் பேசிடறேன் அதுவரைக்கும் மனசப் போட்டுக் குழப்பிக்காம நீ நிம்மதியா இருக்கணும்'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் சஞ்சனா.

வெகுளியான, குழந்தைத்தனத்துடன் கூடிய அவளுடைய அழகான முகத்தைப் பார்த்தவருக்கு, இவ்வளவு பிரமாதமான பெண்ணை எப்படி மகனால் மறுக்க முடியுமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதைச் சொல்வதற்காக ஆசையுடன் வாயைத் திறக்கப் போனவர், பிறகு வேண்டாமென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

வேண்டாம், முழுமையாக எதுவும் தெரியாமல் இந்த அன்பான பெண்ணின் மனதில் ஆசையை வளர்ப்பது தவறு.

''சரிதான்மா, எல்லாம் நல்லபடியா நடக்கும் நீ எதுக்கும் கவலைப்படாம நிம்மதியாத் தூங்கு'' என்று விட்டு வெளியே வந்திருந்தார்.

எதையெதையோ நினைத்து அஞ்சிக் கொண்டே படுக்கைக்குச் சென்றாலும், மனதிலிருந்த பாரத்தை இறக்கி வைத்து விட்டதாலோ என்னவோ அன்று ஆழ்ந்து உறங்கி விட்டிருந்தாள்.

## 43

அதிகாலையிலேயே விழிப்பு வந்திருக்க, எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அதுநாள் வரை அந்த நேரத்தில் எழுந்து வெளியே வந்திருக்காதவள் என்பதால், அந்த அதிகாலை நேரத்தில் ஸ்ரீஹரியை நேருக்கு நேராகப் பார்க்க நேருமென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இடித்து விடுவாள் போல மிக அருகில் பார்க்க நேர்ந்ததே லேசான அதிர்ச்சியென்றால், அதற்கு மேல் வேஷ்டி பனியனுடன் யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தது மிகுந்த படபடப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.

எதுவும் தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தவளைத் தானும் பார்த்தான் ஸ்ரீஹரி.

ஆனால் சஞ்சனாவால் தான் அவனுடைய பார்வையில் இருப்பது என்னவென்பதைக் கண்டு கொள்ள இயலவில்லை.



ஆனாலும் அந்தப் பார்வை தன்னுடைய ஏக்கத்தையெல்லாம் அதிகரிக்கச் செய்து நெஞ்சைக் கசக்கிப் பிழிவதைப் போல உணர்ந்தாள்.

''சஞ்சனா''

''வாங்க ஆன்ட்டி.''

ஸ்ரீஹரியைப் பார்க்க நேர்ந்ததில் பழைய ஞாபகங்களனைத்தும் வந்து நெஞ்சை அலைபாயச் செய்திருக்க, மீண்டும் தன்னுடைய அறைக்கே திரும்பி வந்திருந்தாள்.

''என்னடாம்மா, ஏன் இப்படி உக்காந்திருக்க? காபி கேட்டு கிச்சனுக்கு வருவேன்னு பாத்தேன்.''

.......

''சரிதான் இந்தா காபி எடுத்துக்கோ'' என்று கல்யாணி நீட்டிய காபியை ஒரு நன்றியுடன் எடுத்துக் கொண்டாள் சஞ்சனா.

''ஆன்ட்டி.''

''என்னடாம்மா?''

''ஒரு சின்ன வேல ஆன்ட்டி, எங்க வீட்டு வரைக்கும் போய்ட்டு வந்துடட்டுமா?''

''தாராளமாப் போய்ட்டு வாடாம்மா, என்ன இன்னும் கொஞ்சம் இருந்தா நானும் உங்கூடக் கிளம்பி அந்த லேடீஸ் ஹாஸ்டலப் பாத்துட்டு வந்துடலாம்னு பாத்தேன்.''

''சரிதான் ஆன்ட்டி, அப்ப சேர்ந்தே போகலாம்.''

''அதுக்குள்ளே ஏதாவது அவசர வேலைன்னா, நீ வேணும்னாப் போய்ப் பாத்துட்டு கூட வந்துடு.''

''இல்ல ஆன்ட்டி, அப்படியெல்லாம் இல்ல.''

''அப்ப காபியை குடிச்சுட்டு வாடாம்மா. இன்னைக்கு வேலைக்கும் ஆளக் காணோம். கிச்சன்ல சின்ன வேல அத மட்டும் முடிச்சுட்டுப் போயிடலாம்.''

''சரி ஆன்ட்டி'' என்றவள் காபியைக் குடித்துவிட்டு சமயலறையில் சென்று கல்யாணிக்கு வேலையில் உதவினாள்.

சிறு சிறு வேலைகள்தான்.

நேரம் போகப் போக, அகிலா எங்கே சொன்னது போல கிளம்பி வந்து விடுவாளோ என்று அவளுடைய நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

அவள் நினைத்தது தான் தாமதம், வெளியே பல பேச்சுக் குரல்கள் அல்லது அவளுக்குத்தான் அப்படித் தோன்றியதோ ஒன்றாகக் கேட்டதில் மூச்சே நின்று விடும் போல ஆகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கர்தைக் கூர்மை யாக்கிக் கேட்டாள்.

தமக்கை அகிலாவின் குரல்தான் அனைவரையும் மிஞ்சிக் கொண்டு மிகவும் பலமாகக் கேட்டது.

அந்தக் குரலில் தெரிந்த ஏளனம் கோபம் அனைத்தும் அவள் துளியும் மாறவில்லையென்பதைத் தெளிவாகக் காட்டியது.

மிகவும் ஆக்ரோஷமாக அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் சஞ்சனாவை மேலும் அதிகமாக நடுங்க வைத்திருந்தன.



அதே நேரம் என்ன, ஏதென்று பார்ப்பதற்காக கல்யாணி யும் ஹாலுக்கு சென்றிருக்க, கால்கள் தரையிலேயே வேரோடி விட்டாற் போல அப்படியே நின்று விட்டிருந் தாள்.

அகிலாவுடன் யோகித்தும், நித்திசும் வந்திருக்க, அவர்களிடம் ''என்னமா நீங்கெல்லாம் யாரு, எங்கிருந்து வர்றீங்க?'' என்று கேட்டார் கல்யாணி.

''அந்தப் பொண்ணு பேரு அகிலா சஞ்சனாவோட அக்கா'' என்று அதே நேரம் அங்கு வந்த ஸ்ரீஹரி சொல்ல,

''அப்படியா!'' என்றார்.

ஆனால் அதற்குள் ''எங்க என் தங்கை, அனுப்புங்க வெளியே'' என்று கோபத்துடன் கத்தினாள் அகிலா.

அவளுடைய கோபத்திற்கான காரணம் புரியாமல் பார்த்த கல்யாணி ''என்னமா, ஏன் இப்படிப் பேசற?'' என்று கேட்டார்.

''ம், எங்க வீட்டுப் பொண்ணைக் கூட்டிட்டு வந்து யாருக்கும் தெரியாம மறைச்சு வெச்சிருக்கீங்களா?''

''கொஞ்சம் வார்த்தையை அளந்து பேசுமா'' என்று கல்யாணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ''இப்ப என்ன வேணும் உனக்கு?'' என்று அகிலாவைப் பார்த்துக் கேட்டான் ஸ்ரீஹரி.

''என் தங்கையை என் கூட அனுப்பணும்.''

''அனுப்பலேன்னா?''

''வலுகட்டாயமா இழுத்துட்டுப் போவோம்'' என்று அகிலாவை முந்திக் கொண்டு அந்த நித்திஷ் சொல்ல,

எதுவும் பேசத் தோன்றாமல் ஸ்ரீஹரியை பயத்துடன் பார்த்தான் யோகித்.

''முடிஞ்சா சொன்னத செஞ்சு பாரு'' என்று ஸ்ரீஹரி அவனை ஏளனத்துடன் பார்க்க, ''நீங்க பண்றது ஒன்னும் சரியில்ல ஸார்'' என்றாள் அகிலா.

''ஓ, அப்ப எத சரின்னு சொல்ற அன்னைக்கு நீ செஞ்சியே அதுவா?''

அவன் எதைப் பற்றிக் கேட்கிறானென்பது புரிந்ததில் முகம் சிறிதாகிப் போயிற்று அகிலாவுக்கு.

ஆனாலும் அதை வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டாள்.

''அப்படியொன்னும் அதப் பெரிய தப்புன்னு சொல்லிட முடியாது. ஏன்னா யோகித்தத் தான் சஞ்சனா கல்யாணம் பண்ணிக்கப் போறா.''

அப்படிச் சொன்னவளை உதட்டோரம் ஏளனச் சிரிப்புடன் பார்த்த ஸ்ரீஹரி, ''சஞ்சனாவோட அக்காவாயிட்டயேன்னு பாக்கறேன்'' என்றான்.

ஏற்கனவே தான் அவ்வளவு கீழ்த்தரமாகப் பேசியிருக்கக் கூடாதோ என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்த அகிலாவால், ஏனோ அவனுடைய அந்த வார்த்தைகளுக்கு எந்தப் பதிலும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

''எதுக்கும் உன் தங்கை கிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுடலாம் விடு'' என்று சஞ்சனாவை அழைத்தார் கல்யாணி.

நடுக்கத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு தயங்கிக் கொண்டே ஹாலுக்கு வந்த சஞ்சனாவிடம் ''சொல்லுடாம்மா உங்கக்கா சொல்ற மாதிரி அந்தத் தம்பி யோகித்தக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு சம்மதமா?'' என்று கேட்டார்.

அவர் கேட்டது தான் தாமதம், ''இல்ல அது என்னால முடியாது'' என்று உடனே சொல்லி விட்டிருந்தாள் சஞ்சனா.

''நீங்க அவ மனச மாத்திட்டீங்க, இத நான் சும்மா விட மாட்டேன்'' என்று அகிலா கோபத்துடன் சொல்ல, அதே நேரம் உள்ளே வந்த ராகிணியை ஏற்கனவே மனதளவில் கூனிக் குறுகிப் போயிருந்த சஞ்சனா இப்பொழுது நடுக்கத்துடன் பார்த்தாள்.

எது எப்படியோ, அவளுடைய நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாய் இருந்தது.

''சரிதான் மத்ததையெல்லாம் விடுங்க, ஆனா எங்க வீட்டுப் பொண்ண எங்க கூட அனுப்பி வைக்கறது தான நியாயம்'' என்று அகிலா கல்யாணியிடம் கேட்க, தொடர்ந்து சில நிமிடங்களாக அங்கு நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராகிணியும் ''ம், அதுதான கரெக்ட்'' என்றாள்.

''என்ன ஹரி நீங்க, அவளக் கிளம்பச் சொல்லுங்க'' என்று ராகிணி மீண்டும் சொல்ல ''வாடி'' என்று தனது தங்கையின் கையைப் பிடித்து இழுத்தாள் அகிலா.

''ம்கூம், நான் வர மாட்டேன்.''

''ஏய் வாடி முதல்ல.''

''ம்கூம், நான் வரவே மாட்டேன். என்ன விட்டுடு'' என்று தனது தமக்கை அகிலாவின் கையைப் பிடித்து உதறியிருந்தாள், சஞ்சனா.

கடந்த சில நாட்களாக நடந்ததனைத்தையும் கமலேஷின் மூலம் தெரிந்து கொண்டிருந்த ராகிணி, "என்ன நீ பாவமேன்னு சில நாள் அடைக்கலம் குடுத் தவங்க தலைலயே கை வைக்கற, கூப்பிடறது உங்கக்கா தான கிளம்பு" என்று அதிகாரமாகச் சொன்னாள்.

"ம்கூம், நான் போகவே மாட்டேன்."

"ம்கூம், நாமளும் இனியும் நின்னு பாத்துட்டிருக்கற துல அர்த்தமில்ல இழுத்துட்டு வாடா" என்று தனது தம்பியிடம் நித்திஷ் சொல்ல, தன் பக்கம் தான் இப் பொழுது பலம் நிறைய இருக்கிறதே என்னும் தைரியத் தில் சஞ்சனாவின் கையைப் பிடித்து இழுத்திருந்தான் யோகித்.

ஆனால் அதை சற்றும் எதிர்பார்த்திருக்காத சஞ்சனா அருவெறுப்புடன் அவனுடைய கையை உதறித் தள்ளி விட்டுப் பின்னால் நகர்ந்திருந்தாள்.

தீப்பட்டாற் போல அவளுடைய உடலெங்கும் எரியத் தொடங்கி விட்டிருக்க, "அட என்னடா நீ புடிச்சு தரதரன்னு இழுத்துட்டு வாடா" என்று எரிச்சலுடன் தம்பியைப் பார்த்தான் நித்திஷ்.

அண்ணன் சொல்ல, அதற்குள் தயாராய் ஒரு அடி எடுத்து வைத்திருந்தான் யோகித்.

ஆனால் அதே நேரம் அவனுக்கு முன்பாக வந்து நின் றிருந்த ஸ்ரீஹரி "என்னடா அன்னைக்கு வாங்கினதெல் லாம் பத்தலையா?" என்று அடிக் குரலில் கேட்டான்.

அவனுடைய பார்வையிலும், குரலிலும் ஏற்கனவே மனதிற்குள் பயந்து கொண்டிருந்த யோகித் இப்பொழுது நடுங்கவே தொடங்கி விட்டிருந்தான்.



"கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க ஸார்" என்று நித்தீஷ் ஸ்ரீஹரியை பார்க்க, "இன்னும் ரெண்டு நிமிஷத்துல நீங்கெல்லாம் இங்கிருந்து கிளம்பலேன்னா அப்புறம் மரியாதையென்ன என்ன வேணும்னாலும் கிடைக்கும்" என்றான்.

அப்படிச் சொன்னவனைக் கோபத்துடன் பார்த்த அகிலா "என் தங்கச்சிய நாங்க கூட்டிட்டுப் போறோம், அதுல உங்களுக்கென்ன பிரச்சனை?" என்று கேட்டாள்.

"உன் தங்கை தான் உங்கூட வர இஷ்டமில்லேன்னு சொல்லிட்டாளே."

"அவ சொன்னா, அதுக்காக விட்டுடு முடியுமா?" என்றவள் "ஏய் முதல்ல கிளம்பி வாடி இல்லன்னா யாரு இருக்காங்கன்னு கூடப் பார்க்க மாட்டேன் மரியாதை கெட்டுப் போகும்" என்று ஆக்ரோஷமாகத் தங்கையைப் பார்த்தாள்.

"போதும் இதுக்கு மேல நீ ஒரு வார்த்த பேசினாலும் அதப் பாத்துட்டு நான் சும்மா இருக்க மாட்டேன்."

ஸ்ரீஹரி சொல்ல "ஏன் என்ன பண்ணிடுவீங்க?" என்று கேட்டாள் அகிலா.

"ஏன் ஹரி சொல்லுங்க அவ..." என்று ராகிணி ஏதோ சொல்ல வர, "என்ன சஞ்சனா என் வருங்கால மனைவி" என்றவன், "அவளப் பத்தி இனி யாராவது ஒரு வார்த்தை தப்பாப் பேசினாலும் அப்புறம் பின் விளைவுகளுக்கு என்னக் குத்தம் சொல்லி பலனில்ல" என்றான்.

திடீரென்று ஸ்ரீஹரி அப்படிச் சொல்வானென்று அங்கு யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஒவ்வொருவரின் முகங்களிலும் ஒவ்வொரு விதமான எண்ணங்களின் பிரதிபலிப்பு.

ஸ்ரீஹரியின் வார்த்தைகளில் அகிலா, நித்தீஷ், யோகித் மூவரும் அவனை அதிர்ச்சி கலந்த கோபத்துடன் செய்வதறியாது பார்க்க, கல்யாணியின் முகத்திலோ எல்லையற்ற சந்தோஷமும் நிம்மதியும் தெரிந்தன.

கமலேஷிற்கும் அதுவே, என்ன கூடவே மிகுந்த ஆச்சரியமும்.

சஞ்சனா அண்ணியாக வரப் போவது மிகப்பெரிய சந்தோஷமென்றால் அதைவிடப் பெரிய சந்தோஷம் ராகிணி அண்ணியாகப் போவதில்லை என்பதே.

எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்த ராகிணியின் முகத்தைப் பார்த்தவனுக்கு அப்படியே சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''என்ன கிளம்பறீங்களா?'' என்று ஸ்ரீஹரி அவர்கள் மூவரையும் பார்க்க ''இது சரியில்ல...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தாள் அகிலா.

''இவ்வளவு நேரமும் பேசினதுக்கே போனாப் போகுதுன்னுதான் மன்னிச்சு விட்றேன் இனியும் நின்னுட்டிருந்தா...''

ஸ்ரீஹரியின் மிரட்டலில் ''உங்க பேச்சக் கேட்டுட்டு வந்தேன் பாருங்க என்னச் சொல்லணும்'' என்று நித்தீஷ் கிளம்ப தானும் தனது அண்ணனுடன் கிளம்பியிருந்தான் யோகித்.



தங்கையை எல்லையற்ற வெறுப்புடனும், ஆத்திரத்துடனும் சில வினாடிகள் பார்த்த அகிலா, பிறகு தானும் அங்கு நிற்கப் பிடிக்காதவளாய் திருப்பிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள்.

அதே நேரம் அப்பொழுது தான் ராகிணியைப் பார்த்த கல்யாணி, ''வாடாம்மா நீ எப்ப ஊர்ல இருந்து வந்த அம்மா, அப்பா எல்லாரும் நல்லார்க்காங்களா?'' என்று சந்தோஷமாக வரவேற்றார்.

ஆனால் அவருடைய பேச்சுக் காதில் விழாதவளாய் ''நானும் கிளம்பறேன் ஆன்ட்டி இனி எனக்கும் தான் இங்க என்ன வேலை?'' என்று சஞ்சனாவையும் ஸ்ரீஹரியையும் பொறாமையுடன் பார்த்துக் கொண்டே கிளம்பியிருந்தாள்.

அவள் கிளம்பும் காரணம் புரியாமல் கல்யாணி திகைக்க, காரணம் தெரிந்த கமலேஷிற்கு சிரிப்பு தான் வந்தது.

அதேநேரம் ஸ்ரீஹரியும் சஞ்சனாவும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ள, ''சரி கண்ணா வா இந்த சந்தோஷத்தக் கொண்டாட நாம போய் ஸ்வீட் வாங்கிட்டு முடிஞ்சா அப்படியே கோவிலுக்கும் ஒரு எட்டுப் போய்ட்டு வந்துடலாம்'' என்று சிறிய மகனைக் கிளப்பிக் கொண்டு வெளியே கிளம்பினார் கல்யாணி.

அப்படிச் சொன்ன தாயை மனதிற்குள் மெச்சிக் கொண்ட கமலேஷ் தானும் தனது தாயைப் போலவே எல்லையற்ற சந்தோஷத்துடன் கிளம்பிச் சென்றான்.

அவர்கள் கிளம்பியது தான் தாமதம் தானும் தனது அறைக்குச் சென்றிருந்தான் ஸ்ரீஹரி.

தன்னுடைய அன்பிற்காக ஏங்கும் ஸ்ரீஹரியின் மனம் புரிய, சில வினாடிகளில் தானும் அவனை நாடிச் சென்றாள் சஞ்சனா.

அங்கே ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு ஸ்ரீஹரி வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, அருகில் சென்றாள்.

அருகில் சென்றவள் ஆசையில் நெஞ்சு படபடக்க அவனுடைய கையைப் பிடித்திருந்தாள்.

லேசான நடுக்கத்துடன் சில்லிட்டுப் போயிருந்த சஞ்சனாவின் கைகளின் ஸ்பரிசத்தில் தன்னையறியாம லேயே உடல் சிலிர்த்துப் போனான் ஸ்ரீஹரி.

''ஹரி.''

அவளுடைய மென்மையான அழைப்பில் திரும்பியிருந் தவன் ஏக்கத்தையும், காதலையும் தனக்குள் மறைத்துக் கொண்டபடி பார்த்தான்.

''ஹரி...'' என்று ஏதோ சொல்ல வந்தவளுக்கு மேலே பேச முடியாமல் அழுகை வந்திருக்க, அப்படியே அவ னுடைய மார்பில் சாய்ந்து கதறி விட்டிருந்தாள்.

சஞ்சனாவின் அழுகையில் ஸ்ரீஹரியின் கண்களும் லேசாகக் கலங்கி விட்டிருக்க, அவளை அப்படியே தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

தனது அத்தனை மன பாரங்களும் அந்த அழுகையில் கரைந்து போயிருக்க, மெதுவாக நிமிர்ந்து ஸ்ரீஹரியின் முகத்தைப் பார்த்தாள்.

லேசான அழுகையில் உதடு துடிக்கப் பார்த்தவளின் கண்களில் முதன் முறையாகத் தெரிந்த காதலும்,



ஏக்கமும் அவனை முற்றிலுமாகத் தன்னிலை மறக்கச் செய்திருந்தது. அப்படியே அந்த முகத்தைக் கைகளில் ஏந்தி முத்தமழை பொழிந்திருந்தான்.

ஸ்ரீஹரியின் அன்பில் திக்குமுக்காடிப் போன சஞ்சனா தானும் தன்னிலை மறந்து அவன் மேலேயே கொடி யாய்ப் படர்ந்திருக்க, அதை நம்ப மாட்டாதவனாய்த் தன்னவளை மீண்டும் எல்லையற்ற காதலுடன் இறுக அணைத்துக் கொண்டான்.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ,

யாரோ வரும் அரவம் கேட்க முதலில் நடப்பிற்கு வந்திருந்தான் ஸ்ரீஹரி.

''சஞ்சனா'' என்று அழைத்துக் கொண்டே அடுத்த சில வினாடிகளில் கல்யாணி மேலேயே வந்திருக்க, அப்பொழுது தான் தன்னிலை உணர்ந்து நடப்பிற்கு வந்திருந்தாள் அவள்.

தான் இருந்த அந்த நிலையில் கல்யாணி ஆன்ட் டியைப் பார்த்தவளுக்கு வெட்கத்தில் முகம் குங்குமமாய் சிவந்து விட்டிருந்தது.

அவள் விலக முயன்றாலும் ஸ்ரீஹரி அதற்கு விட்டால் அல்லவா.''

''என்னப்பா டிஸ்டர்ப் பண்ணிட்டேன் போலிருக்கு?

புன்னகையுடன் தாய் கேட்க, தானும் அதே பாவனை யுடன் ''புரிஞ்சா சரி'' என்றான்.

''ஆனாலும் உனக்குக் கொஞ்சம் கூட மரியாதையே தெரியலடா'' என்று கோபம் போலக் காட்டி மகனைப் பார்த்தவர் ''எப்படியோ பிரமாதமான மருமகளக் கொண்டு

வந்திருக்கியே அதனால போனாப் போகுதுன்னு மன்னிச்சு விட்றேன்'' என்று சஞ்சனாவை மனமார வாழ்த்தி உச்சி முகர்ந்தார்.

''சரி கீழ வங்க'' என்று கல்யாணி சில வினாடிகளில் கீழே இறங்கிச் செல்ல, அதற்காகவே காத்திருந்தாற் போல மீண்டும் சஞ்சனாவைத் தன்னருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

கேட்க எத்தனை எத்தனையோ சந்தேகங்களும் கேள்விகளும் மனதிற்குள் முட்டி மோதிக் கொண்டிருந் தாலும் தன்னவனின் அன்பில் மீண்டும் தன்னிலை மறந்து போனாள் சஞ்சனா.

சரிதான் அவர்களுக்கு முன்பு பரந்து விரிந்து கிடக்கும் இன்ப மயமான எதிர்காலம் அவை அனைத்திற்கும் பதில் சொல்லும்,

அவர்கள் இருவரும் பலப்பல ஆண்டுகள் ஓருடல் ஈருயிராக ஆனந்தமாக வாழ்வார்கள்.

அந்த நம்பிக்கை அவர்களைப் போலவே எனக்கும் இருக்கிறது. அது உங்களுக்கும் இருக்குமென்று நம்பு கிறேன்.